வரு.75 இல. 40 ★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.vaaramanjari.lk
24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் වාරමන්ජරී
2023 ஒக்டோபர் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை October 08 Sunday, 2023




/Thinakaran.lk /ThinakaranLK













### எவருக்காகவும் பரீட்சைகளின் திகதியை மாற்றியமைக்க வேண்டாம்

# GCE O/L, A/L பரீட்சைகளை உரிய காலத்தில் நடத்தவும்



### அடுத்த வருடத்திலிருந்து நடைமுறைக்கு வரவேண்டும்

### கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி கண்டிப்பான உத்தரவை பிறப்பித்தார்

எதிர்வரும் 2025ஆம் ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் மற்றும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துமாறு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார். அத்துடன், அரசியல் அதிகாரங்களுக்கோ அல்லது வேறு எவருக்காகவோ பரீட்சைகளின் திகதியை 06

## முன்னாள் ஜனாதிபதி மஹிந்த மயூராபதியில் வழிபாடு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பு வெள்ளவத்தை மயூராபதி ஆலயத்தில் நேற்றுமுன்தினம் (06) விசேட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

### நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சூழ்ச்சியா?

## நீதவான் பதவி விலகலின் பின்னணி குறித்து தீர விசாரிக்க வேண்டும்



### உயிர் அச்சுறுத்தல் குறித்து எங்கும் முறையிடாதது ஏன்? மஹிந்த அமரவீர

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜாவின் பதவி விலகலின் பின்னணியில் நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் சூழ்ச்சி இருக்கலாம். இது தொடர்பாக விசாரணை செய்ய வேண்டுமென, அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது, 06

### பயணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில்

## ரயில்வே துறையினரால் தொடர் பணிப்பகிஷ்கரிப்புகள்

### உயர்மட்ட விசாரணை; பின் ஒழுக்காற்று நடவடிக்கை



தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் ரயில்வே பணிப்புறக்கணிப்புகள் தொடர்பாக அமைச்சு மட்டத்தில் பாரபட்சமற்ற விரைவு விசாரணையை நடத்தி, பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் பணிப்பகிஷ்கரிப்பாளர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு 06

## நில்வள கங்கை வெள்ள மட்டத்தை அடைய வாய்ப்பு

### அவதானமாக இருக்க மக்களுக்கு அறிவுறுத்தல்

நில்வள கங்கையை அண்மித்த பகுதியில் எதிர்வரும் 24 மணிநேரத்தில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகக் கூடுமென, நீர்ப்பாசனத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இவ்வாறு அதிகூடிய மழை வீழ்ச்சி பதிவாகுமாயின், நில்வள கங்கை வெள்ள மட்டத்தை அடையுமென வும், அத்திணைக்களம் தெரிவித்தது.

இதனால் மாத்தறை, மாலிம்பட, கம்புறுப்பிட்டிய, திஹகொட, அத்துரலிய மற்றும் அக்குரஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகளில் தாழ்நிலங்களில் வசிக்கும் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும், நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. 06

06

இலங்கையில் தொடர்ச்சியாக வருடாந்தம்

### சுமார் 700 பெண்கள் மார்பக புற்றுநோயால் இறப்பு



06

### குரங்குப்பாஞ்சான் காணிக்கு தௌபீக் MP திடீர் விஜயம்

உரிய தீர்வு பெற்றுத்தருவதாகவும் உறுதியளிப்பு



06

### படகு மூலம் UK சென்ற இளைஞன் உயிரிழப்பு

பிரான்ஸிலிருந்து செல்கையில் அனர்த்தம்

## எங்கள் கருத்து...

### இனிமேல் அலட்சியமாக இருந்துவிட முடியாது!

புவியில் வாழ்கின்ற அத்தனை உயிரினங்களின் நிலவுகைக்கு தாவரங்கள் மிகவும் அத்தியாவசியமானவை ஆகும். மனிதனும் பிராணிகளும் இன்றி தாவரங்களால் பூமியில் வாழ்ந்துவிட முடியும். ஆனால் புவியில் தாவரங்கள் அழிந்துவிடுமானால் மனிதனால் மட்டுமன்றி, மற்றைய உயிரினங்களாலும் வாழ்ந்து விட முடியாது. அத்தனை உயிரினங்களும் புவியில் அழிந்து போய்விடும்.

அதனால்தான் புவியில் மரங்களை அழித்தொழிக்க வேண்டாமென்றும், மரங்களை அதிகம் நடுமாறும் சூழலியலாளர்கள் எப்போதும் குரலெழுப்புகின்றனர். காடுகள் அழிக்கப்பட்டு வருவதையிட்டும், அதன் காரணமாக பூகோளம் வெப்பமடைவது குறித்தும் அவர்கள் கவலைப்படுகின்றனர்.

மரங்கள் நிழல் தருகின்றன, பூமியின் வெப்பநிலையை மாறாமல் பேணுவதற்கு உதவுகின்றன, வளிமண்டலத்திலுள்ள காபனீரொட்சைட் வாயுவை உள்ளெடுத்துக் கொண்டு, ஒட்சிசனை வெளிவிடுகின்றன, 06

## வாகனங்களில் அதிகளவில் கரும்புகை வெளியேறுகின்றதா?

### 'வட்ஸ்அப்' மூலமாக முறையிட இலக்கம்

வீதியில் பயணிக்கும் போது அதிகளவில் கரும்புகையை வெளியேற்றும் வாகனங்கள் தொடர்பாக மக்கள் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, மோட்டார் வாகன 06

### வாகன வருமான அனுமதிப்பத்திரம்;

## வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்ளலாம்

### நேற்று முதல் அமுலுக்கு வந்தது



வாகன வருமான அனுமதிப்பத்திரத்தை வீட்டிலிருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கான 06

## புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டுக்கு நல்லதல்ல

### எதிர்கால சந்ததியினரை பாதிக்கும்



புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்துமென்பதுடன், நாம் இந்த 06

### கனடாவிலிருந்து பொதியில் அனுப்பிவைக்கப்பட்ட

## 122 மில். ரூபா குஷ், ஐஸ் போதைப்பொருள் மீட்பு

### சுங்கத் திணைக்கள சோதனையில் சிக்கியது



பேலியகொடையிலுள்ள வெளிநாட்டுப் பொதிகள் பரிவர்த்தனை 06

## இராணுவம் வெளியேறிய காணிகளில் மக்கள்!

### யாழ். KKS பகுதியில் அளவீட்டு பணிகளில்



யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணத்தின் காங்கேசன்துறை, மாங்கொல்லை பிரதேசத்தில் இராணுவத்தினர் வெளியேறிய இடங்களிலுள்ள தமது காணிகளை அறிக்கைப்படுத்தும் நடவடிக்கைகளில் காணி உரிமையாளர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 33 வருடங்களுக்கும் மேலாக மாங்கொல்லை பிரதேசமானது இராணுவ உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவக் கட்டுப்பாட்டினுள் இருந்த நிலையில், 06






லோரன்ஸ் செல்வநாயகம்

## நாட்டிலிருந்து வெளியேறுவோர்

# தாய் நாட்டின் மீதுள்ள கரிசனை அற்ப சொற்பம் தானா?

நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், முக்கிய துறைகளில் உயர் பதவிகளை வகிப்போர் 'அம்போ' என நாட்டை விட்டு விட்டு குறுகிய நோக்கங்களுக்காக வெளிநாடுகளுக்கு செல்வது தொடர்பில் சமூகத்தில் பல்வேறு கருத்துக்கள் நிலவும் காலமிது.



நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியில் இருந்து சற்றே தலை தூக்க முற்படும்போது மீண்டும் நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு பங்களிக்கக் கூடியவர்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்வதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. சொந்த நாட்டில் இலவசக் கல்வி, பாடசாலையிலிருந்து பல்கலைக்கழகம் வரை படிப்பு, புலமைப் பரிசில் அதற்கு மேலாக சலுகை வட்டியில் அல்லது வட்டி இல்லாமல் வங்கிக் கடன் என அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் இலவசமாகப் பெற்று படிப்பை மேற்கொண்டு படிப்புக்கு ஏற்ப பதவிகளையும் பெற்று வாழ்ந்தவர்கள் சொந்த நாட்டை விட்டு வெளியேறுவது என்பது மிகுந்த கவலை தரும் விடயமே.



அதிலும், இலவசமாக அனைத்தையும் பெற்று அதனூடாக சொந்தக்காலில் நிற்கக் கூடிய அளவு தம்மையும் தமது குடும்பத்தின் இருப்பையும் நிலைப்படுத்திக் கொண்டு நாட்டின் நிலைமையை உணராமல் சொந்த நாட்டை விட்டு வருமானம் உள்ளிட்ட சொந்த நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு வெளிநாடுகளுக்கு செல்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியாதது. அந்த வகையில் நாட்டிலிருந்து இவ்வாறு வெளியேறி வெளிநாடு செல்பவர்கள் தொடர்பில் முழுநாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதமொன்று பாராளுமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. விவாதத்தில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

நாட்டில் பிரதான கட்சிகள் பிளவுபட்டுள்ளன. அந்த வகையில் அரசியல் ஸ்திரத் தன்மையை உறுதிப்படுத்தாமல் எந்த பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாது.

அதனைக் கவனத்திற் கொண்டு அரசாங்கம் உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டில் பாரிய எதிர்மறையான தாக்கங்களையே ஏற்படுத்தும் படித்த இளம் தலைமுறையினர் நாட்டை விட்டு வெளியேறுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்கள். 30 வருட யுத்த காலத்தில் புத்திஜீவிகள் நாட்டிலிருந்து வெளியேறியதைப் போன்று தற்போதும் கல்விமான்கள், புத்தி ஜீவிகள் நாட்டிலிருந்து வெளியேறி வருகின்றனர் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்த காலத்தை காட்டிலும் தற்போது கல்விமான்கள் மற்றும் புத்திஜீவிகளின் வெளியேற்றம் வெகுவாக அதிகரித்துள்ளது.

மருத்துவர்கள் உட்பட சுகாதார தரப்பினர் நாட்டை விட்டு வெளியேறுவது பாரதூரமானது. மருத்துவர்கள் இவ்வாறு நாட்டை விட்டு வெளியேறுவதால் சுகாதார கட்டமைப்பே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் நடுத்தர மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

ஒரு மருத்துவர் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் 50 பேருக்கு சிகிச்சை யளிக்க முடியும்.

ஆனால் தற்போதைய நிலையில் அரச வைத்தியசாலைகளில் ஒரு மருத்துவர் ஒரு நாளைக்கு 200 க்கும் அதிகமானோருக்கு சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

சுகாதார கட்டமைப்பைப் போன்றே பல்கலைக்கழக கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. விரிவுரையாளர்கள் பற்றாக்குறை காரணமாக பெரும்பாலான பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இது மிகவும் பாரதூரமானது. அதேபோன்று கல்வித்துறையும் வீழ்ச்சியடைந்தால் சிறந்த எதிர்கால தலைமுறையினரை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய: பொருளாதார நெருக்கடி காரணமாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்பதை ஏற்றுக் கொள்கிறோம். பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்காக வரி வீதம் அதிகரிக்கப்பட்டதை தொடர்ந்தே துறைசார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார்கள்.

இதற்கு துரிதமாக தீர்வு காண துறைசார் மட்டத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நெருக்கடிக்கு தீர்வு காணும் குறுகிய கால திட்டமாகவே வரி விதிப்பு அமுல்படுத்தப்பட்டுள்ளது. வெகுவிரைவில் வரிக் கொள்கை மறுசீரமைக்கப்படும்.

பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வு காண வேண்டுமாயின் கசப்பான மருந்தை தற்காலிகமாக அருந்த வேண்டும். நாட்டில் வரி செலுத்தலை ஒரு கலாசாரமாக மாற்றியமைத்தால் அரச வருமானம் சீரானதாக அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா பொருளாதார நெருக்கடி காரணமாகவே புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு செல்கின்றனர் என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

இத்தகைய வெளியேற்றம் இலங்கைக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதல்ல என்பதை எதிர்க்கட்சியினர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து புத்திஜீவிகள் வெளியேற்றத்தை தமது அரசியல் நோக்கத்திற்கான பிரசாரங்களுக்காக எதிர்க்கட்சியினர் பயன்படுத்தி வருகிறார்கள். நாட்டில் அரசியல் ஸ்திரத் தன்மை இல்லாத காரணத்தால் புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள் என்று எதிரணியினர் குறிப்பிடுகிறார்கள். நாட்டில் யார் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது?



நாட்டில் பயங்கரவாத செயற்பாடுகளை தோற்றுவித்தவர்கள் தான் ஸ்திரமற்ற அரசியல் நிலை காரணமாக புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுவதாக கூறுகின்றனர். இது வேடிக்கையாகவுள்ளது. பொருளாதார பாதிப்புக்கு ஓரிரு இரவில் தீர்வு காண முடியாது. அது ஒன்றும் கொத்துரொட்டி விவகாரம் அல்ல. எதிர்க்கட்சியினர் வரியை அதிகரித்தாலும் விமர்சிக்கிறார்கள், குறைத்தாலும் விமர்சிக்கிறார்கள்.



வரி வருமானத்தை அதிகரிக்காமல் ஒரு போதும் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண முடியாது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் இன்னும் அறியாமல் உள்ளார் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் புத்திஜீவிகளின் வெளியேற்றம் நாட்டின் எதிர்காலத்துக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்த விவகாரத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை இருளாக்கும் அபாயம் காணப்படுகிறது. நம் நாடு தற்போது எதிர்கொள்ளும் புத்திஜீகள் வெளியேறும் சவாலின் தீவிரத்தன்மையின் பாதிப்பை இதற்குப் பொறுப்பான அனைவரும் ஆழமாக உணர வேண்டும். இந்த விடயத்தின் ஆபத்து மேலோட்டமாகத் தெரியவில்லை என்றாலும் நாடு என்ற ரீதியில் நாம் இவ்விடயத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை அது இருளாக்கும்.

வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில், நம் நாட்டில் உள்ள திறமையான புத்திஜீவிகள், இளைஞர்கள் பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். 2023 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ தரவுகளின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் 750 விரிவுரையாளர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து இராஜினாமா செய்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள விரக்தி நிலை, எமது நாட்டின் உயர்கல்வி மற்றும் எமது எதிர்கால சந்ததியினருக்கு மிகவும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

எமது நாட்டவர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது நல்லது. அதன் மூலம் எமது நாட்டுக்கு அந்நிய செலாவணி அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்று இந்த விவாதத்தில் தெரிவித்தவர்களும் உள்ளார்கள். எவ்வாறெனினும் இந்த விவாதத்தின் போது ஆளும் கட்சி எதிர்க்கட்சி என பலதரப்பட்ட கருத்துக்களை முன்வைத்தாலும் வங்குரோத்து நிலையை அடைந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதில் அனைவரும் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

அதனை விடுத்து வரி அதிகரிப்பு வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என பல்வேறு காரணங்களை தெரிவித்து வசதி படைத்தோரே அவர்களது எதிர்காலத்தை மட்டும் கருத்திற் கொண்டு வெளிநாடுகளுக்கு செல்லும்போது தாய் நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்திப்பது யார்?

அதிலும் நாட்டுக்கான சிறந்த எதிர்காலத்தை உருவாக்கக் கூடிய கல்விமான்கள், புத்திஜீவிகள், துறை சார்ந்த நிபுணர்கள் இவ்வாறு செயற்படுவது சரியா?

அவர்களது சிந்தனையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். அப்போதுதான் நாம் எதிர்பார்க்கும் மாற்றத்தை தாய் நாடு காணும் என்பதே எமது தாழ்மையான கருத்து.

## சுற்றுலாவை மேம்படுத்த சமூக ஊடக பிரசாரத்தை ஆரம்பிக்கும் USAID மற்றும் SLTA



இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிப்பதற்கும் சுற்றுலாவை மேம்படுத்தும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலும், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் (USAID) இந்தோ பசுபிக் வாய்ப்புத் திட்டம் (IPOP) மற்றும் இலங்கை சுற்றுலாக் கூட்டமைப்பு (SLTA) என்பன அண்மையில் சமூக ஊடக பிரசாரத்தை ஆரம்பித்தன.

ஐக்கிய இராச்சியம் இந்தியா, பிரான்ஸ், ஜெர்மனி, போலந்து, ஸ்கண்டி நேவிய நாடுகள், கனடா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சிறந்த சுற்றுலா மூல சந்தைகளில் இருந்து பின்தொடர்பவர்களுடன் 10 உலகளாவிய செல்வாக்கு செலுத்துபவர்கள் குழுவால் பிரசாரம் நடத்தப்படும். நாட்டுக்கு அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்காக இலங்கை வழங்கக் கூடிய நிலையான சுற்றுலாத் தயாரிப்புகள் மற்றும் கவர்ச்சிகரமான விடயங்களைக் காட்சிப்படுத்துவதற்காக நாடு முழுவதும் உள்ள பல கவர்ச்சியான இடங்களுக்கு குழு பயணிக்கும். தொற்றுநோயிலிருந்து மீண்டு பொருளாதார நெருக்கடியைக் கையாள்வதற்கு சுற்றுலா முக்கியமானது. தொற்றுநோய்க்கு முந்தைய சுற்றுலா நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது, 2018 இல் 4.3 பில்லியன் அமெரிக்க டொலர் வருவாயை அது ஈட்டியது.

## கொட்டாஞ்சேனையில் இன்னிசையுடன் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழா

சென்னையை சேர்ந்த சிவாச்சார்ய குலபூஷணம், இறை இசைத் திலகம் டாக்டர் சாம்பசிவமணிக் குருக்களின் ஏற்பாட்டில் அகில இலங்கை குருசாமிகள் ஒன்றியத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் இன்னிசையும் பாராட்டுக் கௌரவ முக்கனி பெருவிழாவும் இன்று 8ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணி முதல் இரவு 9.30 மணிவரை கொழும்பு13, கொட்டாஞ்சேனை விவேகானந்தா மேட்டுத்தெருவில் அமைந்துள்ள விவேகானந்தா சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஊடக அனுசரணை தினகரன் வாரமஞ்சரி தினகரன்









மறைந்த இலங்கை முதல் இந்துமத குருபீடாதிபதி சிவாகம பாணு, சிவபூஜாதுரந்தரர், மாந்திரீதபூவிணம் டாக்டர் ஸ்கந்த சாம்பவசிவாச்சார்யார் மற்றும் மறைந்த திரைப்பட பாடகர், இசைமேதை, இசைத்திலகம் டாக்டர் ரி.எம். சௌந்தரராஜன் ஆகியோரின் 101ஆவது பிறந்த தினத்தையிட்டும் வரலாற்று நாயகன், தவப்புதல்வன், நடிகர் திலகம் செவாலிஐர் சிவாஜிகணேசனின் 95ஆவது பிறந்த தினத்தையிட்டும் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆன்மிக அன்பர்கள், இசைப் பாடகர்கள், நாடக நடிகர்கள் ஆகியோர் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி, ஸ்ரீ சபரிமலைக் குருசாமி டாக்டர் ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் ஆசி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக தமிழ் நாடு, சென்னை மேற்கு மாம்பலம் கலியுககர்ணன், கொடைவள்ளல், தமிழ் நாட்டு இசைக் கலைஞர்களின் காவலர் மனிதநேயம் சிவாஜிரவி கலந்துகொள்ளவுள்ளார்.

ஆன்மிகம் சார்ந்தோர், இசைப் பாடகர்கள், நாடக நடிகர்கள் அனைவரையும் இவ்விழாவில் கலந்துகொள்ளுமாறு, விழா ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைத்துள்ளனர்.

இந் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்த நிகழ்ச்சி ஏற்பாட்டாளரான அறிவகம் கல்வி நிலையத்தின் அதிபர் சசாங்கன் சர்மா நிகழ்ச்சிகளை சிறப்புற தொகுத்து வழங்கவுள்ளார்.

இங்கு இலங்கை பாடகர்களுடன் இந்திய பாடகர்களும் இணைந்து பாடவுள்ளனர். சித்தா இசையில் பாடகர் ரகுநாதனுடன் இந்திய பாடகர் கலைமுகன் இணைந்து பாட இருப்பது குறிப்பிடத்தக்கது.



பொறியியல் துறையில் மனித மூலதனத்துக்கு ஊக்கமளிக்கும் வகையில் UCL எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக் துறையில் 4 ஆண்டு கால பிரிட்டிஷ் பட்டப்படிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் பிடிக்கப்பட்ட படங்கள்.

ஜீ.சீ.ஈ உயர் தரத்துக்குப் பிறகு மாணவர்கள் 75% வரை புலமைப்பரிசில் பெறுவதற்கு இக்கற்கைநெறி வாய்ப்பளிக்கின்றது.

## "China Fort Pearls" அமைப்பினால் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை கிரிக்கெட் அணிக்கு உபகரணங்கள் கையளிப்பு

(அஜ்வாத் பாஸி)

களுத்துறை மாவட்டத்தில் விளையாட்டுத்துறையில் பல சாதனைகளை நிலைநாட்டி வரும் சீனன்கோட்டை அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையின் கிரிக்கெட் அணிக்கு சீனன்கோட்டை முத்துக்கள் ("China Fort Pearls") அமைப்பினால் பல இலட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் (04) வழங்கப்பட்டன.

அமைப்பின் தலைவர் ராமிஸ் நாஸிம் தலைமையில் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை ஜாபிர் ஹாஜியார் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான மாணிக்க வர்த்தகர் அஸாம் பளீல், பாடசாலை அதிபர் இப்றாஹீமிடம் விளையாட்டு உபகரணங்களை உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்நிகழ்வில் அமைப்பின் அங்கத்தவர்கள் உட்பட பாடசாலை ஆசிரியர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்ததாக ஏற்பாட்டுக்குழு சார்பாக அமைப்பின் ஊடக இணைப்பாளர் சர்பான் முஸம்மில் தினகரன் வாரமஞ்சரிக்கு தெரிவித்தார்.



தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், எமது அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை கிரிக்கெட் அணியினர் இன்று விளையாட்டுத்துறையில் நிறைய சாதனைகளை நிலைநாட்டி வருவதையிட்டு எமது சங்கம் மகிழ்ச்சியடைகின்ற அதேநேரம், மாணவர்களை கல்வியிலும் ஊக்கப்படுத்துவதற்கு எமது சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்று தெரிவித்தார்.





# அப்பாவிகளின் உயிர்குடிக்கும் யமனாக மாறிய மரம்



## கொள்ளுப்பிட்டியில் பஸ்ஸின் மீது மரம் வீழ்ந்து ஐவர் மரணம்







கொள்ளுப்பிட்டி டுப்ளிகேஷன் வீதி எப்போதுமே பரபரப்பான பிரதேசமாகும். எல்லாநேரத்திலும் ஒன்றன்பின் ஒன்றாகப் பயணிக்கும் வாகனங்களும் வாகன நெரிசலும் அந்த வீதியில் பயணிப்பவர்களுக்கு புதிதல்ல. வாரத்தின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை, இந்த நாட்களில் பெய்யும் வழக்கமான மழையுடன் விடிந்தது. வேலைக்குச் செல்பவர்களாலும், கொள்ளுப்பிட்டிக்கு வரும் சிலராலும் அவ்வீதி சற்றே பரபரப்பாக காணப்பட்டது. லிபர்ட்டி சுற்றுவட்டத்தைக் கடந்தவாறு சிகப்பு நிற இ.போ.சவுக்குரிய பஸ் ஒன்று மத்துகமையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தது. பஸ் முழுவதும் பயணிகளால் நிரம்பியிருக்கவில்லை என்றாலும், ஓரளவுக்கேனும் பஸ் நிரம்பியிருந்தது.

கொள்ளுப்பிட்டி பஸ் தரிப்பிடத்தில் பயணி ஒருவர் பஸ்ஸை நிறுத்தியதால் அந்த பஸ் அங்கு நின்றது. அவ்விடத்தில் இரண்டு மூன்று பயணிகள் பஸ்ஸில் ஏறும் போதே, பெரிய மரம் ஒன்று பஸ்ஸின் மீது திடீரென விழுந்து, பஸ் நொடிப்பொழுதில் இரண்டாகப் பிளந்தது. ஒரு சில வினாடிகளுக்குள் அனைத்து நடந்து முடிந்தது. பஸ்ஸினுள் இருந்த பயணிகளின் அலறல் மட்டுமே கேட்டது. இதற்கிடையில், தம்மைக் காப்பாற்றும்படி கோரும் அழுகுரல்கள் விண்ணை முட்டின. அந்த சத்தம் கொள்ளுப்பிட்டியையே உலுக்கும் அலறலானது. முழு நாட்டையும் உலுக்கிய அந்த அனர்த்தத்தை நேரில் கண்ட சாட்சிகளின் அனுபவங்களை நாம் உங்களுக்குத் வழங்குகிறோம். இந்த அனர்த்தம் வெள்ளிக்கிழமை காலை 6 மணியளவில் இடம்பெற்றது. மத்துகம இலங்கை போக்குவரத்து சபைக்கு (டிப்போ) சொந்தமான WP NC 0741 இலக்கம் கொண்ட சிவப்பு பஸ் ஒன்று புறக்கோட்டையிலிருந்து மத்துகம நோக்கிப் பயணித்த போதே இவ்வாறு அதன் மீது மரமொன்று சரிந்து விழுந்து விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் அந்த பஸ்ஸில் பயணித்த ஐந்து பயணிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதே உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் எம்மிடம் தெரிவித்தார்.

மரம் முறிந்து விழுந்து ஏற்பட்ட இந்த விபத்து தொடர்பில் தற்போது நாடே அறியும். விபத்தைப் பற்றி அறிந்ததும் புகைப்படக் கலைஞர் றுக்மல் கமகே உள்ளிட்ட எமது குழுவினர் சிறிது நேரத்திலேயே அவ்விடத்தை அடைந்தோம். அந்நேரம் அப்பிரதேசத்தைச் சேர்ந்தோர் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி கே. ஓ. பீ. அபேரத்ன தலைமையிலான பொலிஸாருடன் இணைந்து அவ்விடத்திற்குச் சென்று விபத்தில் காயங்களுக்குள்ளானவர்களை மீட்டு வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். இது தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்மிடம் இவ்வாறு தெரிவித்தார்.

"இவ்விபத்து தொடர்பில் சரியாக எனக்கு காலை 6.16 மணிக்கு தகவல் கிடைத்தது. லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடத்தில் பஸ் ஒன்றின் மீது மரம் ஒன்று சரிந்து விழுந்து பாரிய அனர்த்தம் ஏற்பட்டதாக நபர் ஒருவர் எனக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டு கூறினார். உடனே பொலிஸ் குழுவினருடன் நான் அவ்விடத்திற்கு விரைந்தேன். அந்நேரம் பஸ்ஸினுள் காயங்களுக்குள்ளான பயணிகள் சிக்கியிருந்தார்கள்.... ஒரு பயணி சத்தமிட்டு அலறினார்.... "ஐயோ சேர்... பஸ்ஸை வெட்டியாவது என்னை அவசரமாக வெளியில் எடுங்கள்..." என. அந்நபரை நாம் துரிதமாகச் செயற்பட்டு மீட்டாலும் அவர் உயிரிழந்துவிட்டதாக பின்னர் அறிந்து கொண்டேன். நாம் அங்கிருந்த 17 பேரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்தோம். அவர்களுள் 5 பேர் உயிரிழந்துள்ளார்கள். மூவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். இன்னும் இருவர் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளதாகவும் அறிந்து கொண்டேன். அவர்களுள் சிலர் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்குச் செல்லாமல் வீடு திரும்பியுள்ளார்கள்" வெள்ளிக்கிழமையே இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் விபரங்களை பொலிஸார் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அவ்விபரங்களின் பிரகாரம், அங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஜீ. ஏ. ஏ. சத்துரங்க, மாத்தளையைச் சேர்ந்த 31 வயதுடைய எச். எம். சுரேஷ் பண்டார ரத்நாயக்கா, 65 வயதுடைய பேலியாகொடை, பராக்கிரம வீதி, இல. 95/7 என்ற முகவரியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சுப்ரமணியம் மற்றும் ராகமை, வெலிசறையைச் சேர்ந்த 30 வயதுடைய அருண பெர்னாண்டோ ஆகியோரே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர். அத்துடன் மற்றொருவரான 54 வயதுடைய பியசேன அல்லது பிரியஞ்ஜன என்ற பெயரில் கொழும்பு 13 பிரதேசத்தில் வசிப்பவர் என ஊகிக்கப்படும் ஒருவரும் உயிரிழந்தவர்களுள் அடங்குகிறார். அவரது சடலத்தை அடையாளம் கண்டு கொள்வதற்கு தற்போது பொலிஸார் மக்களின் உதவியை நாடியுள்ளனர்.

மேலும், வெள்ளிக்கிழமை மாலையாகும் போது கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர விபத்துப் பிரிவில் 72வது வார்டில் சிகிச்சைக்காக இவ்விபத்தில் காயமடைந்த மல்வானைச் சேர்ந்த 49 வயதான சி. எச். ஏ. டி. உதார, கரந்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஐ. டி. ஆர். தமயந்தி மற்றும் வெலிமடை, கடகெல்ல பிரதேசத்தில் வசிக்கும் 30 வயதுடைய ஆர். டி. எம். ஜே. குமாரசிங்க ஆகிய மூவரும் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

விபத்தில் உயிரிழந்த ஐவரில் பேலியாகொடையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன' சுப்ரமணியம் வீட்டிலிருந்து வெளியேறி மொரட்டுவை பிரதேசத்தில் அமைந்துள்ள தனியார் ப்ளாஸ்டிக் தொழிற்சாலையில் பணிக்காகச் சென்று கொண்டிருந்த போதே இவ்வாறு இந்த அனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளார். இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகனின் தந்தையான சுப்ரமணியத்தின் மரணத்தை அறிந்து கொண்டதும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துப் பிரிவுக்கு முன்னால் கதறி அழுத சுப்ரமணியத்தின் மனைவி நாகஜோதி இவ்வாறு கூறினார்.

"எனது கணவர் தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு வீட்டிலிருந்து வெளியேறி வேலைக்குச் செல்வார். அன்றும் அவ்வாறே வீட்டிலிருந்து வெளியேறினார். ஐயோ இப்படியொரு சம்பவம் நடந்து விட்டதே. இதற்கு யார் பொறுப்புக் கூற வேண்டும் என எனக்குத் தெரியாது. எனினும் நான் இப்போது தனித்துப் போய்விட்டேன். எனது கணவருக்கு நேர்ந்த இந்த துயருக்கு எவ்வழியிலாவது நியாயம் கிட்ட வேண்டும் என நான் வேண்டுகிறேன்"

அத்துடன், துரதிர்ஷ்டவசமாக மரணத்தைத் தழுவிக் கொண்ட சுப்பிரமணியத்தின் மருமகன் மனோஜிடம், அவரது மரணச் செய்தியை எப்படி அறிந்து கொண்டீர்கள் என்று கேட்டோம்.

"நான் காலையில் பேஸ்புக் (முகப் புத்தகம்) பார்த்துக் கொண்டிருந்த போதுதான் இந்த விபத்தைப் பார்த்தேன். பின்னர் நான் தற்செயலாக மாமாவின் கைபேசிக்கு அழைப்பை எடுத்துப் பார்த்தேன். அந்த அழைப்புக்கு பொலிஸாரே பதிலளித்தார்கள். உங்களது மாமா பயணித்த பஸ் கொள்ளுப்பிட்டியில் விபத்துக்குள்ளாகியிருக்கின்றது, உடனே கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு வாருங்கள் என அந்த பொலிஸ் உத்தியோகத்தர் என்னிடம் கூறினார். பின்னர் நாம் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு விரைந்தோம். அங்கு தான் இந்த துரதிர்ஷ்ட சம்பவத்தைப் பற்றி அறிந்து கொண்டேன். எனது மாமா எம் அனைவரையும் கவனித்துக் கொண்டு வாழ்ந்த ஒரு அப்பாவி மனிதராகும். அவர் அவரது வயதையும் பொருட்படுத்தாமல் வாழ்வதற்கு வழி இல்லாததால்தான் தொழிலுக்குச் சென்றார்"

விபத்தில் உயிரிழந்தவரான, மாத்தளையைச் சேர்ந்த சுரேஷ் ரத்நாயக்க, மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் பொறியியல் பீடத்தில் கல்வி கற்று வந்தவராகும். அவர் திருமணமானவர். அன்றைய தினம் காலை அவர் பணியாற்றிக் கொண்டிருந்த மகாஇலுப்பள்ளமவில் மனைவியுடன் தங்கியிருந்த வீட்டிலிருந்து வெளியேறியது அன்று ஆரம்பமாகவிருந்த யுனிவடெக் பல்கலைக்கழகத்தின் முதல் மூன்று நாள் ஆய்வு முகாமில் பங்கேற்பதற்காகும். அவரது மறைவினால் சோகத்திற்குள்ளாகியோருள் யுனிவடெக் பல்கலைக்கழகத்தில் அவரது நண்பர்கள் பலரும் அடங்குவர். அந்த நண்பர்களுள் ஒருவரான டிலானும் சோனாலியும் கண்ணீர் மல்க நம்மிடம் இவ்வாறு கூறினார்கள்.

"இன்று எமது பல்கலைக்கழகத்தில் ஆய்வு முகாம் ஒன்றிருந்தது. அதில் கலந்து கொள்ள வந்து கொண்டிருந்த போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. சுரேஷ் காலையில் புறக்கோட்டையில் வந்திறங்கி எனக்கு மெசேஜ் அனுப்பியிருந்தான். முகாம் ஆரம்பமாகியும் இன்னும் சுரேஷ் ஏன் வரவில்லை என்று நாம் சுரேஷுக்கு அழைப்பை எடுத்தோம். எனினும் அந்த அழைப்பு அவர் பதிலளிக்கவில்லை. பதில் வராததால் நாம் தேடிப் பார்த்தோம். அப்போது, இப்படி ஒரு விபத்து நடந்திருப்பதாக ஊடகங்களில் செய்தி வெளியானது. எங்கள் நண்பர் ஒருவருக்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரைத் தெரியும். அவருக்கு போன் செய்த பிறகுதான் இந்த தகவல் எனக்கு தெரிந்தது."

பெருமூச்சு விட்ட நண்பர்களிடையே இருந்த சுரேஷின் நெருங்கிய நண்பர்களுள் டிலானும் ஒருவர். தன் நண்பனைப் பற்றி இவ்வாறு நினைவு கூர்ந்தார்.

"நானும் சுரேஷும் ஒரே பெச்... இது இன்ஜினியரின் ஸ்பெஷசல் டிக்ரியாகும். பெரும்பாலும் இதனைச் செய்வது தொழில் செய்பவர்களாகும். நாம் இன்ஜினியரிங் பீல்டில் பணியாற்றுபவர்கள். சுரேஷ் மாத்தளையைச் சேர்ந்தவர். அவர் திருமணம் முடித்து கணவன் மனைவி இருவரும் மகாஇலுப்பள்ளம நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றுகின்றார்கள்.

தற்போதுள்ள செலவுகளுக்கு மத்தியில் மிகவும் சிரமங்களுடன்தான் பணிக்கு வந்து போவார்கள். என்ன நடந்தது என நினைத்தும் பார்க்க முடியாதுள்ளது. எமது பெச்சில் இருந்த ஒரு அப்பாவி அவர்தான் என நினைக்கிறேன்" இந்த விபத்தில் துரதிர்ஷ்டவசமாக உயிர் இழந்த ஒரு இளைஞனின் உயிரின் பெறுமதியை அவரது நண்பர்கள் விபரித்த விதம் இது.

சரிந்து வீழ்ந்த மரம் டூப்ளிகேஷன் வீதியில் கிளிஃபோர்ட் ஒழுங்கையை ஒட்டியதாக இருந்துள்ளது. மத்துகம டிப்போவிற்கு சொந்தமான பஸ் ஒன்றே இவ்வாறு இந்த மரம் சரிந்து வீழ்ந்து அனர்த்தத்திற்குள்ளானது. குறித்த பஸ்ஸின் சாரதி யட்டபாத, 13ம் கட்டையை சேர்ந்த 45 வயதான சமன் கபில என்பவராவார். இலங்கை போக்குவரத்து சபையில் 12 வருடங்கள் அவர் சேவை அனுபவத்தைக் கொண்டுள்ளார். அந்தப் பன்னிரண்டு வருடத்தின் பதினொரு வருடங்கள், இந்தப் பயங்கர விபத்தில் சிக்கிய பஸ்ஸின் சாரதியாகப் பணியாற்றி வருபவர். இரண்டு பிள்ளைகளின் தந்தையான சமன் கபில இந்த பயங்கர விபத்தால் அதிர்ச்சிக்குள்ளாகி இருப்பதோடு, அந்த திகில் அனுபவத்தை நம்மிடம் இவ்வாறு தெரிவித்தார்.

"பஸ் தெனியாயவிலிருந்து புறக்கோட்டைக்கு அதிகாலை 5.30 க்கு வந்தது. நாம் புறக்கோட்டையிலிருந்து 5.45 மணிக்குப் புறப்பட்டோம். எமது பஸ் கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி ப்ளாஸா சுற்றுவட்டத்தைத் தாண்டி அங்கிருந்த பஸ் தரிப்பிடத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்நேரம் அந்த தரிப்பிடத்தில் நின்ற மூன்று பெண்கள் பஸ்ஸில் ஏறுவதற்கு கைகளைக் காட்டினார்கள்.

நான் பஸ்ஸை மெதுவாக பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தினேன். ஒரு சில வினாடிகள்தான் இருக்கும். நொடிப்பொழுதில் பஸ் நின்றுவிட்டது. பின்னால் பார்த்த போது நடந்த பேரழிவைக் கண்டேன். பஸ்ஸினுள் இருந்தவர்களுள் இயன்றவர்கள் வெளியில் குதித்தார்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். இடம்பெற்றது பேரழிவாகும். நானும் நூலிழையில் உயிர் தப்பினேன்"

விபத்துக்குள்ளான 54 இருக்கைகள் கொண்ட 0741 இலக்கமுடைய இ.போ.ச பஸ்ஸானது பதினொரு வருடங்களாக இவ்வழியாகச் சேவையில் ஈடுபட்டு வந்த பஸ்ஸாகும். சுமார் ஒரு வருடமாக பஸ்ஸின் நடத்துனராகப் பணியாற்றி வரும் யு. எச். கயான் புத்திக 37 வயதுடையவராகும். யட்டபாத 8ம் கட்டையைச் சேர்ந்த கயான் புத்திகாவும் இந்த பயங்கரமான அனர்த்தத்தில் உயிர் தப்பியுள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

**வசந்தா அருள்ரட்ணம்**

**தனியார் லேபல்களை தயாரித்து வழங்குவதற்கான வாய்ப்புக்கள்**

தூய கலப்பற்ற தேங்காய் எண்ணெய், தேங்காய் எண்ணெய், தேங்காய் மா மற்றும் துருவல் தேங்காய் (உயர் மட்ட கொழுப்பு) ஆகியனவற்றிற்கான தனியார் லேபல் தயாரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

**0715-817337 என்ற இலக்கத்தினூடாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்**

**INTERNATIONAL DRIVING LICENCE**

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON Estd. 1904

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk



# ‘800’ திரைப்படத்தை இயக்கிய ஸ்ரீபதி



## தமிழ்நாட்டிலிருந்து வழங்கிய நேர்காணல்

800 திரைப்படத்தின் முரளியின் பாத்திரத்திற்கு உயிர் கொடுத்திருப்பது Slumdog Millionaire திரைப்படத்தில் நடித்த மாத்தூர் மிட்டால்

அன்றும் இன்றும் உலகின் தலைசிறந்த சுழற்பந்து வீச்சாளராகக் கருதப்படும் முத்தையா முரளிதரனின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு, இந்தியத் தமிழ் சினிமாவின் தயாரிப்பான '800' திரைப்படம் திரையிடப்படுகின்றது. '800' சினிமாவுடன் முரளிதரன் இணைந்து கொண்டது 2010ம் ஆண்டு ஜுலை 6ம் திகதி, காலி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்தியாவுக்கு எதிரான தனது கடைசி டெஸ்ட் போட்டியின் கடைசி இன்னிங்ஸில் 800வது டெஸ்ட் விக்கெட்டுகளை வீழ்த்தி நிறைவு செய்த 13வது ஆண்டு நிறைவு நாளான கடந்த 6ம் திகதியாகும்.

இலங்கை, இந்தியா மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் படமாக்கப்பட்ட முரளியின் '800' திரைப்படம் தமிழ்நாடு, இலங்கை, அமெரிக்கா, பிரிட்டன், மத்திய கிழக்கு உள்ளிட்ட 15 நாடுகளில் ஒரே நேரத்தில் திரையிடப்பட்டது. தமிழில் தயாரான '800' சிங்களம் மற்றும் தெலுங்கில் மொழி மாற்றம் செய்யப்பட்டு ஆங்கிலத்தில் உபதலைப்பிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ் திரைப்பட இயக்குனர் எம். எஸ். ஸ்ரீபதி மற்றும் புக்கர் விருது வென்ற ஷெஹான் கருணாதிலக்க இணைந்து திரைக்கதையை எழுதியுள்ள இந்த படத்தை ஸ்ரீபதி இயக்கியுள்ளார். சர்வதேச அளவில் புகழ்பெற்ற ‘Slumdog Millionaire‘ படத்தில் நடித்த மாத்துர் மிட்டல் இந்தப் படத்தில் முரளியாக நடித்துள்ளார்.



வர்த்தகத்தில் ஈடுபட்ட தோட்டப்புறக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞனின் வர்த்தக முயற்சிகள் காடையர்களால் தீயிட்டு கொளுத்தப்பட்ட பின்னர் இலங்கை கிரிக்கெட் அணியின் பலம் வாய்ந்த வீரர்களில் ஒருவராக அவர் மாறி, சர்வதேசப் புகழ்பெற்ற விதம், இனவாதப் போர் முப்பது வருடங்களாக இலங்கையில் பயங்கரத்தையும் வெறுப்பையும் விதைத்த காலப்பகுதியில் தேசிய கிரிக் கெட் அணியில் ஏனைய வீரர்களுக்கிடையில் இருந்த ஒரே தமிழ் வீரராக கிரிக்கெட் வீரர்களின் ஓய்வறையில் அவர்க ளோடு இணைந்து வெற்றி தோல்விகளை சகித்த விதம், அவுஸ்திரேலிய நடுவர்களால் ஏற்படுத்தப்பட்ட அசௌகரியங்களின் போது மன உளைச்சலுக்கு ஆளாகி தலைவர் அர்ஜுன ரணதுங்க உள்ளிட்ட தேசிய அணியின் அனைத்து வீரர்களும் மற்றும் பொதுவாக ஒட்டுமொத்த நாட்டினரும் மத, இன பேதமின்றி முரளியுடன் எவ்வாறு நின்றார்கள் என்பதையும் காட்டும் இந்த அற்புதமான திரைப்படம் இலங்கை, இந்தியா மட்டுமல்லாது முழு உலகுக்கும் ஒரு அற்புதமான சகவாழ்வு பாடமாகும்.

முரளியின் '800' திரைப்பட இயக்குநர் எம். எஸ். ஸ்ரீபதி தமிழ்நாட்டிலிருந்து தினகரனுடனான விஷேட நேர்காணலுடன் இணைந்து கொண்டது பல சவால்களுக்கு மத்தியில் முரளியின் ’800’ எவ்வாறு சினிமாவாக உருப்பெற்றது என்பது குறித்தும், அதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் இதுவரை யாருமே அறிந்திராத அற்புதமான நிகழ்வுகள் குறித்தும் பேசுவதற்காகும்.

“உண்மையில் முரளியின் திரைப்படத்தை இயக்க இருந்தது நானல்ல. தென்னிந்திய சினிமாவின் பிரபல இயக்குனர் வெங்கட் பிரபு தான் முரளி படத்தை இயக்க இருந்தார். நான் அவரிடம் உதவி இயக்குநராக பணிபுரிந்தேன். நான் சேர்ந்து கொண்டது உதவி இயக்குநராகவும் மற்றும் முரளி தொடர்பில் ஆராய்ச்சி செய்து திரைக்கதை எழுதுவதற்குமாகும். இறுதியில் இப்படத்துக்கு நானே இயக்குநரானேன்” என்று ஸ்ரீபதி கதையைத் தொடங்கினார். வெங்கட் பிரபு என்பவர் தென்னிந்திய சினிமாவின் மாபெரும் இசையமைப்பாளர் இளையராஜாவின் இளைய சகோதரர் கங்கை அமரனின் மகனாகும்.

முரளியின் மனைவியும், வெங்கட் பிரபுவும் சிறு வயதிலிருந்தே நண்பர்களாகும். அந்த வகையில்தான் திடீரென முரளியின் திரைப்படத்தை எடுக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அடுத்தது வெங்கட் பிரபு இதற்கு முன்னர் “சென்னை 28” என்ற பெயரில் திரைப்படமொன்றை எடுத்திருந்தார். அது வெற்றிபெற்றது. அது வீதிக் கிரிக்கெட் (Street cricket) பற்றி தயாரிக்கப்பட்ட திரைப்படமாகும். வெங்கட் பிரபு திரைப்படங்களில் கிரிக்கெட்டை சரியாகப் படம்பிடித்திருந்தார். அதனால் முரளியைப் பற்றி படம் எடுக்கும் ஆர்வம் அவருக்கு ஏற்பட்டது. அதன் பின்னர் தான் முரளியின் கிரிக்கெட் மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய்ந்து திரைக்கதை எழுத அவர் என்னை அழைத்தார். அப்படித் தான் இது ஆரம்பித்தது” படத்தின் பின்னணி எப்படி உருவானது என்பதை ஸ்ரீபதி விவரித்தார்.

திரைக்கதைக்கு முன் 2018ம் ஆண்டில் வெங்கட் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளதோடு, அவர் அங்கு முரளியின் முகாமையாளராகப் பணியாற்றிய குட்னஸ் நலன்புரி மன்றத்தின் நிறுவனர் குஷில் குணசேகரனை சந்தித்ததாகவும் ஸ்ரீபதி கூறினார்.

“அதன் பிறகு திரைக்கதை தயாரானது. முரளி ஐபிஎல் போட்டிகளுக்காக ஹைதராபாத் வந்திருந்தபோது நாம் அவரைச் சந்தித்தோம். எப்படியோ கடைசியில் வெங்கட் பிரபு இதை ஆரம்பிப்பதற்குள் வேறொரு படத்துக்குப் போக வேண்டியதாயிற்று. அதன் பின்னர்தான் இந்தப் படத்துக்கு நான் இயக்குநரானேன். நானும் உண்மையில் ஒரு கிரிக்கெட் ரசிகன்தான். அதேபோல் நான் பாடசாலைக் காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுள்ளேன். இந்தியாவின் ஒவ்வொரு சிறுவர்களினதும் கனவு எப்போதாவது ஒருநாள் கிரிக்கெட் வீரனாக வரவேண்டும் என்பதுதான். அந்தக் கனவு எனக்கும் இருந்தது. எனது பாடசாலைக் காலத்தில் கிரிக்கெட்டைப் பற்றி அந்தளவுக்கு கூறுவதற்கு ஒன்றுமிருக்கவில்லை. 13 வயதின் கீழ் விளையாடும் போது நான் உள்ளூரில் தெரிவானது தான் பெரிய விடயமாக இருந்தது. நான் வேகப் பந்து வீச்சாளராகவே விளையாடினேன். எனினும் நான் அந்தளவுக்கு உயரமானவனாக இல்லாததால் என்னால் பாடசாலை அணியில் இணைந்து கொள்ள முடியாமல் போனது. அதனால் நான் சுழல் பந்து வீச்சாளராக மாறினேன். எனது கதையும், முரளியின் கதையும் ஓரளவுக்கு ஒத்தாகும். அவரும் வேகப் பந்து வீச்சாளராக வந்து கடைசியில் சுழல் பந்து வீச்சாளராகினார். அதுவும் என்னால் மறக்க முடியாத விடயமாகும். எனினும் முரளியினால் எனது கதையை எந்த வகையிலும் சமப்படுத்த முடியாது. எனது கிரிக்கெட் வெறுமனே வீதி கிரிக்கெட்டைப் போன்றது. எந்த ஒரு தொழில் சார் பயிற்சியும் இருக்கவில்லை. கிரிக்கெட்டைக் கைவிட்டு விட்டு சினிமாத் துறைக்கு வந்து கடைசியில் சிரேஷ்ட கிரிக்கெட் வீரரின் கதையை திரைப்படமாக்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

“உண்மையில், கிரிக்கெட்டுக்கு வெளியே முரளியின் தனிப்பட்ட வாழ்க்கைக் கதையைக் கேட்டபோது, முற்றிலும் ஆச்சரியமாக இருந்தது. அவர் கடந்து வந்த மற்றும் பெற்ற வாழ்க்கை அனுபவங்கள் அற்புதமான விஷயங்கள். இந்தக் கதையை எல்லோருக்கும் சொல்ல வேண்டும், எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டிய கதை என்று உணர்ந்தேன். ஆனால் அதை எப்படி செய்வது? என்று யோசித்தேன். ஏனென்றால் சினிமாவின் முகம் முற்றிலும் வேறுபட்டது. உங்களுக்கு இந்தக் கதையை இரண்டரை மூன்று மணி நேரத்தில் சொல்ல வேண்டும். எனவே அவரது வாழ்க்கையின் சில கதைகளை ஒரு திரைப்படத்திற்கு பொருத்தமாக நான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. இது ஒரு பெரிய சவாலாக இருந்தது. ஒரு வாழ்க்கைக் குறிப்பு திரைப்படம் என்பதால் முரளியின் வாழ்க்கையைப் பற்றிய சரியான விஷயங்களைத் தெரிந்துகொள்ள திரைப்பட ரசிகர்கள் விரும்புவார்கள். அத்தோடு இது ஆரம்பம், நடுப்பகுதி, முடிவும் இருக்கும் ஒரு படமாக இருக்க வேண்டும். அதனால்தான் இது ஒரு பெரிய சவாலாக இருந்தது. நான் கதையை எழுத ஆரம்பித்த பிறகு உதவிக் கதாசிரியராக இணைந்து கொள்ளுமாறு நான் ஷெஹான் கருணாதிலக்கவை அழைத்தேன். ஷெஹானை நான் அறிந்திருந்தது நான் அவருடைய 'சைனமன்' புத்தகத்தைப் படித்திருந்தனாலாகும். என் மனதை மிகவும் தொட்ட கதை அது. அத்துடன் இந்தக் கதையை எழுதும் போது எனக்கு இலங்கையில் இருந்து ஒருவரின் உதவி தேவைப்பட்டது. ஏனென்றால் நான் ஒரு வெளிநாட்டவரல்லவா. எனக்கு இலங்கையின் கலாசாரத்தைப் புரிந்து கொள்ளும் தேவை இருந்தது. மக்களைப் பற்றிப் புரிந்து கொள்ள வேண்டிய தேவை இருந்தது. எனவேதான் இலங்கையைச் சேர்ந்த ஒரு எழுத்தாளர் தேவை என்பதை உணர்ந்து கொண்டேன். நான் ஒருவரைத் தேடிக் கொண்டிருந்த நேரம் தான் எனக்கு சைனமன் புத்தகத்தைப் படிக்க கிடைத்தது. ஷெஹானிடமிருந்து எல்லா புறத்திலும் நல்லதொரு ஒத்துழைப்பு கிடைக்கும் என நான் நினைத்தேன். உண்மையில் அவருடன் பணியாற்றிய போது நான் மிகுந்து மகிழ்ச்சியடைந்தேன். அது எனக்கு மிகவும் சிறந்த அனுபவமாகியது” என்றார் ஸ்ரீபதி.

முரளீதரன் தமிழ்நாட்டில் மிகவும் பிரபலமான கதாபாத்திரம் என்று ஸ்ரீபதி கூறினார்.

இலங்கையில் அவரது வாழ்க்கையில் நடந்த சுவாரசியமான விஷயங்களை அறிய மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். நாம் முதலில் விஜய் சேதுபதியை முரளியின் வேடத்தில் நடிக்க வைத்தோம். அது எல்லோருக்கும் தெரியும். அவர் ஏன் இந்தப் படத்தை விட்டு வெளியேறினார் என்பதும் இப்போது மக்களுக்குத் தெரியும். அப்போது தமிழகத்தில் தேர்தல் சூடு பிடித்த காலமாக இருந்தது. அதனால் சேதுபதி முரளி சேரின் படத்தில் நடித்தது அரசியல் நெருக்கடியாக மாறியது.

அந்த நேரத்தில் படத்துக்கு இந்த மாதிரி அரசியல் பிரசாரம் வேண்டாம் என முடிவு செய்தோம். அது தெளிவானது. ஏனென்றால் சேதுபதி மிகவும் பிரபலமான ஒரு நடிகர். அடுத்தது இது முதல் சம்பவம் அல்ல. இந்தியாவில் பல திரைப்படங்களில் இவ்வாறான எதிர்ப்புகள் எழுந்துள்ளன. பிரபல நடிகர்கள் இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன. இது இடம்பெற்றது ஆரம்பத்திலாகும். சேதுபதி ஒரு சிறந்த நடிகர். இப்படிப்பட்ட நடிகர்களுக்கு இவையெல்லாம் எளிதாக நடக்கும். நீங்கள் ஒரு நட்சத்திரமாகவோ, பிரபல நடிகராகவோ மாற வேண்டும் என்றால், சர்ச்சைகள், நெருக்கடிகளை தவிர்க்க வேண்டும்” என்றார்.

முரளியின் கதாபாத்திரத்திற்கு சரியான நடிகர் என்பதால்தான் நாம் சேதுபதியை தெரிவு செய்தோம். அந்த வகையில் மாத்தூர் தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அவருடைய திறமையில் நான் திருப்தி அடைகிறேன். அதிர்ஷ்டவசமாக, மாத்தூருக்கு கிரிக்கெட் பற்றிய அடிப்படை அறிவும் இருந்தது. கிரிக்கெட் விளையாடவும் தெரியும். அவர் உயர் மட்டத்தில் விளையாடவில்லை என்றாலும், பந்துவீச்சிலும், பேட்டிங்கிலும் அவருக்கு ஓரளவு திறமை இருந்தது. அதனால் எமக்கு வேலை எளிதாக இருந்தது. ஆனால் அவர் படத்தில் முரளியைப் போல இருக்க வேண்டும் என்பதால் அவருக்கு கொஞ்சம் விரிவாக பயிற்சி அளிக்க வேண்டியிருந்தது. சரியாக இல்லாவிட்டாலும் படத்தில் முரளிதான் நடிக்கிறார் என்பதை மக்களுக்கு புரிய வைக்க விரும்பினோம். அதனை மனதில் ஓரளவிற்கு பதிய விரும்பினேன். எனவே நாங்கள் ஒரு பந்துவீச்சு பயிற்சியாளரை சம்பளம் கொடுத்து நியமிக்க வேண்டியிருந்தது. மாத்தூர் அதை வெற்றிகரமாகச் செய்தார் என்று நினைக்கிறேன். முரளி கூட மாத்தூர் பந்து வீசுவது போல் தான் பந்து வீசுகிறார் என்று கூறினார். அத்துடன், கேமரா தொழில்நுட்பமும் எங்களுக்கு நன்றாகப் பயன்படுத்தப்பட்டது. முரளியை நாங்கள் சரியாக உருவாக்குவதற்கு அல்ல, ஆனால் அவரது உணர்வுகளை முன்னிலைப்படுத்த விரும்பினோம்” என்றார்.

‘800‘ திரைப்படம் முரளியின் பாத்திரத்தைத் தவிர, மிகவும் முக்கியமான மற்றும் கவனம் செலுத்தப்பட்ட கதாபாத்திரமாக இருந்தது அப்போதைய இலங்கை அணியின் கெப்டனாக இருந்த அர்ஜுன ரணதுங்கவின் பாத்திரமாகும். முரளியின் கிரிக்கெட் வாழ்க்கையில் அவர் மிக முக்கியமானவர்.

'அர்ஜுன ரணதுங்க வேடத்தில் இலங்கை தமிழ் திரைப்பட இயக்குனர் கிங் ரத்னத்தை நடிக்க வைத்தோம். உண்மையில், அர்ஜுனவின் உருவத்துடன் அவருக்கு அதிக ஒற்றுமை இருக்கவில்லை. எனினும் நாம் மற்றைய கதாபாத்திரங்களைப் போல அவரை அப்படி வடிவமைத்தோம். சன்கிளாஸ் அணிதல், ஹெல்மெட் அணிதல் என பல கோணங்களில் பார்த்த போது வித்தியாசத்தைக் காண முடியவில்லை. நாம் சிந்தித்தது சரியான உருவத்தை ஒற்ற உருவத்தை அல்ல. நாங்கள் அதில் குறைந்த கவனத்தையே செலுத்தினோம். ஏனென்றால் இது ஒரு பாஷன் போட்டி அல்ல. நாம் உலக புகழ் பெற்ற ஒருவரைப் பற்றிய ஒரு திரைப்படத்தை எடுக்கிறோம். எப்படியாயினும் படம் தொடங்கி பத்து பதினைந்து நிமிடம் சென்ற போது எல்லாருக்கும் மாத்தூர் முரளி மாதிரியே காட்சியளிப்பார். உருவத்திற்கு ஒத்த உருவத்தைக் காட்டுவதை விட உருவாக்கத்தின் செய்தியே முக்கியமானது.

“இது ஒரு புதிரான, அசாதாரணமான மற்றும் சவாலான பணி. சாதாரண குடும்பத்தில் இருந்து வந்து பல சாதனைகளை படைத்த ஒருவரைப் பற்றி உலகிற்கு சொல்லும் பாடம். அடுத்தது ஒரு ஊக்கமளிக்கும் படம். ஏன் இந்தப் படத்தை எல்லோரும் பார்க்க வேண்டும். அதற்கு காரணம், இன்று நாம் போட்டி நிறைந்த பிரச்சினைகள் நிறைந்த உலகில் வாழ்கிறோம்.

குழுவாதம், இனவாதம், அரசியல் ரீதியான பிளவுகள் மற்றும் மத ரீதியான பிளவுகள் ஏராளம். வெற்றி பெறுவதற்கான தடைகள் ஏராளமுள்ளன. அந்தத் தடைகளையெல்லாம் இந்தப் திரைப்படம் உடைக்கிறது. '800' திரைப்படத்திலிருந்து ஏதாவது விடயங்களைப் புரிந்து கொள்ள, பாடத்தைக் கற்றுக் கொள்ள, சினிமா ஆர்வலர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதுவே எங்களின் எதிர்பார்ப்பாகும். நாடுகள், மொழிகள், தேசங்கள் அனைத்தும் நாம் உருவாக்கியவை என்பதை சமூகத்திற்கு நினைவூட்டுவது கலைஞர்களாகிய நமது பொறுப்பு என்று நான் நினைக்கிறேன். ஒருவர் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், அர்ப்பணிப்புடன் செயல்பட்டால் சவால்களை சமாளிப்பது கடினம் அல்ல என்கிறது படம். முரளி சேரின் கதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒன்று என்று நினைக்கிறேன். அது அனைவருக்கும் சொல்ல வேண்டிய ஒன்றாகும்” என்றார்

‘800‘ ஐ அனைவரின் கண்களைத் திறக்கும் திரைப்படமாகவே நான் காண்கிறேன். இது பலமான ஒரு செய்தியை உலகிற்குச் சொல்லும் திரைப்படமாகும். இந்த திரைப்படத்தைப் பார்க்குமாறு நான் அனைவரிடத்திலும் வேண்டிக் கொள்கிறேன்” என்று அவர் இறுதியாகக் கேட்டுக் கொண்டார்.






பௌஸ் முகம்மட்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# இலங்கையை புரட்டிப் போட்ட மழை



- அவசர நிலைமைகளின் நிமித்தம் மோட்டார் படகுகள், சிறப்பு வாகனங்கள், மீட்புக் குழுக்கள் தயார் நிலையில்
- நில்வள, அத்தனகல்லு ஓயா மற்றும் குடா கங்கை பெருக்கெடுக்கும் அபாயம்
- நாட்டின் சில பிரதேச செயலகங்களுக்கு மண்சரிவு குறித்து சிவப்பு எச்சரிக்கை
- மாத்தறை மாவட்ட பாடசாலைகளுக்கு 09,10ஆம் திகதிகளிலும் விடுமுறை
- நிவாரண மற்றும் மீட்பு பணிகளில் 600 இராணுவ வீரர்கள் மாத்தறை மாவட்டத்தில்– துரித நிவாரண நடவடிக்கைகளுக்கு ஜனா–திபதி பணிப்பு
- 13,027 குடும்பங்களை சேர்ந்த 53,399 பேர் பாதிப்பு, 1556 பேர் நலன்புரி நிலையங்களில்





நாட்டின் சில மாகாணங்களில் மழையோ மழை. தாழ் நிலங்களில் வெள்ளநிலை. மண்சரிவு அச்சுறுத்தல். மக்களின் இயல்பு நிலையும் பெரும் பாதிப்பு. தென் மேல் பருவ பெயர்ச்சி மழைக் காலநிலையின் வெளிப்பாடுகள் இவை.

இதன் விளைவான சீரற்ற காலநிலை நாட்டில் கடந்த இரண்டொரு வாரங்களாக நீடித்து வருகிறது. நாடும் மக்களும் வெள்ளம், மண்சரிவு அச்சுறுத்தலை மாத்திரமல்லாமல் கடும் காற்று மற்றும் இடி மின்னல் என்பவற்றினாலான அனர்த்தங்களையும் எதிர்நோக்கிய வண்ணமுள்ளனர்.

இந்நிலையில் வளிமண்டலவியல் திணைக்களம் அண்மையில் (7.10.2023) விடுத்த அறிவித்தலின் படி, மேல், தென், சப்ரகமுவ ஆகிய மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா மாவட்டங்களிலும் தற்போதைய மழைக்கால நிலை அடுத்துவரும் இரண்டொரு தினங்களுக்கு நீடிக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, தென் மேல் பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சி தீவிரமடைந்திருப்பதால் சில பிரதேசங்களில் 100 மில்லி மீற்றர்களுக்கும் மேல் மழை வீழ்ச்சி கிடைக்க பெறலாமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த சில வாரங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக களுகங்கை, நில்வளா கங்கை, அத்தனகலு ஓயா என்பவற்றின் நீர் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகின்ற அதே நேரம் மௌசாக்கலை, காசல் ரீ, கென்யோன், லக்ஷபான, நவ லக்ஷபான, விமல சுரேந்திர உள்ளிட்ட நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் அதிகரித்த வண்ணமுள்ளது.

களுகங்கை, நில்வளா கங்கை, அத்தனகலு ஓயா ஆகியவற்றின் இரு மருங்கிலும் உள்ள தாழ் நிலப்பிரதேசங்களில் வெள்ள நிலையும் ஏற்பட்டுள்ளது.

மத்திய மலைநாட்டிலும் நீர் மின்னுற்பத்தி நீர்த்தேக்கங்களின் நீர் மட்டமும் உயர்ந்துவரும் நிலையில் மேலதிக நீரை வெளியேற்றும் வகையில் நீர்த்தேக்கங்களின் வான்கதவுளை திறந்துவிட வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. அதனால் தாழ் நிலப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் இருக்க வேண்டுமென நீர் மின்னுற்பத்தி நிலைய அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பொறியியலாளர் அஜித் குணசேகர, தற்போது கிடைக்கப்பெறும் கனத்த மழைவீழ்ச்சியினால் பல நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்து வருவதாகவும் குறிப்பாக நில்வளா, குடா கங்கை, அத்தனுகலு ஓயா ஆகிய கங்கைகளின் தாழ் நிலங்களில் பாரிய வெள்ளநிலை ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து உடனடியாக செயற்பட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள் குறித்த கங்கைகளின் இரு மருங்கிலுமுள்ள தாழ் நிலங்களில் வசிக்கும் மக்களை ஒலிபெருக்கி மூலம் அறிவூட்டினர். அதனால் சில தாழ் நிலப் பிரதேசங்களில் வசிப்பவர்களில் சிலர் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்துமுள்ளனர்.

மாத்தறை மாவட்டத்தில் வெள்ளம்

ஆனால் நில்வளா கங்கையின் இரு மருங்கிலும் அமைந்துள்ள அக்குரஸ்ஸ, மாலிம்பட, திகொட, கம்புருப்பிட்டிய. திக்வெல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் ஏற்கனவே வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது. திக்வெல்ல மின்ஹாத் வித்தியாலயத்தின் வகுப்பறை கட்டடங்களுக்குள் வெள்ள நீர் புகுந்ததோடு வேறு சில பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால் வாகனப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மாவட்டத்தின் பல பாடசாலைகளுக்கு கடந்த 5ஆம்,6ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்பட்டதோடு நிலைமையைக் கருத்தில் கொண்டு மாவட்டத்தின் அனைத்து பாடசாலைகளுக்கும் நாளை 9, மறுநாள் 10ஆம் திகதிகளிலும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தின் 16 பிரதேச செயலகப் பிரிவுகளில் 2,350 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 9,448 பேர் இச்சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 399 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அந்த மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளை குறைவின்றி வழங்குமாறும் அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அத்தோடு வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும் பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

அந்த வகையில் மாலிம்பட, அக்குரஸ்ஸ, கம்புருப்பிட்டிய, திககொட ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண உணவு தயார்படுத்தல் நிலையங்கள் ஊடாக சமைத்த உணவு வழங்கப்படுகிறது. 6,967 குடும்பங்களைச் சேந்த 25,553 பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதோடு அவர்களுக்கு இராணுவம் சமைத்த உணவு வழங்குகிறது.

இவ்வெள்ள நிலையினால் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ள மாலிம்பட பிரதேச செயலகப் பிரிவு மக்களுக்கென விசேட நிவாரணத் திட்டமொன்றும் இராணுவத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை மாத்தறை மாவட்டத்தில் மாத்திரம் 600 இராணுவ வீரர்கள் அனர்த்த மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

(06ஆம் பக்கம் பார்க்க)



மர்லின் மரிக்கார்


**இலங்கை வெளிநாட்டு தூதரகங்களுக்காக பொதுவான இணைய வலைத்தளம் ஒன்றினை நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் கொண்டு பராமரிப்பதற்கான விலைமனுக்கோரல்**

இதனுடன் தொடர்புடைய நிபந்தனைகள் மற்றும் பதிவிற்கான விண்ணப்பப்படிவத்தினை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் www.mfa.gov.lk இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொ. இலக்கம் 0114845716 ஊடாக தொடர்பு கொள்ளவும்.

லங்கா சதொச

**முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)**

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு

**லங்கா சதொச லிமிடட்டுக்கு டின் மீன் (425g) வழங்கல்**

EOI இலக்கம் : LSL/PRO/05/67/EOI-Canned Fish/2023

லங்கா சதொச லிமிடட்டுக்கு டின் மீன் (425g) வழங்குவதற்கு விரும்பும் வெளிநாட்டு வழங்குனர்கள் மற்றும் உள்ளூர் முகவர்களிடம் இருந்து லங்கா சதொச லிமிடட், தலைவர், வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் செயற்படும் அரசுக்கு சொந்தமான மிகப்பெரிய பல்பொருள் அங்காடி வலையமைப்பு மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றாக உள்ள லங்கா சதொச லிமிடட் **ஆர்வ வெளிப்பாட்டுக்கு அழைப்பு விடுக்கிறது.**

ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் **004100461991855 என்ற கணக்கு இலக்கத்திற்கு (Swift code PSBKLKLX) 25 அமெரிக்க டொலர் அல்லது அதற்கு நிகரான ரூபா கட்டணத்தை (மீளளிக்கப்படாதது) செலுத்தி 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதி தொடக்கம் 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரை** கொழும்பு 02, வொக்ஷோல் வீதி, CWE செயலக கட்டிடம், இல. 27, லங்கா சதொச லிமிடெட்டின் பெறுகைப் பிரிவுக்கு (3ஆவது மாடி) அங்கீகாரக் கடிதத்தை சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான ஆவணம் ஒன்றை பெறலாம்.

கட்டண ரசீதை உறுதி செய்தல் அடிப்படையில் EOI சமர்ப்பித்தல் வடிவம் வழங்கப்படும்.

**விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு திகதி மற்றும் நேரம்:** மேலுள்ள முகவரியில் **2023 ஒக்டோபர் 12 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு (கொழும்பு நேரம்).** விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்க விரும்பும் வெளிநாட்டு விலைமனுதாரர்கள் zoom தளம் ஊடாக இணையலாம் (lslcannedfish@lankasathosa.org என்ற மின்னஞ்சலுக்கு கோரிக்கை விடுப்பதன் மூலம் zoom இணைப்பை பெற முடியும்).

**இறுதித் திகதி மற்றும் நேரம்: 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதி மு.ப. 11.00 (கொழும்பு நேரம்)** அல்லது அதற்கு முன்னர். இறுதித் திகதி மற்றும் நேரத்தின் பின் கிடைக்கும் எந்த ஒரு EOI உம் ஏற்கப்பட மாட்டாது.

**EOI சமர்ப்பித்தல்:** EOI இனை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது கைகளால் கொண்டுவந்து சேர்த்தல் வேண்டும். EOI இனை கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில **"LSL/PRO/05/67/EOI-Canned Fish/2023"** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**சமர்ப்பிக்க வேண்டிய விடயங்கள்**

1. நிறுவன பெயர், முகவரி, தொலைநகல், மின்னஞ்சல் முதலியவை உள்ளடங்கிய, இதில் பங்கேற்பதற்கு ஆர்வத்தை வெளிப்படுத்தும் கடிதம்.
2. நிறுவனத்தின் விபரம்
3. வர்த்தகப் பதிவு
4. இறக்குமதி/ ஏற்றுமதி பதிவு
5. சுகாதார அறிக்கைகள் மற்றும் சான்றிதழ்கள்
6. நிதித் திறன் (கடந்த 3 ஆண்டு காலத்தில் BL பிரதிகளின் பொருட்டு முந்தைய ஏற்றுமதியுடன் நிறுவனத்தின் நிதி விபரம்)

ஏதேனும் தெளிவை பெறுவதற்கு, தொடர்பு கொள்ளவும்

திலினி - 070 1560428 மின்னஞ்சல்: lslcannedfish@lankasathosa.org

எந்த ஒரு காரணமும் குறிப்பிடாது EOI விண்ணப்பங்களை ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை லங்கா சதொச லிமிடட் வசமானது.

தலைவர் , லங்கா சதொச லிமிடட்,
இல.27, சதொச பொதுச் செயலகக் கட்டிடம்
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02, இலங்கை

**பல சரக்குப் பொருட்கள் மற்றும் அது சார்ந்த உற்பத்திகளின் வீற்பனை சபை பட்டய வீற்பனைப் பிரதிநிதிகளை நியமித்தல்**

பலசரக்குப் பொருட்கள் மற்றும் அதுசார்ந்த உற்பத்திகளின் விற்பனை சபையின் உற்பத்திகளை பிரபல்யப்படுத்தும் நோக்கில் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியவாறு நாடளாவிய ரீதியில் பட்டய விற்பனைப் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இதற்காக இணக்கப்பாட்டைக் காண்பிக்கும் வியாபாரிகளால் தமது விண்ணப்பங்களை ஒக்டோபர் 20ம் திகதி பி.ப 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் குறித்த விண்ணப்பங்களை எமது இணையதளமான **www.spicelk.com/downloads/** மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,
பலசரக்குப் பொருட்கள் மற்றும் அது
சார்ந்த உற்பத்திகளின் விற்பனை சபை
இல. 74, கடுவளை வீதி,
பத்தரமுல்ல**

**மேலதிக விபரங்களுக்கு:
குமாரி சேனாநாயக்க
சந்தைப்படுத்தல் தொடர்புகள்
அதிகாரி
077- 2493044**

**சுற்றாடல் அமைச்சு**

**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்**

**மன்னம்பிட்டிய மணல் திட்டத்திற்கு வாடகை அடிப்படையில் நீர்த்தாங்கி பவுசர்களை பெற்றுக்கொள்வதற்கான பெறுகை**

மன்னம்பிட்டிய மணல் திட்டத்திற்கு வாடகை அடிப்படையில் நீர்த் தாங்கி பவுசர்களைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் கோருகின்றார்.

| உருப்படி இல. | விபரம் | விலைக்கோரல் பிணை முறி (ரூபா) |
|---|---|---|
| 01 | வாடகை அடிப்படையில் நீர்த் தாங்கி பவுசர்களைப் பெற்றுக்கொள்ளல் (03 நீர்த் தாங்கி பவுசர்கள்) | ரூபா 10,000.00 (ஒரு பவுசருக்கு) |

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும். ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 011-2824025)

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023 ஒக்டோபர் 09ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 27ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் பி.ப. 3.00 மணி வரையில் மன்னம்பிட்டிய மணல் திட்ட அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகத்தின் பெறுகைப் பிரிவில் சிங்கள மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் மற்றும் பெற்றுக்கொள்ளலாம்.

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023 ஒக்டோபர் 30ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்களுடன் மேற்கூறப்பட்ட தொகைக்கான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவதொரு செல்லுபடியாகும் நிலையிலுள்ள பிணைமுறி இணைக்கப்பட்டிராத விலைமனு நிராகரிக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் மாநாட்டு அறையில் சமுகம்தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட விலைமனுதாரரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும்.

**தலைவர் (பெறுகைக் குழு),
பெறுகைப் பிரிவு,
GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,
190/A, ரட்னவீர கட்டிடம், ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட.**

**இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை**

**வழங்கல் பிரிவு - மத்திய சமையலறைக்கு 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

2024ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்களை வழங்கும் பொருட்டு இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையுடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கூட்டுத்தாபனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட அரச நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பங்குதாரர் நிறுவனங்கள் மற்றும் ஏனைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| 01. | அரிசி (முழுமையாக கல் மற்றும் மணல் நீக்கப்பட்டவை) |
| 02. | கருவாடு வகைகள் |
| 03. | மரக்கறிகள் மற்றும் கிழங்கு வகைகள், கஜு விதைகள் மற்றும் கஜு துண்டுகள் |
| 04. | தேங்காய்கள், தேங்காய் பால்/கிறீம் |
| 05. | முட்டைகள் |
| 06. | பலசரக்குப் பொருட்கள் மற்றும் தானியங்கள் |
| 07. | வாழைப்பழம் |
| 08. | வெள்ளைச் சீனி |
| 09. | தேயிலை/கோப்பித் தூள் |
| 10. | சூழலுக்கிசைவான உணவு சுற்றும் பொலித்தீன் தாள்கள் (17"x 17")மற்றும் (குறோசறி பைகள் - 7" x 10" மற்றும் 9" 12") |
| 11. | தேங்காய் எண்ணெய் |
| 12. | கோழியிறைச்சி |
| 13. | பிஸ்கட்கள் |
| 14. | பால்மா |
| 15. | கட்டிப்பால் |
| 16. | ஜேம் |
| 17. | மாஜரின் |
| 18. | எரிவாயு (L.P. Gas) |
| 19. | உணவு பொதி செய்யும் பெட்டிகள் (காட்போட்) |
| 20. | மீன் |
| 21. | குடிநீர் (போத்தலில் அடைக்கப்பட்டவை) |
| 22. | இடியப்பம், பிட்டு போன்றன |

**நிபந்தனைகள்:**

01. வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ள விரும்பும் தனியார் நிறுவனங்கள் மற்றும் ஏனையவர்கள் தமது வியாபாரப் பதிவுச் சான்றிதழை விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
02. மேற்படி 01 முதல் 22 வரையான பொருட்களுக்காக பதிவு செய்து கொள்வதற்குத் தேவையான விண்ணப்பப் படிவங்களை ஒவ்வொரு பொருளுக்கும் ரூபா 1000.00 மற்றும் வெட் வரி என்பவற்றைச் செலுத்தியதன் பின் கொழும்பு-01, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தையில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
03. வழங்கல்களுக்காக பொதுவாக பதிவு செய்து கொண்ட வழங்குநர்களிடமிருந்தே விலைகள் கோரப்படும் என்பதுடன் பதிவு செய்து கொள்ளாத ஏனைய வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரி பொருட்களைக் கொள்வனவு செய்யும் உரிமையை துறைமுக அதிகார சபை தன்னகத்தே கொண்டுள்ளது.
04. முறையாக விலைகளைச் சமர்ப்பிப்பதற்கு மற்றும் நேர காலத்திற்கு பொருட்களை வழங்கத் தவறுபவர்கள் மற்றும் துறைமுக அதிகார சபையினால் வழங்கப்படும் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் மற்றும் மாதிரிகளின் பிரகாரம் சிறந்த தரத்துடனான பொருட்களை வழங்கத் தவறும் வழங்குநர்களின் பெயர் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பெயர் பட்டியலிலிருந்து அகற்றப்படும்.
05. சகல விண்ணப்பப் படிவங்களும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிட்டு, பிரதான முகாமையாளர் (வழங்கல்), வழங்கல் பிரிவு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை, கொழும்பு 01 எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். மேலும் மேற்படி முகவரியில் உள்ள பிரதான பொறியியலாளர் அலுவலகத்திற்கு இந்த விண்ணப்பங்களை ஒப்படைக்கலாம். இதன் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
06. மேலதிக விபரங்களை 2323102, 2432866, 2328342, 2320250, 2482761, 2482499, 2482259 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (வழங்கல் மற்றும் பொருள்வள முகாமைத்துவம்),
வழங்கல் பிரிவு,
இலங்கைத் துறைமுக அதிகாரசபை,
இல. 45, லேடன் பஸ்தியன் மாவத்தை,
கொழும்பு 01.**

# 38ஆவது கலாபூஷணம் விருது வழங்கும் விழா–2023

38ஆவது கலாபூஷணம் அரச விருது விழா 2023 ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை (11) முற்பகல் 10.00 மணிக்கு மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2022ஆம் ஆண்டு கலாபூஷணம் விருதுக்காக தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் கலைஞர்களான ஏ.சி.ராஹில் நிந்தவூர் (இலக்கியம்), எம்.எம்.ஜமால்தீன் ஏறாவூர் (இலக்கியம்), ஹாஜா அலாவுதீன் பாலாவி (இலக்கியம்), எம்.கே.எம்.அஸ்வர் மொரட்டுவ (ஊடகம்), எஸ்.தஸ்தகீர் (இலக்கியம்) யூ.எல்.கலீல் ரஹ்மான் கல்முனை (ஊடகம்), ஏ.யூ.எல்.அப்ரா உம்மா சம்மாந்துறை (இலக்கியம்), ஏ.இஸ்ஸதீன் சாய்ந்தமருது (நாட்டுப்புற கலைகள் கோலாட்டம்), இஸட்.ஏ.எம். ஹனீபா கண்டி (இலக்கியம்), ஏ.எல்.ஏ.சுப்ஹான் அக்பர் மாவடிப்பள்ளி (பாடல்) ஆகிய 10 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் வை.அனிருத்னன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல், கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் சதுரி பிந்து, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யசிந்தா குணவர்தன, புத்த சாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரண உட்பட மூத்த கலைஞர்கள் பலர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளனர். இம்முறை கலாபூஷணம் விருதுக்காக இலங்கையின் நாலாபுறத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம் கலைஞர்கள் பலரும் கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாராயோ'

## 15ஆம் திகதி கொழும்பில் வெளியீடு




'கலைஒளி' முத்தையாப்பிள்ளை ஞாபகார்த்தக் குழு வெளியிட்டு, தமிழகத்தில் ஒரு இலட்சம் இலக்கிய விருது பெற்ற மாத்தளை பெ. வடிவேலனின் 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை, தமிழ்ச் சங்கத்தில் 15ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு பேராசிரியர் தை.தனராஜா தலைமையில் இவ்விழா நடைபெறவுள்ளது.

லண்டனிலிருந்து பேராசான் மு.நித்தியானந்தன் இந்த தொகுதிக்கு வழங்கிய முன்னுரை, மாத்தளை வடிவேலனின் எழுத்தாற்றலை தமிழக வாசகர்களுக்கு கொண்டு செல்வதில் பெரும் வெற்றி பெற்றுள்ளது. பதிப்பாளரும் எழுத்தாளருமான எச்.எச்.விக்கிரமசிங்கவின் (மாத்தளை செல்வா) பெரும் முயற்சியில் இச்சிறுகதைத் தொகுதி தொகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குரங்குப்பாஞ்சான் காணிக்கு தௌபீக் MP திடீர் விஜயம்

## உரிய தீர்வு பெற்றுத்தருவதாகவும் உறுதியளிப்பு



கிண்ணியா, குரங்குப்பாஞ்சான் இராணுவ முகாம் விவகாரம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் கள விஜயமொன்றை நேற்று முன்தினம் (06) மேற்கொண்டார்.

கிண்ணியா, குரங்குப்பாஞ்சான் இராணுவ முகாம் காணிக்குள் பௌத்த மதகுருமார் தலைமையிலான குழுவினர் வருகை தந்த விடயம் அப்பிரதேச மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில், இந்தக் காணி விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காகவே பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் அப்பிரதேசத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது அப்பிரதேச மக்களுடன் நீண்டநேரம் கலந்துரையாடியதுடன், உரிய நடவடிக்கை எடுப்பதாகவும், அவர் தெரிவித்தார்.

## இலங்கையில் தொடர்ச்சியாக வருடாந்தம்

# சுமார் 700 பெண்கள் மார்பக புற்றுநோயால் இறப்பு

இலங்கையில் மார்பக புற்றுநோயினால் வருடாந்தம் 700 தொடக்கம் 800 பேர்வரை மரணிப்பதாக தரவுகள் மூலம் தெரியவந்துள்ளதாக, தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் ஆலோசகரும் சமூக மருத்துவருமான சுராஜ் பெரேரா தெரிவித்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டளவில் இலங்கையில் 5,189 நோயாளர்கள் இனங்காணப்பட்டதாகத் தெரிவித்த அவர், நாளாந்தம் 14 நோயாளர்கள் பதிவாகுவதாகவும் தெரிவித்தார்.

ஆரம்பகாலத்தில் இந்த நோயைக் கண்டறியும் பட்சத்தில் நோயைக் குணப்படுத்த வழிவகுக்க முடியுமென்பதுடன், நோய் வாய்ப்பட்ட சுமார் 10,000 பெண்களுக்கு முழுமையாக சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார். 20 வயதுக்கும் மேற்பட்ட ஒவ்வொரு பெண்ணுக்கும் மாதாந்தம் மார்பகப் புற்றுநோய் பரிசோதனை அவசியமெனவும், மருத்துவர் சுராஜ் பெரேரா சுட்டிக்காட்டினார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி

அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சி எதிர்வரும் புதன்கிழமை (11) மாலை 5.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் சட்டத்தரணி ந.கு. அஷோக்பரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்ச்சியில் 'ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு ஓர் இரங்கற்பா' எனும் தலைப்பில் முனைவர் தெ.ஞா.மீநிலங்கோ உரை நிகழ்த்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# படகு மூலம் UK சென்ற இளைஞன் உயிரிழப்பு

## பிரான்ஸிலிருந்து செல்கையில் அனர்த்தம்



பிரான்ஸிலிருந்து பிரிட்டனுக்கு சட்டவிரோதமாக படகில் பயணித்த இலங்கை இளைஞர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய இளைஞர் ஒருவரே கடந்த வியாழக்கிழமை (05) இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்த இளைஞரும் இன்னும் சில நபர்களும் இணைந்து பிரிட்டனுக்கு சட்டவிரோதமாக படகில் பயணித்துக்கொண்டிருந்த போது, படகு புயலில் சிக்கிக் கடலில் கவிழ்ந்ததாக தெரியவந்துள்ளது. கடலினுள் விழுந்த இந்த இளைஞரை படகிலிருந்த ஏனையவர்கள் மீட்ட போதும், அவரைக் காப்பாற்ற முடியாமல் போனதாக, அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக இளைஞர்கள் பலர், பிரான்ஸிலிருந்து பிரிட்டன் நோக்கிப் படகு மூலம் புலம்பெயர்ந்து வருகின்றமை அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

## இலங்கையை... (05ஆம் பக்கதொடர்)

### அனர்த்த முன்னாயத்த ஏற்பாடு

இவை இவ்வாறிருக்க, இச்சீரற்ற காலநிலையினால் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் சேதங்களையும் பாதிப்புக்களையும் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்கவும் தேவையான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார். பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோனும், சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைப்பதற்கும் தவிர்ப்பதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக் கொண்டுள்ளார். அதனால் சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அவசரகால நிலைமைகளில் மக்களை மீட்பதற்காக மோட்டார் படகுகள், இராணுவ சிறப்பு வாகனங்கள் மாத்திரமல்லாமல் மீட்புக்குழுக்களும் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியொதுக்கீடுகளும் அந்தந்த மாவட்ட செயலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### மண்சரிவு அச்சுறுத்தல்

மேலும் இச்சீரற்ற காலநிலை ஆரம்பமானதைத் தொடர்ந்து மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் மண்சரிவு அச்சுறுத்தலும் ஏற்பட்டது. குறிப்பாக கேகாலை சென் ஜோசப் மகளிர் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்சரிவு அச்சுறுத்தலால் கடந்த வாரம் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டது. அக்குரஸ்ஸ, தியலுபே, தெனிப்பிட்டிய பிரதேசத்தில் கடந்த 5ஆம் திகதி (10.2023) பாரிய மண்சரிவொன்று ஏற்பட்டது. இம் மண்சரிவானல் எவருக்கும் உயிராபத்து ஏற்படாத போதிலும் அப்பிரதேசத்தில் வசித்த 30 குடும்பங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டன.

காலி மாவட்டத்தின் துவக்கு கலவத்தை பிரதேசத்திலும் விகாரையொன்றுக்கு அருகிலுள்ள வீடொன்றில் மண் மேடொன்று சரிந்து விழுந்ததில் 78 வயதுடைய நபரொருவர் உயிரிழந்திருக்கின்றார். அத்தோடு மலையகத்திலும் மலை சார்ந்த பிரதேசங்களிலும் சிறுசிறு மண்சரிவுகளும் பதிவாகியுள்ளன. இந்நிலையில் மக்களை விழிப்பூட்டும் வகையில் நாட்டிலுள்ள 09 மாவட்டங்களின் 30 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு தினமும் மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுத்து வந்த தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம், நேற்று முன்தினம் (06.10.2023) மாலை முக்கிய அறிவிப்பொன்றை விடுத்தது. அவ்வறிவிப்பில் காலி மாவட்டத்தில் 09 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மண் சரிவு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட போதிலும் எல்பிட்டிய, நாகொட, யக்கலமுல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், களுத்துறை மாவட்டத்தில் இங்கிரிய, வலலாவிட்ட, மத்துகம ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் சிகப்பு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலகப் பிரிவுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தின் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவுக்கும் கூட இச்சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் களுத்துறை மாவட்டத்தில் மேலும் 4 பிரதேச செயகப் பிரிவுகளுக்கும் மாத்தறை மாவட்டத்தில் 11 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும், இரத்தினபுரி மாவட்டத்தில் 10 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் மண்சரிவு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்தோடு கொழும்பு, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, கண்டி, கேகாலை ஆகிய மாவட்டங்களின் பல பிரதேச செயலகப் பிரிவுகளுக்கும் கூட இவ்வெச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. அதனால் மண்சரிவு அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களில் வாழும் மக்கள் சேறு சகதியுடன் திடீரென நீரூற்று ஏற்படல், உயர்ந்த மரங்கள், தொலைபேசி, மின்கம்பங்கள் சரிதல், வீடுகள் உள்ளிட்ட கட்டடங்களிலும் நிலத்திலும் திடீரென வெடிப்புக்கள், பிளவுகள் ஏற்படல், அவை விரிவடைதல், தாழிறக்கங்கள், இயற்கையாகக் காணப்படும் நீரூற்றுக்கள் தடைபடுதல் அல்லது காணாமல் போதல் போன்றவாறான அறிகுறிகளை அவதானித்தால் தாமதமின்றி விரைவாக அவ்விடங்களை விட்டு அகன்று பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர வேண்டும். அவ்வறிகுறிகள் பெரும்பாலும் மண்சரிவுக்கான முன்னெச்சரிக்கையாகவே இருக்கும். இதேவேளை, கொழும்பு லிபட்டி பிளாஸாவுக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்திற்கு அருகிலிருந்த 100 வருடங்கள் பழமையான 'ரொபரோஸியா வகையைச் சேர்ந்த பாரிய மரமொன்று இச்சீரற்ற காலநிலையினால் திடீரென பயணிகள் பஸ் வண்டி மீது கடந்த வெள்ளியன்று காலையில் சரிந்து விழுந்தது. இதனால் ஐவர் உயிரிழந்ததோடு 17 பேர் காயமடைந்தனர். அதனால் சீரற்ற காலநிலையினால் சரிந்து விழக்கூடிய அபாயத்தைக் கொண்டுள்ள உயர்ந்த மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. அதற்கு தேவையான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

### பாதிப்புக்கள்

என்றாலும் தற்போதைய சீரற்ற காலநிலையினால் சப்ரகமுவ மாகாணத்தில் 278 குடும்பங்ளைச் சேர்ந்த 1058 பேரும், மேல் மாகாணத்தில் 10,373 குடும்பங்களைச் சேர்ந்த 42,683 பேரும், தென் மாகாணத்தில் 2,119 குடும்பங்ளைச் சேர்ந்த 8,615 பேரும் அடங்கலாக முழு நாட்டிலும் 13,0 27 குடும்பங்களைச் சேர்ந்த 53,399 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ள மக்கள் 16 நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 381 குடும்பங்களைச் சேர்ந்த 1556 பேர் இவ்வாறு தங்கியுள்ளனர். அவர்களில் 334 குடும்பங்களைச் சேர்ந்த 1,382 பேர் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடுப்பிலி தெரிவித்திருக்கிறார். இவ்வாறான பாதிப்புக்களையும் சேதங்களையும் இச்சீரற்ற காலநிலை ஏற்படுத்தியுள்ள போதிலும் பருவ பெயர்ச்சி மழைவீழ்ச்சி தீவிரமடைந்திருப்பதால் இப்பாதிப்புகளும் சேதங்களும் மேலும் அதிகரிக்கக்கூடிய அச்சுறுத்தல் நிலவவே செய்கின்றது. அதுவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கருத்தும் ஆகும். அதனால் எதிர்வரும் நாட்களிலும் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டிய பொறுப்பு மக்கள் முன்பாக உள்ளது. அதன் ஊடாக சீரற்ற காலநிலையினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களினாலான சேதங்களையும் பாதிப்புக்களையும் தவிர்த்துக் குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## இராணுவம் வெளியேறிய...

அப்பிரதேசத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் கடந்த ஜூன் மாத காலப்பகுதியில் அங்கிருந்து வெளியேறினர்.

இராணுவத்தினர் வெளியேறிய போதிலும், அப்பிரதேசம் இராணுவத்தினரால் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படாமையால், அப்பிரதேச மக்கள் மீள்குடியேற முடியாத நிலைமை உள்ளது.

இதனால் அப்பிரதேசம் ஆட்களற்ற சூனியப் பிரதேசமாக காணப்பட்டமையை திருட்டுக் கும்பல்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்தியுள்ளனர். இந்நிலையில், வீடுகளை உடைத்து கதவு, ஜன்னல்கள், அதன் நிலைகள் மற்றும் இரும்புகள் ஆகியவற்றை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக பொலிஸாரிடமும் பிரதேச செயலகத்திடமும் பொதுமக்கள் முறைப்பாடு செய்தும், திருட்டுக் கும்பல்களை கட்டுப்படுத்த முடியவில்லை.

## GCE O/L, A/L பரீட்சைகளை...

சட்டத்தின் மூலம் மாற்ற முடியாதெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுடன் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சந்திப்பின் போதே, ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். இந்த ஆண்டும் பரீட்சைகள் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் நடத்தப்பட வேண்டுமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

2025ஆம் ஆண்டு முதல் பரீட்சைகளை நடத்துவதற்கு பிள்ளைகளுக்கு சுமை ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனவும், ஜனாதிபதி தெரிவித்தார். பரீட்சைகளை உரிய நேரத்தில் நடத்துவதற்கு பாராளுமன்ற சட்டத்தினூடாக ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கல்வி அமைச்சருக்கு ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையில் தெரிவித்தார். இந்த நாட்டில் பரீட்சைகள் பிற்போடப்படுவதினால் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்கள் பெறுவது, வயது வரம்பை தாண்டிச் செல்வது போன்ற பல பாதகமான விளைவுகளை மாணவர்கள் சந்திக்க நேரிடுமென்று ஜனாதிபதியிடம் கல்வி நிபுணர்கள் அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நீதவான் பதவி விலகலின்...

"முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதவான் ரி.சரவணராஜா நாட்டை விட்டு வெளியேறியுள்ள சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். அதேபோல் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சும் சி.ஐ.டி. ஊடாக தனியான விசாரணையை முன்னெடுத்து வருகின்றது.

தனக்கு அச்சுறுத்தல் இருந்திருந்தால், பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்த நீதவான் இது தொடர்பாக முறைப்பாடு செய்திருக்க வேண்டும்.

அவர் அவ்வாறு எந்தவொரு முறைப்பாட்டையும் முன்வைக்கவில்லையென்பதுடன், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் தெரியப்படுத்தவில்லை.

எனவே, இங்கு பாரிய சூழ்ச்சி இருப்பது தெளிவாகின்றது. அவர் வெளிநாடு செல்வதற்கு முன்னர் மேற்குல நாடுகளின் இராஜதந்திரிகள் இருவரை சந்தித்துள்ளாரெனக் கூறப்படுகின்றது.

எனவே, அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினாரா? அல்லது தான் செய்த குற்றங்களிலிருந்து விடுபடுவதற்காக நாட்டை விட்டு வெளியேறினாரா? என்பது தொடர்பாக ஆராய வேண்டும் என்றார்.

## ரயில்வே துறையினரால்...

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பணித்துள்ளார்.

கடந்த மாதத்தில் ரயில்வே திணைக்களத்துடன் தொடர்புடைய சுமார் 84 பணிப்பகிஷ்கரிப்பாளர்களினால் தன்னிச்சையாக ஆரம்பிக்கப்பட்ட வேலைநிறுத்தப் போராட்டத்தினால் ஒரு இளம் மாணவர் உயிரிழந்தார்,

இது தொடர்பான விசாரணைகள் ரயில்வே திணைக்கள மட்டத்திலும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விடயங்கள் அனைத்திலும் கவனம் செலுத்திய அரசாங்கம், விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ரயில்வே திணைக்களத்தை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தது.

அத்தியாவசிய சேவைப் பிரகடன விதிமுறைகள் நடைமுறையில் இருந்த போதே, ரயில்வே பாதுகாப்பு அதிகாரி ஒருவர் மற்றும் ரயில்வே துணைக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கிடையே சிகரெட் புகைத்தல் தகராறு ஒன்றை அடிப்படையாகக் கொண்டு திடீரென ஆரம்பிக்கப்பட்ட ரயில் வேலைநிறுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன. இதனால் தினமும் ரயில் சேவையை பயன்படுத்தும் ஆயிரக்கணக்கான அலுவலக ஊழியர்கள் உட்பட ஏராளமானோர் கடும் சிரமத்துக்குள்ளாகினர். இந்த விடயங்கள் அனைத்திலும் கவனம் செலுத்திய அமைச்சர், அமைச்சு மட்டத்தில் விரைவான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணைகளை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறும் அமைச்சின் செயலாளருக்கு பணித்துள்ளார்.

## நில்வள கங்கை...

இப்பகுதிகளில் பாரிய வெள்ளம் ஏற்படுவதற்கான அபாயம் நிலவுவதாகவும், அத்திணைக்களம் எச்சரித்துள்ளது. வெள்ளத்தினால் ஏற்படும் அபாயங்களை தவிர்த்துக்கொள்ளும் வகையில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இது தொடர்பாக சாரதிகளை அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும், நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

## வாகனங்களில் அதிகளவில்...

போக்குவரத்து திணைக்களத்தின் வாகன புகை உமிழ்வு சோதனை பிரிவு தெரிவித்தது. 070 3500 525 எனும் WhatsApp இலக்கத்தினூடாக இந்த விடயம் தொடர்பாக முறைப்பாடுகளை பொதுமக்கள் முன்வைக்க முடியும். அதிகளவில் கரும்புகையை வெளியேற்றும் வாகனங்களையும் அவை பயணிக்கும் இடத்தையும் தெளிவாக அறியக்கூடிய வகையிலான படத்தை WhatsApp இலக்கத்துக்கு அனுப்பி வைக்க முடியுமெனவும், வாகன புகை உமிழ்வு சோதனை பிரிவு தெரிவித்தது. பொதுமக்கள் வழங்கும் முறைப்பாடுகளின் அடிப்படையில் வாகன புகை உமிழ்வு சோதனை பிரிவு விசாரணையை முன்னெடுக்குமென்பதுடன், வாகனத்தை அடையாளம் கண்டு, குறைபாட்டை சீர் செய்வதற்கு ஒரு மாத கால அவகாசம் வழங்கப்படும் எனவும் வாகன புகை உமிழ்வு சோதனை பிரிவு தெரிவித்தது.

இதற்கமைய 070 3500 525 எனும் WhatsApp இலக்கத்துக்கு அல்லது 011 2 66 99 15 எனும் இலக்கத்துக்கு முறைப்பாடுகளை வழங்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீட்டிலிருந்தவாறே...

நடைமுறை நேற்று (07) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில், மேல் மாகாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இந்த வசதியை பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி முதல் அனைத்து அரச நிறுவனங்களின் பணப்பரிவர்த்தனை நடவடிக்கைகளை இணையவழி முறையினூடாக முன்னெடுக்கும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் மேலும் தெரிவித்தார்.

## புத்திஜீவிகளின் வெளியேற்றம்...

விடயத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், அது எமது நாட்டினுடைய எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை இருளடிக்கும் அபாயம் இருப்பதாக, எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் (06) எதிர்க்கட்சியினால் கொண்டு வரப்பட்ட புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுதல் தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்த போது,

"இன்று நம் நாடு எதிர்கொள்ளும் புத்திஜீவிகள் வெளியேறும் சவாலின் தீவிரத்தன்மையை இதற்கு பொறுப்பான அனைவரும் ஆழமாக புரிந்துகொள்ள வேண்டும். இந்த விடயத்தின் அபாயம் மேலோட்டமாகத் தெரியவில்லையென்றாலும், ஒரு நாடாக நாம் இவ் விடயத்தை உடனடியாகவும் பொறுப்புடனும் கையாளத் தவறினால், அது எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரின் எதிர்காலத்தை இருளடிக்கும் பெரும் சோகமாக மாறக்கூடும்.

எமது நாட்டின் பொருளாதாரம் தொடர்பான பல்வேறு துறைகள் பெரும் சரிவை சந்தித்துள்ளதையும் இலவச சுகாதாரம், எமது எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் தொடர்பான கல்வித்துறைகள் போன்ற மனித வாழ்வுடன் தொடர்புடைய அத்தியாவசியத் துறைகள் நாங்கள் கற்பனை செய்ய முடியாத துரதிர்ஷ்டவசமான நிலைக்கு வந்திருப்பது ஆபத்தின் விளிம்பில் இருக்கிறோமென்பதை புரிந்து கொள்ள வேண்டும். உண்மையில் நாடு பூராகவும் மக்கள் வாழ்வதற்காக முன்னெடுக்கும் போராட்டங்களை நாங்கள் காணக்கூடியதாக இருக்கிறது. இந்தப் பின்னணியில் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத வகையில் எமது நாட்டிலுள்ள திறமையான புத்திசாலிகள், திறமையான இளைஞர்கள் பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறி வருவதை நாம் அனைவரும் அறிவோம். இது தொடர்பாக 2022ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை இதனை உறுதிப்படுத்துகிறது.

## 122 மில். ரூபா குஷ்...

களஞ்சியசாலையிலிருந்து 122 மில்லியன் ரூபா பெறுமதியான 16 கிலோகிராம் குஷ் மற்றும் ஐஸ் போதைப்பொருட்கள் சுங்கத் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டன. கனடாவிலிருந்து கொழும்பிலுள்ள முகவரியொன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பொதியிலிருந்தே இந்தப் போதைப்பொருட்கள் மீட்கப்பட்டதாக, சுங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்தார். மேலதிக விசாரணைக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் இந்தப் போதைப்பொருட்கள் கையளிக்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உடவளவை பொலிஸாரினால் பலஹருவ பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, சட்டவிரோதமான முறையில் கஞ்சா செய்கையில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், இச்சந்தேக நபர்களிடமிருந்து 12 ஆயிரத்துக்கும் அதிகமான கஞ்சாச் செடிகள் மீட்கப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக 55 மற்றும் 32 வயதுடைய இருவரே, கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## வாரமஞ்சரி எங்கள் கருத்து...

# இனிமேல் அலட்சியமாக இருந்துவிட முடியாது!

மனிதன் உட்பட அத்தனை உயிரினங்களுக்கும் உணவை அளிக்கின்றன. இவ்வாறெல்லாம் தாவரங்கள் எமக்குத் தருகின்ற நன்மைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். எனவேதான் மரங்கள் அதிகம் நடப்படுவதை உலகின் அத்தனை நாடுகளும் ஊக்குவித்து, அதில் கவனம் செலுத்துகின்றன. உலகின் பல நாடுகளில் வீதியின் இருமருங்கிலும் மரங்கள் நடப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளதை நாம் காணலாம். வீதியோரம் நிழலுக்காகவும் குளிர்ச்சிக்காகவும் அழகுக்காகவும் விருட்சமான மரங்கள் நடப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. கொழும்பு நகரிலும் அவ்வாறான பெருவிருட்சங்கள் பல இடங்களில் உள்ளன. கொழும்பு நகரின் சில இடங்களில் வீதியோரம் காணப்படுகின்ற சிலவகை மரங்கள் ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் நடப்பட்டவையாகும். நூற்றாண்டு காலத்துக்கு மேல் பழைமையான அம்மரங்கள் ஓங்கி வளர்ந்து பெருவிருட்சமாக அழகும் நிழலும் குளிர்ச்சியும் தருகின்றன.

ஆனால் அந்த அழகின் பின்னால் ஆபத்தும் ஒளிந்திருக்கின்றதென்பதை நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ள துயரமான சம்பவம் எமக்கெல்லாம் எச்சரிக்கை செய்திருக்கின்றது. கொள்ளுப்பிட்டியில் வீதியோரம் மரமொன்று திடீரெனச் சரிந்து இ.போ.ச பேருந்து ஒன்றின் மீது வீழ்ந்ததில் ஐந்து பயணிகள் பரிதாபமாக உயிரிழந்ததுடன், பலர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளனர். எதிர்பாராமல் இடம்பெற்றுள்ள இச்சம்பவமானது பெருந்துயரை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்தோருக்காக நாம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட அத்தனை பேரின் துயரில் நாம் பங்கு கொள்கின்றோம்.

அதேசமயம் இவ்வாறான சம்பவத்தை நாம் அலட்சியத்துடன் கடந்து சென்றுவிட முடியாது. நகரத்தில் மரங்களை வளர்ப்பதும் அழகுபார்ப்பதும் அவசியமென்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அம்மரங்கள் எவ்வேளையிலாவது ஆபத்தை விளைவிக்கக் கூடியனவாக உள்ளனவா என்பதையிட்டு அலட்சியமாக இருந்துவிட முடியாதென்பதை இச்சம்பவம் எமக்கு உணர்த்தியிருக்கின்றது. அறிவியல் வளர்ந்துள்ள இன்றைய காலத்தில் இது போன்ற துர்ப்பாக்கிய சம்பவங்கள் குறித்த எச்சரிக்கை எப்போதும் அவசியம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்பதை வலியுறுத்த விரும்புகின்றோம்.





# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

'இலங்கைத் தமிழ்ச் சமூகம் வடக்கு, கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை, மாறாக இந்திய வம்சாவளி சமூகத்திற்கும் பரவியுள்ளது என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்' என்று நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஜீ வன் தொண்டமான் தெரிவித்தார்.

# இலங்கை தமிழ்ச்சமூகம் வடக்கு, கிழக்குக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டது அல்ல!

## இன்னல்களையும் போராட்டங்களையும் தாங்கிக்கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் உலகம் புரிந்துகொள்ள வேண்டும்' என்கிறார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்

'தமிழர்களின் உரிமைகள், குறைகள் பற்றி பேசும் போது வடக்கு, கிழக்கு தொடர்பான பிரச்சினைகளில் மாத்திரம் கவனம் செலுத்தும் போக்கு காணப்படுகின்றது. இன்னல்களையும் போராட்டங்களையும் தாங்கிக்கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் உலகம் புரிந்துகொள்ள வேண்டும்' என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் குறிப்பிட்டார். பெருந்தோட்ட சமூகத்தை மேம்படுத்துவதற்குக் காணப்படும் சவால்களை எதிர்கொள்வதில் அரசாங்கம் உறுதியாகச் செயற்பட்டு வருவதாக அவர் கூறினார். எமது நிறுவனத்துக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் ஜீவன் தொண்டமான் இவ்விடயங்களைக் குறிப்பிட்டார்.

**கே: பெருந்தோட்ட அரசியல் தலைவர்கள் பெருந்தோட்ட சமூகத்திற்கு சேவைகள் செய்யவில்லை என்ற பொதுவான விமர்சனம் உள்ளது. இதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?**

பதில்: மிகவும் ஏழ்மையான மக்களை உள்ளடக்கிய பெருந்தோட்ட சமூகம் உண்மையில் சவால்களை எதிர்கொண்டுள்ளது. இருப்பினும், இந்த விடயத்தில் அவர்கள் தனித்துவமானவர்கள் அல்ல. இலங்கை முழுவதும் பல்வேறு சமூகங்கள் வறுமையில் வாடுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுடன் சேர்ந்து, இந்த சமூகங்களுக்கு ஆதரவளிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. எவ்வாறாயினும், பெருந்தோட்ட சமூகத்துக்கு குடியுரிமை வழங்கப்பட்ட போதிலும், பெருந்தோட்டக் கம்பனிகளின் சொத்துக்கள் என்ற வரலாற்று அந்தஸ்து காரணமாக சில வரையறைகளை அம்மக்கள் தொடர்ந்தும் எதிர்நோக்கி வருகின்றனர்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் பெரும்பாலும் தங்களது தொழிலாளர்களின் நலனை விட இலாபத்திற்கு முன்னுரிமை கொடுப்பதால் இந்தச் சூழ்நிலை உருவாகிறது. அத்தகைய சூழ்நிலையில் அரசு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மட்டுமே தலையிட முடியும். தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த குறிப்பிடத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏறத்தாழ 65,000 வீடுகள் கட்டப்பட்டிருப்பதுடன், இந்தச் சமூகம் குறித்துக் கவனிப்பதற்காகத் தனியான அமைச்சும் உருவாக்கப்பட்டுள்ளது. கல்வி மற்றும் சுகாதாரத் துறைகளில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அரசியல் பிரதிநிதிகள் பெருந்தோட்ட சமூகத்திற்கு போதியவற்றை செய்யவில்லை என்ற கருத்து தவறானது. நான்கு தலைமுறைகளாக எமது கட்சிக்கு வாக்களித்த தோட்டத் தொழிலாளர்களின் நீடித்த விசுவாசத்தை நான் கண்டுவருகின்றேன். அவர்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்காக நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்ட முயற்சிகளுக்கான அங்கீகாரமாகவே இந்த விசுவாசத்தை நான் பார்க்கின்றேன். பல தசாப்தங்களாக குடியுரிமை இல்லாத வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்டத் தொழிலாளர்கள், 2003 ஆம் ஆண்டிலேயே குடியுரிமையைப் பெற்றதால், நாங்கள் இந்த ஓட்டப் பந்தயத்தை தாமதாகத் தொடங்கியுள்ளோம் என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகும். அத்துடன் சிக்கலான தன்மையை ஒரே இரவில் தீர்க்க முடியாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

**கே: நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் முன்னேற்றம் தொடர்பில் உங்கள் நிகழ்ச்சி நிரல்கள் கவனம் செலுத்துகின்றன. உங்கள் சமூகம் எதிர்கொள்ளும் குறைகள் மற்றும் அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்ய திட்டமிட்டுள்ளீர்கள் என்பதை விரிவாகக் கூற முடியுமா?**

பதில்: எங்கள் சமூகத்தில் பல குறைபாடுகள் நிலவுகின்றன. சுரண்டல், பாகுபாடு, குடிப்பழக்கம் மற்றும் குழந்தைகளின் வளர்ச்சியின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், அவை அனைத்தும் பிரதான பிரச்சினைகள் என்று வரும்போது பின்னோக்கிச் சென்று விடுகின்றன. இந்த நாட்டில் நாம் யார் என்ற கேள்வியே இந்தப் பிரச்சினையின் சுருக்கமாகும். எமது சமூகம் தனித்துவமான வரலாற்றைக் கொண்டுள்ளது. பரந்த வனப்பகுதிகளை தேயிலைத் தோட்டங்களாக மாற்றியதில் நாங்கள் முக்கிய பங்காற்றினோம், நாட்டின் வருவாயில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தோம். இருப்பினும், ஒரு காலத்தில் இவ்வளவு பங்களிப்பை வழங்கிய அதே சமூகம் இன்று தரமான கல்வி மற்றும் சுகாதாரத்தை பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கிறது. இந்த முரண்பாடே நமது குறைகளின் மையக்கரு.

இந்தச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் என்ற வகையில், சில சவால்களை எதிர்கொள்வதில் நாங்கள் தடைகளை எதிர்கொள்கிறோம். பெருந்தோட்ட சமூகம் பன்னிரண்டு மாவட்டங்களில் வசித்து வருகிறது. இது ஏறத்தாழ 113 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இந்தச் சமூகம் பரந்து விரிந்திருப்பதால் அந்தப் பகுதிகளில் அரசியல் பிரதிநிதித்துவத்தை வழங்குவது சவாலாக இருக்கின்றது. இது எமது மக்களின் வளர்ச்சிக்கு முக்கிய இடையூறாகவும் அமைந்துள்ளது. அமைச்சின் எனது பங்களிப்பை எடுத்துக் கொண்டால் 1.5 மில்லியன் மக்களுக்கு சேவை செய்யும் 12 மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக 3 பில்லியன் ரூபா நிதியை நாங்கள் பெறுகிறோம். இந்த ஒதுக்கீடு விரிவான வளர்ச்சியை அடைவதில் குறிப்பிடத்தக்க வரையறைகளைக் கொண்டுள்ளது.

எங்கள் சமூகத்தின் முக்கிய குறை என்னவென்றால் இந்த பன்முகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு கூட்டு மற்றும் நீடித்த முயற்சி தேவைப்படுகிறது. நாம் முன்னேறிச் செல்லும் அதேவேளையில் பாலின அடிப்படையிலான வன்முறையை ஒழித்தல், குழந்தைத் தொழிலாளர்களைக் குறைத்தல், கல்வித் தரத்தை மேம்படுத்துதல், சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகியவற்றில் நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். முழுமையான அபிவிருத்தியின் மூலம் தோட்ட சமூகத்தின் வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதே எமது இறுதி இலக்காகும்.

**கே: இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக தமிழ் அரசியல் கட்சிகளுடன் கலந்துரையாடலை ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். இந்த முயற்சியில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆற்றிய பங்களிப்பு என்ன?**

பதில்: இனப்பிரச்சினையென்பது அரசியல் எல்லைகளைக் கடந்து பலதரப்பட்ட சமூகங்களை உள்ளடக்கியது. தமிழ் அரசியல் கட்சிகளுடனான ஜனாதிபதியின் உரையாடல் ஒரு சாதகமான நடவடிக்கையாக இருந்தாலும், தமிழ் அரசியல் கட்சிகளால் மட்டும் இதற்குத் தீர்வு காண முடியாது என்பதை அங்கீகரிப்பது மிகவும் அவசியமாகும். இந்திய வம்சாவளி தமிழ் சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் விடயத்தில் தீவிரமாக செயற்படுகின்ற அர்ப்பணிப்புள்ள பிரதிநிதிகள் உள்ளனர். தமிழ் அரசியல் கட்சிகள் மீது மட்டும் கவனம் செலுத்தாமல், அனைத்துப் பாராளுமன்றக் குழுக்களையும் உள்ளடக்கும் வகையில் பேச்சுவார்த்தையை விரிவுபடுத்த வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும். நமது நாட்டின் சவால்களின் சிக்கலான தன்மைக்கு அனைத்து பங்குதாரர்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டு மற்றும் உள்ளடக்கிய அணுகுமுறை தேவைப்படுகிறது.

**கே: பொதுச்சேவைகள் இன்டர்நஷனல் மற்றும் உலகப் பொருளாதார மன்றம் போன்ற சர்வதேச நிறுவனங்களுடன் நீங்கள் நடத்தவிருக்கும் சந்திப்புக்களில் முன்வைக்கவுள்ள நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகத்தின் முக்கிய பிரச்சினைகள் யாவை?**

பதில்: இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளி சமூகத்தினர் எதிர்கொள்ளும் இருப்பு மற்றும் தனித்துவமான சவால்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே முதன்மையான நோக்கமாகும். இந்திய வம்சாவளி சமூகத்துக்கு இழைக்கப்பட்ட வரலாற்று அநீதிகள் மற்றும் அவர்கள் நடத்திய போராட்டங்கள் பதிவு செய்யப்பட வேண்டியவையாகும். இந்தச் சமூகம் பல்வேறு வகையான அடக்குமுறைகளை அனுபவித்ததுடன், கடந்த காலத்தில் இடம்பெற்ற கிளர்ச்சிகள் மற்றும் கலவரங்களாலும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமூகம் தனித்துவமான சவால்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றது என்பதை சர்வதேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களின் குரல்களும் செவிமடுக்கப்பட வேண்டும். எனது நோக்கம் பழி சுமத்துவது அல்ல, சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து உள்கட்டமைப்பு மற்றும் நிதி உதவியை பெறுவதாகும். அதேசமயம் இந்தச் சமூகத்தை இலங்கைக்குள் ஒருங்கிணைக்க வேண்டும்.

**கே: பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அநீதிகளை நிவர்த்தி செய்வதில் சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அநீதிகளை நிவர்த்தி செய்வதில் சர்வதேச சமூகம், குறிப்பாக ஜெனீவா போன்ற மன்றங்களில் ஆற்றிய பங்கை மிகைப்படுத்திக் கூற முடியாது. இலங்கைத் தமிழ்ச் சமூகம் வடக்கு, கிழக்கில் மட்டுப்படுத்தப்படவில்லை மாறாக இந்திய வம்சாவளி சமூகத்திற்கும் பரவியுள்ளது என்பதை சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்.

தமிழர்களின் உரிமைகள், குறைகள் பற்றி பேசும் போது வடக்கு, கிழக்கு தொடர்பான பிரச்சினைகளில் மாத்திரம் கவனம் செலுத்தும் போக்கு காணப்படுகின்றது. உலக அரங்கில் அடிக்கடி கவனிக்கப்படாமல் போகும் இன்னல்களையும் போராட்டங்களையும் தாங்கிக்கொண்டிருக்கும் இந்திய வம்சாவளி சமூகம் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு ஒப்புக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**கே: நாடு சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் கடந்துள்ளபோதும், பெருந்தோட்ட மக்கள் இன்னும் குறைந்தபட்ச வசதிகளுடன் கூடிய லயன் அறைகளிலேயே வசிக்கின்றனர். சிறந்த வீடுகள் மற்றும் இதர வசதிகளை வழங்க உங்கள் திட்டங்கள் என்ன?**

பதில்: தோட்டத் தொழிலாளர்களுக்கான வீட்டு நிலைமையை நிவர்த்தி செய்வது முன்னுரிமை அவசியம். எமது அமைச்சுக்கு 3 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அவர்களுக்குத் தேவையான முழுமையான வீடுகளையும் கட்டிக்கொடுப்பதற்குப் போதுமான ஒதுக்கீடு எனது அமைச்சுக்கு வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினையை விரிவாகக் கையாள்வதற்காக காணி மற்றும் வீடுகள், பெண்கள் மற்றும் குழந்தைகள், பாலின சமத்துவமின்மை, பொருளாதார மேம்பாடு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற குறிப்பிட்ட அம்சங்களில் கவனம் செலுத்தும் ஆறு குழுக்களை அமைச்சில் நான் நிறுவியுள்ளேன். எதிர்கால முயற்சிகளுக்கு வழிகாட்டும் மலையக சாசனம் எனப்படும் உருமாற்றத் தீர்வை உருவாக்குவதே அவர்களின் பணியாகும். வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படை விடயம் தோட்ட சமூகத்திற்கு காணி உரிமை உரிமைகளை வழங்குவதாகும்.

**கே: எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அதற்கு ஆதரவளிக்கும் என்ற பொதுவான விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. இந்த விமர்சனங்களுக்கு நீங்கள் எவ்வாறு பதில் வழங்க விரும்புகின்றீர்கள்?**

பதில்: இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு தொடர்ந்து ஆதரவளிக்கிறது என்ற குற்றச்சாட்டுக்களில் தெளிவு தேவை. நாம் எந்த அரசியல் சின்னத்தில் போட்டியிட்டாலும், தேர்தலில் வெற்றி பெறுவதில் இ.தொ.கா தனித்துவம் வாய்ந்தது. எங்களுடைய கட்சி மற்றும் தோட்ட சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்வதில் அதன் அர்ப்பணிப்பை மக்கள் நம்புவதே இதற்குக் காரணம்.

இ.தொ.காவிற்கு எதிரான விமர்சனங்கள் நியாயமற்ற முறையில் சுமத்தப்படக் கூடாது. சில அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதத்துடன் தொடர்புகளை மாற்றிக் கொள்கிறார்கள். இது அரசியல் புத்திசாலித்தனமாகப் பார்க்கப்படுகிறது. மாறாக, இ.தொ.கா கூட்டணியை ஏற்படுத்தும்போது நாம் நியாயமற்ற முறையில் விமர்சிக்கப்படுகிறோம். தோட்ட சமூகத்தின் பாதிப்பை உணர்ந்து அமைச்சரவையில் மலையகப் பிரதிநிதித்துவத்தை இ.தொ.கா தொடர்ச்சியாக பேணி வருகிறது.

**கே: இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்? ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையில் நாடு முன்னோக்கி செல்லும் வழி என்ன என்று நீங்கள் நம்புகிறீர்கள்?**

பதில்: அனைத்து பங்குதாரர்களும் தமக்கான பொறுப்பைச் சரியாகச் செய்ய வேண்டும். பொருளாதார மீட்சிக்கான பாதையில் இலங்கையைக் கொண்டுசெல்வதில் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன்.

இருப்பினும், பொருளாதார முன்னேற்றம் சமூக முன்னேற்றத்தால் நிரப்பப்பட வேண்டும். அதிகாரப் பகிர்வு என்பது சமூக முன்னேற்றத்தின் இன்றியமையாத அங்கமாகும். அதிகாரப் பகிர்வு என்பது பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது. அதிகாரப் பிரிப்பு, பொறுப்புக்கூறல் மற்றும் சிறந்த வாய்ப்புகளை வளர்க்கும் வகையில், உள்நாட்டு அதிகாரப் பகிர்வு தீர்வு உருவாக்கப்பட வேண்டும்.




# இந்தியப் பெருந்தேசத்தில் இருந்து அள்ளிய ஒரு சிறுதுளி!

மகத தேசத்தில் தோன்றிய மூன்றாவது மௌரிய ஆட்சியாளர் அசோக மன்னர் ஆவார். இந்தியாவின் பண்டைய கல்வெட்டுகளின்படி கி.மு. 260 இல் கலிங்க நாட்டைக் கைப்பற்ற பெரும் போர் நடந்தது. பேரரசர் அசோகர் தான் அடைந்த வெற்றியைப் பற்றி உற்சாகம் அடையவில்லை.

அவர் மோதல்களின் விளைவுகளை அடையாளம் கண்டுகொண்டார். பௌத்த மதத்தின்படி அரசை ஆட்சிசெய்ய முனைந்தார். சண்டசோகர் தர்மசோகர் எனப் பிரபலமானார். மன்னன் அசோகர் தனது நாட்டு மக்களுக்கு புத்தரின் போதனைகளின்படி நேர்மையான நடத்தைகளை கடைப்பிடிக்கவும், அவர்களின் வாழ்க்கையை வடிவமைக்கவும் ஆணைகள் வெளியிட்டார்.

அது மாத்திரமல்ல, பௌத்த மதத்தை அண்டைநாடுகளிலும் பரப்ப நடவடிக்கை எடுத்தார் என்பது வரலாறு. அசோக மன்னர் மூன்றாவது தர்ம சங்கத்தை பேணி பௌத்தத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளார். தன் மகனையும் மகளையும் துறவற வாழ்க்கைக்கு அனுமதித்த மன்னர் தர்மசோக, பின்னர் மகிந்த தேரரின் தலைமையில் இலங்கைக்கு புத்த தர்மத்தை பரப்பியதோடு பிக்குணியான சங்கமித்தா மூலம் புனித வெள்ளரசு மரக்கிளையையும் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தார்.

இந்தியாவைப் பற்றிய ஆய்வில் அசோகரின் தத்துவம் தவிர்க்க முடியாதது. இந்திய உயர்ஸ்தானிகர் பதவியை ஏற்றுக்கொண்ட பின்னர், இந்திய_இலங்கை உறவுகளை ஆராய்வதில் நிகழ்காலத்திலிருந்து வரலாற்றை நோக்கிச் செல்வதன் மூலம் கணிசமான அளவிலான வாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று தீர்மானிக்க முடிந்தது. இரண்டு வருட பதவிக் காலத்தில் இந்தியாவுடனான இராஜதந்திர விவகாரங்களில் அனுபவித்த மற்றும் அவதானித்த நுட்பமான அனுபவங்களை உங்களுடன் 'மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்' என்ற பத்தி எழுத்தின் மூலம் பகிர்ந்து கொள்ள முயற்சித்தேன்.

ஏகாதிபத்திய காலத்திலிருந்து காலனித்துவ காலம்வரை, பின்னர் சுதந்திர காலம் வரை, இக் காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் இந்தியா தனித்தன்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. ஜனநாயகத்தால் ஆளப்படும் உலகின் மிகப்பெரிய நாடாக கருதப்படும் இந்தியா, உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறியுள்ளது. அரசாங்கத்தின் தனித்துவமான உத்தியால், வெவ்வேறு மொழிகள், வெவ்வேறு கலாசாரங்களில் கூட ஒன்றாக வாழ முடிந்துள்ளது.

எழுநூறுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பயன்படுத்துகின்றன இனங்கள் வாழ்வதோடு, அவற்றில் இருபத்திரண்டு மொழிகளை அரசமொழியாக ஏற்றுக்கொண்ட நாட்டின் தனித்துவமான தன்மையிலிருந்து ஒரு சிறு துளியையே இந்த பத்தி எழுத்தின் மூலம் இரு கைகளாலும் பெற முடிந்தது எனக் குறிப்பிட வேண்டும்.

இந்த பத்தி எழுத்து பெப்ரவரி 28, 2021 அன்று இந்தியாவில் உள்ள புத்த கோயில்கள் பற்றிய தகவலுடன் தொடங்கியது.

ஸ்ரீமத் அநகாரிக தர்மபாலவின் பணிகள், பௌத்த பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படும் மகாபோதி சங்கத்தின் செயற்பாடுகள் இங்கு வெளிப்படுத்தப்பட்டன. சேர் டி.பி. ஜயதிலகவிலிருந்து தொடங்கும் எண்பது ஆண்டுகால இராஜதந்திர உறவுகள், உலகெங்கிலும் உள்ள சுமார் பதினெட்டு மில்லியன் இந்திய புலம்பெயர்ந்தோரின் அளவு மற்றும் அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பும் பரிமாற்றம் ஆகியவை கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்தியாவின் கல்வி மற்றும் சுகாதார வசதிகள், தகவல் தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சிக்கு முன்னால் உலகில் கிடைத்த வாய்ப்புகள் மற்றும் தமிழ்நாட்டுடன் கருத்துவேறுபாடுகளுக்குப் பதிலாக இந்தியாவின் பிறமாநிலங்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து விவாதிக்கப்பட்டது. புதுடில்லி மற்றும் கொழும்புடன் நேரடியான கருத்துப் பரிமாற்றம் மூலம் நாடுகளுக்கிடையில் கட்டியெழுப்பப்படும் நம்பிக்கைக்குப் பதிலாக, யாழ்ப்பாணத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையிலான குறுகிய தொடர்பாடல் உபாயங்களால் பயனில்லை என்பதை புரிய வைக்க இந்த பத்தி எழுத்துக்களில் தகவல்கள் உள்ளடக்கப்பட்டன.

கொவிட் தொற்றுநோய் நிலைமை உலக சமூகம் முகம்கொடுத்த ஒரு பயங்கரமான விதியாகும். புதிய தடுப்பூசிகளின் கண்டுபிடிப்பு, தடுப்பூசி மற்றும் இலங்கைக்கு வழங்கப்பட்ட ஆதரவு குறித்தும் பல கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தகவல்களை முன்வைத்த போது, இந்தியாவின் நடத்தைகள் பின்வருமாறு பதிவு செய்யப்பட்டிருந்தமை நினைவுகூரத்தக்கது.

ஜம்மு காஷ்மீர் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியா மீது பாகிஸ்தான் மனித உரிமை குற்றச்சாட்டை முன்வைத்தது. நாட்டிற்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அன்றைய பிரதமர் நரசிம்மராவ் தேசிய நடவடிக்கையொன்றை முன்மொழிந்து எதிர்க்கட்சி தலைவரும் பாரதிய ஜனதா தலைவருமான அடல் பிஹாரி வாஜ்பாயை அழைத்து ஜெனீவாவுக்கு செல்லும் குழுவுக்கு தலைமை வகிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்கொண்ட பிரச்சினையைத் தவிர, பத்தாண்டு காலமாக அரசியலில் ஈடுபட்டு வந்த வாஜ்பாய், 1994 இல் இந்தியா சார்பாக ஜெனீவாவுக்குச் சென்ற குழுவுக்குத் தலைமை தாங்கினார். நாட்டில் மனித உரிமைகள் பிரச்சினை இல்லை என எதிர்க்கட்சியினர் கூறிய பின்னர் குற்றச்சாட்டுகளால் பயனில்லாமல் போனது.

இக்கட்டான சூழ்நிலைகளில் ஏன் அரசியல்வாதிகளால் இவ்வாறு ஒன்றுபட முடியாது? மனித உரிமைகள், பொருளாதார நெருக்கடிகள், கடனை செலுத்த இயலாமை மற்றும் தற்போதைய நிலைமையை சீர்திருத்துதல் போன்ற பிரச்சினைகளில் பொதுவான கொள்கையுடன் செயல்படாத வரை இலங்கையர்களால் ஆறுதல் அடைய முடியாது.

இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகள், அதிகமாக பேசப்படும் இந்தியர்களின் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகள், இந்தியா வழியாக ஆட்கடத்தல் மற்றும் ஏழைகளுக்கு நேரடி உதவி வழங்கும் ஆதார் அட்டை அமைப்பு குறித்தும் பல கட்டுரைகள் வந்துள்ளன.

இந்தியா மின்சக்தி தேவைக்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் பல உலக நாடுகளுடன் தொடர்புடைய மின்சார உற்பத்தி என்பதுவும் கவனம் செலுத்தப்பட்ட ஒரு பிரிவாகும். பெற்றோலிய தேவைக்கேற்ப இலங்கைக்கும் வர்த்தக சந்தர்ப்பம் உண்டு. மன்னார் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்கி நாடு தற்போது உற்பத்தி செய்யும் மின்சாரத்தை விட ஐந்து மடங்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து, கூடுதல் மின்சாரத்தை இந்தியாவிற்கு விற்க முடியும் என்பதை இந்த பத்திகள் ஒன்றுக்கு மேற்பட்ட முறை வலியுறுத்தின.

அத்தகைய நடவடிக்கைகளில் குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து, இந்த நாட்டின் நுகர்வோருக்கு மிகக்குறைந்த விலையில் வழங்குவதுடன், இந்திய கிரிட் அமைப்பிற்கு மின்சாரத்தை வழங்குவதன் மூலம், அதிக அந்நிய செலாவணியை பெறக்கூடிய துறையாக மாற முடியும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அறிவிக்கப்பட்டுள்ள நோக்கங்களின்படி, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் இருந்து பெறக்கூடிய புரட்சிகரமான வாய்ப்புகள் இலங்கையின் வளர்ச்சிக்கு உதவும் என்பது உறுதி.

பிறநாடுகளின் மூலோபாயம். பின்பற்றப்படும் வழிமுறையை ஆய்வு செய்ய வேண்டும். உலகளாவிய சமூக அமைப்பில் தனிமைப்படுத்தப்பட்ட தீவுகள் இல்லை. உலகில் பரவி வரும் வாய்ப்புகளைப் புரிந்துகொண்டு, அதனை ஏற்று நாட்டுக்கு தனித்துவமான முறைகளைத் தயாரிப்பது கொள்கை வகுப்பாளர்களின் பொறுப்பாகும்.

உலகில் நிகழும் மாற்றங்களுடன் முன்னேறத் தேவையான அறிவையும் புரிதலையும் அடையாளம் காண முடியும். உலக வரைபடத்தில் இந்தியா ஒரு நாடாக இருந்தாலும், மத, கலாசார மற்றும் மொழி பாரம்பரியத்தின் ஆதாரமாக இலங்கை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கட்டுரைத் தொடரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகளின் அடிப்படையில் விரைவில் ஒரு புத்தகம் வெளியிடப்படும். 'மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்' முற்றுப் பெற்றாலும், இந்தியாவுடன் புதிய கட்டமைப்பில் செயல்படும் தேவை நிறைவுறாது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# தேர்தலை இலக்கு வைத்து கூட்டணி அமைப்பதில் அரசியல் கட்சிகள் தீவிரம்!

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய பொறுப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றம் கடந்த சில வாரங்களாகப் பேசுபொருளாகியிருந்த நிலையில், சுதந்திரக் கட்சி மாத்திரமன்றி ஏனைய கட்சிகளும் தம்மைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் தீவிரம் காட்டியுள்ளன.**

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்தப்படுமென்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், பொருளாதார நிலைமைகளால் தேர்தல்களை நடத்த முடியாமல் போனது. இருந்தபோதும் அடுத்த வருடம் அதாவது 2024 ஆம் ஆண்டு நிச்சயம் தேர்தல் ஆண்டாக அமையப் போகிறது என்பதை உணர்ந்து கொண்டுள்ள அரசியல் கட்சிகள், தம்மை அதற்குத் தயார்படுத்தத் தொடங்கியுள்ளன.



## அடுத்த வருடம் தேர்தல் ஆண்டு!

பிரதான கட்சிகளில் ஒன்றான பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல கட்சிகள் தொகுதி ரீதியாக கட்சிக் கூட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன. தொகுதி அமைப்பாளர்களை ஊக்கப்படுத்தி கட்சி செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

நாட்டில் தற்பொழுது காணப்படும் பொருளாதார சூழலின் அடிப்படையில் எந்தவொரு தனிக்கட்சியாலும் பெரும் பான்மையைப் பெறமுடியாத நிலைமை காணப்படுவதால், பாரிய கூட்டணிகளை அமைப்பதற்கே சகல கட்சிகளும் முனைப்புக் காட்டி வருகின்றன. அடுத்த வருடம் தேர்தல் ஆண்டாக அமையும் என்றபோதிலும், ஜனாதிபதித் தேர்தலா அல்லது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலா முதலில் நடத்தப்படும் என்பது உறுதியாகத் தெரியாதபோதும், தேர்தலொன்றுக்குப் பொதுவான ஆயத்தப்படுத்தல்களில் கட்சிகள் இறங்கியுள்ளன எனக் கூற முடியும்.

அரசியலமைப்புக்கு அமைய அடுத்த வருடம் ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இருந்தபோதும் அதற்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் அடுத்த வருடம் நடைபெறக் கூடிய தேர்தல்கள் தீர்மானம் மிக்கவையாக இருக்கும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் கிடையாது. சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் நாடு எதிர்கொண்டிருந்த நிலையையும், நாட்டில் தற்பொழுது காணப்படும் நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போதுஇந்தமாற்றத்துக்குவித்திட்டவர் யார் என்பது அனைவருக்கும் புரியும்.

இவ்வாறான பின்னணியில் நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்கக் கூடிய பலம் கொண்ட ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவாவதே பொருத்தமாகவும் இருக்கும் என்கிறார்கள் பொருளாதார நிபுணர்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று கடந்த ஒருவருட காலத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை உருவாகியுள்ளது. ஜனாதிபதியின் இந்த செயற்பாடுகள் தொடர்ந்தும் நாட்டை சரியான பாதைக்கு இட்டுச் செல்லும் என்ற சாதக எண்ணப்பாடொன்றும் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சியும், பிரதான ஆளும் கட்சியான பொதுஜன பெரமுனவும் கூட்டணி அமைக்கவிருப்பதாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றபோதும், இதுபற்றிய உறுதியான நிலைப்பாடு இன்னும் அறிவிக்கப்படவில்லை.

## ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டுமென பொதுஜன பெரமுனவின் இளம் எம்.பிக்கள் வலியுறுத்தல்!

ஜனாதிபதித் தேர்தலொன்று நடத்தப்படும் பட்சத்தில் பொது வேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனப் பொதுஜன பெரமுனவின் இளம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தலைமையில் அண்மையில் நடைபெற்ற கட்சியின் கூட்டத்திலேயே இந்த நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.



ஐக்கிய தேசியக் கட்சியும் தமது ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்பதைத் தீர்மானித்துள்ள நிலையில், அந்த அடிப்படையிலான அரசியல் முயற்சிகளை முன்னெடுக்கத் தொடங்கியுள்ளது.

அதேநேரம், ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து வந்த குழுவினரே தற்போது ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரில் பிரதான எதிர்க்கட்சியாகச் செயற்படுகின்றனர். இதில் உள்ள சிலர் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்வைத்திருப்பதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

இருந்தாலும், ஐக்கிய மக்கள் சக்தியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச என்ற தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இருந்தபோதும் இது இன்னமும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

மறுபக்கத்தில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்த டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினர் மற்றும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினருடனும் கூட்டணி குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டு வருவதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலங்களில் சந்திப்புக்களும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றுள்ளன. பொதுஜன பெரமுனவில் அதிருப்தியடைந்த குழுவினரை இணைத்துக் கொள்வது குறித்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதேநேரம், ஆளும் கட்சியில் உள்ள பொதுஜன பெரமுனவின் அதிருப்தியாளர்கள் குழுவொன்று ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகச் செயற்படுவதற்கு முயற்சிப்பதாகவும் தெரியவருகிறது. இந்தக் குழுவில் சுமார் 40 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## மக்கள் ஆதரவை நிரூபிக்க எண்ணியிருந்த தேசிய மக்கள் சக்திக்கு இப்போது ஏமாற்றம்!







இது இவ்விதமிருக்க, இந்த வருடம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தமது பலத்தைக் காண்பிக்க முடியும் என எதிர்பார்த்திருந்த ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஏமாற்றமே மிஞ்சியது. எதிர்வரும் தேர்தலில் அவர்கள் தனியாகக் களமிறங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவருகிறது. ஆரம்பத்தில் இவர்களுக்கு மக்கள் மத்தியில் ஆதரவு இருப்பதுபோன்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டிருந்தபோதும், இந்தச் சூழல் தற்பொழுது முற்றாக மாறியிருப்பதாகவே சுட்டிக்காட்டப்படுகிறது.

எதுவாக இருந்தாலும், முன்னர் குறிப்பிட்டது போன்று நடைபெறவிருக்கும் தேர்தல் எந்தவொரு கட்சிக்கும் இலகுவானதாக இருந்துவிடப் போவதில்லை. பொருளாதா ரீதியில் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கும், மக்கள் எதிர்பார்க்கும் மாற்றங்களுக்கும் பதில் கூறக்கூடிய வகையில் அரசியல் கட்சிகள் தம்மைத் தயார்படுத்த வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. எனவே, இம்முறை தேர்தல் களம் அரசியல் கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் இலகுவானதாக அமைந்துவிடாது என்பதால் பலமான கூட்டணிகளுக்கான முக்கியத்துவம் தோன்றியுள்ளது.

பி.ஹர்ஷன்...

---

## காலிஸ்தான் தீவிரவாதி படுகொலை!

# இந்திய–அமெரிக்க நல்லுறவில் பாதகம் ஏற்பட்டு விடுமா!

**காலிஸ்தான் தீவிரவாத முக்கியஸ்தரான ஹர்தீப் சிங் கனடாவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே உருவெடுத்த மோதல் தற்போதும் தொடருகின்றது.**

இந்த விடயம் தொடர்பாக அமெரிக்கா சில முக்கிய நிலைப்பாடுகளை எடுத்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் இந்தியா_ அமெரிக்கா இடையேயான நல்லுறவில் சிக்கல் ஏற்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே நிலவுகின்ற மோதல் இன்னுமே தணிவு நிலைமைக்கு வரவில்லை. கனடாவில் தங்கியிருந்த காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் கடந்த ஜூன் மாதம் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் இந்திய முகவர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அறிவித்ததையடுத்தே இந்த இரு நாடுகளுக்குமிடையில் முறுகல் உருவாகியுள்ளது. படுகொலைச் சம்பவம் மற்றும் கனடா பிரதமரின் கருத்தைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையேயான உறவு நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது.

காலிஸ்தான் தீவிரவாதியின் கொலைக்கு இந்தியா காரணமென்பதற்கான ஆதாரத்தை வெளியிடுமாறு சொன்னாலும் கனடா எந்தவொரு ஆதாரத்தையும் இதுவரை வெளியிடவில்லை.



கனடாவில் சுட்டுக் கொல்லப்பட்ட காலிஸ்தான் தீவிரவாதி ஹர்தீப் சிங்

'5 ஐஸ்' என்ற உளவுக் கூட்டமைப்பில் இருந்து வந்த தகவலின் அடிப்படையிலேயே கனடா இந்தக் குற்றச்சாட்டைக் கூறுவதாகத் தகவல் வெளியாகியுள்ளது. அதிலும் குறிப்பாக '5 ஐஸ்' உளவு கூட்டமைப்பில் இருக்கும் அமெரிக்காவே, இந்த விவகாரத்தில் கனடாவுக்கு உளவுத் தகவல்களைக் கூறியதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.



இருப்பினும், என்ன ஆதாரம், எந்த மாதிரியான தகவல்கள் என்ற விபரம் இன்னும் தெரியவில்லை.

இந்த விவகாரத்தில் அமெரிக்காவைப் பொறுத்தவரை நேரடியாகப் பெரியளவில் அந்நாடு தலையிடவில்லை. ஏனென்றால் ஒரு பக்கம் அமெரிக்காவும் கனடாவும் அண்டை நாடுகள் ஆகும். இருநாடுகளுமே நீண்ட கால உறவைக் கொண்டுள்ளன.

அமெரிக்க_ சீன உறவு ஆரோக்கியமானதாக இல்லை. மற்றொரு புறத்தில் சீனாவுக்குப் பதிலடி கொடுப்பதாயின் இந்தியாவின் நட்பும் அமெரிக்காவுக்குத் தேவையாகின்றது. இதனால் அமெரிக்கா இந்த விவகாரத்தில் இந்தியாவைக் கண்டிக்கவில்லை என்கிறார்கள் சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள். அதேநேரம் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும் என்று மட்டும் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.



## அமெரிக்க–சீன உறவு ஆரோக்கியமானதாக இல்லை. சீனாவுக்குப் பதிலடி கொடுப்பதாயின் இந்தியாவின் நட்பு அமெரிக்காவுக்குத் தேவையாகின்றது. இதனால் அமெரிக்கா இந்த விவகாரத்தில் இந்தியாவைக் கண்டிக்கவில்லை!

இதற்கிடையே இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் எரிக் கார்செட்டி இப்போது கூறியுள்ள கருத்து மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அதாவது கனடாவுடனான மோதல் போக்கு காரணமாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவுகள் மோசமடைய வாய்ப்புள்ளதாகத் தனது குழுவிடம் எரிக் கார்செட்டி கூறியதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதுஒருபுறமிருக்க, மீண்டும் அறிவிப்பு வரும்வரை இந்திய அதிகாரிகளுடனான தொடர்புகளை அமெரிக்கா குறைத்துக் கொள்ள வேண்டும் என்றும் கார்செட்டி கூறியதாகத் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான செய்தியை அமெரிக்கச் செய்தி நிறுவனமான 'பொலிட்டிகோ' வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் அமெரிக்கா சற்று முன்னெச்சரிக்கையாக இருக்கவே விரும்புவதாக 'பொலிட்டிகோ' தெரிவித்துள்ளது.

பைடன் நிர்வாகத்தில் சிலர், பிரதமர் நரேந்திர மோடியுடனான அமெரிக்காவின் உறவு, அடுத்துவரும் காலத்தில் மிகவும் மோசமாகிவிடும் என்று நம்புவதாக அந்நாட்டின் வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடா விவகாரத்தில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவில் பாதிப்பு ஏற்படாது எனத் தொடர்ந்து சொல்லப்பட்டு வந்த நிலையில், இப்போது அதற்கு நேர்மாறான தகவலொன்று வந்துள்ளது. இது மிகவும் முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

ஆனாலும் இந்தியாவும் அமெரிக்காவும் பொருளாதார நல்லுறவைக் கொண்டுள்ள நட்புநாடுகளாகும். இவ்விரு நாடுகளும் ஒன்றையொன்று பகைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு முற்றாகவே கிடையாதென்று சர்வதேச ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அந்நாட்டுக்கு கனடா எவ்வளவு தூரம் முக்கியமோ அவ்வளவு தூரம் இந்தியாவும் முக்கியம் என்கிறார்கள் அந்த ஆய்வாளர்கள்.

**இந்தியாவும் அமெரிக்கா–வும் பொருளாதார நல்லுறவைக் கொண்டுள்ள நட்புநாடுகள். இவ்விரு நாடுகளும் ஒன்றை–யொன்று பகைத்துக் கொள்வதற்கான வாய்ப்பு முற்றாகவே கிடையாதென்கிறார்கள் சர்வதேச ஆய்வாளர்கள்**

எஸ்.சாரங்கன்...

# உள்நாட்டுப் பொறிமுறை வலுவாக இருக்கையில் சர்வதேச விசாரணைக்கு அவசியமே கிடையாது!

## இலங்கை விவகாரங்களில் வீண்தலையீடு செய்யும் சர்வதேச சக்திகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உறுதியான பதில்!

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்



**உயிர்த்த ஞாயிறு தினத்தன்று, சஹ்ரான் தலைமையில் இயங்கிய பயங்கரவாதக் குழுவொன்று மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பிரித்தானியாவைச் சேர்ந்த சனல்–4 தொலைக்காட்சி அண்மையில் வெளியிட்டிருந்த ஆவணப்படமானது இச்சம்பவம் தொடர்பான விசாரணைகள் விடயத்தில் தேவையற்ற சந்தேகங்களை மக்கள் மத்தியில் விதைத்திருந்தது.**

இது விடயத்தில் மீண்டும் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்து வந்த நிலையில், சர்வதேச விசாரணைக்கான எவ்வித தேவையும் இல்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

இந்தத் தாக்குதல்களில் வெளிநபர்கள் எவரும் தொடர்புபடவில்லையென ஐக்கிய அமெரிக்காவின் உளவுப் பிரிவான எஃப்.பி.ஐ அறிக்கை சமர்ப்பித்திருந்தது.

அது மாத்திரமன்றி அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இதுகுறித்து விசாரணைகளை நடத்தியுள்ள நிலையில், மீண்டும் சர்வதேச விசாரணைக்கான தேவை இல்லையென்பதை ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் ஜேர்மனிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, Deutsche Welle ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் வழங்கும் வகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.



சனல்4 தொலைக்காட்சியின் குற்றச்சாட்டை அடிப்படையாகக் கொண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பற்றியும் அதன் விசாரணைகள் பற்றியும் கேள்வி எழுப்பியமை தொடர்பில் ஜனாதிபதி தனது அதிருப்தியை வெளியிட்டிருந்ததுடன், 'சர்வதேச விசாரணைகள் என்ற கேள்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது' எனக் கூறியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் சட்டமா அதிபர் ஆகியோர் முன்வைத்த குற்றச்சாட்டுக்களை விடுத்து, சனல்4 தொலைக்காட்சி முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை மேலைத்தேய நாடுகள் ஏன் தூக்கிப்பிடிக்கின்றன? என்ற கேள்வியையும் ஜனாதிபதி அப்பேட்டியின் போது முன்வைத்திருந்தார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் சனல்4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் குறித்து விசாரிப்பதற்கு

**மேற்கத்தேய ஊடகங்கள் எங்களைத் தவறானவர்கள் எனச் சித்திரிக்கும் நிலைமையொன்று உள்ளது. எமது உள்நாட்டுப் பணியாளர்களைப் பயன்படுத்தி, எமது வழியிலான விசாரணைகளை மேற்கொள்வோம். எந்தவொரு பிரச்சினையிலும் எங்களுக்கு சர்வதேச விசாரணைகள் தேவையில்லை!**

குழுவொன்றைத் தான் நியமித்திருப்பதாகவும், இது விடயத்தில் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பது பற்றிய தீர்மானங்களைப் பாராளுமன்றமே எடுக்கும் என்றும், சர்வதேச ரீதியிலான விசாரணைகளுக்கு இடமில்லையென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

'மேற்கத்தேய ஊடகங்கள் எங்களைத் தவறானவர்கள் எனச் சித்திரிக்கும் நிலைமையொன்று உள்ளது. எமது உள்நாட்டுப் பணியாளர்களைப் பயன்படுத்தி எமது வழியிலான விசாரணைகளை மேற்கொள்வோம். எந்தவொருபிரச்சினையிலும் எங்களிடம் சர்வதேச விசாரணைகள் இல்லை. பிரித்தானியா சர்வதேச விசாரணையைப் பெறவில்லை. ஜேர்மன் அதனைப் பெறவில்லை. நீங்கள் மேற்கொண்ட சர்வதேச விசாரணைகள் என்ன? இங்கிலாந்து சென்ற விசாரணைகள் எவை? ஏன் இந்த ஏழை இலங்கை ஆசியர்கள் மாத்திரம் செல்ல வேண்டும்? நாம் என்ன இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்று நினைக்கின்றீர்களா?' என ஜனாதிபதி அப்பேட்டியின் போது கேள்வியெழுப்பியிருந்தார்.

உண்மையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் நடத்தப்பட்ட விசாரணைகளில் குறைபாடுகள் இருந்தால் அதனை நிவர்த்தி செய்து புதிய விசாரணைகளை முன்னெடுப்பது குறித்து அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ளது. இருந்தபோதும், இவ்விவகாரத்தை அடிப்படையாகக் கொண்டு சர்வதேசம் மீண்டும் இலங்கை விடயத்தை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதையே ஜனாதிபதி தனது இந்த செவ்வியில் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

அதேநேரம், மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஐ.நா மனித உரிமை பேரவையில் மீண்டும் பேசப்பட்டுவரும் நிலையில், இலங்கையின் நிலைப்பாடு ஜனாதிபதியினால் மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை குறித்து ஐ.நா மனித உரிமைகள் பேரவை முன்வைத்த அறிக்கை அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கை விடயத்தில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை பிழையாகச் செயற்பட்டுள்ளது என ஜனாதிபதி தனது செவ்வியில் கூறியுள்ளார்.

தனது காலத்தில் மனித உரிமை பிரச்சினைகள் எதுவும் இடம்பெறவில்லையெனச் சுட்டிக்காட்டியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உள்நாட்டு சட்டங்களுக்கு அமையப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி நீதிமன்றங்களுக்கு அறிக்கையிடுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

"உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை நிறுவுவது தொடர்பில் சர்வதேச நாடுகளுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கிறோம். தற்போது கட்சிகளைப் போன்றே மேற்கத்தேய நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றோம். செனட் சபை உறுப்பினர்களுக்கும் தலையீடு செய்ய முடியும். உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான சட்டத்தை வருட இறுதிக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருக்கிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

சில மேற்கத்தேய நாடுகள் தமது இரட்டை நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையிலும், தமக்கான நிகழ்ச்சி நிரல்களை முன்கொண்டு செல்லும் வகையிலும் ஆசிய நாடுகளை நோக்கும் நிலையிலேயே தொடர்ந்தும் இருக்கின்றன என்ற விடயம் ஜனாதிபதியினால் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

பொதுவாக மேற்குலகின் சில நாடுகள் இலங்கை போன்ற சிறிய நாடுகளைத் தொடர்ந்தும் தமது பிடிக்குள் வைத்திருப்பதற்கு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதில் முனைப்புக் காட்டுகின்றன. இதன் ஒரு வெளிப்பாடாகவே ஜனாதிபதியுடனான இந்த நேர்காணலைப் பார்க்க முடியும்.

இருந்தபோதும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து மீண்டும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டிருப்பதால் இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது என்பதையும் மறுத்துவிட முடியாது. பக்கச்சார்பற்ற உள்ளக விசாரணைகளை நடத்தி சனல்4 தொலைக்காட்சி முன்வைத்த குற்றச்சாட்டுக்களின் உண்மைத்தன்மை பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு மேற்கொள்வதன் ஊடாக உள்ளகப் பொறிமுறை மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும். அது மாத்திரமன்றி வெளிநாடுகளின் அவசியமற்ற தலையீடுகளையும் தடுக்க முடியும். இல்லாவிடின் இதுபோன்ற விடயங்களை மேலைத்தேய நாடுகள் தங்களது நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தியவாறு இலங்கையின் தேசிய விடயங்களில் மூக்கை நுழைப்பதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும். அரசியல்வாதிகள் மாத்திரமன்றி அரசாங்க அதிகாரிகளும் பக்கச்சார்பற்ற முறையில் நடந்து கொள்வது முக்கியமாகும்.



## சனல்-4 என்ற தொலைக்காட்சி ஊடகம் முன்வைத்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களுக்கு மேலைத்தேய நாடுகளிலுள்ள சில சக்திகள் முக்கியத்துவம் அளிப்பதன் பின்னணி நோக்கங்கள் எவை?

இது இவ்விதமிருக்க, அரசியல் ரீதியில் மக்களிடம் செல்ல முடியாதுள்ள அரசியல்வாதிகள் இவ்விடயத்தை மீண்டும் கையில் எடுத்து அரசியல் செய்யத் தொடங்கியுள்ளனர். இதுவரை காலமும் மௌனம் காத்துவந்த அவர்கள் அரசியல் துரும்புச் சீட்டொன்று தமக்குக் கிடைத்திருப்பது போன்று சொந்த அரசியல் செய்யத் தொடங்கியுள்ளனர்.

இது நிச்சயம் அடுத்த தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தலே அன்றி வேறு எதுவும் இல்லை என்பதை மக்கள் நன்றாக அறிந்துள்ளனர். இதற்கிடையில் முல்லைத்தீவு நீதிபதி விவகாரமும் அரசியலில் அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது. சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் முயற்சியாகவும் சிலர் இதனை விமர்சிக்கின்றனர். இதன் உண்மைத் தன்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையானது அணிசேராத வெளிநாட்டுக் கொள்கையைக் கொண்டிருந்தாலும் அதன் பூகோள அமைவிடம் மற்றும் பூகோள ரீதியான அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக ஏதாவது ஒரு விடயத்தைக் கையில் எடுத்து இலங்கையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தப் பல நாடுகள் ஆர்வமாக இருக்கின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த குற்றச்சாட்டு விவகாரத்தையும் இதன் ஒரு அங்கமாகப் பார்க்க முடியும். மேலைத்தேய நாடுகள் இலங்கை போன்ற சிறிய நாடுகள் மீது இரட்டை நிலைப்பாடுகளை எடுக்காது, அந்தந்த நாடுகளுக்குக் காணப்படும் இறைமைகள் மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்து சுயாதீனமாகச் செயற்பட இடமளிக்க வேண்டும்.

**மேற்குலகின் சில நாடுகள் இலங்கை போன்ற சிறிய நாடுகள் மீது இரட்டை நிலைப்பாடுகளை எடுக்காது, அந்தந்த நாடுகளுக்குக் காணப்படும் இறைமைகள் மற்றும் ஆட்புல ஒருமைப்பாட்டுக்கு மதிப்பளித்து, அந்நாடுகள் சுயாதீனமாகச் செயற்பட இடமளிக்க வேண்டும்!**

**சனல் 4 தெரிவித்த விடயங்களை அடிப்படையாக வைத்து அரசியல் வியாபாரம் செய்வதற்கு இலங்கையில் அரசுக்கு எதிரான அரசியல் சக்திகள் முயற்சி! இது தேர்தலை இலக்கு வைக்கும் தந்திரம்!**



# ஏழை, பணக்காரர் எல்லோரினதும் பயண நண்பன் லுமாலா

## இலங்கையின் பாரிய சைக்கிள் உற்பத்தி நிறுவனம்

ஊக்கத்துடன் முன்னேறுபவர்களின் வாழ்க்கையின் ஆரம்பம் கசப்பானது. ஜப்பானிய மொழியில் சக்தி என்னும் அர்த்தத்தை தருகின்ற லுமாலா என்னும் பெயரில் இந்நாட்டில் பிரபலமான சைக்கிள். அனைத்து சவால்களையும் வெற்றிக் கொண்டு முன்னணிக்கு வந்துள்ளதென எவ்வித விவாதமும் இன்றி ஏற்றுக்கொள்ளலாம். லுமாலா என்னும் பெயர் இந்நாட்டின் சைக்கிள் துறையில் முதலிடத்தை அடைய எடுத்த முயற்சியானது அவ்வளவு அழகானதல்ல. லுமாலா சைக்கிள் கைத்தொழிற்சாலை இன்று 3 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள பாரிய கட்டட வளாகமாகும். 38 வருட காலமாக மூன்று பரம்பரையாக இலங்கையின் சைக்கிள் உற்பத்தி முதன்மை நிறுவனம் என்பது ரகசியமான விடயமல்ல. இதுவரையில் பயணித்த கரடுமுரடான பாதையின் சிரமமான முயற்சியின் பலனை தற்போது உறுதி செய்துள்ளமைக்கு பல சாட்சிகள் உண்டு.

சிட்டி சைக்கிள் ஸ்டோர் (City cycle Stores) என்னும் பெயரில் பாணந்துறை, சரிக்காலமுல்ல, ஹேனாமுல்ல, காலி வீதி இலக்கம் 119 என்னும் இடத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஆர். எம் நஜிமுதீன் என்னும் வர்த்தகரால் 1953 இல் இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் வர்த்தக நிலையமாக ஆரம்பிக்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு லுமாலா வர்த்தக பெயரின் கீழ் ஜப்பானின் பிரபல சைக்கிள் உற்பத்தி நிறுவன ஒப்பந்தத்துடன் அதே வர்த்தக பெயருடன் இந் நாட்டு வர்த்தக சந்தைக்கு லுமாலா சைக்கிள்கள் இறக்குமதி செய்து விற்கப்பட்டன. பின்னர் ஜப்பானின் லுமாலா சைக்கிள் உற்பத்தி தொழிற்சாலை மூடப்பட்ட பின்னர் 1985ஆம் ஆண்டு அந்த கைத்தொழிற்சாலையின் அனைத்து இயந்திர உபகரணங்களோடு லுமாலா என்னும் பெயரையும் தற்போதைய தலைவர் எம். எம். மிஃப்லால் விலைக்கு வாங்கினார்.

லுமாலா என்னும் ஜப்பான் வர்த்தக நாமத்தின் கீழ் ஒரு கட்டடத்தில் மூன்று ஊழியர்களுடன் இந்த வர்த்தகம் தற்போதைய தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வர்த்தகம் இலங்கையால் கையகப்படுத்தப்பட்ட பின்னர் அதனை தற்போதைய நிலைமைக்கு கொண்டு வந்த ஆரம்ப கர்த்தா இவராவார்.

அதன் பின்னர் மிகவும் குறுகிய காலத்தில் 2010அளவில் தேசிய வர்த்தக சந்தையை ஆக்கிரமித்து வெளிநாட்டு சந்தையையும் வெற்றி கொள்ள முடிந்தது. அவ்வேளையில் 1500 ஊழியர்கள் பணி புரிந்ததோடு நாளொன்றுக்கு 2000 சைக்கிள்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டன. அதன் பின்னர் ஒரு தசாப்த காலத்திலேயே இலங்கையின் ஏற்றுமதி துறையில் முக்கிய இடத்தை அடைந்ததோடு ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதில் முதலிடத்தை வகித்தனர். தற்போது லுமாலா குடும்பத்தின் இன்னுமொரு உற்பத்தியாக லைக்கன் என்னும் பெயரில் மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட சைக்கிள் உற்பத்தி மற்றும் உதிரிபாகங்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக தேசிய பொருளாதாரத்துக்கு அளிக்கும் பங்களிப்பை நாம் கௌரவிக்க வேண்டும்.

லுமாலா நிறுவனத்தால் 1997இல் மத்திய கிழக்கு மற்றும் ஆப்பிரிக்க நாடுகளுக்கு சைக்கிள் ஏற்றுமதியை ஆரம்பித்து 1999இல் ஐரோப்பிய வர்த்தக சந்தையையும் வெற்றிக் கொண்டது. 2005ஆம் ஆண்டளவில் இந்தியாவுக்கும் பின்னர் பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளுக்கும் லுமாலா சைக்கிள்களை ஏற்றுமதி செய்கிறது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி பின்னர் மூலப் பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலைமையும் மற்றும் வரிவிதிப்பால் சைக்கிள் உற்பத்தி செய்ய பெரும் செலவும் ஏற்பட்டது. நாளாந்தம் 2000 சைக்கிள் வரை உற்பத்தி செய்யக்கூடிய இந்த லுமாலா கைத்தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை பெற்றுக் கொடுப்பதன் மூலம் தேசிய பொருளாதாரம் மேம்படும் என்பதோடு இந்த பாரிய வர்த்தகம் எமது ஏற்றுமதி வருமானத்துக்கு பெரும் பங்களிப்பு வழங்கும் என்பது உறுதியாகும்.

தேசிய உற்பத்தியான இந்த லுமாலா தொடர்பாக இதற்கு முன்னர் அரசாங்கத்தின் ஆதரவு கிடைத்திருந்தால் தங்களுடைய உற்பத்தியின் கொள்ளளவை இதைவிட அதிகரித்திருக்கலாம் என லுமாலா நிறுவனத்தின் பணிப்பாளர் தலைமை நிறைவேற்று அதிகாரி தாரிக் மிப்லால் தெரிவித்தார். தற்போது போட்டி நிறைந்த வர்த்தக சந்தையில் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களை விநியோகிப்பது மற்றும் மூலப் பொருட்களை உற்பத்தி செய்து சைக்கிள்களை தயாரிப்பதும் லுமாலா போன்ற சைக்கிள் உற்பத்தியாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. தரத்தில் உயர்வான சைக்கிள்களை உற்பத்தி செய்ய இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களை விட அதிக அளவு செலவழிக்க வேண்டி உள்ளது.



இந்தத் தொழில்நுட்பத்தின் கீழ் சாதாரண மின்சார சைக்கிள்கள், உல்லாச பயணிகளுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட இரட்டை ஆசனங்கள் கொண்ட மின்சார சைக்கிள்கள், கழிவு பொருட்களான பிளாஸ்டிக் போத்தல் உள்ளிட்ட இலகு கழிவுகளை சேகரிக்க விசேட மின்சார சைக்கிள்கள், மின்சாரத்தால் செயல்படுத்தப்படும் சக்கர நாற்காலிகள், மக்கள் போக்குவரத்துக்கான ஆசனங்களுடன் கூடிய மின்சார சைக்கிள்கள், ஐஸ்கிரீம் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட ஏனைய நாடு பூராவும் பிரபலமான உணவு உற்பத்தி பொருட்களை விநியோகிப்பவர்களுக்கான மின்சார சைக்கிள்கள், நடமாடும் விற்பனை நடவடிக்கைகளுக்காக உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட பல மாதிரிகளை அறிமுகப்படுத்தியுள்ளதோடு கேள்விக்கு அமைய பாரியளவில் அவற்றை உற்பத்தி செய்யக்கூடிய திறமை நிறுவனத்திடம் உள்ளது. இந்த சைக்கிள்களை அரசு விசேட கேள்வியின் கீழ் அரசு அதிகாரிகள், பிரதேச ஊடகவியலாளர்கள், நடமாடும் வர்த்தகர்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தால் அது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு மேலும் உதவியாக இருக்கும். இது போன்று ஐரோப்பா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட பல நாடுகளில் இதற்கு பெரும் கிராக்கி உள்ளதாக நிறுவனத்தின் பொது முகாமையாளர் ரஞ்சித் சிறிவர்தன தெரிவித்தார். நாட்டுக்கு அந்நிய செலாவணி பெற்றுத் தருதல் உள்ளிட்ட பாரிய உற்பத்திக்கு பங்களிப்பு செய்வதன் மூலம் பல வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிறுவனத்தில் 1500க்கும் அதிகமான ஊழியர்கள் பணி புரிவதோடு அவர்களுக்கான ஊழியர் சேமலாபநிதி உள்ளிட்ட வரப்பிரசாதங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது இந்நாட்டில் போட்டியாக குறைந்த விலையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்கள் அவர்களுக்கு அச்சுறுத்தலாகும். லுமாலா கைத் தொழிற்சாலையில் நூற்றுக்கு நூறு வீதம் உள்ளூர் உற்பத்தி என்பதால் செலவு அதிகம். விற்பனை செய்யும் போது வரி அறவிடுவதால் இந்நிறுவனத்தை நடத்த பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது என பொது முகாமையாளர் தெரிவித்தார். சில பிரிவுகளுக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதை விட இறக்குமதி செய்வது இலாபம் என்பதால் தற்போது இங்கு பணிபுரிபவர்களின் எண்ணிக்கையை 500 ஆக குறைக்க வேண்டிய துயரமான நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறான நிறுவனத்தின் உற்பத்தி அளவு அதிகரித்த மட்டத்தில் காணப்பட்டால் வர்த்தக சந்தைக்கு வழங்கும் போது இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள்களை விட அதிக செலவை அவர்கள் செய்ய வேண்டியுள்ளது.

நிறுவனத்தின் வர்த்தக முகாமையாளர் நிலந்த சட்டன் ஆராச்சி இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில் "இவ்வாறான தேசிய உற்பத்திகள் தொடர்பில் மக்களுக்கு விரிவான அறிவுறுத்தல் அத்தியாவசியமாகும். கைத்தொழிலாக இவ்வாறான நிறுவனம் மேற்கொள்ளும் சேவை தற்போது உள்ளதைவிட அதிகமாக சமூகத்தில் பரப்பப்பட வேண்டும். பாரம்பரிய சைக்கிள்களுக்கு பதிலாக பலவகையான அதாவது சிறு பிள்ளைகளுக்கு, பல துறைகளைச் சேர்ந்த நடமாடும் விற்பனையாளர்களுக்கு இலகுவான முறையிலான சைக்கிள்கள் விஷேடமாக லைக்கன் என்னும் பெயரில் மின்சார சைக்கிள்கள் உள்ளிட்ட பல உற்பத்திகள் தற்போது சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். விசேடமாக மின்சார சைக்கிள்களை பயன்படுத்துவதன் மூலம் உடல் ரீதியான நன்மையும், நிதி ரீதியாகவும் பாரிய சேமிப்பு கிடைக்கும். நாள்தோறும் பயன்படுத்துபவருக்கு ஒரு மாதத்திற்கு 8000 ரூபாய் வரை எரிபொருள் சேமிப்பு இதன் மூலம் கிடைக்கும், இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் லுமாலா சைக்கிள்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இறக்குமதி செய்யப்படும் சைக்கிள்களை காட்டிலும் லுமாலா சைக்கிள் உயர்தரத்தில் காணப்படுகின்றன. லுமாலா என்பது நூற்றுக்கு நூறு வீதம் இலங்கையிலேயே தயாரிக்கப்படும் சைக்கிளாகும் இலங்கையில் தயாரிப்பது மாத்திரம் அல்ல ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றது."

இந்த வர்த்தகம் வெளிநாட்டிலிருந்து சைக்கிள்களை இறக்குமதி செய்து விற்பதன் மூலமே ஆரம்பிக்கப்பட்டது. லுமாலா உற்பத்தி ஜப்பானில் நிறுத்தப்பட்டது. அதனையே விலைக்கு வாங்கி இங்கு அந்நிறுவனம் நிறுவப்பட்டது. சைக்கிள் உற்பத்தி கைத்தொழில் இலங்கைக்கு போட்டி மிகுந்த ஒரு கைத்தொழிலாகும். அந்த போட்டியான துறைக்கு முறையான நடவடிக்கைகள் அவசியமாகும் என அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் தாரிக் இறுதியாக தெரிவித்தார்.

சுபத்ரா தேசப்பிரிய
தமிழில் வீ.ஆர்.வயலட்

---

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 201 வியாபார வாய்ப்புகள்

எம்மிடம் 5 அம்பியர் (amp) ரவுண்ட் பின் மற்றும் 13 அம்பியர் சதுர பின் பிளக் ரொப் ஆகியவற்றிற்கான பின்கள் உண்டு. தயவு செய்து 0706723953 என்ற வட்ஸ்அப் மூலமாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். 063776

சமையலறை கத்திகளை தயாரிப்பதற்கான உயர் தரமுள்ள உருக்கு கீற்றுக்கள் (Strips) எம்மிடமுண்டு. தயவு செய்து 0706723953 என்ற வட்ஸ்அப் மூலமாக எம்முடன் தொடர்பு கொள்ளவும். 063766

0777438 169 - மாத்தளை மாவட்டத்தில் 50 ஏக்கர் சிறந்த தோட்டத்துடன் பங்களா ரம்ய மா ன இடத்தில். தென் னை, கொக்கோ, ஏலம், கராம்பு, தேக்கு, இடை ப்பயிர் ஆ ட்டுப்பட்டி, ஊழியர்களின் குடியி ருப்புக்கு சாதாரண 2 வீ டுகள். வருடாந்த வருமானம் 10 மில்லியனுக்கு மேல். 300 மில்லியனுக்கு. (கொடுக்கல் வாங்கல் பேசித் தீர்க்கலாம்.) 0777282147. 060142

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

அம்பாறையில் ஓர் காணி விற்பனைக்கு. தேவஸ்தான மாவத்தையில் 63 பேர்ச் (அம்பாறை நகரில் இருந்து 400m) 4 படுக்கையறை மற்றும் 4 இணைந்த குளியலறையுடன் ஓர் வீடு. அத்துடன் 6 படுக்கையறை, 6 குளியலறையுடன் 2 மாடிக் கட்டிடம். கட்டிடங்கள் ஓர் விடுதியாக பாவிக்கப்பட்டது. கூடிய விலைகள் ஏற்கப்படும். தொ.பே. 0779608032, whatsapp +447772458285. 064094

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

தெஹிவளை, ஹில் வீதிக்கு அப்பால் முன்பக்க ம் பெப்பிலியான வீதிக்கு முகப்பாக 1150 சதுர அடி கடை/ அலுவலகம்/ கள ஞ்சியம் லோர்ட்ஞ் பெக்குவேட் மண்டபம் மற்றும் கார்கில்ஸ் இற்கு அருகில் 02 கழிப்பறைகள் மற்றும் கட்டிடத்தின் பின்புறம் களஞ்சிய பிரதேசம். முன்பக்கம் 02 வாகன நிறுத்துமிடம். மாதாந்த வாடகை. 75000/ தொடர்பு 07773 03199, 0772303 999. 063485

## வேலைவாய்ப்பு

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பத்தரமுல்லை வீட்டில் சேவைக்கு 50 வயதிற்குக் குறைந்த பெண் தேவை. சம்பளம் 45000, இருவர் வசிக்கும் மிகச்சிறிய வீடாகும். ஏஜென்சி அல்ல 0773903914. (கதைக்கும் போது சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் கதையுங்கள்) 063759

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

சிலாபம் தென்னம் தோட்டத்திற்கு 30 வயதிற்கு மேற்பட்ட சிங்களம் பேசக்கூடிய ஆரோக்கியமான தமிழர் இருவர் தேவை. 0757925882, 0753601730. 063891

### 325 தொழில்துறை பொது

பம்பலப்பிட்டியில் சுற்றுலாத்துறை ஹோட்டலில் 30 55 வயதிற்குட்பட்ட ஆண் வரவேற்பாளராக வேலை செய்வதற்காக வேலையொன்று உண்டு. வேலை நேரங்கள் பி.ப. 3 மணியிலிருந்து இரவு 11 மணி வரையும். தொலைபேசி 0777732735, 0773100202. 063510

லக்மல் செலோன் ஸ்பா மற்றும் ஃபுட் சென்டர் (கிரிபத்கொடைக்கு) பயிற்சியற்ற பணிப்பெண்கள் தேவை. 18 வயதுக்கு மேற்பட்ட மற்றும் 35 வயதுக்குக் குறைவான பெண்கள் மாதம் 4 இலட்சத்துக்கு மேல் சம்பாதிக்கலாம். தங்குமிட வசதிகள் வழங்கப்படுகின்றன. 45, நுவர வீதி, காலாசந் தி, கிரிபத்கொட. 07035 9823 9. 062929



## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

தென்னங்காணி முந்தல் 40 ஏக்கர் 50 வருடங்களுக்கு மேலாக ஒரு வருக்கே உரித்தானது. கொழும்பு புத்தளம் பிரதான வீதி முந்தல் சந்தியிலிருந்து மூன்று கி.மீ°. தரைப்பக்க ஆதனம். 20 ஏக்கரில் வளர்ச்சியடைந்த தாவரங்கள், 17 ஏக்கரில் இரு வருட தாவரங்கள், 3 ஏக்கர் நெற்கா ணி, நீர் வசதி/ வீ டு/ மின்சார ம்/ ட்ரக்டர் பவுசர் ட்ரெயிலர்/ ஆட்டுக் கொட்டில் 60 ஆடுகள் முறையான பயிற்சியுடன் உள்ளன. 1 ஏக்கர் 6 மில்லியன். 0773185946 judedon.aol.com 062243

### 615 வீடு சொத்து சேவைகள்

எமது நிறுவனம் 15 வருட நம்பிக்கையான சேவையை வழங்கி உங்களது நாடளாவிய ரீதியில் உள்ள சொத்துக்களை தகைமையுள்ள, அனுபவமுள்ள, ந ம்பிக்கையான மதிப்பீட்டாளர்களின் கீழ் மதிப்பிடப்பட்டு மிக அதிக விலைக்கு உடனடியாக விற்பனை செய்து கொடுப்பதற்கு பொறுப்பேற்கப்படும். 0767951560, 0703057617. lankaproperty.lk@gmail.com 063889

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொழும்பு 5, கிருளப்பனை புகை யிரத நிலையம், open University க்கு அருகில் 6 வது ஒழுங்கையில் C off colombage mawatha) 2 படுக்கை அறைகள், சமையலறை, Hal l மற்றும் வாகன தரிப்பிட வசதியுள்ள சுற்று மதிலுடன் கூடிய 2.5P வீடு விற்பனைக்கு உண்டு. (Deed available) விலை பேசித்தீர்மானிக்கலாம்.T.P-0762211132. 063338

தெஹிவளையில் 4 படுக்கையறைகளுள்ள வீடு விற்பனைக்கு2 கழிவறைகள். 2 பான்ரிகள், 2 அலகுகள் , 2 மின்சார மானிகள், 2 மதிப்பீட்டு இல 6 பேர்ச் 1 வாகன நிறுத்துமிடம், தனி வீடு, க ல்விஹார வீ தியிலுள்ள கேட்வே சர்வதேச பாடசாலைக்கு நடைதூரம் தெளிவான உரித்து. குடியிருப்புகளிலுள்ள நேர்மையான கொள்வனவுக்காரர்களுக்கு முன்னுரிமை அமைதியான பிரதேசம். முதன்மையாளர்கள் மாத்திரம். விலை பேசித்தீர்க்கலாம். தொடர்பு அலைபேசி +94768046743. 063580

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

பேலியகொட கோவிலுக்கு மு கப்பாக சுவஸ்திகா பூங்கா வில் 30 பேர்ச்சில் அமைந்துள்ள வீடொன்று அதிகூடிய விலைக்கு விற்பனைக்குண்டு. 0272246292. 0718391873. 064223

### 620 வீடு சொத்து புத்தளம் மாவட்டம் விற்பனைக்கு

புத்தளத்தில் காணியுடனான கட்டிடம் விற்பனைக்கு. நிரப்பப்பட்ட காணி. புத்தளம் தள வைத்தியசாலை வீதிக்கு முகப்பாக வுள்ளது. 60 பேர்ச் 0773097803. 062668



### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

கண்டி, மாபனாவதுர 14.5 பேர்ச் சிறந்த காணி கீல்ஸ் சுப்பர் இல் இருந்து 400m மற்றும் K.P.H. தனியார் வைத்தியசாலையில் இருந்து 300m. ஒரு பேர்ச் ரூ. 1,600,000/=. 07169733 30. 063875

0777282147 கண்டி குண்டசாலை வீதி சொக்லட் கம்பனிக்கு முன்னால் படிவத்த பாதைக்கு 150 அடி அகலமான இடைப்பயிர், மதில் கேட்டுடன் 80 பேர்ச் தரைமட்டமான பெறுமதியான காணி வியாபாரத்திற்கு அல்லது வீடு கட்டுவதற்கு பொருத்தமானது. 85 மில்லியன். கொடுக்கல், வாங்கல் பேசித் தீர்க்கலாம். 07774 38169. 060164

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக, பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியி ருக்க உகந்த கா ணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 235 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அ ழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ், 0702484848 064170

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். ஒரு காணித்துண்டு 325 இலட்சம். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ள அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ். 0702484848 064166

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளையில் இரு அறைகள், பாரிய வீடு, பாரிய தோட்டம் குத்தகைக்கு. காலி வீதிக்கு 100 மீ.சிறந்த சூழல். சுப்பர் மார்க்கட்டுகளுக்கு அருகாமையில். தரகர் தேவையில்லை. 0770528876. 062657

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 011 2 129 347
011 2 429 383 011 2 429 342/343

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# கலைமகள் தமிழ் தேசிய பாடசாலையின் ஆசிரியர் தின விழா







*களுத்துறை சுழற்சி நிருபர்*

களுத்துறை மாவட்ட மத்துகம கல்வி வலயத்துக்கு உட்பட கலைமகள் தமிழ் தேசிய பாடசாலையின் ஆசிரியர் தின விழா கடந்த 2023.10.06ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் வீ.சசிகுமார் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இவ் வைபவத்தின் போது IDM நேஷன் சர்வதேச நிறுவனத்தின் இலங்கை மற்றும் இங்கிலாந்து தலைவர் கலாநிதி ஜனகன் விநயாகமூர்த்தி பிரதம அதிதியாகவும் மற்றும் IDM நேஷன் பல்கலைக்கழக நிறுவன சர்வதேச நடவடிக்கைகள் சமூக நற்பணி முதல்வர் மற்றும் பணியாளர் வணக்கத்துக்குரிய அருட் தந்தை சந்துரு பெர்னாண்டோ கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு வைபவத்தை மேலும் சிறப்பித்தனர்.

இதன்போது ஆசிரியர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது. இங்கு கருத்து தெரிவித்த IDM நேஷன் தலைவர், கலாநிதி ஜனகன் விநாயாகமூர்த்தி மாணவர்களின் எதிர்காலத்தை பயன் உள்ளதாக அமைத்துக் கொள்வதற்கான பல்வேறு நற்சிந்தனைகளுடன் கூடிய சிறப்பு சொற்பொழிவு ஒன்றையும் வழங்கினார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் பாடசாலை அதிபர் வீ.சசிகுமார் முன்வைத்த பல்வேறு வேண்டுகோள்களை கேட்டறிந்து அது தொடர்பாக எதிர்வரும் காலப்பகுதியில் கவனம் செலுத்துவதாகவும் தெரிவித்ததுடன் வைபவத்தின் இறுதியில் இடம்பெற்ற ஆரியர்களுக்கான விசேட விருந்துபசாரத்திலும் கலந்துக் கொண்டார்.



யாழ். வட்டுக்கோட்டை மூளாய்ப் பகுதியில் விசேடதேவையுடைய நபர் ஒருவருக்கு வாழ்வாதாரமாக கோழி வளர்ப்புக்கான உதவிகள் வழங்கப்பட்டன. கனடாவிலுள்ள பெத்தாத் அம்மா அறக்கட்டளையின் நிதி அனுசரணையில் மெட்ரோலான் மீடியா நிர்வாகத்துடன் இணைந்து முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினர் லயன் கலாநிதி தேசபந்து நா.தனேந்திரன் இவற்றை வழங்கினார்.

படம் –வேலணை குறூப் நிருபர்


வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
(PV 120625)
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

අමානෝ වැහිපීලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
රු.175/- සිට
0777 394 679 | 070 663 33 88

REPAIRS / SALE
Grandfather Clocks
D.M.D. Roanos 18 Years of Excellent service.
Service, Repairs, Replacement of "Grandfather" and all Wall Clocks undertaken.
We undertake any Condition of your Antique Clocks.
WATCH Repair & Service
Original German Grand Father Clock FOR SALE.
Brand New Cases of Grand Father Clocks also available undertaken in Colombo and any outside places.
Damaged cases of Grand Father Clocks are Newly made by us.
0777 658 621 / 071 7371 122 / 0112 754 545
No.620B, Highlevel Road, Wijerama, Nugegoda.

Automatic block machine
Little used but brand new condition
1800000
077 37 80 470

Properties for Sale
22.6 perches with a well built house for sale off Ananda Rajakaruna Mawatha, Colombo 8. Situated close to Asiri & General hospital and with easy access to Colombo 3/ 5/ 7/ 2 Rajagiriya & Baseline Road.
Priced at a discounted price LKR 8.5 million per perch.
+94 77 589 36 93
A well built modern house on 19 perches is situated down a private neighbourhood in Horton place, Colombo 7.
Price on Request
+94 77 589 36 93
A 13 perch property with an old house is available for purchase. It is situated down a residential lane in Rosmead place, Colombo 7. The old house and annexe can be refurbished to required standards.
Price LKR 21.5 million negotiable
+94 77 589 36 93
A completely refurbished fully furnished 3 bedroomed apartment with a direct sea view is available for sale at Crescat Residencies, Colombo 3. Facilities include a swimming pool, gymnasium, Super market, spa, discounts at the hotel restaurants and laundry.
LKR 95 million negotiable
+94 77 589 36 93
A private residential property with 35 perches in extent is available for sale off 5th lane in Colombo 3.
The property is being sold for land value only
+94 77 589 36 93
Empire Residences- 2000sqft, 3 bedroomed apartment for sale on a high floor with unobstructed views
LKR 125 million negotiable
+94 77 589 36 93
39 perches for sale at Norris Canal Road Colombo 10.
Price LKR 18 million per perch
+94 77 589 36 93
Call +94 77 58 936 93 to arrange a visit.

APARTMENT BUILDING FOR SALE
KALUBOWILA
HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

COLOMBO 10
MARADANA
FACING MAIN ROAD 20 PERCH LAND FOR
IMMEDIATE SALE
0777 85 57 58 / 071 785 57 58

ARCH HOLDINGS (PVT) LTD.
142, Weligampitiya, Ja-Ela
Hot Lines : 077 490 85 76 / 077 301 52 32
info@archholdingslk.com / www.archholdingslk.com
Container Homes
Special Container Converter for Office Purposes, Hoteliers, Houses and etc. Islandwide Service
This Month Special Offer
Rs.1,950,000 (All Inclusive)
- Rocell Bathroom fittings
- Natural Wood Working Interior
like us on facebook http://archholdingslk.com/project.html

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

Luxury Brand New House for Sale @ Kadawatha
Located in Mangala Mawatha, close to Kadawatha central bus depot. 9 Perches with build up area 2773 square feet, 4 Bedroom, M/B with AC/ Dining/ Living & TV Lounge, smart security lighting system & CCTV system, Smart security door lock, Ground floor Vinyi & 1st floor Titanium, Kumbuk stair case, 2 vehicle parking space, conveneintly located in new Kadawatha town, 1km for Kadawatha bus stand & highway entrance. 3 phase electricity. 2000L water tank, Rooftop with panoramic view. **Price 46M (Buyers only)**
077 37 27 284

3 FULLY EQUIPPED BANQUET HALLS FOR SALE
OLD GALLE ROAD MORATUWA
Price - 185 Million
VALUABLE INVESTMENT
- AC - Carpeted
- Land Extent 100 Perches
- Old Galle Road - 300 Mts to Moratuwa
- Solar Power System
- Generator 120 KVA
- Three Phase Electricity
077 7 309 543

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 / ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

Upie's Place IN HABARANA
Peaceful & Comfortable Holiday Bungalow
Perfect for: ● Day trips to Ritigala, Damulla, Sigiriya Namal Uyana, Polonnaruwa, Anuradhaprua & Trincomalee
● Safari excursions to Minneriya & Kaudulla National Parks (can be arranged)
Property: ● Large garden with mature trees
● Borders Cinnamon Lodge & Chaya Village Hotels
Accommodation: ● Double Room with A/C / Non A/C with attached Bathroom
● Dormitory for 6-8 people with attached toilets and showers.
Additional Benefits:
● Free Wi-Fi & SLT Peo TV
● Driver's Quarters
To make a quick reservation,
Please call Kolitha on 0772947508
We hope to see you soon!



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்




## இந்தியா முன்வைத்துள்ள பொருளாதார வழித்தடம்

# சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சியை தோற்கடிக்குமா?

பிராந்திய மட்டத்தில் ஆதிக்கம் செய்த இந்தியா சர்வதேச அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் நிலையை நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. குறிப்பாக கனடாவின் இறைமையில் தலையீடு செய்யும் நடவடிக்கை இந்தியாவின் சர்வதேச அரசியலில் ஆதிக்கம் செய்யும் செய்முறையாகவே தெரிகிறது. அதனால் ஏற்பட்டுள்ள இராஜதந்திர நெருக்கடியை இந்தியா அணுகும் விதத்தை அவதானிக்கும் போது இந்தியாவின் மேலாதிக்க செய்முறையை உணரமுடிகிறது. அதிலும் இராணுவ மற்றும் புலனாய்வு நடவடிக்கையாகவே இந்தியாவின் நகர்வு சர்வதேச அரசியலில் விளங்கிக் கொள்ளப்படுகிறது. இந்தியாவின் சந்திரனை நோக்கிய சந்திரயான் பயணம் இந்தியாவின் பிற கோள்களை நோக்கிய நகர்வை வெளிப்படுத்துகிறது. புவிக்கோளத்தில் பிற கண்டங்களை நோக்கி இந்தியா நகர்வது போலவே பிற கோள்களை நோக்கிய அதிகார நகர்வை விளங்கிக் கொள்ள வேண்டும். சந்திரனிலுள்ள வளங்களை கையகப்படுத்தும் நடவடிக்கையாகவே சந்திரயானின் வெற்றிகரமான பயணம் அமைந்துள்ளது. இதே நேரம் இக்கட்டுரை புதுடில்லியில் நடைபெற்ற ஜி20 மகாநாட்டில் இந்தியா முன்வைத்துள்ள பொருளாதார வழித்தடம்; பற்றிய தேடலை வெளிப்படுத்துவதாக உள்ளது.

ஜி20 மகாநாடு 9,10.09.2023 இல் நடைபெற்ற மகாநாட்டில் மேற்கு நாட்டின் தலைவர்களது வருகையும் ரஷ்யா மற்றும் சீனத் தலைவர்கள் கலந்து கொள்ளாமையும் அதிக மேற்குலகத்தின் ஆதிக்கத்தை மகாநாட்டில் காணக்கூடியதாக அமைந்திருந்தது. ஆனால் உக்ரைன் விடயத்தில் இந்தியாவின் தீர்மானத்தை ஏற்றுக் கொண்ட மேற்குலகம் மறுபக்கத்தில் சீனாவுக்கு எதிரான நகர்வுகளை இந்தியா பக்கமிருந்து நகர்த்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. அதன் அடிப்படையில் திட்டமிடப்பட்டுள்ள புதிய புவிசார் தந்திரோபாயத்தையும் புவிசார் பொருளாதாரத்தையும் மையப்படுத்திய இந்தியா மேற்காசியா ஐரோப்பா பொருளாதார தாள்வாரம் திட்டமிடப்பட்டுள்ளதாக ஜி20 மாநாட்டின் நிறைவில் இந்தியாஅமெரிக்கத் தரப்புக்களால் முன்மொழியப்பட்டுள்ளது.

இது இந்தியாவினாலும் அமெரிக்காவினாலும் திட்டமிடப்படுவதாக விவாதிக்கப்பட்டாலும் முழுமையாக சீனாவுக்கு எதிரானதாகவே இந்திய ஆய்வாளர்கள் அதிகம் முதன்மைப்படுத்தி வருகின்றனர். சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சிக்கான நகர்வை தோற்கடிப்பதற்கான கட்டமைப்பாகவே விவாதிக்கப்படுகிறது. இதில் மேற்காசிய நாடுகளான சவுதி அரேபியா மற்றும் இஸ்ரேல் என்பனவும் ஐரோப்பாவுக்கான தரைவழி மற்றும் கடல் வழிப் பாதையூடாக வர்த்தகம் சந்தை மற்றும் பொருளாதார உறவை கட்டமைப்பாதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை தெரியவருகிறது. இதனால் இத்தகைய நகர்வை மேற்குலக புவிசார் அரசியல் விமர்சகர்கள் ஸபைக்மன் 1944 இல் முன்வைத்த விளிம்புநிலக் கொள்கைக்கு ஒப்பானது எனவும் இது ரஷ்யாவின் இருதய நிலக் கோட்பாட்டுக்கு மாறானது எனவும் விவாதிக்கின்றனர்.

குறிப்பாக 1919 இல் மைக்கிண்டரால் முன்வைக்கப்பட்டுள்ள இருதய நிலக் கோட்பாட்டை வேறு ஒரு தளத்தில் முதன்மைப்படுத்திய ஸ்பைக்மன் விளிம்பு நிலக் கோட்பாட்டை அடையாளப்படுத்தினார். அமெரிக்காவும் சோவியத் யூனியனும் பனிப்போர்க் காலத்தில் மோதுண்ட போது மைக்கிண்டரின் இருதயநிலக் கருதுகோள் நியாயப்படுத்தப்பட்டது.

தற்போது அதன் புதிய வடிவம் எழுச்சி பெற்றுள்ளதாகவும் அதற்கான அடிப்படை ஸ்பைக்மனின் பழைய கோட்பாட்டில் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. அதாவது ரஷ்ய அமெரிக்க அதிகாரப் போட்டி பலவீனமடைந்து பல சக்திகளின் எழுச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அதனையே ஸ்பைக்மன் முன்வைத்துள்ளதாகவும் தெரிகிறது. இது புதிய அதிகார மையங்களுக்கான திறவுகோலாக அமைந்திருப்பதுடன் ரஷ்யாவை கையாளுவது பற்றிய விவாதமாக உள்ளது. அதனால் ஸ்பைக்மன் *Who controls the rimland rules Eurasia; Who rules Eurasia controls the destinies of the world* என்ற முடிவுக்கு வந்தார். ஸ்பைக்மன் யூரேசியாவை சுற்றியுள்ள நிலப்பகுதியையும் கடல்பகுதிகளையும் அதற்கு உட்பட்ட அரசுகளையும் விளிம்பு நிலக்கொள்கைக்குள் உள்ளடக்கியிருந்தார். இதில் மேற்கு ஐரோப்பாவுக்கும் தென் சீனக்கடலோரத்தைக் கொண்ட நீண்ட பகுதியை உள்ளடக்கியுள்ளது என்றார். இதில் மேற்காசியா உள்ளடங்குவதுடன் இந்தியாவும் சீனாவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பொருளாதார வழித்தடத்தின் வடிவம் அதிக அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளதாக தெரிகிறது. சீனாவால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பட்டுப்பாதையை முறியடிப்பதென்பதே நோக்கமாக அமைந்தாலும் வெளிப்படையாக சீனா இந்தியா ரஷ்ய கட்டமைப்பை உடைப்பதாகவே தெரிகிறது. இதன் இன்னோர் வளர்ச்சியாகவே பிறிக்ஸ்ம் அதன் பிந்திய நகர்வும் காணப்படுகிறது. பிறிக்ஸின் விரிவாக்கமானது மேற்காசிய நாடுகளை உள்ளடக்கியதுடன் வலுவான புவிசார் அரசியல் பலத்தைக் கொண்ட மூன்று நாடுகளது பலமான கட்டமைப்பாகவே அமைந்துள்ளது. அது மட்டுமன்றி ஆசியா ஆபிரிக்கா மற்றும் இலத்தீனமெரிக்க நாடுகள் அமெரிக்க எதிர்ப்பினை கட்டமைக்கும் போது வலுவான அமைப்பாகவும் உலக ஒழுங்கை மாற்றும் அமைப்பாகவும் பிறிக்ஸ் மாறியுள்ளதாகவே தெரிகிறது. அது முழுமையாக மேற்குக்கு எதிரானதாக அமையும் அதே நேரம் டொலருக்கு எதிரான புவிசார் பொருளாதார கட்டமைப்பும் நாடுகளின் நாணயங்களை கொண்டதான வர்த்தகப் பரிமாற்றமும் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்திவருகிறது. அதனாலேயே ரஷ்யா பொறுத்து இந்தியா எத்தகைய கொள்கையைக் கொண்டிருந்தாலும் மேற்கு, இந்தியாவுடன் இணங்கிப் பயணிக்கும் உபாயத்தை வகுத்து ஜி20 ஐ தெளிவாக கையாண்டுள்ளது எனலாம்.

இது மேற்காசியாவுடன் மேற்குலகத்திற்கு ஏற்பட்டுள்ள விரிசலை முடிவுக்கு கொண்டுவரும் என்ற எதிர்பார்க்கையும் காணப்படுகிறது. அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தினால் ஏனைய நாடுகளுடனான உறவு வலுவடைகிறதோ இல்லையோ மாறாக இந்திய மேற்கு உறவும் அமெரிக்க இந்திய நட்புறவும் பலமானதாக அமைவதே நோக்கமாகத் தெரிகிறது. ஜி20 இவ்வாறு பலதிட்டங்களை முன்மொழிந்துள்ளது. கடந்த காலங்களில் உலகத்தை மாற்றும் திறனுடன் ஜி 20 செயல்பட்டதாக அதிக உரையாடல் காணப்பட்டது.

ஆனால் நடைமுறையில் நியாயமற்ற தன்மைக்குள்ளால் பொருளாதார சுரண்டலும் ஆக்கிரமிப்புமே நிகழ்ந்துள்ளது. காணமுடிகிறது. அது மட்டுமன்றி சீனாவின் புதிய பட்டுப்பாதைத் திட்டமானது பாரிய நிதித் திட்டமிடலில் நகர்த்தப்பட்டுள்ளத. ஏறக்குறைய ஆசியபசுபிக் பிராந்தியத்தையும் ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க கண்டத்தையும் தனது வழித்தடத்தில் சீனா நிலைநிறுத்திவிட்டது. அதன் வளர்ச்சியும் நகர்வும் அதீதமானதாக மாறியுள்ளது.

ஆனால் இது பற்றிய இஸ்ரேலின் நிலைப்பாடு தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு குறிப்பிடும் போது பொருளாதார இராணுவ மற்றும் சமாதானத்திற்கான திட்டமிடலாக இத்திட்டம் அமைந்திருப்பதுடன் முழுமையான புதிய மத்திய கிழக்கை உருவாக்கும் எனவும் ஐரோப்பாவை ஆசியாவுடன் இணைக்கும் என்று மிகப்பலமான திட்டம் எனவும் அதிக மாற்றங்களைத் தரக்கூடியதெனவும் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். இதில் இஸ்ரேலின் வருகையே அதிக குழப்பத்தை தருவதாக விமர்சகர்கள் விவாதிக்கின்றனர். காரணம் இஸ்ரேல் ஏற்கனவே ஈரானின் அணுவாயுத உற்பத்திக்கான நகர்வுகளால் அதிக நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அது மட்டுமன்றி ரஷ்யா சீனாவின் மேற்காசிய நகர்வுகள் இராணுவ ரீதியில் அதிக பாதிப்பினை இஸ்ரேலுக்கு ஏற்படுத்தியுள்ளது. அதனால் இத்தகைய முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் பலமான இஸ்ரேலை கட்டமைக்க திட்டமிடுவதாகவே தெரிகிறது.

அதாவது குவாட் நாடுகளின் விரிவாக்கம் அதிக அரசியல் இராணுவ வடிவமாக அமைவது போல் ஜி20 இன் விரிவாக்கமும் சாத்தியமான இராணுவ வலுவை ஏற்படுத்த வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. அதனால் இதன் மீதான நம்பிக்கை அதிகரித்திருப்பதாக உணரப்படுகிறது.

எனவே ஜி20 புதுடில்லி மாநாடு தெளிவான நகர்வொன்றை முன்வைத்துள்ளது. வர்த்தக அடிப்படையிலும் அதனால் பொருளாதார ஒருமைப்பாட்டை ஏற்படுவதுடன் புதிய மாற்றத்தை உலகளாவிய போக்கில் ஏற்படுத்துமென எதிர்பர்க்கப்படுகிறது. அதே நேரம் இது சீனாவுக்கு மாற்றீடானதாக அமைய வாய்ப்பில்லை எனவும் இந்தியாவையும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவை ஒன்றிணைக்கும் திட்டமெனவும் புரிந்து கொள்ளப்படுகிறது.



AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்

# இலங்கையில் மருத்துவர் இடம்பெயர்வின் தாக்கம்

இலங்கையில் மருத்துவர் இடம்பெயர்வு ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. அதிக சம்பளம், சிறந்த பணி நிலைமைகள், மேலும் தொழில் முன்னேற்ற வாய்ப்புகள் போன்ற சிறந்த வாய்ப்புகளைத் தேடி பல மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். இது நாட்டின் சுகாதார அமைப்பு, பொருளாதாரம் மற்றும் சிறு வணிகங்களில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையில் இருந்து மருத்துவர்கள் இடம்பெயர்வதற்கு பல காரணங்கள் உள்ளன. மிகவும் பொதுவான காரணங்களில் சில:

**பொருளாதார நெருக்கடி:** இலங்கை தற்போது கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது, இது பரவலான வறுமை மற்றும் வேலையின்மையை ஏற்படுத்தியுள்ளது. மருத்துவர்கள் இதற்குத் விதிவிலக்கானவர்கள் இல்லை. ஆதலால் பல மருத்துவர்கள் தங்கள் வாழ்க்கையைச் சமாளிக்க கடினமாக இருப்பதனால் இந்த முடிவினை எடுக்கின்றனர்.

**குறைந்த சம்பளம்:** இலங்கையில் உள்ள மருத்துவர்களுக்கு உள்ளூர் தரத்தின்படி மிகக் குறைந்த சம்பளமே வழங்கப்படுகிறது. இதனால் தங்களையும் தங்கள் குடும்பத்தையும் நடத்த முடியாமல் சிரமப்படுகின்றனர்.

**மோசமான வேலை நிலைமைகள்:** இலங்கையில் வைத்தியர்களுக்கான பணி நிலைமைகள் பெரும்பாலும் மோசமாகவே உள்ளன. அவர்கள் பெரும்பாலும் அதிக வேலை மற்றும் குறைவான ஊதியம் பெறுகிறார்கள். மேலும் அவர்கள் தரமான பராமரிப்பை வழங்கத் தேவையான ஆதாரங்களை அணுக முடியாமல் இருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**வாய்ப்புகள் இல்லாமை:** இலங்கையில் வைத்தியர்களுக்குத் தொழில் முன்னேற்றத்திற்கான மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் சமீப வருடங்களாக நிலவிவரும் பொருளாதார மற்றும் நிதிப்பாற்றாக் குறையால் சுகாதாரத்துறைக்கான பாதீட்டு நிதியை அரசாங்கம் குறைத்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

**அரசியல் ஸ்திரமின்மை:** சமீப ஆண்டுகளில் இலங்கை அரசியல் ஸ்திரமின்மையை அனுபவித்து வருகிறது. இதனால் மருத்துவர்கள் உட்பட பலருக்கு நிச்சயமற்ற எதிர்காலம் உருவாகியுள்ளது.

இலங்கையில் மருத்துவர் குடியேற்றத்தின் தாக்கம் குறிப்பிடத்தக்கது மற்றும் தொலைநோக்குடையது. சில முக்கிய தாக்கங்கள் பின்வருமாறு:

**அதிகரித்த மருத்துவச் செலவுகள்:** மருத்துவர்களின் பற்றாக்குறையால் நோயாளிகளுக்கான மருத்துவச் செலவுகள் அதிகரிக்கின்றன. ஏனெனில், கவனிப்பை வழங்குவதற்கு குறைவான மருத்துவர்கள் இருப்பதால், நோயாளிகள் மருத்துவரைப் பார்க்க அதிக நேரம் காத்திருக்க வேண்டியிருக்கும். மேலும் சிகிச்சைக்காக அதிக கட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.




**மருத்துவர்களின் பற்றாக்குறை மருத்துவப் பிழைகளின் அபாயத்தையும் அதிகரித்துள்ளது நோயாளிகளுக்குக் கிடைக்கும் சிகிச்சையின் தரம் குறைவதற்கு வழிவகுக்கும்**

**கவனிப்பின் தரத்தில் குறைவு:** மருத்துவர்களின் பற்றாக்குறை காரணமாக நடைமுறையில் நோயாளிகளுக்குக் கிடைக்கும் சிகிச்சையின் தரம் குறைவதற்கு வழிவகுத்துள்ளது. ஏனென்றால், மருத்துவர்கள் அதிக வேலை மற்றும் மன அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். மேலும் அதிகமான மருத்துவர்கள் இருந்தால் அவர்களுக்கு அளிக்கும் அதே அளவிலான கவனிப்பை வழங்க அவர்களுக்கு நேரமோ வளமோ இல்லாமல் இருப்பதனையும் பார்க்கக் கூடியதாக உள்ளது.

**மருத்துவப் பிழைகள் அதிகரிக்கும் அபாயம்:** மருத்துவர்களின் பற்றாக்குறை மருத்துவப் பிழைகளின் அபாயத்தையும் அதிகரித்துள்ளது. குறைவான நேரத்தில் அதிக நோயாளிகளைப் பார்க்க வேண்டிய அழுத்தத்தில் மருத்துவர்கள் இருப்பதால் கடந்த சில மாதங்களாக பல மருத்துவத் தவறுகள் ஏற்பட்டு வருவதனை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

**மருத்துவக் கல்வி சீர்குலைவு:** மருத்துவர்கள் பற்றாக்குறையால் மருத்துவக் கல்வியும் சீர்குலைந்துள்ளது. ஏனெனில் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கக் குறைவான மருத்துவர்கள் இருப்பதால், கல்வியின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது.

**மருத்துவம் சார்ந்த மனித வெளியேற்றம்:** இலங்கையில் இருந்து மருத்துவர்களின் இடம்பெயர்வு என்பது ஒரு வகையான மனித வெளியேற்றம் ஆகும். இது ஒரு நாட்டிலிருந்து திறமையான மற்றும் படித்த மருத்துவர்களின் இழப்பைக் குறிக்கிறது. இது நாட்டின் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சியில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

இலங்கையில் இருந்து உயர்மட்ட மருத்துவர்கள் பெருமளவில் வெளியேறுவது நாட்டின் சுகாதார அமைப்பில் கு றிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இது திறமையான மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறைக்கு வழிவகுக்கிறது. இது நோயாளிகள் பெறும் சிகிச்சையின் தரத்தை பாதிக்கிறது. இலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களின் மனித வெளியேற்றம் காரணமாக பின்வரும் தொழில்கள் பாதிக்கப்படலாம்:

**தனியார் சுகாதாரம்:** தனியார் மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள் மருத்துவர்களை பணியமர்த்துவதற்கும் தக்கவைப்பதற்கும் போராடி வருகின்றன. இதனால் நோயாளிகள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலையும், சிகிச்சையின் தரம் குறையும் வாய்ப்பும் உள்ளது.

**பொதுச் சுகாதாரம்:** பொதுச் சுகாதார அமைப்பு ஏற்கனவே நெருக்கடி நிலையில் உள்ளது. அதிகமான மருத்துவர்களின் இழப்பு நிலைமையை மேலும் மோசமாக்கும்.

**மருத்துவச் சுற்றுலா:** மருத்துவ சுற்றுலாவுக்கு இலங்கை ஒரு பிரபலமான இடமாகும். இருப்பினும், மருத்துவர்களின் மனித வெளியேற்றம் வெளிநாட்டு நோயாளிகளின் ஈர்ப்பைக் குறைக்கும். இது நாட்டின் பொருளாதாரத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

**மருந்துத் தொழில்:** மருத்துவர்களின் மனித வெளியேற்றத்தினால் மருந்துத் துறையும் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மருந்துகளை பரிந்துரைப்பதில் மருத்துவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மேலும் அவர்கள் இல்லாததால் நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சை கிடைக்காமல் போகலாம்.

**மருத்துவ ஆராய்ச்சி:** மருத்துவ ஆராய்ச்சியும் மருத்துவர்களின் நிபுணத்துவத்தைப் பொறுத்தது. மருத்துவர்களின் இழப்பு முக்கியமான ஆராய்ச்சியை மேற்கொள்வதை கடினமாக்கும். இது மக்களின் ஆரோக்கியத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்.

மேற்குறிப்பிட்ட வர்த்தகங்கள் மற்றும் கைத்தொழில்களுக்கு மேலதிகமாக, இலங்கையைச் சேர்ந்த மருத்துவர்களின் மனித வெளியேற்றம் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். ஏனென்றால், மருத்துவர்கள் மிகவும் திறமையான தொழில் வல்லுநர்கள்.

அவர்கள் பொருளாதாரத்துக்கு பல வழிகளில் பங்களிக்கிறார்கள். உதாரணமாக, அவர்கள் வரி செலுத்துகிறார்கள், வேலைகளை உருவாக்குகிறார்கள் மற்றும் வணிகங்களுக்கு வருமானத்தை உருவாக்குகிறார்கள். அண்மைக் காலமாக இலங்கையில் இருந்து பல வைத்தியர்கள் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு இடம்பெயர்வது நாட்டின் வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வருமானம் என்பவற்றில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

**வெளிநாட்டு முதலீடு:** வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்காக திறமையான பணியாளர்களைக் கொண்ட நாடுகளைத் தேடுகின்றனர். மருத்துவர்கள் இடம்பெயரும்போது, அவர்களது திறமைகள் மற்றும் நிபுணத்துவத்தை அவர்களுடன் எடுத்துச் செல்கிறார்கள், இது இலங்கையை வெளிநாட்டு முதலீட்டிற்கான குறைவான கவர்ச்சிகரமான இடமாக மாற்றுகிறது.

**வெளிநாட்டு வருமானம்:** வளர்ந்த நாடுகளில் பணிபுரியும் மருத்துவர்கள் பெரும்பாலும் இலங்கையில் உள்ள தங்கள் குடும்பங்களுக்கு பணத்தை திருப்பி அனுப்புகிறார்கள். இது "பணம் அனுப்புதல்" என்று அழைக்கப்படுகிறது மற்றும் இது நாட்டுக்கான வெளிநாட்டு வருமானத்தின் குறிப்பிடத்தக்க ஆதாரமாகும். வைத்தியர்கள் இடம்பெயரும் போது, இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் பணத்தின் அளவு குறைகிறது.

வெளிநாட்டு முதலீடு மற்றும் வெளிநாட்டு வருமானம் ஆகியவற்றில் மருத்துவர் இடம்பெயர்வின் தாக்கம் நீண்ட காலத்திற்கு மோசமாக இருக்கும். ஏனெனில் மருத்துவர்களின் இடம்பெயர்வு இலங்கையில் திறமையான மருத்துவ நிபுணர்களுக்கு பற்றாக்குறையை ஏற்படுத்தும். இந்தப் பற்றாக்குறையானது வெளிநாட்டு முதலீட்டை ஈர்ப்பதிலும் வெளிநாட்டு வருமானத்தை ஈட்டுவதையும் கடினமாக்கும்.

இலங்கை அரசாங்கம் மருத்துவர் இடம்பெயர்வு பிரச்சினையை உணர்ந்து அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. எவ்வாறாயினும், இலங்கையின் சுகாதாரப் பாதுகாப்பு முறைமைக்கு சிறந்த எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவுவதற்கும், நாட்டில் தங்குவதற்கும் மருத்துவர்களை சமாதானப்படுத்துவதற்கும் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டியுள்ளது.

**மருத்துவர் இம்பெயர்வு பிரச்சனைக்கு தீர்வு காண இலங்கை அரசாங்கம் செய்யக்கூடிய சில விஷயங்கள்:**

**மருத்துவர்களுக்கான பணி நிலைமைகளை மேம்படுத்துதல்:** சம்பளத்தை அதிகரிப்பதன் மூலமும், சிறந்த வீட்டு வசதிகளை வழங்குவதன் மூலமும், தொழில்முறை மேம்பாட்டிற்கான அதிக வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் அரசாங்கம் மருத்துவர்களுக்கான பணி நிலைமைகளை மேம்படுத்த முடியும்.

**தொழில் முன்னேற்றத்திற்கான அதிக வாய்ப்புகளை உருவாக்குதல்:** சுகாதாரத் துறையில் முதலீடு செய்வதன் மூலம் மருத்துவர்களுக்கான தொழில் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை அரசாங்கம் உருவாக்க முடியும்.

மேலும் ஒழுங்குமுறைச் சுமையைக் குறைப்பதன் மூலமும், நிதி உதவி வழங்குவதன் மூலமும் மருத்துவர்கள் தங்கள் சொந்த நடைமுறைகளைத் தொடங்குவதை அரசாங்கம் எளிதாக்கிக் கொடுக்கமுடியும்.

மருத்துவ மாணவர்களுக்கு அதிக கல்வி உதவித்தொகை மற்றும் நிதி உதவி வழங்குதல்: மருத்துவ மாணவர்கள் மருத்துவப் படிப்பையும் மேலும் மேற்படிப்பினை புலமை அடிப்படையிலும் படிப்பதற்கு அரசு அதிக உதவித்தொகை மற்றும் நிதி உதவிகளை வழங்க முடியும்.

# சிறுவர், முதியோர் நலன்களில் அனைவரும் அதிக அக்கறையுடன் செயலாற்ற வேண்டும்!



## ஒக்டோபர் மாதத்தை விழிப்புணர்வு காலமாக அனுஷ்டிப்பது அவசியம்

ஒக்டோபர் முதலாம் திகதி என்றதுமே எமது கவனம் ஈர்க்கப்படுவது சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச முதியோர் தினம் ஆகியவற்றின் மீதாகும். சிறுவரும், முதியோரும் ஒரு சமூகத்தின் பிரதான இரு தூண்களாவர்.

ஐக்கிய நாடுகள் சபையின் யுனிசெப் பிரகடனங்கள் அடிப்படையில் 1954 ஆம் ஆண்டு முதல் சர்வதேச சிறுவர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று 1991 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச முதியோர் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

ஒரு மனிதன் தன் வாழ்நாளில் பல பாத்திரங்களை ஏற்கிறான். முதலில் குழந்தை, பிறகு மாணவன், பின்னர் வாலிபப் பருவம். திருமண பந்தத்தில் இணைந்த பின்னர் குடும்பஸ்தன் ஆகிறான். காலச்சக்கரத்தின் சுழற்சியில் இறுதியில் உடல் நலிந்து முதுமையடைகிறான். மனித வாழ்க்கை இன்பம், துன்பம், சாதனைகள், சோதனைகள் நிறைந்த மாயையாக முடிவடைகிறது.

ஒவ்வொரு மனிதரதும் வாழ்வில் சிறுபராயம் என்பது மிகவும் இனிமையான காலமாகும். முதுமைக் காலம் என்பதும் வாழ்வின் பல்வேறு பரிமாணங்களை கடந்த ஓய்வு நிலைக் காலமாகும்.

சிறுவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஒரு நாட்டின் அல்லது சமூகத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் சமூக அச்சாணியாக இருப்பவர்கள். எனவே சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக அதிக ஆர்வம் செலுத்த வேண்டியது பெரியோரின் கடமையாகும்.

சிறுவர்கள் சகல உரிமைகளோடும் வாழ்வதற்கும் வளர்ச்சி பெறுவதற்குமான உரிமைகளைப் பெற்றுள்ளனர். சிறுவர்களினதும் முதியோர்களினதும் உரிமைகள், நலன்களில் அக்கறை கொண்டு அவர்களது பாதுகாப்பு வாழ்வியல் விடயங்களை முதன்மைப்படுத்தும் முகமாக புரிந்துணர்வையும், பொதுநிலைப்பாட்டையும் வலியுறுத்துவதற்காக பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

உலகமயமாக்கல் என்ற கோட்பாடுகள் எவ்வாறாக இருக்கின்ற போதிலும் நாடுகள், பிரதேசங்கள் சமூகங்கள் எதுவாக இருக்கின்ற போதிலும் மனிதவுரிமைகள் அடிப்படையில் அனைவரும் ஒரு கட்டமைப்புக்குள் அடங்குகின்றனர்.

இன்று உலக மக்கள் சனத்தொகையில் மூன்றிலொரு பகுதியினர் சிறுவர்களாவர். அதேபோன்று உலகளாவிய ரீதியிலான 60 கோடி முதியவர்கள் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையில் சுமார் 22 இலட்சம் முதியோர் உள்ளனர். மொத்த சனத்தொகையில் இது 13 சதவீதமாகும். சமூக உரிமை, தனியுரிமை, சுகாதார சமூக நலன்கள், வசதிகளை பெறும் உரிமை, ஆரம்பக் கல்வி தொடக்கம் போதிய அறிவுக்கான வாழ்க்கைக்குத் தேவையான கல்வியைப் பெறும் உரிமைகள் அனைத்து சிறுவருக்கும் உரித்தானதாகும்.

பொருளாதார சுரண்டல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் உரிமை, பாலியல் வல்லுறவுகளில் இருந்து பாதுகாக்கும் உரிமை, சித்திரவதைகள் மற்றும் குரூரமாக நடத்தப்படுதல் போன்ற தண்டனைகளில் இருந்து தம்மை தவிர்த்துக் கொள்ளும் உரிமை, சட்டரீதியான, சாதாரண வழக்கு விசாரணைக்குள்ள உரிமைகள் உள்ளிட்ட சுதந்திரத்திற்கும் பாதுகாப்புக்குமான அனைத்து உரிமைகளும் சிறுவர்களுக்கு உரித்தானவையாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிறுவர்களை தவறாக வழிநடத்தும் அனைத்துவித தவறுகளையும் உள்ளடக்குகின்றது. சிறுவர் மீதான துஷ்பிரயோகம் என்ற விடயமானது இன்று ஒட்டுமொத்த உலகையும் உலுக்கிக் கொண்டிருக்கும் பேராபத்தாக உள்ளது. சமூக கட்டமைப்புகள் அடிப்படையில் ஆண்பிள்ளைகளானாலும், பெண் பிள்ளைகளானாலும் சரி இன்று பெற்றோர் அவர்களது பிள்ளைகள் வளர வளர வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு வாழ்வதாகவே உணர்கின்றனர்.

அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக குடும்பங்கள் ரீதியாகவும் சமூகங்கள் ரீதியாகவும் ஏற்படும் சூழ்நிலைகளால் சிறுவர்கள் உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் அதிகமாக பாதிப்புக்குள்ளாகின்றனர். இதில் மிகவும் அதிகமான கொடுமையாகக் கருதப்படுவது யாதெனில், விபரமறியா சிறுவர், சிறுமியரை வயதில் மூத்தவர்கள் தமது பாலியல் வக்கிரங்களுக்கு இரையாக்குவதாகும். சிறுவர்களை வேலைக்கமர்த்தும் அநேகமான சந்தர்ப்பங்களில் அவர்களது உரிமைகளும் மறுக்கப்படுகின்றமை வேதனைக்குரியது மட்டுமல்லாமல், தண்டனைக்குரிய பாரிய குற்றமுமாகும்.

நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள், ஆபாச மற்றும் கொடூர காட்சிகளைக் கொண்ட சினிமா, போதை மற்றும் புகைத்தல், ஏனைய சமூக காரணிகள் காரணமாக சிறுவர்கள் பல்வேறு பாதிப்புகளையும் சவால்களையும் எதிர் நோக்குகின்றனர்.

தாய், தந்தையர் வெளிநாடுகளில் வேலை செய்தால் அல்லது சிறைவாசம் அனுபவித்தால் அல்லது பெற்றோர் விவாகரத்து பெற்றால் அவர்களது பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. பலவிதமான ஆபத்துகள் நிறைந்த இடங்களில் சிறுவரின் பாதுகாப்பு உத்தரவாதமில்லாமல் போகின்றது. பொலிசார், நீதிமன்றம் சார்ந்த அமைப்புகள், சிறுவர் நலன்கள் தொடர்பான பாதுகாப்பு அதிகாரசபை, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், சமூக ஆர்வலர்கள் எவ்வளவுதான் சட்டதிட்டங்களை, சுற்று நிருபங்களை, அறிவிப்புகளை பகிரங்கப்படுத்துகின்ற போதிலும் தெருவோரங்களில் பிச்சையெடுப்பதற்காக பயன்படுத்தப்படும் சிறுவர்களை பார்க்கும் போது வேதனை வருகின்றது.

சிறுவர்கள் உடல்ரீதியாக, பாலியல் ரீதியாக, உளரீதியாகவும் துன்புறுத்தப்படுவதை முழுமையாக தடுப்பதற்காக ஐ.நா. சிறுவர் உரிமை சாசனத்தின் புதிய வழிகாட்டல்கள் அடிப்படையில் சிறுவர் மீதான வன்முறைகளுக்கு எதிரான தண்டனைச்சட்டக் கோவையை பலப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தை வலியுறுத்த வேண்டும்.

சிறுவர்களால் எப்போதும் தங்களை வெளிப்படுத்த முடிவதில்லை. நலிவுற்றவர்களாக மற்றும் தீங்கு விளைவிக்கப்படும் அல்லது சுரண்டப்படும் அபாயத்தில் உள்ளவர்களை மீட்க வேண்டும். கட்டாய வேலைக்கமர்த்தல், உடல், பாலியல் மற்றும் உள உணர்ச்சிரீதியான பாதிப்புகளுக்கு எதிராக அதிகார பதவிகளில் இருப்பவர்கள், பெற்றோர், ஆசிரியர், மதத்தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், ஊடகவியலாளர்கள் இணைந்து பணியாற்ற வேண்டும்.

சிறுவர்கள் மட்டுமல்ல முதியோர்கள் மற்றும் மகளிர் வலுவூட்டல் தொடர்பான அமைச்சுக்கள் அரச திணைக்களங்கள், தன்னார்வ அமைப்புகள் இணைந்து மலையகம், வடக்கு, கிழக்கு உள்ளிட்ட நாட்டின் சகல மாகாணங்கள், மாவட்டங்கள், பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம சேவகர் வட்டாரம் வரை விழிப்புணர்வு மாதத்தை திட்டமிட்டு, நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

முதியோரின் பாதுகாப்பு, உணவு உறைவிடம் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், சமூகம் மற்றும் சட்ட ரீதியான பாதுகாப்பளித்தல், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரத்தை முதியோர் அனுபவிக்க வழிவகை செய்தல் போன்ற முதியோர் நலன்கள் தொடர்பான விடயங்களிலும் கவனம் செலுத்துதல் அவசியம்.



தெய்வானை சிவலிங்கம் JP
(மனிதவுரிமை ஆர்வலர்)

# எதிர்காலத்தை நோக்கிய பாதையில் மலையகம்

சடப் பொருட்களில் பொதிந்துள்ள வேதியல், பௌதிக இயக்கங்களால் மாற்றமும், வளர்ச்சியும் ஏற்படுவது போன்றே சமூகத்திலும் அதன் உள், வெளி கட்டுமான இயக்கங்களால் மாற்றமும், வளர்ச்சியும் ஏற்படுகின்றது. உற்பத்தி சக்திகள், அதனூடாக உருவாகும். உறவுகள்ஆகியவற்றின் இயக்கத்தால் இவை ஏற்படுகின்றன. இயக்கவியல் எனக் கூறப்படும் இவ்விஞ்ஞான உண்மையின்படி இவை தவிர்க்கப்பட முடியாதவை.

இந்த உண்மையின்படி மலையகத்தின் எதிர்காலம் பிரகாசம் குன்றியதாக இருக்காது. மலையகச் சமூகத்தின் கட்டமைப்பில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. மலையகச் சமூகம் பெரும்பான்மை பாட்டாளிகளையும், அடுத்ததாக வளர்நிலையிலுள்ள மத்திய வர்க்கத்தினரையும், அதற்கடுத்து சிறு வர்த்தகர்களையும், பெரும் வணிகர்களையும், புறத்தில் உள்ள விளிம்பு நிலையோரையும் கொண்டது.

மொழியும், சமயமும் இவர்களை பிணைப்பனவாகவும், தொழிலும், வாழ்நிலையும் வேறுபடுத்துவனவாகவும் இருக்கின்றன. இம்மக்களை மலையகத் தமிழரெனவா, இந்திய வம்சாவளித் தமிழரெனவா என்று இனங்காணும் குடுமிச்சண்டை இவ்வேறுபட்ட நிலைப்பாட்டினைக் காட்டுகின்றது. இச்சமூகத்தில் இருந்து பொருளாதார மேம்பாடு அடைந்து,வெளியேறி சமூக உயர்வாக்கம் பெற்றோர் மற்ற பிரிவினரோடு இனங்காட்ட அசூசைப் படுவதனை உணர்த்துவதாக வேலண்டைன் டேனியல் எனும் ஆய்வாளர் கூறியுள்ளார். இது பகை முரண்பாட்டு நிலைக்கு வளர்ச்சி அடையவில்லை.

மலையக மக்களுக்கு இன, வர்க்கம் எனும் இரு அடையாளங்கள் இருக்கின்றன. இன அடையாளம் தொன்மைசார் பெருமித முதுசம். இதற்கு உள்நாட்டு தமிழர், தமிழ்நாட்டார், புலம்பெயர் தமிழர் ஆகியோர் ஆதரவு சக்திகளாவர். வர்க்க அடையாளம் தொழிலும், வாழ்நிலையும் சார்ந்தது. இதற்கு இந்த நாட்டு பாட்டாளி வர்க்கத்தாரும், உலகளாவிய பாட்டாளிகளும் ஆதரவுச் சக்திகள். எதிர்காலத்தில் மலையக மக்கள் இவ்விரு அடிப்படைகளிலும் எதிர்கொள்ளக்கூடிய சவால்களுக்கு ஆதரவாக இச் சக்திகள் இருக்கின்றன.

மலையக மக்களின் எதிர்காலம் இந்நாட்டின் மொத்த மக்களின் எதிர்காலத்தோடு சம்பந்தப்பட்டது. இலங்கையர் ஆள்வோர் விரித்த மாயைகளை படிப்படியாக விளங்கிக்கொள்ளும் கட்டத்திற்கு வளர்த்துள்ளனர். இலங்கையின் வரலாறு இதற்குச் சான்று. விஜயனும், கூட்டாளிகளும் நாட்டுக்குள் வந்து, குடியேற்றங்களை அமைத்து, மன்னர் ஆட்சியை ஆரம்பித்த காலம் முதல் மக்கள் ஒரு பிரிவினராகவும், அவர்களை ஆண்ட அரசர்களும், அவர்களை சார்ந்த மேட்டுக் குடியினரும் வேறொரு பிரிவினராகவும் இருந்து வந்துள்ளனர். நிலம், நீர் உட்பட அனைத்து இயற்கை வளங்களும் அரசர்களுக்கும், அவர்களை சார்ந்த உயர் குடியினருக்குமே சொந்தம். பாமரர்கள் அவர்கள் கொடுத்ததை அல்லது கிடைத்ததைக் கொண்டு வாழ்க்கையை ஒட்டினர். இயற்கைச் சீற்றங்களின் போது அவர்கள் பஞ்சத்தால் தவித்தனர். இதுவே அவர்களது வாழ்க்கை நியதி என்று நம்ப வைக்கப்பட்டது. இந்த பாவச் செயலுக்கு வெகுமதியாக அவர்களுக்கு சகல வசதிகளையும் அரசர்கள் செய்து பராமரித்தனர்.

1505, 1658, 1796 ஆண்டுகளில் ஐரோப்பியர் முதலில் கரையோரப் பகுதிகளையும், பின்னர் முழு இலங்கையையும் கைப்பற்றி ஆண்ட காலத்திலும் இவ் இருள் சூழ் வாழ்க்கை நீடித்தது. என்ற போதிலும் மேலத்தேயரின் வருகையோடு மேம்போக்கான சில மாற்றங்கள் ஏற்பட்டன. கிறித்தவமத அறிமுகம்,1789 இன் பிரெஞ்சுப் புரட்சி, 1848ஆம் ஆண்டின் பொதுவுடமைப் பிரகடனம், அதனை அடுத்து ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் ஏற்பட்ட புரட்சிகள் ஆகியவற்றின் அதிர்வுகள் இங்கும் ஏற்படத்தொடங்கின.

இவ்வாறான மக்கள் நலன்சார்/மீட்சி பற்றிய அதிர்வுகளை மக்கள் உணர்வதற்கு முன்னர் ஆளும் வர்க்கத்தார் விளங்கிக்கொண்டு, அவற்றை முறியடிக்கும் வியூகங்களை வகுக்கத் தொடங்கினர்.

பொதுவாக நாட்டு நிலைமையினைப் போன்றே மலையக நிலைமையும் கொதிநிலையில் இருக்கின்றது.தோட்டங்கள் தேச உடமை ஆக்கப்பட்டதன் பின்னர் அதன் பரப்பளவும், உற்பத்தியின் அளவும் வீழ்ச்சி அடையத்தொடங்கின. ஆளும் கட்சி ஆதரவாளர்களைத் திருப்திப் படுத்துவதற்காக தேயிலைக் காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டமை, மகாவலி, மேல், கீழ் கொத்மலை நீர்ப்பாசனத்திட்டங்கள், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களை புறக்கணித்து பாதிக்கப்படாத சிங்கள மக்களுக்கு தோட்டக் காணிகள் கொடுக்கப்பட்டமை போன்ற செயல்களால் தோட்டங்களின் அளவு குறைந்தது. தோட்டங்கள் முறையாக பராமரிக்கப் படாததாலும், மீள் நடுகை செய்யப்படாதலும் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தது. ஆட்சியாளர்களின் உறவினர்கள், ஆதரவாளர்கள் என தோட்ட முகாமைத்துவ அறிவும், அனுபவமும் அற்றோரிடம் முகாமைத்து பொறுப்பினைக் கொடுத்ததால் பராமரிப்பும், உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. வீழ்ச்சி சீர் செய்யப்பட முடியாத கட்டத்தில் மீண்டும் தனியார் கம்பெனிகளிடம் கொடுக்கப் பட்டது. குத்தகைக்காரர்களான அவர்கள் கிடைத்ததை சுருட்டி தோட்டங்களை காடுகளாக்கியுள்ளனர்.

அரசுடமை ஆக்கப்பட்டவுடன் ஜனவசம, உசவசம, நட்சா போன்ற முகாமைத்துவ அமைப்புகளை ஏற்படுத்தி, ஆட்சியாளர்களின் ஆதரவாளர்களுக்கு காணிகள் கொடுக்கப்பட்டன. கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்டதன் பின்னரும் இது தொடர்வதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. பசளை இடல், பீடைக் கொல்லி பாவனை ஆகிவற்றை நிறுத்தி, பயிர்ப் பாதுகாப்பு செய்யப்படாமல் தோட்டங்கள் பாழடைந்துள்ளன, என்ற போதிலும் வஞ்சகமற்ற தொழிலார்களின் உழைப்பால் வருமானம் பாதிப்படையாமல் உள்ளது. அதே போன்றே உற்பத்தியில் தளம்பல்கள் ஏற்படுகின்ற போதிலும் தேயிலைத் துறை முழுமையாக முடங்கி விடவுமில்லை, கம்பெனிகளின் லாபமும் பதிப்படையவில்லை.



காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் பின்னர் சிறு தோட்டங்கள் என்ற பரப்பளவில் சிறியதான தோட்டங்கள் முன்னிலைக்கு வந்தன. பெரும்பாலும் பெரும்பான்மையினருக்குச் சொந்தமான இத்தோட்டங்களுக்கு அரசாங்கத்தின் அனுசரணையும், தாராள உதவிகளும் கிடக்கின்றன. அதனால் அவை வளமும், உற்பத்தித்திறனும் கூடியவையாக இருக்கின்றன.

தோட்டத்துறை தேய்ந்துவரும் இன்றைய கட்டத்தில் தொழிற்சங்க இயக்கமும் தேய்ந்து வருகின்றது. 1940 களில் துடிப்போடு எழுச்சியுற்ற தொழிற்சங்க இயக்கம் வீரியம் குன்றியுள்ளது. ஆளும் வர்க்கத்தின் சூழ்ச்சிகள், அதனோடு ஒட்டிய சோரம்போன, சுயநல வலதுசாரி தொழிற்சங்களினால் இந்நிலை ஏற்பட்டுள்ளது. தொழிற்சங்க போராட்டங்களின் மூலமாக பெற்ற நலன்கள் ஏராளம். இன்று இக்கருவி இல்லாமல் உரிமைகளை பெறவும், பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒரு வகையில் இது சாதகமானது. தரகர்கள் இன்றி சுயமாக போராடும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. சுய எழுச்சிப் போராட்ட செல்நறி தேசிய, மலையக மட்டத்தில் ஆரம்பமாகத் தொடங்கியுள்ளது. இதற்கேற்ப தொழிலார்களின் போராட்ட வடிவம் மாற்றம் பெறும்.

ஆரம்பத்தில் முதலாளிகளால் நிர்ணயிக்கப்பட்ட கூலி பின்னர் சம்பள நிர்ணய சபையால் நிர்ணயிக்கப்பட்டு, கம்பனிகள் மீண்டும் தோட்டத்துறையை குத்தகைக்கு பெற்றதன் பின்னர் கூட்டு ஒப்பத்தம் என்ற பொறிமுறையால் நிர்ணயிக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தினை கிரகிப்பதனை மேவிய கையூட்டல்கள் பற்றிய அக்கறையின் காரணத்தால், பெறக்கூடிய நலன்கள் இல்லாமல் போயின.

பீ.மரியதாஸ்

# மாத்தளை சோமு: மலையகத்தின் திரிவேணி சங்கமம்

மனித ஜீவிகளாகவே கருதப்படாமல், மிக இழிவாக நடத்தப்பட்டு, மலையக மக்களின் அடிப்படை உரிமைகள் அனைத்துமே நிராகரிக்கப்பட்டு, அவர்கள் இன வன்முறைக்கும் ஆளாக்கப்பட்ட இன அவலத்தைக் கண்டும் கேட்டும் அனுபவித்தும் வளர்ந்த தலைமுறையின் குரலாக மாத்தளை சோமு வெளிவருகிறார். நாடற்றவர்கள் உருவான அவலத்தை, ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் 'ஒப்பாரிக் கோச்சியில்' அந்த மக்கள் நாடு கடத்தப்பட்ட கொடூரத்தைக் கண்கொண்டு பார்த்தவர். தமிழகத்தில் திருச்சியில், துறையூரில் தாயகம் திரும்பிய மலையகத் தமிழரின் இன்னல்களை, ஏக்கங்களை நெருங்கி நின்று பார்த்தவர். தமிழகத்தின் வாழ்வியலை அந்த தேசத்தின் அங்கமாகவே நின்று தரிசித்தவர். அவுஸ்திரேலியக் கண்டத்தில் அவர் தரித்துநின்றபோது, புலம்பெயர்ந்த ஈழத்தமிழ் மக்களின் ஓர் கூறாகத் தன்னை அடையாளம் காண்கிறார். நாடுகள், தேசங்கள் என்ற எல்லைக்கோடுகளின் வெறுமையை அவதானிக்கிறார். ஒவ்வொரு வாசலிலும் விதம் விதமான பூசல்கள், பேதங்கள், முரண்பாடுகள் பொசிவதைக் கூர்ந்து நோக்குகிறார்.

தினபதி, தினகரன், வீரகேசரி, தினக்குரல், சிரித்திரன்,சிந்தாமணி, தீபம், குங்குமம், இந்தியா டுடே, அக்கினிக்குஞ்சு, கலைமகள், தினமணி சுடர், ஆனந்தவிகடன், தினமணி கதிர், பாரிஸ் ஈழநாடு, தாமரை, புதினம், கல்கி, ஓம் சக்தி, இனிய உதயம், தீராநதி, காமதேனு என்று இவ்வளவு பத்திரிகை களில் தமது எழுத்தைப் பதித்த வேறு ஒரு ஈழத்து எழுத்தாளரைச் சொல்வதற்கில்லை.

நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னால், 1979 இல், தமிழகத்தில், அண்ணாசாலையில் சென்னை மாவட்ட மத்திய நூலகக் கட்டடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இலக்கியக் கூட்டமொன்றில் ஈழத்தின் வட, கிழக்கு இலக்கிய முயற்சிகள், மலேசிய இலக்கியங்கள் பற்றியெல்லாம் பேசப்பட்ட போது, மலையக இலக்கியம் பற்றி எதுவுமே பேசப்படவில்லையே என்ற ஆதங்கத்தில், மலையக எழுத்துகள் நூலுருப்பெறவேண்டும் என்ற வேணவாவில், மறு ஆண்டிலேயே மலரன்பன், மாத்தளை வடிவேலன், மாத்தளை சோமு ஆகிய மூவரின் சிறுகதைகளைத் தொகுத்து, 'தோட்டக் காட்டினிலே' (1980) என்ற தலைப்பில் வெளிக்கொணர்ந்ததில் தனது செயலூக்கத்தைக் காட்டியவர் மாத்தளை சோமு.

இன்று மலையக இலக்கியம் பல பரிமாணங்களில் ஆழக்காலூன்றி, வேரூன்றி, கிளைபரப்பி செழித்து நிற்கின்றதெனில், அதற்கு நீர்வார்த்த மலையக மண்ணின் புதல்வர் அவர்.

மாத்தளை சோமுவின் கதைகளில் உலாவரும் முதியோர் தோட்டங்களில் ஓடாய் உழைத்துத் தேய்ந்தவர்கள். சிலர் துணை யாருமற்ற தனியர்களாக உழல்பவர்கள். சிலர் தங்களின் சொந்த மகன்மார்களாலேயே உதாசீனப்படுத்தப்பட்டு வீடு,வாசலை இழந்து வீதிகளுக்கு வருபவர்கள். மாத்தளை சோமுவின் ஆரம்ப எழுத்துகளில், 1969_ 1974 காலப்பகுதியில் எழுதப்பட்ட 10 கதைகளில் 6 கதைகளில் முதியோரே முக்கிய பாத்திரங்களாக வருகிறார்கள். 'ஒரு கதாபாத்திரத்தின் முடிவுறாத கதை' என்ற சிறுகதையில் மகனால் கைவிடப்பட்டு, சாப்பாட்டுக்கே வழியற்று நிற்கும் கிழவனின் பரிதாப நிலையை மாத்தளை சோமு நேர்த்தியாகக் கொண்டுவருகிறார். 'ஒரு தெருவின் கீதம்' என்ற கதையில் விழிப்புலன் இழந்த கிழவி, தனது கணவன் இறந்துபோனதை அறிந்து, 'கெழவன் செத்துப் போயிட்டானா? அப்போ நா இனி எப்படி வாழ்வேன்?' என்று புலம்புகிறாள். 'என்னாலே முடிஞ்ச மட்டும் ஒங்களக் காப்பாத்திரேன்' என்று கிழவியைக் காப்பாற்ற முன்வரும் ஒரு தாடிக்கார முதியவரை அறிமுகம் செய்கிறார் சோமு. எல்லாத் துர்ப்பாக்கிய சூழலிலும் எங்கோ மனிதாபிமானத்தின் கசிவு துலங்கத்தான் செய்கிறது என்பதைக் கோடி காட்டுகிறார்.

தோட்டங்களில் நிர்வாகப் பணிகளில் இருக்கும் கண்டக்டர்மார் போன்றோர் தொழிலாளர்களை இழிவாக நடத்தும் போக்கினை 'லயத்துப்பயல்' என்ற கதை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது. அதிகாரமும் சுரண்டலும் மலையகத் தமிழர் வாழ்வில் சகல தளங்களிலிருந்தும் செயற்படுவதை மாத்தளை சோமுவின் அனைத்துக்கதைகளுமே பிரதிபலிக்கின்றன. மலையகத்துச் சிறுவர்கள் நகர்ப்புறங்களில் வீட்டுவேலைகளில் ஈடுபடுத்தப்படும் நிலைமைகளில், சிறுவர்கள் வேதனையுறுவதையும் பெற்றோர் பணத்தையே குறியாகக் கருதிச் செயற்படுவதையும் 'பகல் நேரத்து நட்சத்திரங்கள்' கதை பேசுகிறது. இன்று தலைநகர் கொழும்பில் மலையகத்து இளம் பெண்கள் சித்திரவதைக்குள்ளாகி, கொலை செய்யப்படும் வரை குரூரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

1983 இன வன்முறையைத் தொடர்ந்து தமிழகம் சென்ற மாத்தளை சோமுவுக்கு தமிழகத்தின் வாழ்வியலில் தன்னையும் இணைத்துக் கொள்வதில் எந்தச் சிரமமும் இருந்திருக்கவில்லை. சோ.சிவபாதசுந்தரம், தர்மு சிவராம், பாலுமகேந்திரா, செ.கணேசலிங்கம் போன்றோர் தமிழகத்தையே தங்கள் வாழிடமாகத் தேர்ந்தனர். தமிழகத்தின் கலை, இலக்கியத்தில் ஆழ்ந்த தடங்களையும் விட்டுச் சென்றுள்ளனர்.

மாத்தளை சோமுவுக்கு திருச்சியில் அவரது பூர்வீகக் கிராமமான துறையூர் இன்றும் அவரை அடையாளம் கண்டுகொள்ளும் கிராமமே. அந்தத் தொடர்புகள் அவருக்கு உயிர்ப்புள்ளவை.



அவரது எழுத்து வாழ்க்கையிலும் ஜெயகாந்தனே அவருக்கு ஆதர்சமாக இருந்திருக்கிறார்.'கவிதைகள், பேட்டிகள், கட்டுரைகள் எழுத ஆரம்பித்த நான், சிறுகதை எழுத்தாளனாக ஆரம்பித்தது 1967ஆம் ஆண்டில். அதற்கு முழுக் காரண கர்த்தா ஜெயகாந்தன். அவருடைய சிறுகதைகளைப் படிக்க ஆரம்பித்த பின்னர்தான் நான் சிறுகதை எழுத ஆரம்பித்தேன். எழுத்து ஏன் எழுதப் படவேண்டும், எழுத்தின் மூலமாக இந்தச்சமுதாயத்துக்கு எதனை அடையாளம் காட்டவேண்டும் என்பதை எல்லாம் ஜெயகாந்தன் மூலமாகவே நான் படித்துக் கொண்டேன். பிறகு ஒவ்வொரு சிறுகதை எழுதும்போதும் மானசீகமாக ஜெயகாந்தனைத் துணையாகக் கொண்டே எழுதுவேன். சிலர் பிள்ளையார் சுழி போட்டுக்கொள்வதுபோல்! அவ்வாறு எழுதினால்தான் எனக்கொரு நிறைவு. அதனால்தான் போலும் எனது சிறுகதைகள் ஜெயகாந்தன் கதைபோல் இருப்பதாகச் சிலர் சொன்னார்கள்' என்று மாத்தளை சோமு 'அவன் ஒருவனல்ல' என்ற தனது சிறுகதைத் தொகுதிக்கு எழுதிய தன் முன்னுரையில் குறிக்கிறார்.

மாத்தளை, திருச்சி என்ற இடங்களைத் தாண்டி, அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்து, சிட்னியில் வாசம் கொண்ட காலப் பகுதியிலிருந்து சோமு எழுதிய கதைகள் வாழ்வின் புதிய தரிசனங்களை அவருக்கு உணர்த்தியிருக்கின்றன. புலம்பெயர் இலக்கியத்தின் முக்கிய கூறாக மாத்தளை சோமுவின் கதைகள் இலங்குகின்றன.

மலையகத்தைப் பின்புலமாககொண்டு எழுதப்பட்ட கதைகளுக்கு நிகராக, ஏறத்தாழ 40 கதைகளை புலம்பெயர் வாழ்வின் பின்னணியிலும் சோமு எழுதியிருக்கிறார். மலையகம், தமிழகம், புலம்பெயர் வாழ்வு என மூன்று புலங்களில் ஊற்றெடுக்கும் இலக்கியமாக, திரிவேணி சங்கமமாக மாத்தளை சோமுவின் எழுத்துகள் தமிழ் இலக்கியத்தில் தனிச் சிறப்பிடம் பெறுகின்றன.

மாத்தளை சோமுவின் புனைவுலகின் பெருஞ் சாதனையாக, அவரின் நூறு சிறுகதைகள் கொண்ட இத்தொகுப்பு கொண்டாடப்படும் என்பதில் ஐயமில்லை.

மு. நித்தியானந்தன்




## பெறுமதியானவர்கள்



இணுவில் வாகீசன்

பெறுமதிகள் பண்டங்களல்ல
பெறுமதிகள் நம் பிள்ளைகள்
பெறுமதியானவர்கள் இவர்கள்
பெறுமதியென்ற நம் வீட்டின்
பெறுமதிகளை விட உயர்ந்தவர்கள்
பெறுமதியென பாதுகாப்போம்
பெறுமதிகளென சேமிப்போம்
பெற்ற பேறென வளர்ப்போம்
பெறுமதியான உலகில் நாளை
பெறுமதியான தலைவர்கள்
பெறுமதியானவர்கள் சிறுவர்கள்
பெரு மதி படைத்தவர்கள் இவர்கள்
பெறுமதிகளில்லை ஒப்பிட
பெரு மதிகளில்லை இணையாக
பெற்ற பேறென காப்போம் வாரீர்



## ஆசிரியம்

ஆசிரியை சுதேசினி தினேசன்
கைதடி முத்துகுமாரசுவாமி மகா வித்தியாலயம்



சிறு வயது ஏடு முதல்
நவீன உலகு
வரை
அர்ப்பணிப்போடு
கற்றுத் தர
ஆசிரியர்
இல்லை எனில்
ஆறடி மனிதனும்
ஐந்தறிவுடனே
அகிலத்தில்
உலாவுவான்.....
குற்றம் களைய
மனிதனாய்
உனையாக்க
அர்ப்பணிப்போடு
உரிமையாய்
தண்டிக்க
ஆசிரியர்
இல்லை எனில்
விரல்கள்
நடுவே பேனாவின்
பதில்
கம்பிகள் எண்ணியே
அகிலத்தில்
உலாவுவாய்
சபை நடுவே
உன் குரல்
ஓங்கி
உன் கைகள்
பலப்பட
அனைவரும் மதிக்கும்
ஓர் இடத்தில்
உன்னை ஏற்றி விட
அர்ப்பணிப்போடு
ஒளியேற்ற
ஆசிரியர்
இல்லை எனில்
சபை நடுவே
கைகளில்
விலங்குடனே
நீ நகர்வாய்
எதிர்கால தூண்களே
வாழ்க்கை வாழ்வதற்கே
வாழ்ந்திடு இன்றிலிருந்தாவது
ஆசிரியம் போற்றி



## எதைப் பற்றி எழுத

ஷஹாமாஸனீர்
சீனங்கோட்டை

காலை பொழுதினில்
கவிதை கிறுக்க நினைத்து
காகிதத்தையும் பேனாவையும்
கையில் எடுத்தேன்
என்னவென்று எழுதுவது
எதைப்பற்றி எழுதுவது
எண்ணங்கள் அலைபாய
எழுத எத்தனித்தேன்
என்னைப் பற்றி எழுதவா
உன்னைப் பற்றி எழுதவா
என்னையும் உன்னையும் படைத்த
எம்மிறைவன் பற்றி எழுதவா
அருளாக அனுப்பப்பட்ட
அல்குர்ஆன் பற்றி எழுதவா
அருள் மறையை கற்றுத்தந்த
அண்ணல் நபி பற்றி எழுதவா
உயர்திணையில் எழுதவா
அஃறிணையில் எழுதவா
ஐந்தறிவு பற்றி எழுதவா
ஆறறிவு பற்றி எழுதவா
ஐம்பொறி பற்றி எழுதவா
ஐம்பெரும் காப்பியங்கள் பற்றி எழுதவா
பஞ்சபூதங்களைப் பற்றி எழுதவா
பஞ்சபாண்டவர்கள் பற்றி எழுதவா
வலை வீசி வசியம் செய்யும்
வலைத்தளங்களைப் பற்றி எழுதவா
வானளவில் உயர்ந்திருக்கும்
வண்ண தாமரை கோபுரம் பற்றி எழுதவா
தொல்லை தரும்
தொலைபேசி பற்றி எழுதவா
மொழிகளிலே சிறந்த மொழி
தமிழ் மொழி பற்றி எழுதவா
வரண்ட பூமிதனில் மழை பெய்து
வெள்ளம் பெருகுவதை பற்றி எழுதவா
வரட்சி நிமித்தம் நித்தம் இறக்கும்
உயிரினங்கள் பற்றி எழுதவா
தாய் பற்றி எழுதவா இல்லை
சேய் பற்றி எழுதவா
வனம் பற்றி எழுதவா இல்லை
வானம் பற்றி எழுதவா
படைத்தவன் பற்றி எழுதவா
படைப்பினங்கள் பற்றி எழுதவா
பாய்ந்து ஓடும் நதி பற்றி எழுதவா
பாராமல் போகும் காதலியை பற்றி எழுதவா
இயற்கை பற்றி எழுதவா
இயந்திரங்கள் பற்றி எழுதவா
இயக்கும் மனிதனைப் பற்றி எழுதவா
இவ்வையகம் பற்றி எழுதவா
இளைஞர்களின்
இன்றைய நிலை பற்றி எழுதவா
இல்லங்களில் இன்னல் படும்
முதியவர்களின் நிலை பற்றி எழுதவா
போர் தொடுத்த
மன்னர்களைப் பற்றி எழுதவா
பெயர் போன
மகாராஜாக்கள் பற்றி எழுதவா
கம்பன் பாடிய
கவி பற்றி எழுதவா
கவிக்கோ அப்துல் ரஹ்மானின்
கவிப்புலமை பற்றி எழுதவா
கார்மேகம் பொழியும்
காதல் பற்றி எழுதவா
காகத்தினதும் குயிலினதும்
கதை பற்றி எழுதவா
பணம் பற்றி எழுதவா
மனம் பற்றி எழுதவா
போதையில் பாதை மாறிப்போன
பேதைகள் பற்றி எழுதவா
அரசியல் அரசியல்வாதிகள்
ஆட்சி அதிகாரம் அராஜகம்
பாசம் நேசம் வேஷம் தேசம்
இதில் எதை பற்றி எழுத
நிலம் நிறம் நீதி நேர்மை
ஒலி ஒளி வலி வழி
அலை கலை மலை மாலை
இதில் எதைப் பற்றி எழுத
வைத்த பேனாவின்
மை கூட ஊறவில்லை
காலை போய்
வீட்டுவேலை தொடங்கிவிட்டது
எழுத நினைத்த எனக்கு
எதைப்பற்றி எழுதவென்று தெரியவில்லை
தெரிந்த நீங்கள்
தெரிவித்துச் சென்றால்
தெவிட்டா இன்பம்அது





## மலர் காய்க்கும் தீ

தழிழ்க்கீரன்

திருமகள் வடிவாய்த்
திகழும் பெண்ணின்
கருவை அறுக்கும்
கயவர் கூட்டம்
பருவுடல் விரும்பிப்
பலங்கொண்டே அவளின்
உருவைக் குலைக்கும்
உம்மர் கூட்டம்
பள்ளி போனாலும்
பணிக்குப் போனாலும்
பள்ளிகொள்ளவே பாங்காய்
அழைக்கும் கூட்டம்
அழகிய மலரின்
அங்கம் சிதைக்கும்
ஆண்மை அற்ற
ஆடவர் கூட்டம்
அகில சக்தியை
அற்பமாய் எண்ணி
ஆடை கொள்வர்
அசிங்கம் செய்வர்
பெண்ணை வெறும்
போகமாய் எண்ணிப்
போதை கொள்வர்
பொசுக்கி விடுவர்
துகில் உரித்திடும்
துச்சாதனர் பலருண்டு
அவர்கள் பாரதம்
சொல்லி மாளாது
சதி செய்திடும்
சகுனிகளும் உண்டு
சந்தைக்கு வருவதில்லை
அவர்களின் சரித்திரங்கள்
வெப்பக் கனலைக்
கக்கும் தீ
வேதனை தீர்க்குமோ?
மென்கை நீட்டுமோ?
மலர் காய்க்கும்
மானமற்ற தீ
வாடுகின்ற மலரதின்
மாதுன்பம் நீக்குமோ?

## ஆசிரிய தீபங்கள்

கவிஞர் எஸ். ரபீக்

தாயிடத்தில்தாய்ப்பால் அருந்தி
முகம் மலரும் குழந்தை
ஆசிரியரிடத்தில்
அறிவுப்பால் அருந்தி
அகமகிழ்கிறது.

ஆசிரியர்கள்
மண்ணில் நடக்கும்
மாணவ நடைவண்டிகளுக்கு
விண்ணில் பறக்கச்
சிறகுகள் தருகிறார்கள்.

அழுது அடம்பிடிக்கும்
சின்னஞ் சிறுசுகளுக்கு
சமூகத்தேரின்
வடம் பிடிக்கக்
கற்றுத் தருகிறார்கள்.

ஊரார் பிள்ளை என்று
எட்டி நில்லாமல்
தம் பிள்ளை என எண்ணி
ஒட்டி உறவாடி
கட்டித் தழுவுகிறார்கள்.

அவர்களின் பாசத்திற்கு
ஏது எல்லை?
அவர்கள்
வாசம் போகாத முல்லை.

அவர்களின்
வெண்கட்டிகளின்
வெள்ளை எழுத்துக்கள்
'கறுப்பு' நிற
தலை எழுத்துக்களைக் கூட
மாற்றி எழுதிவிடுகின்றன.

நமது வாழ்வில்
மறக்க முடியாத
வசந்த காலம்
வகுப்பறைக் காலம்தான்.

வகுப்பறைப் பாடங்கள் நம்
வாழ்க்கைப் படகுகளின்
வளமான துடுப்புகள்.

அந்த
மகத்தான மாலுமிகளால்தான்
நம் இலட்சியக் கப்பல்கள்
உரிய 'துறை'முகத்தை
உரிய வேளையில்
வந்தடைகின்றன.

காலங்கள் கடந்தாலும்
கடல்கடந்து சென்றாலும்
நம் இதய வானத்தில்
அவர்களின்
நினைவு மேகங்கள்
ஊர்வலம் வருகின்றன.

என்றாலும்
இறுதியாய்
இரண்டொரு கேள்விகள்...

பள்ளி நாட்களில்
நாள் தோறும்
நம் நலம் நாடியவர்கள்
அவர்கள்.

நம்முடைய
பல வணக்கங்களைப்
பார்த்தவர்கள் அவர்கள்.

நம்
கண்ணீரைத் துடைத்த
கரங்களின்
சொந்தக்காரர்கள்
அவர்கள்.

வாழ்வின் அந்திப் பொழுதில்
அவர்கள் வாடிநிற்கும் வேளையில்
ஒரு முறையேனும்
அவர்களின்
நலம் நாடுகிறோமா?

ஒரு வணக்கமேனும்
சொல்கிறோமா?
அவர்களின்
கண்ணீரின் ஒரு
துளியையேனும் துடைக்கிறோமா?

## பாரம்பரியக் கலை

கவிச்சுடர் ஏ எம் கஸ்புள்ளா

மானம் காத்திடும் சீனடி
மகுடம் சூடிடும் சீனடி
நானும் நீயும் பழகலாம்
நமது பாரம்பரியம் காக்கலாம்.
உடலுக்கு ஆரோக்கியம் தந்திடும்
உணர்வுகள் புத்துணர்ச்சி கொண்டிடும்
திடமாக உடலிங்கு தேறிடும்
தினந்தோறும் சீனடி போடலாம்.
பன்னிரண்டு பிரிவுகள் அதிலுண்டு
பயின்றிட உறுதிமொழியும் உண்டு
வீண்சண்டை வம்புக்கு போகேனெனும்
விதிகளைப்பேணி சீனடி பழகலாம்.
தனியாக குழுவாக விளையாடலாம்
தரமிக்க அண்ணாவியை நாடலாம்
பணிவாக குருவணக்கம் செய்தே,
படிமுறையாக சீனடி பயிலலாம்.
வளைந்து நெகிழ்ந்து விளையாடும்
வடிவமிகு கலை சீனடிதான்
நிலையாக கிழக்கு கிண்ணியாவின்
நிலமதனை பிறந்தகமாய் கொண்டதுதான்.
கூடிநின்று பலரும் பார்த்திடவே,
குதூகலம் தரும் விளையாட்டு
நாடி வந்து பயிலுங்கள்
நமது விளையாட்டு சீனடிதான்

## கனவாகிய கனடா விசா

வி.தீபன்ராஜ்

நானுஓயா கிளாரண்டன்
சில மனிதர்களின் வாழ்க்கை
காகிதத்தில் கிறுக்கப்பட்ட
ஓவியம் போல
முழுமையான ஓவியமாக்க
யாரும் விரும்புகிறார்கள்
ஏனென்றால்
அதை சரி செய்ய முயற்சிப்பது இல்லை
வேடிக்கை பார்ப்பதற்கு மட்டுமே
தூக்கம் வரும் முன்னே
உன் நினைவுகள் குறுக்கிட்டது
சூரியன் முந்திக்கொண்டதல்ல
கனவுகள் நிறைந்த விடியல்
சில கனவுகளை நிஜமென
எண்ணி மகிழ்வதும் நிஜங்களை
கனவாக்கிய வெளி நாட்டு வேலை
விசா என்ற போதையில் சிக்கிய
சிலரின் பணப் போதையால்
வாழ்கையை தேடி
ஓடிக்கொண்டிருக்கும்
சிலரின் ஆசை
கனவாகி போய் விட்டதே தோழா

## நான் உன்னை வாழ்த்திப் பாடுகிறேன்..

மக்கொனையூராள்

அழுதிருந்த இருவிழி கண்ணீர் துடைத்து
அகத்தினுள் அடைத்திட்ட எண்ணங்கள் எடுத்து
அழகாய் அவள் இன்று வண்ணங்கள் படைத்து
அரங்கேற்றுகிறாள் சுயமாய் அவளாக ரசித்து
தரமான பொழுதுகளுக்காய் எழுத்துக்களை வளைத்து
தனக்கான அடையாளம் அழகாக விதைத்து
ஆளுமைத் திறன்களால் சிறகுகள் விரித்து
ஆற்றல்களால் ஒளிர்கிறாள் தடைகளை உடைத்து
இதயத்தில் தூய்மையை நலமாக நுழைத்து
இலக்கோடு சரியான பாதைகள் வகுத்து
தீமைகளை அள்ளிப் புறந்தள்ளி எரித்து
தீபமாய் எழுகிறாள் அறியாமை இருள் கிழித்து
வீட்டோடு தரித்திருந்த நிலைமையை உடைத்து
வீணான கேளிக்கைக் கூத்துகள் தவிர்த்து
வீறுகொண்டெழுந்தவள் நம்பிக்கை விதைத்து
வீரநடை போடுகிறாள் எழுத்துக்களாய் உதித்து
அகப்பையை ஏந்துமிரு கரங்களைச் சேர்த்து
அவளும் தன்னினத்தின் மொழிகளைக் கோர்த்து
அவனியில் தடம் பதிக்கிறாள்
எழுத்துக்களால் ஈர்த்து
அவளுக்குப் பாடுவோம் நாமும் வாழ்த்து

## இரு உயிர்க் காதல்

தி. கிருஷன் புளியங்குளம், வவுனியா



பாதை தெரியாமலே பாவை உனைப்
பார்த்தேன் பாதி நிலவொளியில்
என் இதயம் தனை சேர்த்தேன்
காதல் என அறியாமலே
உன்னில் நான் எனைப் புதைத்தேன்
யாவும் மாறிச் செல்லுமென
மாற்றம் தனைக் கேட்டேன்
ஜீவன் அதில் மூழ்கிப் பின்னே
எழுகையிலே தெரிந்திருக்கும்
எது நியாமென்று புரிந்திருக்கும்
புதிதாக புதிர் போடும் புரியாத
புதிராக உனைக் கண்ட
நொடிப்பொழுது நியாமென நினைக்கவில்லை
நிழலென்றும் தோன்றவில்லை
வழி கண்ட பின் நானும் ஒரு
போதும் அறியவில்லை எதுவென்று
கேட்கவில்லை முழுக்கதையாக
இதை கேட்க எதுவென்று
என் மனங்கேட்க வாழ்வொன்று
வாழ இங்கு நெடுந்தூரப் பயணம்
செய்து உயிர் இரண்டு ஒன்றாக
கலந்ததுவே



# சிங்கரின் விறுவிறுப்பான ஸ்மார்ட்ஃபோன் தெரிவுகள்




இலங்கையில் Honor ஸ்மார்ட் ஃபோன்களின் பிரத்தியேக விநியோகத்தராக நியமிக்கப்பட்டுள்ள சிங்கர், புதிய Honor ஸ்மார்ட்ஃபோன் தெரிவுகளை இலங்கையில் அறிமுகம் செய்துள்ளது. இதனூடாக வாடிக்கையாளர்களுக்கு சகாயமான, நவீன தொழில்நுட்பத்திலமைந்த, அதிகளவு எதிர்பார்க்கப்பட்ட Honor ஸ்மார்ட்ஃபோன்கள் வழங்கப்பட்டுள்ளன.

சீனாவின் முதல் தர அன்ட்ரொயிட்ஸ்மார்ட்ஃபோன்உற்பத்தியாளரிடமிருந்து, ஸ்மார்ட்ஃபோன் புத்தாக்கம் வெளிப்படுத்தப்பட்டு, புதிய Honor 90 அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள நடுத்தர அளவிலான ஸ்மார்ட்ஃபோன் பாவனையாளர்களின் மொபைல் அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இந்த தொலைபேசி வகை அமைந்திருக்கும். ரூ. 149,999 எனும் வகையில் Honor 90 தெரிவு அறிமுகத்துடன், இலங்கையில் இந்த வகை ஸ்மார்ட்ஃபோன் தெரிவுகள் உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

H90 இன் பிரதான உள்ளம்சமாக, அதன் மூன்று – லென்ஸ் பின்புற கமரா கட்டமைப்பு அமைந்துள்ளது. இதில் 200megapixel பிரதான உணரி காணப்படுகின்றது. நவீன கமரா கட்டமைப்பினூடாக, பாவனையாளர்களுக்கு காட்சியமைப்புகளை தெளிவாக பதிவு செய்து கொள்ள முடியும். தெட்டத் தெளிவான வீடியோ அழைப்புகள் மற்றும் எடுப்பான செல்ஃபிகளுக்கு Honor 90 இல் 50 மெகாபிக்சல் முன்புற கமரா காணப்படுகின்றது. இணைப்பில் இருப்பதற்கும், நினைவிலிருக்கும் தருணங்களை பகிர்ந்து கொள்வதற்கும் இது உதவியாக அமைந்திருக்கும்.

# பிரிட்டிஷ் கவுன்சில் இலங்கையில் அறிமுகப்படுத்தும் One Skill Retake




பிரிட்டிஷ் கவுன்சில் IELTS தேர்வுக்கு தோற்றுவோர் தாம் எதிர்பார்த்த பெறுபேறுகளை எய்தாதபட்சத்தில், மீண்டும் முழுப் பரீட்சைக்கு தோற்ற வேண்டிய தேவையை இல்லாமல் செய்யும் புதிய உள்ளம்சத்தை அறிமுகம் செய்துள்ளது. One Skill Retake என்பதனூடாக பரீட்சார்த்திக்கு, IELTS பரீட்சையில் செவிமடுத்தல், வாசித்தல், எழுதுதல் அல்லது பேசுதல் (Listening, Reading, Writing, or Speaking) போன்றவற்றில் ஒரு பகுதிக்கு மாத்திரம் மீளத் தோற்றும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

சாதாரண IELTS பரீட்சையின் போது தோற்றுபவரின் திறன்களை இனங்காணும் முறை மற்றும் நேரம் போன்றன மாறாமல் இருக்கும் என்பதுடன், இதர திறன்களை பூர்த்தி செய்வதில் பரீட்சார்த்திகள் செலவிடும் நேரத்தை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

பிரிட்டிஷ் கவுன்சிலில் IELTS பணிப்பாளர் அன்ட்ரூ மெக்கென்சி கருத்துத் தெரிவிக்கையில், "One Skill Retake என்பது IELTS வாடிக்கையாளர்களின் கருத்துக்களை கேட்டறிந்ததன் பின்னர் உருவாக்கப்பட்டுள்ளது. சரியான தயார்ப்படுத்தல் மற்றும் ஆதரவுடன் எமது பரீட்சார்த்திகளுக்கு, பரீட்சை தினத்தில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதை நாம் அறிவோம்." என்றார்.

'எவ்வாறாயினும், One Skill Retake இனால், பரீட்சார்த்திகளுக்கு, தமது முதலாவது முயற்சியில் திருப்திகரமான வகையில் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியவில்லை என கருதும் ஒரு ஆங்கிலத் திறனை மாத்திரம் மீள பரிசோதிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனூடாக நேர்த்தியான தன்மை அதிகரிக்கப்பட்டுள்ளது என நாம் நம்புகின்றோம்." என்றார்.

"IELTS One Skill Retake ஐ ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்கள், விண்ணப்பதாரியின் தரத்தை குறைக்காமல், பிரவேச தேவைப்பாடுகளில் நெகிழ்ச்சித் தன்மையை வழங்க முடியும். இந்தத் திட்டம் தொடர்பில் IELTS பங்காளர்கள் பெருமை கொள்வதுடன், பரீட்சார்த்திகளுக்கு தமது முழுமையான திறனை எய்துவதற்கான எமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்வதாக அமைந்துள்ளது." என்றார்.

# Skill Force நான்காம் கட்ட நிகழ்வு வெற்றிகரமாக நுவரெலியாவில்




இலங்கையின் முன்னணி உருக்கு கம்பி உற்பத்தியாளரான MELWA நிறுவனத்தின் அனுசரணையுடனும் தெரண ஊடக வலையமைப்பின் ஊடக அனுசரணையுடனும் செயற்படுத்தப்படுகின்ற Skill Force தொழில் முறை வழிகாட்டுதல் வேலைத்திட்டத் தொடரின் புத்தம் புதிய திட்டம் அண்மையில் நுவரெலியா தொழில்பயிற்சி அதிகாரசபை வளாகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது.

இந் நிகழ்வில் நுவரெலியா மற்றும் அதை அண்டிய பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 3000 பேர் அளவில் கலந்துகொண்டனர். தமது கல்வி நடவடிக்கைகளை நிறைவு செய்ததை தொடர்ந்து என்ன தொழில் செய்யலாம் என்ற தீர்மானத்தை எடுக்கும் எதிர்பார்ப்பில் இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு மேற்படி Skill Force திட்டத்தின் மூலம் பெறுமதியான வழிகாட்டுதல்கள் கிடைக்கின்றன.

தேசிய தொழில்பயிற்சி அதிகார சபை நடாத்துகின்ற தொழில் பயிற்சி பாடநெறிகளுக்கு மேற்படி இளைஞர் யுவதிகளை ஆற்றுப்படுத்தி அவர்களுக்கு NVQ தகைமைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான வழிகாட்டுதல்களை Skill Force வேலைத்திட்டம் வழங்குகிறது.

உள்நாட்டு நிறுவனமான MELWA நிறுவனம் ஆற்றல் மிக்க இளம் தொழில்படையொன்றை இந் நாட்டு பொருளாதாரத்திற்கு சேர்க்கும் நோக்கத்துடன் இத் திட்டத்திற்கு பூரண அனுசரணை அளிக்கிறது. அதிக ஊதியத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில்களுக்கு செல்வதற்கு மேற்படி தொழில் தகைமை முதன்மை காரணமாக உள்ளது.

# NDB வங்கி கடன் அட்டை உரிமையாளர்களுக்கு Dufry – BIA srilankaவில் 15% தள்ளுபடி

பருவகாலத்தில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பயணச் சலுகைகளுடன் NDB மீண்டும் வந்துள்ளது. Dufry – BIA சலுகைகளை ஆரம்பித்து, NDB வங்கி கடன் அட்டைகள் வைத்திருப்பவர்களுக்கு சிறப்பு சலுகைகளை வழங்குவதற்காக NDB வங்கி Dufry BIA க்கு விரிவடைகிறது. இப்போது கடன் அட்டை வைத்திருப்பவர்கள் Dufry BIA இல் எல்லையற்ற சலுகைகள் மற்றும் விலைக்கழிவுகளை அனுபவிக்க முடியும்.

இலங்கை பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை மற்றும் புறப்பாடு முனையங்களில் அமைந்துள்ள Dufry BIA இல் அனைத்து விசேட விலைக்கழிவு அற்ற பொருட்களுக்கும் 15% தள்ளுபடி சலுகையானது,அனைத்து NDB கடன் அட்டைகளுக்கும் 2023 அக்டோபர் 31 வரை வழங்கப்படுகிறது.

$50க்கு மேல் செய்யப்படும் அனைத்து பரிவர்த்தனைகளுக்கும் இந்த 15% விலைக்கழிவு வழங்கப்படும்.

இலங்கையின் கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் உள்ள முதன்மை தீர்வையில்லா கடையான SRI LANKA DUTY FREE by Dufry ஆனது 'Dufry Shops Colombo Limited'ஆல் நிர்வகிக்கப்படுகிறது, இது சுவிட்சர்லாந்தின் பேசலை தலைமையிடமாகக் கொண்ட உலகின் முன்னணி வரி இல்லா பயண சில்லறை விற்பனையாளரான Dufry AG இன் ஒரு பகுதியாகும்.

# 2ஆவது தடவையாகவும் தங்க விருதை சுவீகரித்த Prime Lands



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனமான, Prime Lands, 2020 ஆம் ஆண்டில் முதன் முறையாக கூட்டாண்மை பிரிவில் தங்க விருதை சுவீகரித்திருந்தமையடுத்து, இரண்டாவது தடவையாகவும், அதன் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.primelands.lkக்கு, 13ஆவது BestWeb.lk 2023 போட்டியில் தங்க விருதை சுவீகரித்துள்ளது.

ஆகஸ்ட் 9ஆம் திகதி Imperial Monarch இல் கோலாகலமாக நடைபெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வில் இந்த விருது Prime Lands க்கு வழங்கப்பட்டது. இதில் முன்னணி டிஜிட்டல் புத்தாக்க செயற்பாட்டாளர்கள் மற்றும் தூர நோக்க செயற்பாட்டாளர்கள் ஒன்று கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொருளடக்கத்தின் புத்தாக்கத்திறன், கிராபிக் வடிவமைப்பின் தரம், கலையம்சம், தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் BestWeb.lk விருதுக்காக மீளாய்வு செய்யப்பட்டிருந்தது.

இந்த சாதனையினூடாக, Prime Land இன், டிஜிட்டல் மேம்படுத்தல் சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, இணையத்தளத்தின் வடிவமைப்பு மற்றும் செயற்பாடு மற்றும் உறுதியான இணைய பிரசன்னம் ஆகியன உறுதி செய்யப்பட்டுள்ளன. தொழில்நுட்பத்தினூடாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்தும் குழுமத்தின் வர்த்தக நாம நோக்கத்தை மேம்படுத்தும் வகையில் இந்த கௌரவிப்பு அமைந்திருப்பதுடன், இணையத்தளத்தினூடாக ஒப்பற்ற சொத்து விளக்கம், live chat ஊடாக உடனுக்குடன் உதவி மற்றும் மெய்நிகர் பயணங்கள் போன்றன வழங்கப்படுகின்றன. வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகள் குறித்து கவனம் செலுத்தப்படுவதுடன், தொழிற்துறையில் நியமங்களை நிர்ணயிப்பதாகவும் அமைந்துள்ளது.

# Clarivate South Asia கண்டுபிடிப்பு விருதை வென்றுள்ள MAS Holdings



ஆடைகள் மற்றும் ஜவுளி உற்பத்தியில் உலகளாவிய முன்னணி நிறுவனமான MAS Holdings, தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மதிப்புமிக்க Clarivate South Asia Innovation விருதை பெற்றுள்ளது. புத்தாக்கங்களில் தொடர்ந்து சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிக்கும் புகழ்பெற்ற உலக அறிவாற்றல் நிறுவனமான Clarivate, இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற மதிப்பிற்குரிய Innovation Forumஆல் இந்த விருது வழங்கப்பட்டது.

South Asia Innovation Awardsக்கான தேர்வு செயல்முறை Clarivateஇன் சிறந்த 100 Global Innovators என்ற வழிமுறையுடன் நெருக்கமாக இணைகிறது, இது உலகளாவிய கண்டுபிடிப்புத் தலைவர்களை அடையாளம் காண்பதற்கான அளவுகோலாகும். Derwent World Patents Index (DWPI) மற்றும் Derwent Patents Citation Index ஆகியவற்றின் தரவுகளின் அடிப்படையில், காப்புரிமை அளவு மற்றும் ஒவ்வொரு காப்புரிமை பெற்ற யோசனையின் (Ideas) புத்தாக்கத் திறனின் வலிமையையும் Clarivate மதிப்பீடு செய்கிறது.

MAS Holdingsஇன் பிரதம கண்டுபிடிப்பு அதிகாரி ரணில் விதாரண கூறுகையில், "Clarivate நிறுவனத்திடமிருந்து தெற்காசிய கண்டுபிடிப்பு விருதை மீண்டும் பெறுவது எமக்கு மிகுந்த உற்சாகத்தை அளிக்கிறது. இந்த தொடர்ச்சியான சாதனை, புத்தாக்கமான கண்டுபிடிப்புகளை வழங்குவதற்கும் உயர்தர அறிவுசார் சொத்துக்களின் (Intellectua; Property) கோப்புறையைப் பராமரிப்பதற்கும் MAS இன் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாக நிற்கிறது. புத்தாக்கத்துக்கான எங்கள் அர்ப்பணிப்பு வேறுபாட்டை உந்துவது மட்டுமல்லாமல் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் வெற்றிக்கும் பங்களிக்கிறது." என தெரிவித்தார்.

# SLT–MOBITEL இன் வாடிக்கையாளர் சேவை வாரம் 2023

SLTMOBITEL ஆனது 2023 ஒக்டோபர் 2ஆம் திகதி முதல் ஒக்டோபர் 6ஆம் திகதி வரை வாடிக்கையாளர் சேவை வாரம் 2023 ஐ கொண்டாடியது. தனது வாடிக்கையாளர்களுக்கு பல விறுவிறுப்பான சலுகைகளையும், சேமிப்புகளையும் இக்காலத்தில அது அறிமுகம் செய்தது, புதிய வாடிக்கையாளர்களுக்கு வலையமைப்பின் வலிமையை அனுபவிக்க ஊக்குவிக்கின்றது.

ஹோம் மற்றும் மொபைல் இணைப்புகளின் புதிய மற்றும் ஏற்கனவே காணப்படும் வாடிக்கையாளர்களுக்கு பெருமளவான சலுகைகள் மற்றும் டிஜிட்டல் அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கும் வகையில் இது அமைந்துள்ளது.

Home Broadband தீர்வுகளின் கீழ், SLTMOBITEL இடமிருந்து புதிய இணைப்புகளுக்காக இலவச டேட்டா சலுகை வழங்கப்பட்டது. SLTMOBITEL Fibre புதிய இணைப்புகளுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் 100GB போனஸ் டேட்டா மற்றும் 30 நாட்களுக்காக 100GB Entertainments Combo Pack வழங்கப்பட்டது. 4G LTE புதிய இணைப்புகளுக்கு 30 நாட்களுக்கு செல்லுபடியாகும் 50GB போனஸ் டேட்டா மற்றும் Youth Add on ஆக 20GB டேட்டா 30 நாட்களுக்கும் வழங்கப்பட்டது.

வாடிக்கையாளர் சேவை வாரத்தின் போது, வாடிக்கையாளர்களுக்கு மேலும் தெரிவு செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு 50% எனும் உயர் விலைக்கழிவுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.




# 5ஆம் ஆண்டு மாணவர்களுக்கு கொமர்ஷல் வங்கியின் தொடர் செயலமர்வுகள்





2023ம் ஆண்டின் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான நாட்களை மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் எண்ணிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கொமர்ஷல் வங்கி தெரண எப்எம் உடன் கூட்டு சேர்ந்து பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கான தொடர் செயலமர்வுகளை நடத்தி உள்ளது. மாதிரி வினாப் பத்திரங்களுடன் பிரபலமான டியூஷன் ஆசிரியர்களைக் கொண்டு இவை நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தொடரின் இறுதி செயலமர்வு கலவானையில் உள்ள ஸ்ரீ திலக்கரத்னாராமய புராண விகாரையில் இடம்பெற்றது. புலமைப் பரிசில் பரீட்சை டியூஷன் ஆசிரியர் வின்சார சமரசிங்கவால் நடத்தப்பட்ட இக்கருத்தரங்கில் சுமார் 500 மாணவர்கள் பங்கேற்றனர். இந்த மாணவர்களின் பெற்றோருக்காக புறம்பானதோர் நிகழ்வும் நடத்தப்பட்டது.

தமது பிள்ளைகளை புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைய வைப்பதற்கான ஆதரவையும் வழிகாட்டலையும் எவ்வாறு வழங்குவது என்பது பற்றி பெற்றோருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

கலவானையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு முன்னதாக மகரகம ஜனாதிபதி கல்லூரி, கண்டி தர்மராஜ கல்லூரி, மெல்லவகெதர அநாகாரிக தர்மபால வித்தியாலயம், கேகாலை ஜோஸப் வாஸ் பெண்கள் கல்லூரி, திக்வெல்ல பிரதேச செயலகம், தவலம வித்தியாராஜ கல்லூரி, ஹங்குரன்கெத்த சிசி கல்லூரி, வெலிமட மகா வித்தியாலயம் என்பனவற்றிலும் இதே விதமான செயலமர்வுகள் இடம்பெற்றன.

# சிறுவர் மற்றும் முதியோர் தினத்தை பல்வேறு சலுகைகளுடன் கொண்டாடும் மக்கள் வங்கி



நாட்டின் முன்னணி நிதி நிறுவனமான மக்கள் வங்கி, ஒக்டோபர் 1ஆம் திகதியன்று உலக சிறுவர் தினம் மற்றும் சர்வதேச முதியோர் தினத்தை கொண்டாடியது. நமது எதிர்காலத்தின் தூண்களான சிறுவர்களையும், அவர்களின் ஞானம் மற்றும் வாழ்க்கை அனுபவங்கள் மூலமாக நமது சமுதாயத்தை வளப்படுத்திய முதியவர்களையும் வங்கி மனமாரப் பாராட்டியுள்ளது.

இசுரு உதான கணக்குகளை மக்கள் வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது, இது 5 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு சிறு வயதிலிருந்தே சேமிக்கும் பழக்கத்தை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கணக்குகளில் 2023 ஒக்டோபர் 1 முதல் 2023 டிசம்பர் 31 வரை வைப்புச் செய்யப்படும் போது அவை விசேட பரிசுகளுக்குத் தகுதி பெறும். 5 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்களிடையே சேமிப்பை ஊக்குவிக்கும் சிசு உதான கணக்குகள், வட்டியை வழங்குவது மட்டுமல்லாது, வைப்புத் தொகையின் அடிப்படையில் பல பரிசுகளையும் வழங்கும்.

சிரேஷ்ட பிரஜைகளுக்காக மக்கள் வங்கியானது, பாதுகாப்பான மற்றும் சௌகரியமான ஓய்வுகாலத்தை உறுதி செய்வதற்காக பல்வேறு நன்மைகளை வழங்கும் பரினத கணக்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

# காட்சி மொழி

## காத்திரமான சஞ்சிகை




இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் காட்சி மொழி காலாண்டிதழ் வெளிவருவது போற்றக் கூடிய மகிழ்ச்சியான செய்தி. இதன் ஆசிரியர் மாரி மகேந்திரனின் முயற்சியை பாராட்டமல் இருக்க முடியாது. எந்த வித நிறுவனம் சார்ந்த உதவியோ, ஊக்குவிப்போ தன்னார்வ அமைப்புகளின் உதவிகளோ ஏதுமற்ற இவரின் இதழ் செயல்பாடு மகிழ்ச்சி தருகிறது.

இலங்கையில் சிங்கள சினிமா பற்றிய காத்திரமான சஞ்சிகை முயற்சிகள் முன்பும் இப்போதும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் தமிழில் அதுவும் இலங்கையில் சர்வதேச சினிமா பற்றிய ஒரு இதழோ பத்திரிகையோ இதுவரை வெளியானதில்லை. ஆனால் தமிழில் உலக சினிமா பற்றிய மிகவும் காத்திரமான படைப்புகள் கொண்ட ஒரு சஞ்சிகை காட்சி மொழி. அது மட்டுமல்ல இதன் உள்ளடக்கம் மிகவும் நேர்த்தியாக உள்ளது. சினிமா பற்றிய மாற்றுப் பார்வையை இதன் படைப்புகள் தூண்டுகின்றன.

நமக்கு முன்புள்ள தமிழ் வர்த்தக சினிமா மட்டும்தான் நமக்கு உள்ள நாம் அறிந்து கொண்ட சினிமா. ஆனால் சஞ்சிகையின் பக்கங்களைப் புரட்டும் போதுதான் உண்மையான சினிமா கலையின் முகத்தை தரிசிக்க முடிகிறது. இது நமது மனக் கண்களைத் திறப்பதாக உள்ளது. உள்ளார்ந்த படைப்பு மனத்தை, இதன் வாசிப்பு அனுபவங்கள் தூண்டுகின்றன. நிச்சயம் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக வட்டத்தில் இந்த இதழின் தேவை நிச்சயம் உணரப்பட்டுள்ளது. ஊடக மாணவர்கள் இந்த இதழின் மூலம் பயன்பெறவும் படிக்கவும் நிறைய விபரங்களை உள்ளடக்கிய சினிமா கல்வி சார்ந்த ஒரு சஞ்சிகை என்பதை உணர முடிகிறது.

ஒரு காலத்தில் தமிழ் சினிமா பற்றிய திரைப்பட சஞ்சிகையை பாடசாலை வகுப்பறைக்குள் யாருக்கும் தெரியாமல் மறைத்து (பொம்மை ஜெமினி சினிமா. பிலிமாலயா. வண்ணத்திரை) வைத்துப் படித்திருக்கின்றோம். ஆனால் இந்த சஞ்சிகையை மாணவர்கள் படிக்க வேண்டும் என்று பாடசாலை நூலகத்திற்கு ஆசிரியர்கள் வாங்கிச் சென்றதாக, இதழின் ஆசிரியர் பேசும் போது குறிப்பிட்டது உண்மை.

சினிமா எத்தனை சக்தி உள்ள ஒரு கலை வெளிப்பாட்டு சாதனம் என்பதை ஒப்புக் கொள்ள கூடிய வகையில் சஞ்சிகையின் பக்கங்களைப் புரட்டும் போது உணர முடிகிறது.

அதிக பக்கங்கள் மற்றும் அருமையான வடிவமைப்பு இதழ் வாசிப்பு இலகுவாக மனம் கவர்வதாக உள்ளது. கேன்வாஸிலிருந்து ஒளித்திரை வரை என்ற அட்டை படக் கட்டுரை சியாம் சுந்தர் வேல் பற்றிய புதிய விடயங்களைக் கொண்டதாக உள்ளது. யாழ்ப்பாணம் எழுத்தாளர் இராகவன் எழுதிய கட்டுரை 'என் திரைப்பட இரசனை ' என்ற ஆக்கம் சினிமா ரசனை பற்றிய சிறந்த கட்டுரை என்பதை விட நகைச்சுவை கதாபாத்திரம் பற்றிய பார்வையைப் பற்றிய கட்டுரை இது. " சினிமாவில் நகைச்சுவை மற்றும் நகைச்சுவை நடிகர்களை தனித்து நோக்கப்பட வேண்டிய தேவையுள்ளது. பொதுவாக நல்ல திரைப்படங்களைப் பார்ப்பதற்கான தூண்டுதல் பார்வையாளனுக்குத் தெரிந்திராமலேயே இங்கிருந்துதான் உருவாகிறதென்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்" என்ற கருத்தை வலியுறுத்தும் கட்டுரை இது.

அவுஸ்திரேலியா எழுத்தாளர் லெ. முருகபூபதி எழுதிய லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் பற்றிய நினைவு குறிப்புகள் மிகவும் அருமை. சதீஷ் கிருஷ்ணப்பிள்ளை அசோக ஹந்தகம இயக்கிய உலகத்தர சினிமாவான அல்பரோதா பற்றிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு மிகவும் நேர்த்தியாக உள்ளது.

நவீன திரை ஆளுமை என்ற தொடரில் மலையாள சினிமா கலைஞன் உன்னி R என்பவர் பற்றி முதல் முறையாக அறிந்து கொண்டது ஆச்சரியமாக உள்ளது. இவர் படங்களை பார்க்கத் தூண்டும் வகையில் அமைந்துள்ள கட்டுரை இது.

காட்சிமொழியின் இரண்டாவது இதழ் முதலாவதைப் போலவே நேர்த்தியான வடிவமைப்பில் வந்திருக்கிறது. காகிதம் மற்றும் அச்சின் தரம் இம்முறை மிகச்சிறப்பாக வந்திருக்கின்றது. முதல் இதழ் போலவே அருமையான கட்டுரைகள். எனக்கு தனிப்பட்ட வகையில் முகேஷ் சுப்ரமணியம் எழுதிய "பிராஸ்ஸான் நுண்மொழிகள்" என்ற கட்டுரையும், போலந்து இசைக்கலைஞர் Zbignew Preisner பற்றி ஹவி எழுதியிருக்கும் கட்டுரையும் மிகவும் பிடித்திருந்தது. முதல் கட்டுரையாக மலையாளத்தின் முன்னனி திரைக்கதை ஆசிரியரும், மாற்று எதார்த்த இலக்கிய வடிவத்தின் முன்னோடியுமான உன்னி.

நிச்சயம் நல்ல சினிமா ரசனையை தேடும் யாவரும் இந்த இதழை தவற விடாமல் படியுங்கள்.

***இதழ் தொடர்புக்கு:***
***விலை: 300/***
***பக்கம் 52***
***மாரி மகேந்திரன்,***
***இல.2,பன்சலை வீதி.பொகவந்தலாவ.***
***mariemahendran134 @gmail. Com***
***தொலைபேசி.0763712663.***

**எஸ். செல்வராஜ்**

# கொடிய கொரோனா

கொரோனா வால் மாண்டவர் எத்தனை?
உலகமே கதிகலங்கி நின்றதே
கொரோனா கொடியதென கண்டோமே
முகக்கவசம் அணிந்து வாழ்ந்தோமே
இன்னுமா தடுப்பூசி ஏற்றவில்லை?
ஒளிந்தே மறைந்தே நடக்கின்றோம்
மன்னாதி மன்ன ரெல்லாமே
உயிரே துறந்து போனார்கள்
நாட்டை முற்றாய் முடக்கியும்
சமூக இடைவெளியைப் பேணியும்
சுய தனிமைப் படுத்தல் முகாமிலும்
உயிர் தப்பி வந்தவர் எத்தனை?
அம்பியுலன்ஸ் வண்டி இரைச்சலை
தினம் கேட்டுப் பயந்தோமே
ஒருவர் ஒருவரை நெருங் கிடாமல்
தினமும் கண்ணீர் வடித்தோமே
ஊரடங்கு தடைச் சட்டத்தாலும்
மாகாண தடைச் சட்டத் தாலும்
வீட்டுக்குள் தினம் அடை பட்டே
தொழிலின்றி கலங்கித் துடித்தோமே
தனிமைப் படுத்தப்பட்ட வீட்டிலே
ஊரை விட்டு எங்கும் போகாமலே
உடன் பிறந்த இரத்தங்களை
பலி கொடுத்துத் தவித்தோமே
சுகாதார மாண்புகளைத் தேடியே
சுகமான சுகந்தம் பெறுவோமே
எந்நாளும் உடலா ரோக்கியத்தோடேயே
நலம்பெற நீடூழி வாழ்வோம்

**இக்பால் அலி**

# தழும்புகள்

கடல் கொந்தளிப்பு மற்றும் பலத்த காற்று இன்றும் நாளையும் தொடரலாம் என்ற வானிலை அறிவிப்பின் படி கடலோரத்தில் குடிவாழும் மக்களை மீளறிவிப்பு வரும் வரை தூர இடங்களுக்குச் செல்லுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

இவ்வண்ணம்
பொலிஸ் நிலையம், கிண்ணியா

ஒலிபெருக்கியின் சத்தம் கேட்டு ஒவ்வொருவரும் தத்தமது உடுப்புப் பைகளை தயார் செய்தனர். சுனாமி வராவிட்டாலும் ஒவ்வொரு டிசம்பர் மாதமும் எங்க ஊருக்கு சுனாமியின் வாசம் வந்துபோகும். மாறாத வலிகளைத் தந்த சுனாமியை மறக்கத்தான் முடியுமா?

வீட்டு முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த அஹ்லாப் உம்மா என்று ஓடி வந்து பர்ஸானாவின் முதுகுப்புறம் சாய்ந்தான். இந்த சிறுவனுக்கு சுனாமினா என்னவெளங்கப்போகுது. இந்த ஒலி பெருக்கிச் சத்தங்கள்தான் எங்களது உயிர் பிழைக்க ஓரளவு மனசுக்கு ஆறுதல் தருகிறது என கண்கள் கலங்கிட வார்த்தைகளை உதிர்ந்தாள்.

அன்று அது ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் எல்லோரும் வீட்டில் இருப்பது வழமை




யானது. மூத்த நானாவின் மகன் இஜாஸ் எங்கட வீட்டிலேதான் தங்கியுள்ளார். தரம் ஆறில் படிக்கின்றார். அவங்கட ஊர்ல தரம் ஐந்து வரையான வகுப்புகள் மாத்திரமே உள்ளதால் நானா இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ளார். இஜாஸ் அன்று ஊருக்கு போக விரும்பியதால் உம்மாவும் அனுப்பி வைத்தாங்க.

எனது சகோதரிகள் சிஹாராவும் சியானாவும் ஒரு அறைக்குள்ளும் உம்மா, வாப்பா, தம்பி ராபி மூவரும் இன்னொரு அறைக்குள்ளும் இருந்தநேரம். வலை இழுக்கும் தொழிலுக்கு கடலுக்குச் செல்ல அந்த வீதியால் சென்ற ஒருவருக்கு வீதிக்கு வந்த நீர் கானல் நீரா, கடல் நீரா என்று விளங்கல. இருந்தாலும் அது அவரை பின் தொடர்வதை அறிந்தார்.

கடல் தண்ணி வருகுது கடல் தண்ணி என்ற சத்தம் மட்டுமே அவரால் போட முடிந்தது. எல்லாப் பக்கமும் கடல் தண்ணி கழுத்தளவு மட்டம் வரை உயர்ந்தது. வீட்டின் கூரையை தம்பி ராபியும் உம்மாவும் வாப்பாவும் எட்டிப் பிடித்துக்கொண்டார்கள். மூத்தவள் சிஹாரா வீட்டின் கதவு நிலையை மெல்லத் தாவிப்பிடித்தாள். தாத்தா என்ர கையப் பிடியேன் என்று இளையவள் சியானா அழுதவளாக வீட்டின் அலைகளுக்குள் தத்தளித்தாள். மூத்தவள் சிஹாரா தனது கை எட்டாததால் தன் துப்பட்டாவை தங்கையின் பக்கம் வீசினாள். அதற்கிடையில் மீண்டும் வந்தபேரலை அவர்கள் எல்லோரையும் பிரித்துவிட்டது.

வினாடிக்குள் என்ன ஆனார்கள் எங்குபோனார்கள் என்ற நிலவரம் ஒன்றுமே தெரியவில்லை. ஊர்கடலாகவும் கடல் நிலமாகவும் மட்டுமே தெரிந்தது. ஊர்க் கடல் கொஞ்சம் வற்றியபோது எங்கு பார்த்தாலும் அழுகையின் சத்தங்களே! எங்கட பக்கத்து வீட்டுக்கு முன் வீடுதான் ரபீக் நானா! தோனா பள்ளிவாசல் தலைவராக இருந்தவர். நல்ல மனிதர். தன் கண் முன்னே கையில் பிடித்திருந்த இரண்டுபிள்ளைகளை அலைகள் பறித்தெடுத்துட்டதே என்று தலையில் அடித்து அடித்து அழுது கொண்டிருந்தார். எப்படி அவருக்கு ஆறுதல் சொல்வது என விளங்கவில்லை. முழங்கால் அளவுக்கு சுனாமித் தண்ணீர் கறுப்பாகக் கிடந்தது. நடந்து செல்ல முடியாது. இப்படி ஒவ்வொருவரும் ஒரு உயிரையாவது இழந்து நின்றனர். தாய் பிள்ளைகளை, பிள்ளைகள் தாயினை, கணவன் மனைவியை, மனைவி கணவனை, மச்சான், மச்சி, மாமா, மாமி, வாப்பா, உம்மா என உயிரின் பிரிவுகள் கணக்கெடுக்க முடியாமல் இருந்தன. பலரது வீடுகள் இருந்த அடையாளமும் இல்லாமல் போனது. இன்னும் சிலவீடுகள் இடிபாடுகளுடன் கிடந்தது.

உயர்ந்து நின்ற தென்னை மரமும் பனை மரமும் பட்டுப்போன மரங்களாகவும் பூச்செடிகளும் வீட்டைச் சுற்றியிருந்த வேலியும் தடம் இல்லாமல் கிடந்தது. நீரில் மூழ்கிக் கிடக்கும் இன்னும் பலரை அடையாளம் காணுவது பெரும் கஷ்டமாக இருந்தது. சகோதரர் றசூல் விடயம் கேள்விப்பட்டு ஓடிவந்தார். உடன் பிறந்தவர்களைக் காணும்வரை அவருக்கு வீட்டின் எண்ணம் வரவில்லை.

குடும்பத்தவர்கள் வெவ்வேறு திசையிலே உயிரோடு இருப்பதாக அவருக்கு காதில் செய்தி எட்டியது. அப்போதுதான் அவருக்கு போன உயிர் திரும்பியதுபோல இருந்தது. இருந்தாலும் உடனே போய் அவர்களைப் பார்க்க முடியவில்லை. வீதிகள் எங்கும் சேறும் கற்களும் முட்களுமாய் கிடந்தது. சில இடங்களில் கடல் தண்ணீர் வற்றாமல் வீதி மூடிக் கிடந்தது.

1. சபையின் முழுமையான நிர்வாகம், நிதி மற்றும் இயக்க நிர்வாகம்
2. இனங்காணப்பட்ட புதிய மேம்பாடு, கைத்தொழில் சார்ந்த மூலாதாரம் மற்றும் கைத்தொழிலாளர்களை ஊக்குவிப்பதற்காக நேரடியான செயற்பாடுகள் உட்பட திட்டங்களைத் தயாரித்தல்
3. சபையின் வருமானத்தை உயத்துவதற்கான திட்டம் மற்றும் நேரடி செயற்பாடுகளைத் தயாரித்தல்
4. கொள்கை ரீதியான விடயங்கள் தொடர்பான ஆலோசனை சபை
5. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பை மாற்றுவதற்கு நிறுவனத்திற்கு தலைமைத்துவம் வழங்குதல்
6. இயைபுடைய நிறுவனங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளில் கலந்துகொள்ளல்
7. தலைவரின் அல்லது சபையின் ஆலோசனையின் பிரகாரம் ஏனைய நிறுவனங்களின் கூட்டங்களில் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்
8. சர்வதேச முகவரகங்களுக்கு இயைபாக நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்
9. சபையின் மென்மையான செயற்பாடுகளை உறுதி செய்வதற்காக குறித்த அமைச்சுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்
10. இலங்கையின் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு பல்வேறு உத்தியோகபூர்வ அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளைத் தயாரித்தல்
11. சகல பிரிவுகளையும் இனங்கண்டு செய்யப்படும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைகளைக் கண்காணித்தல்
12. தலைவர் மற்றும் பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

**கல்வி / தொழில்சார் தகைமைகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு விடயம் தொடர்பான ஆரம்பப் பட்டம்

மற்றும்

விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் / அரச நிர்வாகம் / பொருளியல் / வர்த்தகம் / LLB தொடர்பான முதுமாணிப் பட்டம் (Master's) அல்லது ICASL/CIMA/ACCA இணை அங்கத்துவம்

மற்றும்

குறைந்தபட்சம் இருபது (20) வருடங்கள் ''முகாமைத்துவ மட்டத்தில்'' அனுபவம் இருத்தல் வேண்டும் என்பதுடன் அதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை / நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உறுதி செய்யப்பட்ட அனுபவம்

அல்லது

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய பொறியியலாளர் (IESL/ICE/IEE/IME) கணக்காளர் (ICASL/ CIMA/ACCA) அல்லது முகாமைத்துவம் தொடர்பான நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்

மற்றும்

அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை / நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவம்.

அல்லது

3. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு விடயம் தொடர்பான ஆரம்பப் பட்டம்

மற்றும்

இயைபுடைய எந்தவொரு துறையிலாவது கலாநிதிப் பட்டம் (PhD)

மற்றும்

கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரசாங்க கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை / நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உறுதி செய்யக்கூடிய முகாமைத்துவ அனுபவம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம்.

**சம்பள அளவு: HM 2-1 - ரூபா 91,645 - 12x2700 - 124,045.00**

**அனுகூலங்கள் மற்றும் நன்மைகள்**

- பயன்படுத்தாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவு
- ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர்கள் உள்ளடங்கும் வகையில் மருத்துவ செலவுகளை மீளச் செலுத்துதல்
- PED 01/2015 மற்றும் PED 01/2015(ii)ஆம் இலக்க பொது தொழில் முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம் HM வகுதிக்கு போக்குவரத்து வசதி அல்லது கொடுப்பனவு வழங்கப்படும்.
- 05/2017ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் தொழில்சார் கொடுப்பனவு
- 02/2022ஆம் இலக்க பொது தொழில் முயற்சி சுற்றறிக்கையின் பிரகாரம் தொடர்பாடல் வசதிகள்
- வருடாந்த போனஸ்
- சலுகை வட்டி விகிதத்தில் அனர்த்தக் கடன்
- அக்ரஹார காப்புறுதித் திட்டம்

**பொதுவான நிபந்தனைகள்**

1. இந்தப் பதவிகள் நிரந்தரமானவை.
2. இந்தப் பதவிகளுக்காக தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஊசேநி (EPF) பங்களிப்புக்கு உரிமை உண்டு என்பதுடன் இதற்கு ஊழியரினால் 10% செலுத்துதல் வேண்டும். சபையினால் 12% செலுத்தப்படும் மேலும் ஊநபொ நிதிக்கு (ETF) சபையினால் 3% பங்களிப்பு செலுத்தப்படும்.
3. விண்ணப்பங்களை பிறப்பத்தாட்சி, கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை முழுமையான விபரங்களுடன் மற்றும் சுயவிபரங்கள் சகிதம் உறவினரல்லாத இரண்டு சான்று பகர்வோரின் விபரங்கள் சகிதம், 2023-10-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
4. அரசாங்கத் திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சட்டச்சபையில் பணியாற்றும் அபேட்சகர்கள் தங்களது விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.
5. 35 வயதிற்குக் குறைவானவர்களாகவும் 55 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
6. மேற்குறிப்பிடப்பட்ட சகல தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. ஏதாவது ஆதரவு பெற முயற்சித்தால் அது தகுதியீனமாக கவனத்திற் கொள்ளப்படும்.

**தலைவர்,**
**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை,**
**615, காலி வீதி, கட்டுபெத்த, மொறட்டுவ.**

# பெருந்தோட்ட அமைச்சு
# இலங்கைத் தேயிலைச் சபை

## பதவி வெற்றிடங்கள்

இலங்கையில் தேயிலைத்தொழிலை ஒழுங்குபடுத்துவதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் சந்தைப்படுத்துவதற்கும் இலங்கையில் செயல்படும் முன்னணி அரச நிறுவனமான இலயங்கைத் தேயிலை சபையினால் **கணனி அமைப்பு பகுப்பாய்வாளர், சந்தை ஊக்குவிப்பு அலுவலகர்** மற்றும் **கணக்காய்வு அலுவலகர்** ஆகிய வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

### கணனி அமைப்பு பகுப்பாய்வாளர் Grade II–JM (1-1)

**வேலையின் விபரம்**

சபையின் அனைத்து தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செயல்பாடுகளும், உதவிப் பணிப்பாளர் (IT) அல்லது தேயிலை சபையின் அங்கீகரிக்கப்பட்ட எந்த அதிகாரியாலும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணைபுரியும் வகையில் சிறப்பாகப் பிரத்தியேகமாக வழங்கப்படுகின்றன.

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

a). பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தில் தகவல் தொழில்நுட்ப (BIT) இளங்கலைப் பட்டம் அல்லது கணினி விஞ்ஞானம் / கணிதத்தில் (சிறப்பு) பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர் அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 01 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் : (அ அல்லது ஆ)**

a). மேலே வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

b). இலங்கை தேயிலை சபையில் II தரத்தில் முகாமைத்துவப் பதவியில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

குறிப்பு: ஆங்கில அறிவு அவசியமாகும்.

### சந்தை ஊக்குவிப்பு அலுவலகர் Grade II–JM (1-1)

**வேலையின் விபரம்**

இலங்கை தேயிலைச் சபையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியின் பார்வையின் கீழ் இலங்கை தேயிலைச் சபையின் தொழில் தொடர்பான தேசிய மற்றும் பொதுவான ஊக்குவிப்பு பிரச்சாரங்களுக்காக பல்வேறு பிரிவுகளின் சந்தை சுயவிபரத் தகவல்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றின் செயல்பாடுகள், குறிப்பாக வாரியத்தின் உதவி பணிப்பாளர் (பதவி உயர்வு) மற்றும் பணிப்பாளர் (பதவி உயர்வு) ஆகியோரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு துணையாக இருத்தல்

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் : (அ அல்லது ஆ)**

a) பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் / வணிகம் / முகாமைத்துவம் / வணிக நிர்வாகத்தில் இளங்கலை பட்டம்.

அல்லது

b) பட்டயச் சந்தைப்படுத்தல் நிறுவனத்தில் CIM- UK முழு உறுப்பினராக இருத்தல்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர் அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 01 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் : (அ அல்லது ஆ)**

a) மேலே வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

அல்லது

b) தரம் II இல் முகாமைத்துவ உதவியாளர்களின் தகுதியில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் திருப்திகரமான சேவை. - இலங்கை தேயிலை சபையன் தொழில்நுட்பம் அல்லாத பிரிவு டிப்ளோமா அல்லது அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் இருந்து சந்தைப்படுத்தலில் உயர்தர தகைமை பெற்றிருக்க வேண்டும்.

### கணக்காய்வு அலுவலகர் Grade II–JM (1-1)

**வேலையின் விபரம்**

இலங்கை தேயிலைச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க சபையின் ஒத்துழைப்புத் திட்டம், நிதி மற்றும் நிர்வாக செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளித்து தணிக்கைச் செயல்பாடுகளைச் செய்வதில் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளைச் செய்தல்.

**கல்வித் தகுதி மற்றும் அனுபவம் :**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் :**

a) பல்கலைக்கழக மானியகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சந்தைப்படுத்தல் / வணிகம் / முகாமைத்துவம் / வணிக நிர்வாகத்தில் இளங்கலை பட்டம்.

அல்லது

b) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியினால் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA).

அல்லது

c) இலங்கையின் பட்டய கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலை தகுதி (ICASL) /பட்டய மேலாண்மை கணக்காளர்கள் UK (CIMA)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சபையின் (ACCA) தகைமையினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

பட்டம் பெற்ற பின்னர் அரச நிறுவனத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனத்தில் சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தது 01 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் :**

a) மேலே வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

மற்றும்

b) இலங்கை தேயிலை சபையில் II தரத்தில் முகாமைத்துவம் (JM) பதவியில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் 05 வருட திருப்திகரமான சேவையை நிறைவு செய்திருக்க வேண்டும்.

கனிஷ்ட முகாமையாளர் JM பதவிக்கான சம்பள அளவுத்திட்டம், வயதெல்லை மற்றும் தேர்வுமுறை

**சம்பள அளவுதிட்டம் : JM 1-1-2016: ரூ. [42,600 - 10 x 755 - 18 x 1,135 – 70,580]** (மாதாந்தம்)

முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப 02/2016 விதிகளின்படி, வெளிவாரி விண்ணப்பதாரி ஆரம்ப மாத சம்பளமாக ரூ.42,600/- மற்றும் அந்த சம்பளம் மற்றும் அரசினால் அனுமதிக்கப்பட்ட மாதாந்திர வாழ்வாதார செலவு ரூ.7800/- மற்றும் தொழில்முறை கொடுப்பனவும் வழங்கப்படும். அண்ணளவாக மாத சம்பளம் ரூ.45,000/- ஆகும்.

**வயது** : 18 வயதுக்கு குறையாதவரும் 45 வயதுக்கு மேற்படாதவரும் இருத்தல் வேண்டும். உயர் வயது எல்லை உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு நடைமுறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலம் இடம்பெறும்

**பொது நிபந்தனைகள்**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளை நன்கு நிறைவேற்றவும், நாட்டின் எப்பகுதியிலும் பணியாற்றவும் கூடிய உடல் மற்றும் மனரீதியான திடகாத்திரத்தினை கொண்டிருத்தல் வேண்டும்.
- நேர்மையான ஒழுக்காற்றுத் தன்மையை கொண்டவராக இருத்தல் வேண்டும்
- மூன்று வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் பதவியின் தேவைபாடு மற்றும் திருப்திகரமான செயல்திறனைப் பொறுத்து ஒரு வருட சோதனை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்கள்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து வெளிவாரி விண்ணப்பதாரர்களும் தொடர்புடைய சம்பள அளவின் ஆரம்ப சம்பள மட்டத்தில் வைக்கப்படுவார்கள் மற்றும் தாபனச் சட்டத்தின் VII அத்தியாயத்தின் பிரிவு 4 இன் விதிகளின்படி, பொருந்தக்கூடிய சம்பள விகிதத்தின் ஆரம்ப சம்பளப் படியில் வைக்கப்படுவார்கள் மற்றும் உள்வாரியாக நியமிக்கப்பட்ட நபர்கள் சம்பள அளவில் நிலைநிறுத்தப்படுவார்கள்.

**அனுகூலங்கள்**

- சபையினால் தற்போதுள்ள விதிகளின்படி மருத்துவ காப்பீட்டு நன்மைகள் வழங்கப்படும்
- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10% ஊழியர்களின் பங்களிப்புடன் அதிகார சபையினால் 15% பங்களிப்பு பெற்றுக்கொடுக்கப்படும்.
- சபையினால் அதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 3% பங்களிப்பும் வழங்கப்படும்.

**விண்ணப்பங்கள் :**

இவ் அலுவலகத்திலிருந்து அல்லது **http : www.srilankateaboard.lk** இணையதளத்திலிருந்து பெறப்பட்ட பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிறப்புச் சான்றிதழ் நகல்கள் மற்றும் தகுதி மற்றும் அனுபவச் சான்றிதழ்களுடன் விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு 2023.10.24 க்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

அரச திணைக்களம் / கூட்டுத்தாபனம் / நியதிச் சட்ட சபை / நிறுவனத்தில் நிரந்தர பதவியிலிருக்கும் ஊழியர்கள் தங்கள் விண்ணப்பங்களை பணிபுரியும் அந்தந்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்
**இலங்கைத் தேயிலைச் சபை**
இல - 574, காலி வீதி,
கொழும்பு 3.




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

பாக்கிய அதிபதி குரு இராசியில் இருக்கிறது. அது மட்டுமல்ல பாக்கிய குரு 5, 7, 9ஆம் இடங்களை சுப பார்வையாகப் பார்வையிடுவது சிறப்பு. பிள்ளைகளின் மூலம் மன நிறைவு உண்டாகும். அவர்கள் சம்பந்தமான கவலை தீரும். பேச்சில் அழுத்தம், துணிவு, நம்பிக்கை ஏற்படும். அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கடன் தொல்லையிலிருந்து நிவாரணம் கிடைக்கும். சகோதர ஒற்றுமை ஓங்கும். கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். ஆயினும் சில நேரங்களில் பணத்தட்டுப்பாடு இருக்கவே செய்யும். மாமன் வழி உறவுகள் சற்று உரசலோடு இருக்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

5 ஆம் இடம் வலுவாக இருக்கிறது. பிள்ளைகளால் ஏற்றமும் மகிழ்ச்சியும் உண்டு. புத்திக் கூர்மையுடன் செயலாற்றுவீர்கள். பணவரவுகள் திருப்திகரமாக இருக்கும். எதிர்பார்த்த இடத்தில் இருந்து தேவையான உதவிகள் கிடைக்கும். கணவன், மனைவி குடும்ப ஒற்றுமை ஓங்கும். சொந்தங்கள் உங்களைத் தேடி வரும். புண்ணிய ஸ்தானம் பலமாக இருப்பதால் குல தெய்வ தரிசனம் பூஜை சிறப்பாக நடக்கும். கோயில் தரிசனம் கிடைக்கும். ஆறில் உள்ள கேது சில எதிர்பாராத நற்செய்திகளைத் தரும். சகோதர உறவுகளில் உரசலும் மனக்கசப்பும் ஏற்படும் வாய்ப்புண்டு. பதற்றமும் மனக்கவலையும் ஏற்படலாம்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

கேந்திரத்தில் இராசிநாதன் ஆட்சி, உச்சம் பெற்று இருக்கிறார். சூரியனும் செவ்வாயும் இணைந்து இருக்கிறார்கள். உங்கள் திட்டங்கள் ஓரளவு நிறைவேறும். முக்கியஸ்தர்கள் நட்பு கிடைக்கும். சுப நிகழ்ச்சிகளுக்கான வாசல் திறக்கும். எதிர்பாராத நற்செய்திகள் மனதை நிறைக்கும். புதிய நட்பு மலரும். பழைய நட்பு உங்களைத் தொடர்பு கொள்ளும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வணிகம் தொழில் சிக்கலின்றி நடக்கும். ஏழுக்குரிய குரு 11ஆம் இடத்தில் இருக்கிறார். மனைவி வழியில் சிறப்பு உண்டு. ஆதாயம் உண்டு. ஒத்துழைப்பு உண்டு. பத்திரிகைத் தொழில், தகவல் தொழில் நுட்பத் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. 5 இல் கேது இருக்கிறார். அவர் சில மனத் தடைகளை உண்டாக்குவார். அஷ்டம சனி தன் பங்குக்கு வேலை செய்வார்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

இராசியில் சுக்கிரன் இருக்கிறார். மற்றொரு சுபக் கிரகமான குரு உங்கள் தன குடும்ப இராசியைப் பார்வையிடுகிறார். எனவே, நிதிப் பிரச்சினைகள் இருக்காது. கடன்கள் கேட்ட இடத்தில் இருந்து கிடைத்துவிடும். தேவையான பணம் புரட்டிக் கொள்ளும் வாய்ப்பும் ஏற்படும். உங்களுக்கு வெகு காலமாய் வரவேண்டிய பணம் ஓரளவு வசூல் ஆகிவிடும். குடும்பத்தில் ஒற்றுமை ஓங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. புதன் 3இல் ஆட்சி, உச்சம் பெற்று இருப்பதால் தடைப்பட்ட காரியங்கள் நடந்து விடும். புத்தி பூர்வமாக சிந்தித்துச் செயலாற்றுவதால் வெற்றி கிடைக்கும். சூரியன் செவ்வாய் இணைப்பு இந்த வெற்றிக்கான திடத்தை தரும். 7இல் வக்கிர சனி உலவுவதால் நட்பு விஷயங்களில் கவனம் தேவை. கணவன் மனைவி உறவுகள் சாதாரணமாக இருந்து, திடீர் உரசல்கள் தலை தூக்கி அமைதியைக் கெடுக்கும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

இராசிநாதன் 2 இல் இருக்க இரண்டு மற்றும் 11க்குரிய புதன் வலுப்பெற்று இருக்கிறார். இந்த இணைப்பு நல்லது. குடும்ப அமைதி மற்றும் சுமுகமான சூழல் உங்களுக்கு உற்சாகத்தைத் தரும். உதவிகளும் கிடைக்கும். நிதிப் பற்றாக்குறை அகலும். ஐ.டி தொழில், பத்திரிகைத் தொழில், ஆடிட்டர் தொழில், ஆசிரியர் தொழில் செய்பவர்கள் நல்ல வாய்ப்புப் பெறுவார்கள். சுக்கிரன் 12 இல் இருப்பது உங்கள் சந்தோசத்தை அதிகரிக்கவே செய்யும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும். தொழில், வணிகம் நன்றாக நடக்கும். கேது 3இல் இருப்பதால், ஆன்மிகம், கோயில் வழிபாடு இவற்றில் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. 2 இல் செவ்வாய் மட்டும் அல்ல நெருப்பு கிரகமான சூரியனும் இருக்கிறார். எனவே பேச்சு சூடாக வரும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

இராசிநாதன் ஆட்சி, உச்சம் பெறுவதே சிறப்பு. அந்த அமைப்பு மற்ற கிரக தோஷங்களையும், கிரக தோஷங்கள் தரும் எதிர்மறை விளைவுகள் மற்றும் பின்னடைவுகளையும் கட்டுப்படுத்தும். 7 ஆம் இடத்தில் இராசியின் பார்வை வலுவாகப் பதிவதால் கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்லபடியாக இருக்கும். தவிர, சுக்கிரன் 11 இல் இருப்பதும் சிறப்புதானே. வியாபாரம் சிறு தடைகளை மீறி வெற்றிகரமான பாதைக்குத் திரும்பும். யாரிடமும் உங்கள் திட்டங்களை மனம் விட்டுப் பகிர வேண்டாம். அது உங்களுக்கு எதிராகப் போய்விடும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

இராசிநாதன் 10இல் இருக்க 4, 5 க்குரிய சனியின் பார்வை பெறுவது சிறப்பு. இராசியை குரு பார்ப்பதும் சில தனித்துவமான நன்மைகளைத் தரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். வீடு, வாகன வசதிகள் சிறப்பாக இருக்கும். புது வாகனங்களை வாங்கும் வாய்ப்பு உண்டு. சற்று புத்திசாலித்தனமும் முக்கிய பிரமுகர்கள் உதவியும் இருந்தால் காரியம் எளிதில் பலிதமாகும். வணிகத்தில் புதுத் திருப்பம் நேரும். கலைத் துறைகளில் திறமைகள் வெளிப்படுவதால் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். சுப விரயங்கள் உண்டு. கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். புதன் 12இல் மறைகிறார். 12ல் சூரியன் என்பதால் தேவையற்ற வாக்கு வாதங்கள் செய்ய வேண்டாம்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

இராசி அதிபதியுடன் சூரியன் இணைந்து 5ஆம் இடத்தைப் பார்ப்பது சிறப்பு. சில நல்ல சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு. குழந்தைகள் பற்றிய கவலை வேண்டாம். குடும்பத்தில் மதிப்பு, மரியாதை கூடும். புது வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. அதற்கான தடைகள் நீங்கும். உடன் பிறந்தவர்களால் நன்மை உண்டு.

அரசு காரியங்கள் தடையின்றி சாதகமாக இருக்கும். சூரியன் பலத்தால் உடல் ஆரோக்கியம் மேம்படும். பகை நட்பாகும். பணவரவு அதிகரிக்கும். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். அரசியல் துறை நன்றாக இருக்கும். கணவன் மனைவி குடும்ப உறவுகள் நல்லபடியாகவே இருக்கும். அஷ்டமாதிபதி வலுப்பெற்று இருப்பதால் திடீர் குழப்பங்களும் மன அமைதியின்மையும் தூக்கமின்மையும் ஏற்படலாம்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

பொதுவாகவே இராசிநாதன் ஆட்சியோ, உச்சமோ, கேந்திர திரிகோண சஞ்சாரங்களோ பெற்றிருந்தால் அல்லது பார்வை இணைப்பில் இருந்தால், நன்மைதான் ஏற்படும். சிரமங்கள் வந்தாலும் அது சீக்கிரம் விலகிவிடும். குரு 5 இல் இருப்பது மட்டுமல்ல, 9ஆம் பார்வையும் உண்டு. குரு சாதகமான நிலைகள் உள்ளதால் புதிய முயற்சிகள் பலிக்கும். வழக்குகள் சம்பந்தமாகவும் குடும்பத்தில் அமைதி நிலவும்.

மரியாதை கூடும். பதவி உயர்வு ஏற்படும். புது வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆடம்பரப் பொருள் சேர்க்கை உண்டு. செவ்வாய் 10 இல் இருப்பதால் தொழில் உத்தியோகம் முதலியவற்றில் முன்னேற்றம் உண்டு. அரசு அலுவலகங்களில் இருக்கும் சிலருக்கு புதிய வேலைகளால் இடமாற்றம் உண்டு. 2இல் சனி என்பதால் பேசும் சொற்களில் கவனம் தேவை.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

புதன் அமைப்பு நன்றாக இருக்கிறது. பாக்கியாதிபதி பாக்கியஸ்தானத்தில் ஆட்சி, உச்சம் பெறுவதும் உங்கள் தைரிய இராசியைப் பார்ப்பதும் சிறப்பு. பணச்சிக்கல்கள் இருக்காது. தொழில், வணிகம் நல்லபடியாக நடக்கும். புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். செல்வாக்கும் உயரும். 9 இல் சூரியன் இருப்பதால் அரசு காரியங்கள் சாதகமாக நடக்கும். வழக்குகள் சாதகமாகும். சுபகாரியங்கள் நடைபெறும். வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். கலைத் துறையில் நல்ல பெயர், வாய்ப்பு ஏற்படும். தகவல் தொழில்நுட்பம், கணக்குத் துறைகளில் பணிபுரிபவர்களுக்கும், ஆசிரியர் துறையில் இருப்பவர்களுக்கும் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம் 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

அஷ்டமத்தில் புதன் மறைவது தவறல்ல. தவிர, அவர் ஐந்துக்கும் உரியவர். 8இல் தனது வீட்டில் ஆட்சி உச்சம் பெறுவதால் மறைவு என்பது பலவீனமாக இல்லாமல் உங்களுக்குச் சாதகமாகவே இருக்கும். பண வரவு அதிகரிக்கும். கோயில் புண்ணிய ஸ்தல தரிசனம் அமையும். உறவினர்கள் வருகை தருவார்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டு. ஆசைப்பட்ட சில விஷயங்கள் உங்கள் முயற்சியால் நடக்கும். மூன்றில் உள்ள ராகு, குருவோடு இணைவது சிறப்பு. அதனால், ராகுவின் சுப பலன்கள் கூடும். வெளிநாடு செல்லும் யோகமும் உண்டு. புதிய வேலை கிடைக்கும்.

வண்டி வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையோடு செல்ல வேண்டும் கணவன் மனைவி கருத்து வேறு பாட்டுக்கு இடம் தராதீர்கள்.

## மீனம்

**(புரட்டாதி 4ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

5இல் சுக்கிரன், 2இல் இராசிநாதன் குரு என இரண்டு சுப கிரகங்கள் நன்றாக இருக்கின்றன. பணப் பற்றாக்குறை இருக்காது. கேட்ட இடத்தில் பணம் கிடைத்துவிடும். வீடு முதலியவற்றை வாங்குவதற்காக வங்கிகளில் விண்ணப்பித்திருந்தால் கிடைத்து விடும். கடன்களின் அளவு குறையும். வர வேண்டிய பாக்கிகள் வந்துவிடும்.

கணவன், மனைவி உறவுகள் சுமுகமாக இருக்கும். முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைப்பதால், புதிய உதவிகள் கிடைக்கும். சமூகத்தில் உங்கள் கௌரவம் அதிகரிக்கும். இராசி அதிபதி குரு வலுவாக உள்ளார். அவர் தொழில் ஸ்தானத்தைப் பார்ப்பதால், தொழில், குறிப்பாக கலை வர்த்தகம், பண முதலீடுகள் மற்றும் ஆசிரியர் பணி, கல்விப் பணி இவற்றில் உள்ளவர்களுக்கு சிறப்பான வாய்ப்புகள் உண்டு.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 07

# மலேசியா என்றதும் ஞாபகத்துக்கு வருபவர் பீர் முகம்மது

உலகிலுள்ள கண்டங்கள் எட்டு, சீலந்தியாவையும் சேர்த்து. உலகிலுள்ள எட்டாவது கண்டம் புவியியல் விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. 376 வருடங்கள் நீருக்கு அடியில் அமிழ்ந்திருந்த நிலையிலுள்ள பாறை மாதிரிகளை ஆய்வு செய்த விஞ்ஞானிகளின் உறுதிப்படுத்தலில் இக் கண்டம் நியூசிலாந்துக்கு அண்மையில் அமைந்திருப்பதாக தகவல் ஊர்ஜிதமாகிறது.

மலேசிய சுதந்திர சதுக்கம் – மெர்டெக்கா சதுக்கம் எனவும் அழைக்கப்படுகிறது. சுதந்திர மலாயாவில் 1957 ஆகஸ்ட் 31 நள்ளிரவு 12 மணிக்கு பிரித்தானியாவின் கொடி இறக்கப்பட்டு மலாயாவின் கொடி முதன் முதலாக ஏற்றப்பட்ட இடமாகும். வருடந்தோறும் தேசிய தினத்தில் "மெர்டெக்கா பேரணி" எனும் சிறப்பு அணி வகுப்பு இடம்பெறுவது சிறப்பம்சமாகும். இவ் வலயத்தைச் சூழ பிரித்தானியர்களால் கட்டப்பட்ட கட்டடங்களே காணப்படுகின்றன. இவ் வலயத்திலுள்ள இந்திய மொகாலாய வடிவமைப்பில் உருவான சுல்தான் அப்துல் சமத் கட்டடம் மிக முக்கியத்துவத்துடன் பார்க்கப்படுகிறது. இக் கட்டடம் சிலாங்கூர் மாநில தலைமைச் செயலகமாகவும் பின்னர் உச்ச நீதிமன்றமாகவும் இயங்கிய நிலையில் தற்போது பாரம்பரிய பண்பாட்டு கலைகளுக்கான அமைச்சாக இயங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இயற்கை நேசிப்பின் அடையாளமாகவும் ரம்மியத்தை உணர்த்தும் அழகியல் சார்ந்த அவதானத்துடனும் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். "தடரன் மெர்டக்கா" மலேசிய சுதந்திர சதுக்கத்தை சூழ அமைந்துள்ள மைதானத்தின் பெயராகும்.



மலாயா அவசர காலம் 1948.06.16 தொடக்கம் 1960.07.12 பிரித்தானியாவிடமிருந்து பெற வேண்டிய தனித்துவத்தை விடுதலை வேட்கையாக பிரகடனப்படுத்திய மலாயா கம்யூனிஸ்ட் கட்சியின் போர்ப்படை மலாயா தேசிய விடுதலைப் படை என தன்னை அடையாளப்படுத்திக் கொள்கிறது. இப் படையுடன் பிரித்தானியர்கள் போர் தொடுத்த காலப்பகுதியே "மலாயா அவசர காலம்"; என வரையறுக்கப் படுகிறது. மலேசிய ஒப்பந்தம் (எம்.ஏ 63) ஐக்கிய இராச்சியம், வடக்கு அயர்லாந்து, மலாயா கூட்டமைப்பு, வடக்கு போர்னியோ, சரவாக், சிங்கப்பூர் ஆகிய நிலப்பகுதிகள் இணைந்து 09 யூலை 1963 அன்று கையொப்பமிட்டும் 31 ஜூலை முத்திரையிடப்பட்டும் அமுல்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திர மலாயாவின் முதல் பிரதமரும், சுதந்திரத்தின் தந்தை என மலேசியர்களால் போற்றப்படும் துங்கு அப்துல் ரகுமானால் சுதந்திர தினத்தில் "மெர்டக்கா" என ஏழு முறை ஒலிக்கப்பட்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டில் துரிதமாக பொருளாதார வளர்ச்சி பெற்ற உலக நாடுகளின் தரவரிசையில் இரண்டாம் இடத்தை பெற்ற நாடாக மலேசியா விளங்குகிறது. ஒற்றுமையும் புரிந்துணர்வும் அடிப்படையில் பார்க்கின்ற போது உலகின் தலை சிறந்த நாடாக மலேசியா இனங்காணப்படுகிறது. மலேசிய சுதந்திர பிரகடனத்தில் இந் நாட்டின் முதன்மை இனங்களான மலாய், சீனர், இந்தியர் என மூவினத்தவரின் பிரதிநிதிகளையும் இணைத்து கையொப்பமிடச் செய்தமை இனங்களுக்கிடையிலான புரிதலின் வளர்ச்சிக்கு வழிகோலியமை குறிப்பிடத்தக்கதாகும். இனம், மதம், மொழி கடந்து மலேசியர்கள் என்ற பெரும் உணர்வு மலேசியாவை கட்டமைப்பதில் பெரிதும் செல்வாக்கு செலுத்துகிறது எனலாம்.

மலேசியா என்றதும் பலர் ஞாபகத்துக்கு வந்தார்கள். அவர்களுள் மிக முக்கியத்திற்குரியவராக மூத்த எழுத்தாளர் சை. பீர்முகமது விளங்கினார். அவருடைய படைப்புகள் மக்கள் தளத்திலிருந்து உருவானவை என்று கேள்விப்பட்டிருக்கிறேன். வாசிப்பதற்கான வாய்ப்புக் கிட்டவில்லை. 1942 ஜனவரி 11ஆம் திகதி பிறந்த இவர் இளமையில் தாயை இழந்த நிலையில் கல்வி கற்பதற்கு மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார். தமிழகத்தின் தேவகோட்டையை பூர்வீகமாகக் கொண்டவர். தந்தையாரின் புகையிரத தண்டவாள பணியின் நிமித்தம் அவரது குடும்பம் மலேசியா நோக்கியும் பின்னர் தந்தையார் சயாம்பர்மா நோக்கியும் புலம்பெயர்ந்துள்ளார். 12ஆவது வயதில் உணவகத்தில் பாத்திரம் கழுவும் வேலைக்கு தந்தையாரால் நிர்ப்பந்திக்கப்பட்டு அமர்த்தப்படுகிறார். பின்னாளில் கைத்தறி நிலையத்தின் பணியாளர், இராணுவ முகாமின் ஊழியர் போன்ற தொழில்களிலும் ஈடுபடுகிறார். வறுமை, தொழில் போன்ற நிர்ப்பந்தங்களாலும், கல்வி மீது கொண்டிருந்த ஆர்வம் இவருக்கு குறையவில்லை. கடும் பிரயத்தனத்துடன் சுய முயற்சியினால் கல்வியை பெற்றுக்கொள்கிறார். மாடு மேய்க்கும் தொழிலில் பெற்ற வருமானம் மூலமாகவே கல்வியை பெற்றுக்கொண்டார். குத்தகைத் தொழிலில் ஈடுபட்டு பின்னாளில் மலேசியாவின் குறிப்பிடத்தக்க குத்தகைக்காரராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டார். பீர்முகமது தனி மனித முயற்சிக்கு முன்மாதிரியாக விளங்கியமையும் குறிப்பிடத்தக்கது. சமாரியா எனும் பெண்மணியை மனைவியாக பெற்று நான்கு மகன்கள், ஒரு மகள் என இல்லறத்தின் அடையாளங்களையும் தடம் பதித்துச் சென்றவர்.

பீர்முகமதுவின் வறுமையான இளமைக்காலத்தை நினைத்துப் பார்க்கும் போது அப்துல் கலாமின் வாழ்க்கையே நினைவுக்கு வருகிறது. வறுமையை ஒரு பொருட்டாக எண்ணாது வாழ்ந்து காட்டியவர். இலட்சியப் பிடிப்போடு வாழ்ந்தவர்களில் பீர்முகமதுவும் சாட்சியாகக் கொள்ளப்படுகிறார்.

பீர்முகமது என்ற ஆளுமை மலேசியாவின் நவீன இலக்கிய முன்னோடிகளில் ஒருவராக தன்னை உருவாக்கிக்கொள்கிறார். "ஞானாசிரியன்" எனும் புனைப்பெயராலும் இலக்கிய படைப்புகளை தந்தவர். சிறுகதை, நாவல், திறனாய்வு, இலக்கிய உரைகள், கட்டுரைகள் என தனது படைப்புலகை விரிவுப்படுத்திக்கொண்டவர். தொண்ணூறுகளின் பின்னர் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் முக்கிய ஆளுமையாக இனங்காணப்படுகிறார்.



மலேசியாவில் வெளியான "தமிழ் முரசு" இதழில் வெளிவந்த படைப்புகளை வாசிக்க தொடங்கி திராவிட இயக்க நூல்களை வாசிப்பதில் முழுமையாக ஈடுபடுகிறார். ஜெயகாந்தனின் எழுத்துக்களால் கவரப்பட்டு அவரோடு நெருங்கிய தொடர்பைப் பேணியமையும் குறிப்பிடத்தக்கது. ஜெயகாந்தனுடனான நட்பு அவரை மலேசியாவிற்கு அழைத்து நாடு முழுதும் இலக்கிய கூட்டங்களை நடாத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பதிப்பாளராகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதோடு பயண இலக்கியங்கள் தொடர்பிலும் கவனத்தை செலுத்தியவர்.

இத்தகைய ஆளுமைக்கொண்ட அந்த நபரை சந்திக்கும் வாய்ப்பும் 11வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு உத்தியோகபூர்வமாக தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்வில் கிட்டியது. மலேசியாவில் தமிழ் மொழி வளர்ச்சிக்கு பங்காற்றிய அறிஞர்கள் கௌரவிக்கப்பட்டார்கள். அவர்களுள் ஒருவராக பீர்முகமதுவும் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். அவர் விருது பெறுவதற்கு தனது மகனால் சக்கர நாற்காலியில் அமர வைத்தே அழைத்து வரப்பட்டிருந்தார். இந்த சந்தர்ப்பத்தில்தான் பீர்முகமதுவுடன் உரையாடும் சந்தர்ப்பம் கிட்டியது. இந்தியாவுடன் எனக்கு இருந்த பூர்வீக தொடர்பை கூறி அறிமுகம் செய்தேன். அவருடன் இணைந்து புகைப்படமும் எடுத்துக் கொண்டேன்.

தம்பி, நீங்கள் இலங்கையில் கண்டியா? எனக் கேட்டார். ஆம் ஐயா என்றேன். அந்தனி ஜீவா எப்படி இருக்கிறார்? என அன்பாக வினவினார். என்னுடன் தொடர்ந்த அவரது உரையில் இலங்கையில் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள் தொடர்பில் தெளிவான புரிதலை கொண்டிருந்தார் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது.

பிரித்தானியர் ஆட்சியின் போது தென்னிந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு இருநூறு வருடங்களை நிறைவை அனுஷ்டித்துக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு புலம்பெயர்ந்து இலங்கையில் நிலைக்கொண்டுள்ள இந்த சமூகம் "இந்திய வம்சாவளித் தமிழர்கள்" என்றே சட்ட ஏற்பாடுகளில் அடையாளப்படுத்தப் பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. மாறாக இலக்கிய செயற்பாட்டாளர்களின் சுயம் வேண்டிய உந்துதலால் "மலையகம்" என்ற அடைமொழியோடு அடையாளப்படுத்துவதில் ஆர்வம் காட்டப்பட்டது. திராவிட கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட செயற்பாட்டாளர் இளஞ்செழியனால் தொடங்கப் பட்ட "மலையகம்" என்ற சொல்லாடல் பின்னாளில் இலக்கிய செயற்பாட்டாளர்களால் அங்கீகாரம் பெறுகிறது. சட்ட ஏற்பாடுகளில் "இந்திய வம்சாவளி தமிழர்கள்" என்று காணப்பட்டாலும் "மலையகத் தமிழர்கள்" என சுயமாக பெயரிட்டுக்கொள்வதில் காட்டிவரும் முனைப்பும் கவனிக்கதக்கது. இவ் விடயம் தொடர்பில் இரு வேறுப்பட்ட கருத்து நிலைகள் நிலைகொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

"மலையக மக்கள்" "மலையகத் தமிழர்" "மலையக இலக்கியம்" "மலையக கலைகள்" போன்ற கோஷங்களை ஏந்திய நிலையில் "மலையகம்" என்ற நாம இருப்பை தக்க வைப்பதிலும் நிலைபெறச் செய்வதிலும் அந்தனி ஜீவாவின் பங்கும் பணியும் கவனத்திற்குரியது. இலங்கையில் எந்த மூலையிலும் சரி வாய்ப்பு கிடைத்த அரங்குகளில் எல்லாம் "மலையக இலக்கியம்" என்ற உறுதிப்பாட்டை நிலைநிறுத்துவதில் அவரது பங்கு அளப்பரியதாகும். கடல் கடந்த நாடுகளிலும் "மலையகம்" என்ற இவரது வலியுறுத்தல் அதீத கவனத்தை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறான முனைப்பில் தான் மலேசியா "மலையக இலக்கியம்" தொடர்பில் புரிந்து கொண்டிருப்பதற்கு பீர்முகமது சாட்சியாக விளங்குகிறார்.

பீர்முகமது என்ற இந்த தமிழ் ஆளுமை கடந்த 26.09.2023 அன்று இயற்கை எய்தியதாக "குங்குமம் சுந்தரராஜனின்" முகநூல் பதிவில் இருந்து அறிந்துக்கொண்டதோடு அன்று இரவு அவர்களுடனான தொலைபேசி தொடர்பு தொடர்ந்தது.

பயணம் தொடரும்...

# படித்ததும் பகர்வதும் 161



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### கடன் பெறுபவர்களே!



மனிதர்கள் வறுமையில் வாடினாலும், அல்லது எத்தனை வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்தாலும், அவர்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில், ஏதாவது ஒரு தேவைக்காக மற்றவர்களிடம் கடன் வாங்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர். இது எல்லா தரத்தினருக்கும் பொதுவானதாக இருப்பதோடு, தவிர்க்க முடியாத ஒரு விடயமாகவும் உள்ளது.

“கடன் நட்பை முறிக்கும்”, “கடன் நல்லுறவை பாதிக்கும்” போன்ற பல வாசகங்கள் பரவலாக பேசப்பட்டாலும் கடன் பெறுவது பல சந்தர்ப்பங்களில், எவராலும் தவிர்க்க முடியாத விடயமாக இருப்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளவே செய்வர். இவ்வாறு தேவையுடையோர் கடன் கேட்டு வரும்போது அதை வழங்குகின்றவர்கள் சிறந்தவர்களாகவும், நல்லுள்ளம் கொண்டவர்களாகவும் இருப்பதைக் காணலாம். ‘மற்றவர்களின் கஷ்டங்களை போக்க வேண்டும், அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டும், அவர்களது அவசரத்துக்கு உதவ வேண்டும்’, போன்ற நல்லெண்ணங்களோடு உதவி செய்பவர்களுக்கு கடன் பெறுபவர்கள் எப்போதும் நன்றி விசுவாசத்தோடு நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

பெற்ற கடனை உரிய நேரத்தில் காலம் தவறாமல் திருப்பிச் செலுத்துதல் கட்டாயமாகும். இவ்வாறு செய்வதற்கு கடன் பெற்றவர்கள் முழுமையான முயற்சிகளை செய்ய வேண்டியது அவசியமாகும். எந்த வகையிலும் கடன் கொடுத்தவர்களை ஏமாற்றவோ, அவர்களுக்கு ஏமாற்றமளிக்கும் விதத்தில் நடந்து கொள்ளவோ அல்லது அவர்கள் மனம் வருந்தும் வகையில் செயற்படவோ கூடவே கூடாது.

இவ்வாறு தவறிழைப்போர் நம்பிக்கை துரோகம் செய்பவர்களாக ஆவதோடு, கடன் கொடுக்கும் நல்ல உள்ளம் கொண்டவர்களை, உதவி செய்யும் அவர்களது மனப்பாங்கிலிருந்து தூரமாக்கும் செயற்பாடுகளை செய்பவர்களாக ஆகின்றனர். இதனால் அத்தகைய நல்லவர்கள், இன்னும் ஒருவருக்கு கடன் வழங்கி உதவிடும் எண்ணத்தை கைவிடும் நிலைக்கும் ஆளாகி விடுவார்கள். இது எந்த அளவு மோசமான செயல் என்பதை கடன் பெறும் ஒவ்வொருவரும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

கடன் பெறுபவர்கள் அதனை திருப்பி கொடுக்கும்போது, கடன் கொடுத்தவர்கள் அவர்களிடமிருந்து மேலதிகமாக எதனையும் எதிர்பார்க்காமல் இருந்தாலும் கூட, அவர்களுக்கு நன்றிக் கடனாக, அல்லது நல்லெண்ணத்தை மேலும் வளர்ப்பதற்காக, ஏதாவது ஒரு நல்ல சன்மானத்தை அல்லது வெகுமதியை சேர்த்துக் கொடுப்பது மிகச் சிறந்த பண்பாக அமையும். அத்துடன் அது கொடுப்போரின் நல்லெண்ணத்தை மேலும் வளர்ப்பதாகவும் அமையும்.

இவற்றிற்கு மாற்றமாக கடன் பெற்றவர்கள், கடன் கொடுத்தோரை ஏமாற்றுவதோ, கடன் பெற்ற தொகையைத் திருப்பி செலுத்தாமல் கபளீகரம் செய்து அவர்களுக்கு துரோகம் செய்வதோ, அல்லது ‘பிறகு தருகிறேன்’ என்று சொல்லி காலம் கடத்துவதோ, பெற்ற பணத்தோடு தலைமறைவாகி விடுவதோ கூடவே கூடாது. இது மனிதத் தன்மையை மறந்து செயல்படும் நயவஞ்சகர்களின் செயலாக அமைந்துவிடும். இத்தகையை இழி நிலைக்கு கடன் பெற்றவர்கள் ஆகிவிடக் கூடாது. இத்தகைய கேவலமானவர்கள் சமூகத்துக்கே சாபக்கேடானவர்கள்.

பிறரிடமிருந்து சிறிய அளவிலாயினும் அல்லது பெரிய அளவிலாயினும் கடன் வாங்கியவர்கள் இவ்விடயங்களைக் கருத்தில் கொண்டு, பெற்ற கடனை உரிய முறையில், உரிய நேரத்தில் தவறாது திருப்பிச் செலுத்திட உறுதி கொள்ளுதல் வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**கடன்கள் கொடுத்து உதவுவார் நல்லுள்ளம் கொண்டோர்**
**கவலைகள் நீங்குதேபெறுவோரின் துயர்கள் மறைவதால்**
**கடன் பெறுவோர் பொறுப்போ டதனை மீளளித்திடனும்**
**கடனேயென்று கருத்தின் றிருப்பது இழிசெயலுணரனும்**

## பிரிந்தார் பெருமை

### ‘கலை நிலா’ உவைஸ் ஷெரீப்




பிரபல ஒலி, ஒளி பரப்பாளர் ‘கலை நிலா’ உவைஸ் ஷெரீப், கடந்த அக்டோபர் 04ஆம் திகதி (2023.10.04), தனது 73வது அகவையில் இவ்வுலகைப் பிரிந்தார். மேடை, வானொலி, தொலைக்காட்சி அறிவிப்பாளராகவும், மேடை, தொலைக்காட்சி நிகழ்சிகளின் தயாரிப்பாளராகவும் புகழ் பெற்ற உவைஸ் ஷெரீப், அனுராதபுரத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தார்.

1980களின் இறுதிப் பகுதியில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நான் நடத்திய “இளைஞர் இதயம்” நிகழ்ச்சியில், அறிமுக கலைஞராக பங்குபற்றியவர். இன்றைய காலத்தில் பரவலான இரசிகர் பட்டாளத்தை தனதாக்கிக் கொண்டிருந்தவர். இலங்கை இந்திய பிரபல கலைஞர்கள் பலரின் அபிமானம் பெற்ற அறிவிப்பாளராக மிளிர்ந்தவர்.

‘ஐரிஎன்’ தொலைக்காட்சியில், ஆரம்ப காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த, எம். பி. ஹுசைன் பாரூக் தயாரித்தளித்த “முத்துச் சரம்” நிகழ்ச்சியின் உதவித் தயாரிப்பாளராக அவரோடு நீண்ட காலம் கடமையாற்றி அனுபவம் பெற்றார். இலங்கையில் இன்று பிரபலமாகவுள்ள ‘ஸ்டார் தமிழ்’ தொலைக்காட்சியில் முஸ்லிம் நிகழ்ச்சிகளை தொடர்ச்சியாக, சிறப்பாக தயாரித்து வழங்கி வந்தார். அத்துடன் பிறை தொலைக்கட்சி, ‘டான் டிவி’ போன்றவற்றிலும் இவரது நிகழ்ச்சிகள் சிறப்பாக ஒளிபரப்பாகின. இவர் நடத்திய தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், நேர்காணல்கள் போன்றவற்றில் தவறாது என்னையும் பங்குபற்றச் செய்தமை என்றும் என்னால் மறக்க முடியாததாகும். அத்துடன் அன்றைய காலத்தில் எனது சகோதரர் ரஷீத் எம் ரியால் ஏற்பாட்டில், இஸ்லாமிய பெருநாள் தின சிறப்பு நிகழ்ச்சிகளை உவைஸ் ஷெரீப் வழங்கிய நினைவுகளும் பசுமையானவை.

இலக்கிய, கலைத்துறைகளில் ஆற்றல் மிக்கவர்களையும் ஆர்வம் உள்ள இளையவர்களையும் தேடிப் பிடித்து அவர்களுக்கு தனது நிகழ்ச்சிகளில் பொருத்தமான இடமளித்து சிறப்பித்தமை அவருக்கே உரிய தனித்துவமான சிறப்பாகும். இவர் தோற்றுவித்த “கலை நிலா மன்றம்” சார்பில் பல்வேறு மேடை நிகழ்ச்சிகளை வழங்கி வந்துள்ளதோடு பல கலைஞர்களுக்கு உதவிகளும் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தென்னிந்தியாவில் இருந்து பிரபல கலைஞர்களை இலங்கைக்கு அழைத்து வந்து மேடை நிகழ்ச்சிகளை ஜனரஞ்சகமாக நடாத்துவதில் கலைநிலா உவைஸ் ஷெரீப் பிரபலம் பெற்றிருந்தார். அவர்கள் அனைவரும் இவரது கலைத்துறை அர்ப்பணிப்பையும், ஆற்றல்களையும் சிலாகித்து கூறியதை நான் அறிவேன்.

‘பகைவரே இல்லை’ எனும் அளவிற்கு எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், பாடக பாடகிகள், கலைஞர்கள், அனுசரனையாளர்கள், வர்த்தகர்கள், இரசிகர்கள் என அனைத்து தரப்பினருடனும் அன்பாகவும் பண்பாகவும், மென்மையாகவும் பழகிய கலைநிலா உவைஸ் ஷெரீபின் பிரிவு, இலங்கை கலைத்துறையில் இலகுவில் நிரப்ப முடியாத ஓர் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல..

## நலமே வாழ்வோம்

### உலகை அச்சுறுத்தும் 'இ–சிகரெட்'



உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் வருடாந்தம் புகையிலைப் பொருட்களால் உயிரிழக்கின்றனர். அவற்றில் முதன்மையானது சிகரெட். இதில் புதிதாகச் சேர்ந்துள்ள சிகரட்தான் ‘இ சிகரெட்’.

“இதில் சிகரெட்டைப் போல நெருப்பு கிடையாது, சாம்பலோ, புகையோ வெளியே வராது. துர்நாற்றம் வீசாது. புகைப்பழக்கத்தில் இருந்து மக்களை விடுவிக்கும்” என்று கவர்ச்சிகரமான வார்த்தைகள் மூலம் இ சிகரெட் விற்பனை பரவலாகியுள்ளது.

பெரும்பாலும் வழக்கமான சிகரெட் போன்ற வடிவத்திலேயே இ சிகரெட் இருக்கிறது. இது இரு பகுதிகளைக் கொண்டிருக்கும். ஒரு பகுதியில் திரவ வடிவிலான நிகோடினும், மறு பகுதியில் பெற்றியும்(Battery) இருக்கும். பெற்றியில் உள்ள பொத்தானை அழுத்தும் போது திரவ நிகோடின், ஆவி நிலைக்கு மாறி பயன்படுத்துபவரின் தொண்டைக்குள் இறங்கும்.

சிகரெட்டைப் பயன்படுத்துபவர் நிகோடின் புகையை உள்ளிழுத்து வெளியே விடுவதால் புகை பிடிக்கும் போது ஏற்படும் அதே உணர்வை இதிலும் பெறுவார். இந்த நிலை வேப்பிங் (Vaping) என்று அழைக்கப்படுகிறது. இ சிகரெட்டில் உள்ள நிகோடின், இ திரவம் என்று அழைக்கப்படுகிறது. இதில் நிகோடின் உடன், புரொப்பலின் கிளைகால், கிளிசரின், கன உலோகங்கள், சுவையூட்டிகள் போன்றவை நிரப்பப்பட்டிருக்கும். இவற்றால் புற்றுநோய் ஏற்படும் அபாயமும் உண்டு என்று ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இ திரவம் பயனாளிகளைக் கவரும் வகையில், சாக்லேட், பழங்கள், காப்பி சுவைகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பேனா, குழல், சிகரெட், பென் டிரைவ் என பல்வேறு வடிவங்களிலும் இ சிகரெட்டுகள் கிடைக்கின்றன. இவை ஆன்லைனிலும் விற்பனையாகின்றன.

இதில் பயன்படுத்தப்படும் காரியம், கார்பனைல் சேர்மங்கள் ஆகியவற்றால் உடலுக்குக் கடுமையான பாதிப்பு ஏற்படும். உடனடி விளைவாக போதை உணர்வும் உடல் செயல்பாட்டில் பாதிப்பு, நுரையீரலில் பிரச்சினை ஏற்பட வாய்ப்புண்டு. இ சிகரெட்டால் வெளியாகும் நச்சுத்தன்மை கொண்ட வேதிப்பொருட்கள், ஃபார்மிக் அமிலம், ஃபார்மால்டிஹைடு ஆகியவற்றால் அதிக ஆபத்து உண்டு. தொடர்ந்து பயன்படுத்துபவர்களுக்கு வலி, தலைவலி, தொண்டையில் எரிச்சல், அரிப்பு, நுரையீரல் புண், வீக்கம், இருமல் ஏற்பட வாய்ப்புள்ளது. இசிகரெட்டில் பயன்படுத்தப்படும் பேட்டரி சூடாகி, சில நேரங்களில் வெடிக்கவும் வாய்ப்புண்டு.

இ சிகரெட் ஏற்படுத்தும் அபாயங்கள் குறித்து உலக சுகாதார நிறுவனம், ஆய்வறிக்கையை வெளியிட்டு உலக நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்தது. இசிகரெட்டின் ஆபத்து குறித்து தெரியவந்த பின் ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் அவற்றைத் தடை செய்தன. இந்தியாவும் இப்போது இதனை தடைசெய்துள்ளது.

புகையிலை, பீடி, சிகரெட், இசிகரெட் என எந்த வடிவத்தில் புகைத்தல் தொடர்பான பொருட்கள் விற்பனையானாலும் அவை ஆபத்தானவையே. கேடு விளைவிப்பனவே. எனவே எந்த உருவில் இவை வந்தாலும் இத்தகைய நச்சுப் பொருட்களைப் பயன்படுத்தாமல் இருப்பதே நமக்கும், நம்மைச் சுற்றி இருப்பவர்களுக்கும் நன்மையாக அமையும்.

## தகவல் களஞ்சியம்

### புது வகையிலான கார் கடத்தல்



கார்களின் இலக்கத்தகடு(Number Plate)களைப் பயன்படுத்தி நடத்தப்படும் புதிய வகையிலான ‘கார் கடத்தல்’ போக்கு பற்றி சிலர் எச்சரிக்கின்றனர். இது பற்றி கவனத்துடன் செயல்படுதல் ‘வருமுன் காப்பது’ போன்றது.

இத்தகைய வாகன கொள்ளையர்கள் தாம் தெரிவு செய்யும் வாகனத்தை, அது நிறுத்துமிடம் வரை பின் தொடர்கிறார்கள், வாகன ஓட்டுனர் வாகனத்தை விட்டு வெளியேறிய பிறகு, அவர்கள் அதன் இலக்கத் தகட்டை அகற்றி தம்மிடம் வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். ஓட்டுனர் திரும்பி வந்து வாகனத்தை ஓட்டிச் செல்லும்போது அவர்கள் அதனைப் பின்தொடர்கிறார்கள்.

ஆள் நடமாட்டம் குறைந்த இடமொன்றில் அவர்கள் அந்த வாகனத்தை முந்திச் சென்று, ‘அந்த இலக்கத் தகட்டை நீங்கள் தொலைத்து விட்டீர்கள்’ என தெரிவிக்கும் வகையில் கண்ணாடிக்கு ஊடாக காட்டுவார்கள், அத்துடன் அவர்கள் அதை திரும்பக் கொடுக்க விரும்புவதுபோல் உணர்த்துவார்கள்.

அந்த வாகனத்தின் இலக்கத் தகட்டை திரும்பப் பெற வாகனத்தை நிறுத்தும்போது, துப்பாக்கி அல்லது ஆயுதங்களைக் காட்டி அச்சுறுத்தி காரை அல்லது வாகனத்தை எடுத்துச் செல்கின்றனர். இது மிகவும் நன்றாக ஒத்திகை செய்யப்பட்ட, பயிற்சி செய்யப்பட்ட, ஒழுங்கமைக்கப்பட்ட செயற்திட்டமாகவே இருக்கிறது. மற்றும் இவையனைத்தும் மிக விரைவாக நடந்து முடியும்.

இவ்விடயத்தில் வாகன ஓட்டுனரே காரை நிறுத்துவதால் மற்றவர்களுக்கும் சந்தேகம் ஏற்படுவது குறைவு. எனவே இது போன்ற விடயங்கள் பற்றி நினைவில் வைத்து, முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது சிறந்தது.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207**

---



# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 57



கே. பத்மானந்தன்

# திருவள்ளுவத்தில் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்



செயற்றிட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்பு அல்லது ஒரு நிறுவனத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு முகாமைத்துவமானது அவ் வேலைத்திட்டத்துக்குத் தேவையான அல்லது அந்நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான பொருள் (money), ஏற்ற கருவிகள் (means), ஏற்ற காலம் (time), பயன்படுத்தப் போகும் செயல்முறை அல்லது தொழில் நுட்பம் (execution), அவ் வேலையை செய்ய உகந்த இடம் அல்லது அந் நிறுவனத்தை ஆரம்பிக்க உள்ள இடம் (place) ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் பிழையாமல் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இக் கருத்துகளை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் சிறப்பாக விளக்குகின்றார்.

**"பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்**
**இருள்தீர எண்ணிச் செயல்" (குறள்–675)**

ஒரு செயற்றிட்டத்தில் ஈடுபடுவதற்கு முன்பு அதற்குத் தேவையான பொருள் அல்லது நிதி, ஏற்ற கருவிகள் அல்லது சாதனங்கள், ஏற்ற காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தையும் குறையில்லாமல் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் சிந்தித்து பார்த்துக் கொள்ள வேண்டியது செயற்றிட்ட முகாமையாளரின் பொறுப்பு என்கிறார் திருவள்ளுவர். எனவே திருவள்ளுவரினால் இங்கு கூறப்பட்டுள்ள விடயங்களைக் கருத்தில் கொள்ளாது செயற்படும் முகாமையாளரினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு திட்டமும் அல்லது ஆரம்பிக்கப்படும் எந்த ஒரு நிறுவனமும் வெற்றிகரமாக அமையாது என்பதில் சந்தேகமில்லை.

இங்கு திருவள்ளுவர் பொருள் என்று கருதும்போது கெடும்பொருள் பெறும்பொருள் என்று இருவகையினைக் குறிப்பிடுகின்றார். அதாவது கெடும் பொருள் என்பது நட்டமாகவும் பெறும்பொருள் என்பது இலாபமாகவும் கருதப்படலாம். அதேபோன்று கருவி எனும்போது தன்னிடம் இருக்கும் கருவிகளையும் போட்டியாளரிடம் இருக்கும் கருவிகளை கருதும்படியும் கூறுகின்றார். காலம் எனும்போது அது தனக்கு உதவும் காலமாகவும் போட்டியாளருக்கு உதவும் காலமாகவும் கருதப்படவேண்டும் என்கிறார். அதேபோன்று வினை எனப்படும் செயல்முறையைக் கூடத் தான் செய்யும் செயல்முறை மற்றும் போட்டியாளர் செய்யும் செயல் முறை என்று கொள்ள வேண்டும் என்கின்ற திருவள்ளுவர், இடம் என்று வருகின்றபோதும் கூட தனக்குரிய இடமாகவும் போட்டியாளருக்குரிய இடமாகவும் அதனைக் கொள்ள வேண்டும் என்கிறார்.

ஒரு நிறுவனத்தின் முகாமைத்துவமானது ஒரு செயற்றிட்டத்தைத் தொடங்க முன் அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்களை அல்லது எடுத்துக்கொண்ட திட்டத்துக்கு இழப்பை அல்லது தோல்வியை அல்லது வெற்றியை ஏற்படுத்தக் கூடிய காரணிகளை கவனத்துடன் பகுப்பாய்வு செய்ய வேண்டும் (situation analysis). அதேபோல் ஒரு திட்டத்தை அல்லது நிறுவனத்தை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் பொருள், ஏற்ற கருவி, ஏற்ற காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய காரணிகளையும் முகாமைத்துவம் ஆழமாகப்பகுப்பாய்வு (indepth analysis) செய்ய வேண்டும்.

அதாவது எதிர்வுகூறல் (Forecasting,) தீர ஆய்தல் (Deliberation), மதிப்பீடு செய்தல் (Valuation), பாகுபாடு செய்தல் (Discrimination), நிர்ணயம் செய்தல் (Fixing), திட்டமிடல் (planning), எண்ணுதல் (Numbering), அளவிடல் (Measuring) மற்றும் கணக்கிடல் (Accounting) போன்ற விடயங்களை பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல்முறை, உகந்த இடம் ஆகிய ஐந்தும் தொடர்பாக முகாமைத்துவம் கருத்தில் கொள்ளும்போது நிறுவனத்தில் அல்லது செயற்றிட்டத்தில் ஏற்படக்கூடிய பிழைகள், தவறுகள் மற்றும் இழப்புகளைத் தடுக்க உதவும்.

மேலும் ஒரு செயற்றிட்டத்தை அல்லது தொழிலை ஆரம்பிப்பதற்குத் தேவைப்படும் காரணிகளின் தொடர்ச்சித்தன்மை அல்லது ஒழுங்கமைப்பு (Sequence of factors) அவதானிக்கப்பட வேண்டிய இன்னுமொரு முக்கிய விடயமாகும். இங்கே திருவள்ளுவர் செயற்றிட்டம் ஒன்றுக்கு அல்லது வேலை ஒன்றுக்குத் தேவையான காரணிகளாகிய பொருள், ஏற்ற கருவி, ஏற்ற காலம், ஏற்ற செயல்முறை, ஏற்ற இடம் என்பவற்றை தெளிவாக ஒழுங்கு படுத்தியி ருக்கின்றார்.

ஒரு செயற்றிட்ட முயற்சியினூடாக உற்பத்தி செய்யப்படவேண்டிய பொருளே உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற கருவிகளை தீர்மானிக்கிறது. அதேபோல் உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற காலத்தை உற்பத்தி செய்யப்படவேண்டிய பொருளும் பொருத்தமான கருவிகளும் சேர்ந்து தீர்மானிக்கின்றன. இவ்வாறே பொருளும், பொருத்தமான கருவிகளும், பொருத்தமான காலமும் சேர்ந்து உற்பத்திக்குப் பொருத்தமான ஏற்ற பயன்படுத்தப்பட வேண்டிய செயல்முறையைத் (Mode of Operation) தீர்மானிக்கின்றன. பொருளும் பொருத்தமான கருவிகளும் பொருத்தமான காலமும் பயன்படுத்தப்படப் போகும் செயல்முறையும் சேர்ந்து தொழிற்சாலை அமைவதற்கு ஏற்ற இடத்தை தீர்மானிக்கின்றன.

இந்த உற்பத்தி தொடர்பான முறையான ஒழுங்கமைப்பை அதாவது உற்பத்தி முகாமைத்துவம் (Production Management) பற்றிய கருத்துக்களை திருவள்ளுவர் சிறப்பாக இக்குறளில் வெளிப்படுத்துகிறார்.

ஒரு செயற்றிட்டத்தினை தொடங்குவதற்கு முன் செயற்றிட்ட முகாமையாளர் அதனோடு தொடர்புடைய பிரச்சினைகளை இனம் கண்டு கொள்ள வேண்டும். அவ்வாறு இனம் கண்டு கொண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காணாது அல்லது அவற்றைக் கண்டு கொள்ளாது செயற்றிட்டத்தினை ஆரம்பித்தால் அது தோல்வியில் முடிவடையும். இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்.

**"தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்**
**ஏதப்பா டஞ்சு பவர்" (குறள். 464)**

இழிவு தருவதாகிய குற்றத்துக்கு அஞ்சுகின்ற ஒருவர் தெளிவு இல்லாத செயலைத் தொடங்கமாட்டார் என்கிறார் திருவள்ளுவர். சிக்கல்களையும் ஏற்கனவே உள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் சிக்கல்கள் அனைத்தையும் நீக்கிய பின்னரே ஒரு திட்டத்தை தொடங்க வேண்டும். தெளிவில்லாத செயற்றிட்டத்தைத் தொடங்கிவிட்டால் தொடக்கம் முதலே மனப்பயம் உண்டாகி அது பின்னர் தோல்வியில் முடிந்தால் பொருள் இழப்பும் இழிவும் உண்டாகும்.. அத்தோடு காண்பவர் கேட்பவர் எல்லோரும் அந்தச் செயற்றிட்டத்தைத் தொடங்கியதற்காகக். குற்றம் சாட்டுவார்கள் என்கிறார். எனவே செயற்றிட்டம் பற்றிய தெளிவான அறிவு வேண்டும். அதேபோன்று பின்னாளில் பிறரால் தூற்றப்படும் நிலைமைக்கு உள்ளாகாத செயற்றிட்டமாக இருக்க வேண்டும் இவ்வகையான உகந்த சூழல் நிலவாவிட்டால் திட்டத்தைத் தொடங்கக் கூடாது.

அதேபோன்று ஒரு செயற்றிட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பு செலவு, வருமானம், லாபம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் வலியுறுத்துகின்றார்.

**"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்**
**ஊதியமுஞ் சூழ்ந்து செயல்" ( குறள் 461)**

அதாவது கணக்கு வழக்குப் பார்த்துச் செயற்றிட்டத்தைத் தொடங்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். உண்மையில் வரவு செலவு இலாபம் என்று பொருள் அளவு மட்டத்தில் மட்டும் நிறுத்திவிடாது அதற்கும் அப்பால் நன்மை, தீமை, மிஞ்சுவது எல்லாவற்றையும் ஆராய்ந்து செயல்பட வேண்டியது திட்ட முகாமையாளரின் கடமையாகும். சூழ்ந்து செயல் என்பதற்கு ஆராய்ந்து செய்க என்று பொருள். அதாவது சீர்தூக்கிப் பார்ப்பது. செயற்றிட்டம் ஒன்றின் பயன் என்பது நிகழ்காலம் எதிர்காலம் என்ற இரண்டையும் சார்ந்து இருப்பதனால், தீர ஆராய்ந்த பின்பே திட்டத்தை ஆரம்பிக்கத் துணிய வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். ஏற்படக்கூடிய இலாப நட்டங்களை அல்லது நன்மை தீமைகளைத் துல்லியமாகக் கணிக்க முடியாவிட்டாலும் அந்தத் திட்டத்தின் பலம் பலவீனம் என்பதனை முன்னரே அறிந்து கொள்ள முடியும். இதனையே சாத்திய அறிக்கை (Feasibility Study) என்பர். இதேபோன்று ஏற்படக்கூடிய இலாப நட்டங்களையும் செலவு பயன் பகுப்பாய்வு (Cost Benefit Analysis) செய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும். ஆகவே ஆரம்பிக்க இருக்கின்ற திட்டத்தின் மூலம ஏற்படக்கூடிய அழிவு, ஆக்கம், கிடைக்கக் கூடிய பயன் ஆகிய மூன்றையும் இத்தகைய ஆய்வுகளைச் செய்து சீர்தூக்கிப் பார்த்து ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே அந்தத் திட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

*(தொடரும்)*



**தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்**

***தெளிவுரை :***
ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக்குறித்துப் பொய்ச் சொல்லக்கூடாது, பொய் சொன்னால் அதைக்குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

# இவ்வார மழலைகள்




சுமித் குமார் / சஜீவனி

# குறுக்கெழுத்துப் போட்டி இல. 83

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | | 17 | 18 | |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | 24 | 25 | | 26 |

பெயர் ..................................................
வகுப்பு ..................................................
தொலைபேசி இல ..................................................
பாடசாலை பெயர் ..................................................
வதிவிட முகவரி ..................................................
..................................................
.............................. ..................................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) உலகில் புரியாத விடயங்களை ஆதாரங்களுடன் நிரூபிப்பது அறிவியல். அந்த அறிவியலை இவ்வாறு மற்றொரு பெயரிலும் குறிப்பிடலாம்.
(8) ஆடைகளில் படிந்துள்ள கடுமையான அழுக்கு இச்சொல்லால் குறிப்பிடப்படும். மாசு என்ற அர்த்தமும் இச்சொல்லுக்கு உள்ளது.
(11) வேட்டையாடி இரை பிடிக்கும் கொடிய மிருகம் இது. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த இம்மிருகம் காட்டுக்கு அரசன் என்று குறிப்பிடப்படுவதுண்டு. (தலைகீழான சொல்)
(15) தன்மை, பன்மை பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)
(17) எமது உடலின் பிரதான அங்கம் இது. உடலின் கட்டுப்பாட்டு அறை என்றும் கூறலாம். உடலின் அத்தனை இயக்கங்களையும் கட்டுப்படுத்துகின்ற பிரதான உறுப்பு இங்குதான் உள்ளது. (தலைகீழான சொல்)
(22) மாடுகளில் ஆண் இனத்தைக் குறிக்கின்ற மரபுச்சொல்.

**மேலிருந்து கீழ்**

(1) மனிதனின் அறிவியல்துறை முன்னேற்றத்தைப் பொறுத்தவரை போக்குவரத்துத்துறையில் உச்சகட்டக் கண்டுபிடிப்பு இது. தரையினாலும், நீரினாலும் மாத்திரமே மனிதனால் பயணம் செய்ய முடியுமென்ற எண்ணத்தை உடைத்தெறிந்துள்ள போக்குவரத்துச் சாதனம்.
(3) உலகம், வையம், வையகம், தரணி, அகிலம், புவி, பூமி என்பதெல்லாம் ஒத்தபொருள் சொற்கள். அவை போன்று மற்றொரு ஒத்தபொருள் சொல் இது.
(5) உலகில் அரிதாகக் கிடைப்பதாலும், ஆபரணங்கள் தயாரிப்பில் பயன்படுவதாலும், மற்றைய உலோகங்களைப் போன்று தாக்கம் புரிந்து துருப்பிடிப்பதில்லை என்பதாலும், இந்த உலோகத்தின் பெறுமதி அதிகம். (தலைகீழான சொல்)
(9) சந்தேகநபர்கள் மற்றும் குற்றவாளிகளை தடுத்து வைக்கின்ற இடம். (தலைகீழான சொல்)
(12) கலைகளில் வல்லவன் இவன்.
(16) கொடிய விஷமுள்ள பாம்பு இனமொன்று இது. இப்பெயரில் உலோகமொன்றும் உள்ளது.
(21) உண்மை அன்புடன் பழகும் உற்ற நண்பி இவள்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 82

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கோதுமை 04. மனை 07. குட்டி 10. அட்டை
13. நாடி 17. தீவு 19. குளம் 23. புவி

**மேலிருந்து கீழ்**

01. கோட்டை 03. அடிமை 04. மகுடி
14. நாக்கு 15. அம்பு 17. தீமை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 81

### பாராட்டு பெறுவோர்

**1. சபீஹா சப்ராஸ்**
தரம் 07, அல் கசாலி பாடசாலை,
அட்டுலுகம, பண்டாரகம.

**2. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**3. எம்.இசட்.எம். ஹாபீஸ்**
தரம் 03A, அல் நசரம் ம.ம. வித்தியாலயம்,
அவிசாவளை வீதி, மஹா புத்கமுவ, வெல்லம்பிட்டிய.

**4. எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, க/வெலிப்பன்னை ரஹ்மானிய்யா ம.வி.,
இல. 41B, முஸ்லிம் வீதி வெலிப்பன்னை.

**5. ஸீனத் தஹானி சாட்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**6. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**7. எம்.ஏ.எப். ஸனா**
தரம் 03, தி/ கிண்ணியா மு.ம.ம. வித்தியாலயம்,
நகர சபை வீதி, கிண்ணியா 04.

**8. ரமீஸ் இமாரா இஸ்ரா**
தரம் 10, அல் அமான் மு.ம.கல்லூரி,
கல்லொலுவ, மினுவாங்கொடை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 83
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



# விமானம்

முதலில் மனிதனை பறக்க வைப்பதற்கு பல முயற்சிகள் செய்து இருக்கிறார்கள். ஆனால் அதில் பல தோல்விகள் ஏற்பட்டது. பிறகு ரைட் சகோதரர்கள் விமானத்தை கண்டுபிடித்தார்கள். இன்று பல வகையான விமானங்கள் உள்ளன.

விமானம் பறப்பதற்கு முக்கிய காரணம் எயார்ஃபாயில் தொழில்நுட்பம். விமானத்தின் இறக்கை விமானத்தை மேல் எழும்பி பறக்க உதவுகிறது. விமானத்தின் இறக்கை வளைந்து இருக்கும். இதை கௌ ஷேப் என்று அழைப்பார்கள். இந்த வளைந்த இறக்கை ஆனது இறக்கையில் மோதும் காற்றை கீழே தள்ளுகிறது. அதாவது இங்கு நியூட்டனின் மூன்றாம் விதி வேலை செய்கிறது. இறக்கை காற்றை கீழே தள்ளும் போது காற்றானது விமானத்தை மேலே பறக்க செய்கிறது. விமானம் மேலே பறக்க தொடங்கியதும் சீராகவும் நேராகவும் பறப்பதற்கு அதன் எஞ்சின் செயல்படுகிறது. இன்று பயன்படுத்தப்படும் நவீன விமானங்களில் டர்போகன் எஞ்சின்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த டர்போகன் எஞ்சின்கள் அதிகப்படியான உந்துசக்தியை எழுப்பி விமானத்தை நேராக பறக்க செய்கிறது. விமானம் பறப்பதற்கு விமானத்தில் பொருத்தப்பட்டு உள்ள மூன்று பாகங்கள் மிகவும் உதவுகின்றன. அதாவது *Flap, Slat, Aileron* ஆகும்.

விமானம் கீழிருந்து மேலெழும்பும் போது *Flap, Slat* ஐ கீழே இறக்குவார்கள். இது இறக்கையின் பரப்பளவையும் ஏர்ப்ளையின் வளைவையும் அதிகப்படுத்தும். இதனால் அதிக போர்ஸ் உண்டாகி விமானம் மேலே எழும்புகிறது.

மேலே எழும்பி ஒரு குறிப்பிட்ட தொலைவில் பறக்க ஆரம்பித்தவுடன் *Flap, Slat*யும் அது இருந்த பழைய இடத்திலேயே வைத்து விடுவார்கள். நேராக பறக்கும் விமானத்தை கீழே இறக்க விமானத்தின் பின்புறத்தில் உள்ள எயார்ப்ளை கீழே இறக்குவார்கள்.

அதேபோல் விமானம் பறக்கும் அளவை அதிகரிக்க எலிவேட்டரை மேலே எழுப்புவார்கள். விமானத்தின் திசையை மாற்ற விமானத்தின் பின்புறத்தில் செங்குத்தாக உள்ள ரேடரை திருப்பினால் போதும். ஆனால் அப்படி செய்தால் விமானத்தில் உள்ள பயணிகள் அதிர்வை உணர்வார்கள்.

எனவே விமானத்தின் இறக்கையில் உள்ள *Aileron*களில் ஒன்றை மேல்நோக்கியும் மற்றொன்றை கீழ்நோக்கியும் வைத்தால் சுலபமாக விமான திரும்பும்.

அதேபோல், விமானம் கீழே இறங்க விமானத்தின் இறக்கையில் உள்ள *Flap, Slat*யை மேலே தூக்குவார்கள்.

மேலும் அதில் உள்ள *Spoiler*யும் தூக்குவார்கள். இது விமானம் தரை இறங்க உதவுகிறது.

எம். பெனிட்டா...

# காரம் சாப்பிட்டால் நாக்கில் ஏன் எரிச்சல் உண்டாகிறது?

மிளகாய் விதைகளில் கெப்செய்சின் (*capsaicin*) என்ற வேதிப்பொருள் இருக்கிறது.

நாம் காரம் அதிகமான உணவைச் சாப்பிடும் போது நக்கில் எரிச்சல் உண்டாகிறது.

உதடு, நாக்கு, மூக்கு போன்ற பகுதிகளில் சீதமென்சவ்வுப் படலம் அந்தப் பகுதியைப் பாதுகாக்கும் பணியில் இருக்கிறது.

அந்நியப் பொருள்களைத் தடுப்பது அவற்றின் முக்கிய பணி, நாம் காரமாக உணவு சாப்பிடும்போது, உடலுக்குக் கேடு விளைவிக்கும் அளவுக்கு காரம் இருக்கிறது என்பதை நம் மூளை எச்சரிக்கிறது.

உடனே அந்தக் காரத்தால் உடல் உறுப்புகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக சீதமென்சவ்வுப் படலம் நீரைச் சுரக்கிறது.

அதனால் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் கண்களிலிருந்தும் நீர் வெளியேறுகிறது.

சீதமென்சவ்வு மூலம் இந்தத் தகவல் குடலுக்கும் செல்கிறது. குடல் கெப்செய்சினை வெளியேற்றும் நடவடிக்கைகளில் இறங்குகிறது. அதிகமான காரத்திலிருந்து குடலைக் காக்க, நீரைச் சுரந்து பேதியாக வெளியேற்றி விடுகிறது.

தி. பாரதி...

# அதிசயக்குதிரை

கிருஷ்ண தேவராயரின் படைகளுள் குதிரைப் படையும் ஒன்று. குதிரைப்படையும் வலிமையுள்ளதாக இருந்தது. சண்டை இல்லாத காலங்களில் குதிரைகளைப் பராமரிக்க மந்திரிகளில் ஒருவர் ஒரு யோசனை சொன்னர்.

அதாவது ஒரு வீட்டிற்கு ஒரு குதிரையையும் அதற்குத் தீனி போடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகையும் கொடுக்கப்பட்டு வந்தது. அத்தொகையைப் பெற்றுக்கொண்டு குதிரையை நன்கு ஊட்டமளித்து வளர்த்தனர். அதேபோல் தெனாலிராமனுக்கும் ஒரு குதிரை கொடுக்கப்பட்டது.

ஆனால் தெனாலிராமனோ ஒரு சிறிய கொட்டகையில் குதிரையை அடைத்து வைத்து புல் போடுவதற்கு மட்டுமே ஒரு சிறிய தூவாரம் வைத்திருந்தான். அந்த துவாரத்தின் வழியாக புல்லை நீட்டியவுடன் குதிரை வெடுக்கென வாயால் கௌவிக் கொள்ளும். மிகவும் சிறிதளவு புல் மட்டுமே தினமும் போட்டு வந்தான். அதனால் அக்குதிரை எலும்பும் தோலுமாக நோஞ்சானாக இருந்தது.

குதிரைக்குத் தீனி வாங்கிப் போடும் பணத்தில் தெனாலிராமன் நன்கு உண்டு கொழுத்தான்.

ஒரு நாள் குதிரைகள் எப்படி இருக்கின்றன என்று காண அனைவருக்கும் செய்தி அனுப்பி குதிரைகளை அனைத்தையும் அரண்மனைக்கு வரவழைத்து பார்வையிட்டார். குதிரைகள் அனைத்தும் மிக திருப்திகரமாக இருந்ததால் மன்னர் மகிழ்ச்சியடைந்தார்.

அங்கிருந்த தெனாலிராமனை அழைத்து "உன் குதிரையை ஏன் கொண்டு வரவில்லை" என மன்னர் கேட்டார். அதற்கு தெனாலிராளோ "என் குதிரை மிகவும் முரட்டுத்தனமாக இருக்கிறது. அதை என்னால் அடக்க முடியவில்லை. அதனால் தான் இங்கே கொண்டு வர வில்லை." என்றான். "குதிரைப்படைத் தலைவரை என்னுடன் அனுப்புங்கள். அவரிடம் கொடுத்தனுப்புகிறேன்" என்றான் இதை உண்மையென்று நம்பிய மன்னர் குதிரைப்படைத் தலைவனை தெனாலிராமனுடன் அனுப்பினார்.

குதிரைப்படைத் தலைவருக்கு நீண்ட தாடியுண்டு குதிரைப் படைத்தலைவரும் அந்த துவாரத்தின் வழியாக குதிரையை எட்டிப் பார்த்தார். உடனே குதிரை அது புல்தான் என்று நினைத்து அவரது தாடியைக் கவ்விப் பிடித்துக் கொண்டது. வலி பொறுக்காத குதிரைப் படைத்தலைவர் எவ்வளவோ முயன்றும் தாடியை குதிரையிடமிருந்து விடுவிக்க முடியவில்லை. இச்செய்தி மன்னருக்கு எட்டியது. மன்னரும் உண்மையிலேயே இது முரட்டுக் குதிரையாகத்தான் இருக்கும் என்று எண்ணி தெனாலிராமன் வீட்டுக்கு விரைந்தார்.

அங்கு குதிரையின் வாயில் குதிரைப்படைத் தலைவரின் தாடி சிக்கி இருப்பதை அறிந்து அந்தக் கொட்டகையைப் பரிக்கச் செய்தார். பின் குதிரையைப் பார்த்தால் குதிரை எலும்பும், தோலுமாக நிற்பதற்குக் கூட சக்தியற்று இருந்ததைக் கண்டு மன்னர் கோபங்கொண்டு அதன் காரணத்தைத் தெனாலிராமனிடம் கேட்டார். அதற்குத் தெனாலிராமன் "இவ்வாறு சக்தியற்று இருக்கும் போதே குதிரைப் படைத்தலைவரின் தாடியை கவ்விக்கொண்டு விடமாட்டேன் என்கிறது. நன்கு உணவு ஊட்டி வளர்த்திருந்தால் குதிரைப் படைத் தலைவரின் கதி அதோகதிதான்" என்றான். இதைக் கேட்ட மன்னன் கோபத்திலும் சிரித்து விட்டார். பின்னர் தெனாலிராமனை மன்னித்து விட்டார்.



# கிவி

கிவி (Kiwi) என்பது நியூசிலாந்தில் வாழும், அப்டெரிக்ஸ் (அப்டெரிகைடே குடும்பத்தைச் சேர்ந்த ஒரே இனம்) இனத்தைச் சேந்த சிறிய, பறக்காத, ஏதாவதொரு வகைப் பறவையைக் குறிக்கும். ஒரு வீட்டுக் கோழியின் அளவைக் கொண்ட கிவிகளே வாழுகின்ற றட்டைட்களில் மிகச் சிறியனவாகும்.

இவை கசோவரிகள் அல்லது மோவாக்களுக்கு நெருக்கமான உறவையுடையனவாகக் கருதப்பட்டாலும், இவற்றின் பரிணாமத் தோற்றம் உறுதியாகத் தெரியவரவில்லை. பல கிவி வகைகள் அழியும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளன.



## முதலாமிடம்

அகில இலங்கை கர்நாடக சங்கீத போட்டி அண்மையில் நடைபெற்றது. இதில் தனி இசை போட்டியில் மாகாண மட்டத்தில் கொழும்பு விவேகானந்தா தேசிய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் தி. திபிசேக் முதலாமிடத்தை பெற்றார்.

# கண்டுபிடிப்பாளர்கள்

இன்று அறுவைச் சிகிச்சை முதல் பல்வேறு சிகிச்சைகளுக்கு மயக்கமருந்து செலுத்தப்படுகிறது. மயக்க மருந்தை கண்டுபிடித்தவர் அமெரிக்கரான வில்லியம் தோமஸ் கிரீன் மார்ட்டன். இவர் தனது உயிரை பணயம் வைத்துதான் மயக்கமருந்து கண்டுபிடிப்பில் வெற்றி பெற்றார்.

அமெரிக்காவின் சார்ல்டன் நகரில் 1819ஆம் ஆண்டு வில்லியம் தோமஸ் கிரீன் மார்ட்டன் பிறந்தார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் பால்டிமோர் பல் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். பயிற்சி காலம் முடிந்த பின்னர் ஹார்வர்ட் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து மருத்துவராக வர முயற்சித்தார். ஆனால் படிப்பை முடிக்க போதுமான பணம் அவரிடம் இல்லாததால் படிப்பு தடைபடவே செய்தது. எனவே அதிகமாக பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

வலியில்லாமல் பற்களைப் பிடுங்கிட புதிய முறையைக் கண்டுபிடித்து அதன் மூலமாக பணத்தை சேர்த்திடலாம் என கனவு கண்டார். அதனைப் பற்றித் தெரிந்து கொள்ள டாக்டரிடம் பயிற்சி பெற முடிவு செய்தார். டாக்டர் ஜாக்சன் என்பவர் அவருக்கு பயிற்சி அளித்தார். அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது பல்லுடன் தொடர்பு கொண்டுள்ள நரம்பை துண்டிக்கும் நேரத்தில் தாங்க முடியாத வலி ஏற்படுவதை விளக்கத்துடன் கூறினார் மார்ட்டன்.

அதைக்கேட்ட டாக்டர் ஜாக்சன் ஈதர் எதில்ஆக்சைட் பல் அருகே தடவிவிட்டால் அந்தப்பகுதியானது மரத்துப்போகும் என்று கூறினார். மறுநாளே சிறிய புட்டி ஈதரையும் உடனே அனுப்பிவைத்தார்.



## வில்லியம் தோமஸ் கிரீன் மார்ட்டன்

அந்த நேரத்தில் பல் வலியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் மார்ட்டனிடம் வந்தாள். அவரோ அப்பெண்ணின் சொத்தைப் பல்லின்மீது சிறிதளவு ஈதரை தடவினார். பின்னர் பல்லைக்குடைந்து எடுத்தார். அந்தப்பெண்ணோ சிறிதும் அழவில்லை, தனக்கு வலி இருப்பதாகவும் கூறவில்லை. ஈதரைப் பயன் படுத்தியே சொத்தைப் பல்லை முழுமையாக எடுத்துவிட்ட மார்டன் அந்த இடத்தின் பள்ளத்தையும் நிரப்பிவிட்டார்.

அந்த சிகிச்சை மூலமாக ஈதர் சிறந்த வலி நிவாரணி என்பதை புரிந்து கொண்டார். அந்த ஈதரின் உதவியால் உடல் முழுக்க உணர்ச்சியை இழக்கச்செய்ய முடிந்தால் சிறிதும் வலியில்லாமல் அறுவை சிகிச்சையை செய்திடலாம் என சிந்தித்தார்.

சிறுபிராணிகளைப் பிடித்து ஈதரின் ஆவியை சுவாசிக்கச் செய்தார். அதன் விளைவாக அவைகள் மடிந்தன. மனிதர்களுக்கும் இந்த நிலையே ஏற்படும் என்பதை உணர்ந்து அச்சமடைந்தார்.

பல் மருத்துவ பணிகளையும் கவனித்துக்கொண்டு தனது இலட்சிய ஆராய்ச்சியைத் தொடர்ந்தார்.

முதலில் செல்ல பிராணிகளை முகரச் செய்திட அவர் குளோரிக் ஈதரை பயன் படுத்தினார். ஆனால் இப்போதோ தனது செல்ல நாயை முகர வைக்க சல்பூரிக் ஈதர் பயன்படுத்தியதை அடையாளம் கண்டுகொண்டார். இந்த இரண்டு ஈதர்களின் வேறுபாட்டையும் தெளிவாகப் புரிந்து கொண்டார்.

தன் உதவியாளர் ஒருவரை அழைத்து சல்பூரிக் ஈதரை வாங்கி வரச் செய்தார். அதைக்கொண்டு ஒரு சிறுவனை முகரச் செய்தார். அந்த சிறுவனுக்கோ மயக்கமே வரவில்லை. இதனால் மறுபடியும் குழப்பமடைந்த மார்ட்டன். தானே கடைக்குச் சென்று நம்பிக்கைக்கு உரியவரிடம் உயர்ந்த சல்பூரிக் ஈதரை வாங்கினார். தனது அறைக்குச் சென்று தனது உயிரையே பணயம் வைத்து அந்த ஈதரை முகர்ந்து மயங்கிவிழுந்தார். பின்னர் மயக்கம் தெளிந்து தான் கண்டுபிடித்த வலிநிவாரணியைப் பயன்படுத்தி ஒரு நோயாளியின் பல்லையும் பிடுங்கினார். தனது சோதனையில் வெற்றி கிடைத்ததும் அறுவை மருத்துவத்தையும் எளிதாக வலியில்லாமல் செய்திடலாமே என்ற எண்ணத்தை செயல்படுத்த ஆரம்பித்தார்.

பொது மருத்துவமனையில் பணியாற்றி வந்த ஜான் சாலின்ஸ்வார் என்பவரிடம் சென்று தனது எண்ணத்தை தெரியப்படுத்தினார். முதலில் ஏளனம் செய்த அவர் பின்னர் நம்பத் தொடங்கினார். அங்கு கில்பர்ட் என்பவருக்கு அறுவை மருத்துவம் செய்யும் நாளில் மார்ட்டன் வரவழைக்கப்பட்டார். தனது சிகிச்சையைத் தொடங்கினார்.

கில்பர்ட் ஈதரின் ஆவியை முகர்ந்து நினைவிழந்தார். சிகிச்சை முடிந்து நினைவு திரும்பியதும் தன் உடம்பில் கீறியதை எதையும் உணரவில்லை என்று தெளிவுபடுத்தினார். இது மருத்துவ உலகில் பெரும் வியப்பை ஏற்படுத்தியது. ஆனால் ஒரு சிலர் இது மாயவித்தையோ? இல்லை ஜால வித்தையோ என மார்ட்டனை ஏளனம் செய்தனர்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு பெண்ணின் காலை வெட்டி எடுக்கும் சிகிச்சையை மயக்க மருந்து கொடுத்து, வலியில்லாமல் நடத்தி வெற்றி கண்டார்.

# விளையாட்டு



# மெய்வல்லுனர் போட்டிகளில் புதிய நம்பிக்கை

சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர

ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் 17 ஆண்டுகளின் பின் மெய்வல்லுனர் போட்டிகளில் பதக்கங்களை வெல்ல இலங்கை வீர, வீராங்கனைகளால் முடிந்துள்ளது.

சீனாவின் ஹான்சோ நகரில் இன்று (8) நிறைவடையும் 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை மெய்வல்லுனர் அணி கடந்த மூன்று விளையாட்டு விழாக்களிலும் (2010, 2014 மற்றும் 2018) எந்த ஒரு பதக்கமும் வெல்லாத நிலையிலேயே கலந்து கொண்டது.

இந்நிலையில் இந்த பதக்கம் இல்லாத வறட்சியை போக்கி முதலாவது பதக்கத்தை ஈட்டி எறிதல் வீராங்கனை நதீஷா தில்ஹானி லேகம்கே வென்றார். இதன்போது 61.57 மீற்றர் தூரம் வீசிய அவர் இலங்கை சாதனையை படைத்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து இலங்கையால் ஒரு மணி நேரத்திற்குள் மூன்று பதக்கங்களை வெல்ல முடிந்தது. கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி நடைபெற்ற பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் 18 வயதேயான தருஷி கருணாரத்ன தங்கப்பதக்கத்தை வென்றதோடு தொடர்ந்து ஆண்கள் மற்றும் பெண்கள் 400 மீற்றர் அஞ்சலோட்ட அணிகள் வெண்கலப் பதக்கத்தை வென்றன.

தருஷி 400 மீற்றர் அஞ்சலோட்ட அணியிலும் இடம்பிடித்ததன் மூலம் இரண்டு பதக்கங்களை வென்றார். 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2:02.20 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்து முதலிடம் பிடித்த தருஷியின் தங்கப் பதக்கமானது இலங்கை ஆசிய விளையாட்டுப் போட்டியின் மெய்வல்லுனர் போட்டியில் 21 ஆண்டுகளில் பெற்ற முதல் தங்கப் பதக்கமாக இருந்தது.

முன்னதாக 2002 ஆம் ஆண்டு தென் கொரியாவின் புஷானில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் சுசந்திகா ஜயசிங்க மற்றும் தமயந்தி தர்ஷ கடைசியாக தங்கப் பதக்கங்களை வென்றிருந்தனர். தருஷியின் தங்கம் ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் இலங்கை பெற்ற 12 ஆவது தங்கப் பதக்கமாகவும் இருந்தது.



பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி 3:30.88 நிமிடங்களில் போட்டியை நிறைவு செய்தது இலங்கை சாதனையாகவும் இருந்தது. இந்த அணியில் தருஷியுடன் நதீஷா ராமனாயக்க, ஜயேஷி உத்தரா மற்றும் சயுரு மெண்டிஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

400 மீற்றர் அஞ்சலோட்டத்தின் ஆண்கள் பிரிவிலும் வெண்கலம் வென்ற இலங்கை அணி 3:02.55 நிமிடங்களில் அந்தப் போட்டியை நிறைவு செய்திருந்தது. இந்த அணிக்கு ராஜித்த ராஜகருணா, பபசர நிக்கு, அருண தர்ஷனவுடன் காலிங்க குமாரவும் இடம்பெற்றிருந்தனர். ஆசிய விளையாட்டு விழாவின் 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை பதக்கம் ஒன்றை வென்றது 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதக்கத்தை பறிகொடுத்த தவறு

மெய்வல்லுனர் போட்டியில் இலங்கைக்கு மற்றொரு வெள்ளிப் பதக்கம் கிடைக்க விருந்தபோதும் இழைக்கப்பட்ட தவறினால் அது பறிபோனது. 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை இரண்டாவது இடத்துடன் போட்டியை நிறைவு செய்திருந்தது. எவ்வாறாயினும் இலங்கை அணி தடியை மாற்றும்போது தவறு இழைத்திருப்பது கண்டறிப்பட்டது.

அருண தர்ஷன மற்றும் நதீஷா ராமநாயக்க இடையே தடி மாற்றப்படும் போது விதி மீறல் நிகழ்ந்தது. அதாவது அருண கோட்டினை மீறி கால்வைத்தது பாதகமாக மாறியது.

## பெண்கள் கிரிக்கெட்டில் பதக்கம்

மெய்வல்லுனர் போட்டிகள் தவிர்த்து இலங்கைக்கு மகளிர் கிரிக்கெட் அணி வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்று கொடுத்தது. டி20 வடிவத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் இலங்கை மகளிர் அணி தங்கப் பதக்கத்திற்காக இந்தியாவை எதிர்கொண்டது. என்றாலும் அந்தப் போட்டியில் தோற்றதன் காரணமாக இலங்கைக்கு வெள்ளிப் பதக்கமே கிடைத்தது.



என்றாலும் இலங்கை அணிக்கு மற்றொரு பதக்க எதிர்பார்ப்பாக இருந்த ஆடவர் கிரிக்கெட் போட்டி பெரும் ஏமாற்றத்துடன் முடிந்தது. இலங்கை நேரடியாக காலிறுதி போட்டியிலேயே ஆப்கானிஸ்தானுக்கு எதிராக களமிறங்கியது. என்றாலும் அந்தப் போட்டியில் சஹன் ஆரச்சிகே தலைமையிலான இலங்கை அணி தோல்வியை சந்தித்து வெளியேறியது.

கிரிக்கெட் தவிர இம்முறை விளையாட்டுப் போட்டியில் அணி விளையாட்டுகளாக ரக்பி, கடற்கரை கரப்பந்தாட்டம், ஈ ஸ்போட்ஸ், கொல்ப், படகு ஓட்டம் மற்றும் ஸ்கொஷ் போட்டிகளை பிரிநிதித்துவம் செய்து வீர, வீராங்கனைகள் பங்கேற்றபோதும் அவர்களால் போதுமான திறமையை வெளிப்படுத்த முடியவில்லை.



தனிப்பட்ட போட்டிகளாக பெட்மின்டன், படகோட்டம், பாய்மரப் படகுப் போட்டி, குத்துச்சண்டை, செஸ், கராட்டே, ஸ்குவஷ், டைகொண்டோ, பாராம் தூக்குதல், மல்யுத்தம் மற்றும் வுஷு போட்டிகளிலும் இலங்கை வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர். எனினும் ஒருவரால் கூட பதக்கத்தை நெருங்க முடியாமல்போனது.

அர்டிஸ்டிக் ஜிம்னாடிக் போட்டியில் பங்கேற்ற நதில நெத்விரு தனது தனிப்பட்ட திறமையை வெளிப்படுத்தினார். ஒட்டுமொத்த போட்டியிலும் அவர் 71.065 புள்ளிகளை பெற்ற போதும் 18 போட்டியாளர்களில் 17 ஆவது இடத்தையே பிடித்தார். அதேபோன்று ஆண்களுக்கான ஒற்றையர் கொல்ப் போட்டியில் நடராஜ் தங்கராஜுக்கு நான்காவது சுற்று வரை முன்னேற முடிந்தது. என்றாலும் 288 புள்ளிகளை பெற்ற அவர் போட்டியில் 34 ஆவது இடத்தையே பெற்றார்.

## நீச்சலில் 2 தேசிய சாதனைகள்

இலங்கை அணியின் நீச்சல் போட்டிகள் நிறைவின்போது இரு தேசிய சாதனைகளை முறியடிக்க மாத்திரமே வீரர்களால் முடிந்தது.

ஆண்களுக்காக 50 மீற்றர் பாக்ஸ்ட்ரோக் நீச்சல்போட்டியின் ஆரம்ப சுற்றில் பங்கெற்ற அகலங்க பீரிஸ் 26.01 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்து புதிய தேசிய சாதனை ஒன்றை படைத்தார்.

அதேபோன்று ஆண்களுக்கான 50 மீற்றர் பட்டர்பிளை நீச்சல் போட்டியில் 24.58 வினாடிகளில் போட்டியை நிறைவு செய்த மத்தியு அபேசிங்க இலங்கை சாதனையை படைத்தார். இதன்போது அவர் அகலங்க பீரிஸ் கடந்த ஆண்டு படைத்த சாதனையையே முறியடித்தார்.

## பதக்கங்கள்

ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் இந்த விளையாட்டுப் போட்டிக்கு முன்னர் இலங்கை வென்றிருந்த மொத்த பதக்கங்களின் எண்ணிக்கை 46 ஆகும். அதில் 11 தங்கம், 11 வெள்ளி மற்றும் 24 வெண்கலப் பதக்கங்கள் அடங்கும். இந்த நிலையில் இம்முறை போட்டி முடிவில் அந்த எண்ணிக்கையில் மேலும் 5 பதக்கங்கள் சேர்ந்துள்ளன.

இலங்கை இதுவரை வென்றிருக்கும் மெய்வல்லுனர் பதக்கங்களின் எண்ணிக்கை 27 என்பதோடு, அதற்கு மேலும் ஒரு தங்கம், வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் சேர்ந்துள்ளன. இதன்படி ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் மெய்வல்லுனர் போட்டிகளில் 12 தங்கப் பதக்கங்களும் 7 வெள்ளிப் பதக்கங்களும் 31 வெண்கலப் பதக்கங்களும் பெறப்பட்டுள்ளன.



# மாறிவரும் உலகக் கிண்ணத்தில் தாக்குப்பிடிக்குமா இலங்கை?

கடந்த கால போட்டி முடிவுகள், அணியில் இடம்பிடித்திருக்கும் வீரர்கள் மற்றும் போட்டித் தந்திரங்கள் அனைத்தையும் பார்க்கும் போது உலகக் கிண்ணத்தில் இலங்கை அணியின் வெற்றி வாய்ப்பு என்பது ஒப்பீட்டளவில் குறைவு. போதாக் குறைக்கு அணியில் முன்னணி வீரர்களின் காயம், உலகக் கிண்ணத்திற்கான இரு பயிற்சிப் போட்டிளிலும் தோல்வி என்று எதுவும் இலங்கைக்கு சாதகமாக இல்லை.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் இருந்த உலகக் கிண்ணத்திற்கும் தற்போது நடைபெறும் உலகக் கிண்ணத்திற்கும் இடையே ஏகப்பட்ட வித்தியாசங்கள் இருக்கின்றன. அணிகளின் பலத்தை இதனை வைத்து கணிக்க வேண்டி இருக்கிறது.

அதாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் 400 ஓட்டங்கள் பெறப்பட்ட சந்தர்ப்பங்கள் 24 பதிவாகி இருக்கின்றன. இதில் 15 தடவைகள் 2011 உலகக் கிண்ணத்திற்கு பின்னரே பெறப்பட்டிருக்கின்றன. எனவே தற்கால ஒருநாள் கிரிக்கெட்டில் 300க்கு குறைவான வெற்றி இலக்கு என்பது மிக அரிதாகவே சவால் மிக்க இலக்காக மாறிவிட்டது.

தனிப்பட்ட முறையில் பார்த்தாலும் 2011 உலகக் கிண்ணத்திற்கு முன்னர் வீரர் ஒருவர் ஒருநாளில் இரட்டைச் சதம் பெற்ற சந்தர்ப்பம் ஒன்றே ஒன்று தான் பதிவானது. ஆனால் அதற்குப் பின்னர் ஒன்பது இரட்டைச் சதங்கள் பெறப்பட்டிருக்கின்றன.



எல்லாவற்றுக்கும் காரணம் கிரிக்கெட் உலகில் டி20 போட்டிகளின் செல்வாக்கு அதிகரித்ததாகும். சர்வதேச டி20 தவிர்த்து ஐ.பி.எல், எல்.பி.எல் போன்ற டி20 லீக்குகளும் கிரிக்கெட்டை முழுமையாகப் புரட்டிப்போட்டுவிட்டது.

கடந்த மூன்று ஆண்டுகளை பார்த்தோம் என்றால் விளையாடப்பட்ட மொத்த ஒருநாள் சர்வதேச போட்டிகளின் எண்ணிக்கை 396. அதுவே இந்தக் காலப்பகுதியில் 1190 டி20 சர்வதேச போட்டிகள் விளையாடப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்த கிரிக்கெட்டும் டி20 போட்டிகளுக்கு முக்கியத்துவம் அளித்து சுழலுவதால் உருவாகும் புதிய வீரர்களும் அதற்கு ஏற்பவே மாறிவிட்டார்கள்.

எனவே இம்முறை உலகக் கிண்ணத்தில் இதன் தாக்கத்தை முழுமையாக பார்க்க முடியுமாக இருக்கும். துடுப்பாட்ட வீரர்கள் முதல் பந்து தொடக்கம் கடைசி பந்து வரை தொய்வின்றி வேகமாக ஓட்டங்களை குவிக்க முயல்வார்கள் என்பதோடு பந்துவீச்சாளர்கள் ஓட்ட வேகத்தை கட்டுப்படுத்தும் பாணிக்கு தமது பந்துவீச்சை மாற்றி வருகிறார்கள்.

பொதுவாக இந்திய ஆடுகளங்கள் சுழற்பந்துக்கு சாதகமாக இருக்கும் அதேநேரம் துடுப்பாட்ட வீரர்களும் ஓட்டங்களை தன்னிஷ்டத்திற்கு குவிப்பதற்கு வசதியானதாகவே இருக்கும்.

எனவே மாறி இருக்கும் ஒருநாள் கிரிக்கெட் மற்றும் போட்டித் தந்திரங்களுக்கு ஈடுகொடுத்து ஆடினாலேயே இந்த உலகக் கிண்ணத்தில் இறுதி வரை தாக்குப் பிடிக்க முடியும்.

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இதற்கு மிகப் பொருத்தமான அணிகளாக இருப்பதோடு நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இதற்கு ஏற்ப சவாலான அணிகளாக செயற்பட்டு வருகின்றன. ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் கூட தமது ஆட்டப் போக்கை டி20 கிரிக்கெட்டுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டிருக்கின்றன.

இதில் இலங்கை அணிக்கு இருக்கும் மிகப் பெரிய கவலை அது தனது இரண்டு முன்னணி பந்துவீச்சாளர்களை இழந்தே உலகக் கிண்ணத்திற்கு வந்திருக்கிறது. சுழற்பந்து வீச்சாளர் வனிந்து ஹசரங்க மற்றும் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர ஆட்டத்தை திசை திருப்பக் கூடியவர்கள்.

என்றாலும் இவர்கள் இல்லாதபோதும் இந்திய ஆடுகளத்திற்கு பொருந்தும் வகையில் மஹீஷ் தீக்ஷன மற்றும் துனித் வெல்லாளகேவின் சுழற்பந்து வலுவாகவே உள்ளது. டில்ஷான் மதுஷங்க, லஹிரு குமார, மதீஷ பதிரண மற்றும் கசுன் ராஜித்த ஆகியோரை கொண்ட வேகப்பந்து முகாமை குறைத்து மதிப்பிட முடியாது.

இலங்கையின் துடுப்பாட்ட வரிசை பந்துவீச்சை விடவும் பலமாக இருந்தபோதும் அண்மைய போட்டிகளில் ஏகப்பட்ட குறைகளை வெளிப்படுத்தியது. ஆசிய கிண்ண இறுதிப் போட்டியில் இந்தியாவிடம் 50 ஓட்டங்களுக்கு சுருண்ட இலங்கை வீரர்கள் நடந்த பயிற்சிப் போட்டி இரண்டிலும் தடுமாற்றம் கண்டது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது பயிற்சிப் போட்டியில் இலங்கை அணி 240 ஓட்டங்கங்களுக்கு 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்திருந்தபோதும் 294 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

ஆரம்ப வீரர் குசல் ஜனத் பெரேராவுக்கு பயிற்சிப் போட்டியின்போது தோள்பட்டையில் ஏற்பட்ட அசௌகரியம் மற்றும் அணித் தலைவர் தசுன் ஷானக்க ஓட்டம் பெற தவறியது என்ற குறைகளும் உலகக் கிண்ணம் ஆரம்பிக்கும் வரை நீடித்தது.

எப்படி இருந்தபோதும் உலகக் கிண்ணத்திற்கான போட்டி அட்டவணை என்பது ஓர் அணி பலவீனங்களை சரிசெய்து மீண்டு வருவதற்கு போதிய அவகாசத்தை தருவதாகவே உள்ளது.

அதாவது பத்து அணிகள் பங்கேற்கும் இம்முறை உலகக் கிண்ணத்தின் ஆரம்ப சுற்று போட்டிகள் ரவுண்ட் றொபின் அடிப்படையில் நடத்தப்பட்டு பின்னர் அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ரவுண்ட் றொபின் என்பதால் முதல் சுற்றில் ஒரு அணி மற்ற அணியுடன் ஒரு தடவை மோதும். இதன்படி ஓர் அணிக்கு மொத்தம் 9 போட்டிகள் கிடைக்கும்.

எனவே ஓர் அணி தன்னை ஸ்திரப்படுத்திக் கொள்ள இது வாய்ப்பை தருகிறது. குறிப்பாக இலங்கை எப்போதுமே தொடரின் இடையில் பெரிதான மாற்றங்களை செய்யாததை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இது வீரர்களிடையே நம்பிக்கை மற்றும் அனுபவத்தை ஏற்படுத்துவதோடு அணியை பலப்படுத்தவும் உதவுகிறது. இம்முறை உலகக் கிண்ணத்திலும் இலங்கை இந்த உத்தியை கையாளும் என்று எதிர்பார்க்கலாம்.

எஸ்.பிர்தௌஸ்...

## எமது சிங்கங்களை உற்சாகப்படுத்த அனைத்து இலங்கையர்களுக்கும் Dialog Television அழைப்பு விடுக்கிறது

Dialog Television உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான சிறப்பு பெக்கேஜை அனைத்து போட்டிகளையும் கண்டுகளிக்கும் வகையில் நீடித்துள்ளது.

Dialog Television, இலங்கையின் முன்னணி தொலைக்காட்சி கட்டண சேவை வழங்குனர், எதிர்வரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் அனைத்து போட்டிகளையும் நேரலையில் கண்டுகளிக்கும் வகையில் கிரிக்கெட் ரசிகர்களுக்கான சிறப்பு TV பெக்கேஜை நீடித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் 2023 ஒக்டோபர் 31 இற்கு முன்னதாக ரூ.350 + வரி செலுத்தி இந்த சிறப்பு பெக்கேஜை செயற்படுத்திக்கொள்ள முடியும். இதில் மூன்று உயர் துல்லிய (HD) அலைவரிசைகள் உட்பட ஐந்து அலைவரிசைகள் மூலமாக போட்டிகள் அனைத்தையும் கண்டுகளிக்க முடியும். இந்த பிரத்தியேகமான கிரிக்கெட் உலகக்கிண்ண அலைவரிசை pack ஆனது 50 நாட்களுக்கு செல்லுபடியாகும். Star Sports 1, Star Sports 2, Star Sports 1 HD, Star Sports Select HD 1மற்றும் Star Sports Select HD 2 அலைவரிசைகளூடாக நிகரற்ற பார்வையாளர் அனுபவத்தை பெற்றுக் கொள்ள முடியும். இந்த சிறப்பு pack ஐ வாடிக்கையாளர்கள் MyDialog App ஊடாக அல்லது "On <இடைவெளி> உங்கள் Dialog Television இணைப்பு இலக்கம் <இடைவெளி> 2023" என டைப் செய்து 0770 679 679 இற்கு SMS செய்வதன் ஊடாக செயற்படுத்திக் கொள்ள முடியும். மேலும், ரசிகர்கள் தவறவிட்ட போட்டியை அப்போட்டி ஒளிப்பரப்பாகிய 72 மணிநேரத்திற்குள் அவர்களது Dialog ViU Hub அல்லது ViU Mini ஊடாக கண்டுகளிக்க முடியும்.




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2023 ஒக்டோபர் 8 ஞாயிற்றுக்கிழமை



# இப்படி ஓர் ஆன்மிகம்



18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ரஷ்ய பேரரசில் தோன்றிய சர்ச்சைக்குரிய கிறிஸ்தவ மதப்பிரிவின் பெயர் கொப்ட்சி. சராசரி கிறிஸ்தவ தலைமை மற்றும் அரசின் கண்டிப்புக்கு மத்தியிலும் இந்த குழுவினர் பெரும் பிரபலம் பெற்றனர். என்றாலும் இவர்களின் வழிபாடுகள் பயங்கரமானது.

அதாவது இவர்களின் நம்பிக்கையின் பிரதானமானது ஆன்மீக வழிபாட்டுக்கு முற்றிலும் எதிரானது பாலியல் ஆசை என்பதாகும். எனவே இந்தக் குழுவினரின் பெரும்பாலானவர்கள் பாலியல் ஆசையை தடுக்க, ஆண்கள் தமது மர்ம உறுப்பை அகற்றுவதும் மற்றும் பெண்கள் தமது மார்பகங்களை அகற்றுவதுமாகும்.

20 நூற்றாண்டில் இந்தக் குழுவினரின் பிரபலம் உச்சத்தை பெற்றபோது அதில் சுமார் ஒரு மில்லியன் அங்கத்தவர்கள் வரை இருந்தார்கள். என்றாலும் சோவியட் ரஷ்யாவினால் இந்தக் குழுவினர் ஒடுக்கப்பட்டார்கள். இன்றும் கூட இந்த வழிபாட்டை பின்பற்றுபவர்கள் அங்கங்கே இருப்பதாகக் கூறப்படுகிறது.



## வயிற்றில் ஓட்டையுடன் வாழ்ந்த மனிதர்

கனடா நாட்டின் கூலித் தொழிலாளியான அலெக்சிஸ் சென்ட் மார்டின் என்பவர் தற்செயலாக துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இது நடந்தது 1822 ஆம் ஆண்டு. ஆனால் மார்டின் உயிர் தப்பிவிட்டார். என்ன ஆச்சரியம் என்றால் அவரது வயிற்றில் பெரிய ஓட்டை ஒன்று விழுந்துவிட்டது. வயிற்றுக்குள் என்ன நடக்கிறது என்று அதனூடாகப் பார்த்தால் தெரியும். இது மருத்துவ ஆய்வாளர்களுக்கு பெரும் உதவியாக இருந்தது. அடுத்து 12 ஆண்டுகளாக மருத்துவர்கள் அவரை வைத்து ஆராய்ச்சி நடத்த ஆரம்பித்தார்கள். மனித சமிபாடு பற்றி ஆராய்ச்சிக்கு அவர் பெரிதும் உதவியிருக்கிறார். வயிற்றில் அந்த ஓட்டையோடு அவர் மேலும் 58 ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருக்கிறார்.

# 128 ஆண்டுகள் காட்சி வைக்கப்பட்டவர் உடல் அடக்கம்




## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் கடந்த 128 ஆண்டுகளாக பதப்படுத்தப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்ட ஆடவர் ஒருவரின் உடல் பெரும் மரியாதைகளுடன் இறுதிக் கிரியை நடத்தப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

ஸ்டோன்மன் வில்லி என்று அறியப்பட்ட அந்த ஆடவர் உண்மையில் ஒரு சிறைக் கைதி. சின்னத் திருட்டுக்காக 1895 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட அவர் சிறுநீரக செயலிழப்பினால் 37 வயதில் மரணித்திருக்கிறார்.

இறுதிக் கிரியைக்காக உடல்களை சீரமைக்கும் புதிய தொழில்நுட்பத்தை பரிசோதித்தபோது வில்லியின் உடல் தற்செயலாக பதப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்நிலையில் பென்சில்வேனியாவின் ரீடிங் நகரில் இருக்கும் அவுமான்ஸ் இறுதிக் கிரியை இல்லத்தில் அவர் உடல் காட்சிப் படுத்தப்பட்டு வந்தது.

நூற்றாண்டுக்கு முந்தைய வடிவத்தில் கறுப்பு நிற அங்கி அணிவிக்கப்பட்டு சவப்பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும் வில்லியனின் தலைமுடி, பற்கள் அப்படியே தோற்றம் தருகிறது. என்றாலும் அவரது தோல் நிறம் மாறிவிட்டது.



உண்மையில் வில்லி கைது செய்யப்படும்போது ஜேம்ஸ் பென் என்று பொய்யான பெயரையே பொலிஸாருக்கு கொடுத்திருக்கிறார். எனவே அவர் அடையாளம் காணப்படாமல் பல ஆண்டுகள் இருந்திருக்கிறார்.

உள்ளூர் அதிகாரிகளுக்கு அவரது உறவினர் எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. என்றாலும் வரலாற்று ஆவணங்களை தேடிப்பிடித்தே அவரது உண்மையான பெயரை கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது.

"நாம் அவரை ஒரு மம்மியாக பார்க்கவில்லை. நாம் அவரை எமது நண்பன் வில்லி என்றே அழைக்கிறோம்" என்கிறார் அந்த இறுதிக் கிரியை இல்லத்தின் பணிப்பாளர் கைல் பிலன்கன்பில்லர்.

ஊர் மக்களால் வில்லியனின் உடல் வாகனத் தொடரணியில் எடுத்துச் செல்லப்பட்டு பெரும் மரியாதைகளுடன் கடந்த ஒக்டோபர் 07 ஆம் திகதி அடக்கம் செய்யப்பட்டது.

# போர்த்துகலில் வைன் வெள்ளம்



போர்த்துகலில் உள்ள சாவோ லூரென்சோ டோ பைரோ என்ற சிறிய நகரத்தின் தெருக்களில் சில நாட்களுக்கு முன் சிவப்பு நிறத்தில் வைன் நதி ஓடியது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

நகரத்தில் உள்ள மலையிலிருந்து லட்சக்கணக்கான லீற்றர் வைன் கீழே பாய்ந்து தெருக்களில் வழிந்தோடியதை அப்பகுதி மக்கள் திகைப்புடன் பார்த்தனர். நகரத்தின் வீதிகளில் வைன் ஆறாக ஓடிய காட்சியின் வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவின.

அந்த நகரில் உள்ள வைன் தயாரிப்பு ஆலையில் நடந்த விபத்துத்தான் இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. 20 இலட்சம் லீற்றருக்கும் அதிகமான சிவப்பு வைன் கொண்ட பீப்பாய்களை ஏற்றிச் சென்ற வாகனம் எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளானதால், இந்த வைன் வெள்ளம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஒலிம்பிக் நீச்சல் குளத்தை நிரப்பக்கூடிய அளவு வைன் வெள்ளமாக வீதிகளில் பெருக்கெடுத்து ஓடி அருகிலுள்ள ஆற்றில் கலந்துவிட்டது. இதனால், சுற்றுச்சூழல் பாதிப்பு அபாயமும் ஏற்பட்டுள்ளது. வைன் வெள்ளம் ஒரு வீட்டின் அடித்தளத்திலும் புகுந்ததாகக் கூறப்படுகிறது.

செர்டிமா நதி வைன் நதியாக மாறுவதற்கு முன், வைன் வெள்ளத்தைத் தடுக்க தீயணைப்புத் துறையினர் நடவடிக்கை எடுத்தனர். பெருக்கெடுத்து ஓடிய சிவப்பு வைன் வெள்ளம் வேறு திசையில் திருப்பிவிடப்பட்டு, அருகிலுள்ள வயல் வெளியில் பாயச் செய்யப்பட்டது என்று நியூயோர்க் போஸ்ட் தெரிவிக்கிறது.

இந்த வினோதமான சம்பவத்திற்கு மதுபான நிறுவனம் மன்னிப்புக் கேட்டு, நகரத்தில் வைன் வெள்ளம் பாய்ந்த இடங்களை சுத்தம் செய்யும் பொறுப்பை ஏற்பதாகவும் உறுதி அளித்துள்ளது. "சுத்தம் செய்தல் மற்றும் சேதங்களை சரிசெய்வது தொடர்பான செலவுகளுக்கு நாங்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறோம். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்" என்று அந்நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் கே. டானியலின் 'சாநிழல்' குறுநாவல் வெளியீடு..!









கனடா ஸ்காபரோ நகரில், 'மக்கள் எழுத்தாளர்' கே. டானியலின் 'சாநிழல்' குறுநாவல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை மாலை (30 09 2023) மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மூத்த தோழர் சூ. மார்க்கு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கே. பி. லிங்கம், செகா சிவா, தர்சன் சிவகுருநாதன் ஆகியோர் டானியல் பணிகள் குறித்தும் சாநிழல் நாவலின் சிறப்புக் குறித்தும் உரையாற்றினர். டானியலின் அரசியல், இலக்கிய, சமூகப் பணிகளில் இறுதிவரை அவருடன் உடன்நின்று செயற்பட்ட வி. ரி. இளங்கோவன், டானியலின் பணிகள் குறித்துச் சிறப்புரையாற்றினார்.

இளந்தலைமுறையினர் உட்படப் பெருந்தொகையானோர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் பலரும் விருப்புடன் நூலைப் பெற்றுச் சென்றனர். கல்வியாளர்கள் பார்வதி கந்தசாமி, மூத்த தோழர் வீரசிங்கம், ஹரிகரன் ஆகியோர் சிறப்புப் பிரதிகள் பெற்றனர்.

டானியலின் மூத்த மகன் புரட்சிதாசன் சிறப்புப் பிரதிகளை வழங்கினார். கனடா 'தேடகம்' அமைப்பினர் இந்நிகழ்வினைச் சிறப்பாக ஒழுங்கு செய்திருந்தனர். இந்நூல் ஏற்கனவே யாழ்ப்பாணம், சென்னை, தஞ்சாவூர் ஆதியாம் இடங்களில் வெளியீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது..!

# இசைக் கருவிகளை இசைப்போருக்கு போட்டி!

வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் புதிய அலை கலை வட்டம் நடத்தி வரும் எவோட்ஸ்2023 கலை கலாசாரப் போட்டித்தொடரின் இறுதிப் போட்டியாக வாத்திய இசைக் கருவிகளை மீட்டும் புதியவர்களுக்கான நேரடிப்போட்டி நிகழ்ச்சி நடை பெறவுள்ளது.

நிகழ்ச்சிக்கான நிபந்தனைகள் வருமாறு

போட்டியாளர் 14 வயது முதல் 25வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இசைக்குழுக்களில் வாத்தியக் கலைஞராகபங்கேற்பவராக இருக்கக்கூடாது.

கீபோட, கிற்றார, வயலின், வீணை, புல்லாங்குழல், நாதஸ்வரம், கிளாரினட், றம்பெட்,செக்ஸபோன் மற்றும் சித்தார் போன்ற வாத்தியங்களை பழகியவர்கள் பழகிக் கொண்டு இருப்பவர்கள் இதில் பங்கேற்கலாம்.

நேரடியாக நடைபெறும் இப்போட்டியில் கீழைத்தேய மேலைதேய சங்கீதங்களை அடிப்படைகளைக் கொண்ட பாடல்கள் இரண்டை இசைத்துக் காட்ட வேண்டும்.

போட்டியில் கலந்து கொள்பவர்கள் தமது இசைக் கருவிகளை தாமே கொண்டு வரவேண்டும்.

போட்டியில் கலந்து கொள்ள வருவோருக்கு போக்குவரத்து மற்றும் ஏனை செலவுகளுக்கான கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படமாட்டா.




போட்டியில் வெற்றிபெறுபவருக்கு அன்றைய தினமே முதல் பரிசு10.000 ரூபாவும் இரண்டாம் பரிசு 7.5000 ரூபாவும் மூன்றாம் பரிசு 5.000 ரூபாவும் சான்றிதழ்களும் வழங்கப்படும்

போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் வரும் ஒக்டோபர் 27ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவேண்டும்.

நடுவர்களின் முடிவே இறுதியானது.

மேலதிக விபரங்களைப் பெற 077 6274099, 0777 412604 0777 11906, 076 2002701 என்ற அலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

# ஆற்றலுக்கு ஆரவாரம்!

## நவீன எண் சொல்லிட நிபுணர், வாஸ்து ஆலோசகர், ஜனரஞ்சக எழுத்தாளர், கலாபூஷணம் மொழிவாணனுக்கு /பொன் விழா!




இம்மாதம் 2210 2023 அன்று மாலை 5.31 க்கு மருதானை டவர் மண்டபத்தில் நடை பெறுகிறது!

ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பிரபா கணேசன் ஏற்பாடு செய்திருக்கும் இவ்விழாவில், பொன்விழா நாயகன் மொழிவாணன் தடம் பதித்த துறைகளைப்பற்றி பல பேச்சாளர்களும் பேச உள்ளார்கள்.

'நவீன எண்சோதிடமும் மொழிவாணனும்' உடுவை தில்லை நடராஜா, 'கடி ஜோக்ஸ்சும் 'மொழிவாணனும் சமூகஜோதி ரபீக், 'கிரைம் சிறுகதைகளும் மொழி வாணனும்' திருமதி வாசுகி P வாசு, 'கவிதையும் மொழிவாணனும்' கிண்ணியா அமிர் அலி.'சிறுகதைகளும் மொழி வாணனும் கிண்ணியா அமீர் அலி.

'சிறுகதைகளும் மொழிவாணனும்' வைத்யமாநிதி, 'நடன பாடல்கள் ஒளிப்பதிவும் மொழிவாணனும் செல்வி நிவேதா ஜெகநாதன், வாஸ்துவும் மொழிவாணணனும் திருமதி தாம ரைச்செல்வி, தொலைக்காட்சி நாடகங்களும் மொழிவாணனும் தம்பி ஐயா தேவதாஸ்.

## நல்ல தம்பி

அமுத மொழி பேசும் நாவாலே
பொய் சொல்லல் ஆகாது – தம்பி
பொய் சொல்லல் வாழ்வினிலே
தீங்குகள் நிறைந்து நிற்கும் தம்பி

உண்மைகள் சீர் ஓங்கிடவே
நன்மைகள் பெருகிடுமே –தம்பி
உன் அழகிய நாமம் ஓங்கிடவே
வாழ்ந் திடல் வேண்டும் தம்பி

தீவினைகள் மலிந்த பூமியிலே
பார்த்து நடத்தல் வேண்டும். – தம்பி
படுகுழிகள் உள்ள பாதையிலே
கவன மாய் நடந்திடு தம்பி

நேர்மை மிக்க அறிவினையே
தேடிப் படித்து திடு –தம்பி
சீர் ஒழுக்கமுள்ள கல்வியிலே
நல்ல சிறப்புக்கள் உள்ளன. –தம்பி

இக்பால் அலி

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு கல்லூரித் தின நிகழ்வுகள்















கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு கல்லூரித் தின நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றன. இதன்போது சனாதிபதியின் மேலதிக செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் கலாசாலையின் முன்னாள் அதிபர்ளான வே.கா. கணபதிப்பிள்ளை மற்றும் வீ.கருணலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை, வித்தியாலய அதிபர் சாந்தினி வாகீசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது கலாசாலையின் முன்னாள் அதிபர் பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு எழுதிய வடக்கின் ஆசிரிய கலாசாலைகள் என்ற ஆய்வு நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் வெளியீட்டுரையை கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளரும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க கௌரவ ஆலோசகருமாகிய சரா. புவனேஸ்வரன் ஆற்றினார்.

நிகழ்வின் ஆரம்பத்தில் கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் பொங்கல் வழிபாடுகள் இடம்பெற்று நூறாண்டுகளைக் குறிக்கும் வகையில் 100 நிறைகுடங்கள், ஆலவட்டங்கள், இந்து இஸ்லாமிய கிறிஸ்தவ சின்னங்கள் தாங்கிய கொடிகளுடனான பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது.

நிகழ்வின்போது கலாதீபம் சஞ்சிகை கல்லூரித் தினச் சிறப்பிதழாக வெளியிட்டு வைக்கப்பட்டது. சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் விரிவுரையாளர் தர்சினி முத்துராஜா சனாதிபதியின் மேலதிக செயலர் இ.இளங்கோவனிடம் கையளித்தார். சஞ்சிகையின் இலத்திரனியல் பிரதியை கலாசாலையின் உபமுதல்வர் சத்தியா றஞ்சித் வெளியிட்டு வைத்தார்.











வத்துகாமம் பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நகர சபை மண்டபத்தில் அதிபர் எஸ். செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. விழாவில் பிரதம அதிதிகளாக கலந்து கொண்ட இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் எஸ். விஸ்வநாதன், சட்டத்தரணியான அனுஷியா சிவானந்தன் மற்றும் வத்துகாமம் வலய பிரதிக்கல்வி (ஆரம்பப் பிரிவு ) பணிப்பாளர் திருமதி பாரூக் உடையார் உரை நிகழ்த்துவதையும் பிரதம அதிதிகளை கௌரவிப்பதனையும் பரிசளிப்பு நிகழ்வினையும் படத்தில் காணலாம்.

படப்பிடிப்பு எஸ். ராமதாஸ்

# கவிதை வெள்ளம் புரண்டோடிய வலம்புரி கவிதா வட்டத்தின் 92 ஆவது கவியரங்கம்


















தலைநகரில் தமிழை வாழ வைத்துக் கொண்டிருக்கும் அமைப்பான வலம்புரி கவிதா வட்டம் Q தொடர் கவியரங்க வரிசையில் தனது 92 ஆவது கவியரங்கினை கடந்த பௌர்ணமி தினம் வெற்றிகரமாக நடாத்தியது. மழைக் காலம் என்பதையும் பொருட்படுத்தாமல் கவிஞர்களும், கவிதா ஆர்வலர்களும் மிகவும் உற்சாகமாக கவியரங்கில் பங்கேற்றனர்.

கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்ற 92 ஆவது கவியரங்கிற்கு கவிஞர் ந. தாமரைச் செல்வி தலைமை தாங்கினார். அவரது தலைமை அனைவரினதும் கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் அமைந்திருந்தது. அழகிய கவிதை வரிகளால் கவிதை பாட கவிஞர்களுக்கு அழைப்பு விடுத்தார். தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வுகளை நெறிப்படுத்த, வரவேற்புரையை செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்த்த நன்றியுரையை பொருளாளர் ஈழகணேஷ் வழங்கினார்.

பிரதேச சபையின் சாஹித்திய விருதினை தனது சிறுவர் நூலுக்காக பெற்றுக் கொண்ட கவிஞர் வாசுகி பி. வாசுகிக்கு வலம்புரி கவிதா வட்டம் தனது பாராட்டினைத் தெரிவித்தது. கவிஞர் தாமரைச் செல்வியின் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் கிண்ணியா அமீர் அலி, ஆர். தங்கமணி, எம். யூ. கமர்ஜான் பீபி, ரிஸ்லி சம்சாட், இ. கலைநிலா, ராஜா நித்திலன், பதுளை கபிலகன் ஒகஸ்டீன், வாசுகி பி. வாசு, எம். பிரேம்ராஜ், லைலா அக்ஷியா, வதிரி சி. ரவீந்திரன், பவானி சச்சிதானந்தன், ஆர். எஸ். ரஸ்மியா, உணர்ச்சிப் பூக்கள் ஆதில், மலாய்கவி டிவாங்ஸோ, அப்துல் அஸீஸ் ஆகியோர் கவிதை பாடினர். சமூகஜோதி ரபீக், மஸீதா அன்சார், சு. ஜெகதீஸ்வரன், நா. ஆனந்தீஸ்வரன், இளங்கோ கவிதா, இளங்கோ தமிழ், எம். பாலசுப்பிரமணியம் போன்றோர் சபையை அலங்கரித்தனர்.





படங்கள் முஹம்மத் நசார்

# கரிணி கண்ணனின் வைகல் நூல் வெளியீட்டு விழா






கடந்த 24.09.2023 யேர்மனியில் வெற்றிமணி பத்திரிகையின் 28 வது நூல் வெளியீடாக கரிணி கண்ணனின் வைகல் நூல் வெளியீட்டு விழா, மண்டபம் நிறைந்த மக்களோடு சிறப்பாக நடைபெற்றது.

விழா Dortmund தமிழர் அரங்கத்தில் பிற்பகல் 4.30 மணிக்கு மங்கள விளக்கேற்றல் , தேவாரம், அகவணக்கம், தமிழ் தாய்வாழ்த்து, வரவேற்பு நடனம் இவற்றுடன் ஆரம்பமானது.

கரிணி கடந்த 7 வருடங்களாக வெற்றிமணி பத்திரிகையில், இயற்கை, யோகாப்பயிற்சி, உடல், மனம், ஆரோக்கியவாழ்வு சம்மந்தமாக பல கட்டுரைகளை எழுதி வருபவர். அவர் எழுதியவற்றுள் சில தெரிவு செய்யப்பட்டு, வைகல் என்ற பெயருடன் நூலுருப்பெற்று வெளியானது.

=நூல் ஆய்வினை நூலாசிரியரின் ஆசிரியர் கௌரி ஜெயக்குமார் சிறப்பாக ஆய்வுசெய்தார். வெளியீட்டு உரையை வெற்றிமணி பத்திரிகை ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் நிகழ்த்தினார். அவர் தன்னுரையில் கரிணியின் முதல் அறிமுகம் நடந்த இதே மண்டபத்தில் அவர் நூலை வெற்றிமணி வெளியிடுவது மகிழ்ச்சி எனவும், வெற்றிமணியின் வெளியீட்டு பாரம்பரியம் பற்றியும் சுருக்கமாக குறிப்பிட்டு நூலுக்கு அணிந்துரை, தந்த முனைவர் மனோன்மணி சண்முகதாஸுக்கும், அறிவுரைகள் தந்த பேராசிரியர் அ. சண்முகதாஸ், ஆசியுரை தந்த செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கும் நன்றி தெரிவித்தார். வாழ்த்துரைகளை பல இலக்கிய நண்பர்கள் வழங்கினர். நூலின் முதல் பிரதியை கலைவிளக்கு சு. பாக்கியநாதன் பெற்றுக் கொண்டார்.

விழாவில், வெற்றிமணி தயாரிப்பான 'எழுதாத கவிதைக்கு முதல் பரிசு' மற்றும் ஆமாசாமி ஆகிய குறும்படங்கள் திரையிடப்பட்டன. படத்தின் கருவும், காட்சிகள் நடிப்பு சிறப்பாக இருந்தன, டப்பிங்குரல் இந்திய தமிழ் மக்கள் குரல் தாயகத்தின் குரலோடு அந்நியப்பட்டு இருந்ததாக இயக்குனர் வி. சபேசன் தன் கருத்தை முன்வைத்தார். இசையை பலரும் பாராட்டினர்.

அதனைத் தொடர்ந்து நூலாசிரியரின் கரிணியின் பதிலுரையுடன் விழா நிறைவுற்றது. நிகழ்ச்சிகளை சகநாயகன் சக்திவேல் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

கௌசி சிவபாலன் ஜெர்மனி









# ஐரோப்பிய மண்ணில் இலக்கிய பணி ஆற்றி வருபவர் கவிஞர் பசுவூர்க்கோபி ஐயாக்குட்டி கோவிந்தநாதன்

இலங்கையை விட்டு புலம்பெயர்ந்து சென்றாலும் தான் சென்ற நாட்டில் இருந்து கொண்டு தமிழ் மொழிக்கு பெருமை சேர்க்கும் வகையில் இலக்கிய பணிகள் பல ஆற்றி வருபவர் நெதர்லாந்தில் வாழ்ந்து வாழ்ந்து வரும் பசுவூர்க்கோபி ஐயாக் குட்டி கோவிந்தநாதன்.

கவிஞர் பசுவூர்க்கோபி பற்றி மேலும் கூறுவதானால் ..

ஈழத்து இலக்கியப்பரப்பில் மாத்திரமல்ல பூகோள நிலப்பரப்பெங்கும் இன்று பரந்து வாழும் இலக்கிய கர்த்தாக்களின் வரிசையில் நெடுந்தீவு பெற்றெடுத்த தவப்புதல்வனான "ஐயாக்குட்டி கோவிந்தநாதனையும்" குறிப்பிடலாம். இவர், பசுவூர்க்கோபி என்ற புனை பெயரில் அழகிய ஆழமான கருத்துகள் செறிந்த கவிதைகளை எழுதி ஈழத்தில் வெளிவரும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியிட்டு வந்தார். இவரின் முதலாவது கவிதை ஈழநாடு பத்திரிகையிலும் தொடர்ந்து உதயன், சஞ்சீவி போன்றவற்றிலும் வெளிவந்தன.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண காரணத்தால் நெதர்லாந்து நாட்டுக்கு புலம் பெயர்ந்து அங்கும் இலக்கிய பணி செய்து வருகிறார்.

இவரின் கவிதைகள் ஐரோப்பிய மண்ணில் வெளிவரும் கவிதை தொகுப்புகளிலும் இணையத்தளங்கலான லங்கா சிறி, தமிழன், பதிவு, எதிரி, வார்ப்பு, யாழ் நியூஸ், ஆதியுலகம், முகநூல், யாழ் இணையம், போன்றவற்றிலும் கவிஞரின் ஒலி ஒளி வடிவமான கவிதைகள் ஐரோப்பிய தமிழ் தொலைக் காட்சிகள் GTV, TTN ஆகியவற்றிலும் YouTube தளத்திலும் தமிழ் புரட்சி வானொலியிலும் வெளியாகியுள்ளன. தற்போதும் வெளிவந்துகொண்டுள்ளன..

கவிஞரின் குரலில் வெளியான ஒலி ஒளி கவிதைகளுள்.. "மாயான் கலண்டர்", "உயிரோடு கரை தின்ற கடல்", "அப்பு என்றுசொன்னால் ஆச்சரியப்படுவீர்கள்", "கொலைக்களமான குமுதினி", "முதல் கண்ட வெண்பனித்துறல்" போன்ற கவிதைகள் பலபேரின் பாராட்டுப்பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பாடலாசிரியரும் மேடைக் கவிஞருமாவார்.

இவர் ஆரம்பக்கல்வியை யா/நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை யா/நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் உயர் நிலைக் கல்வியை கிளி/ மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றார்.



அதன்பின் கிளி/ திருவையாறு மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக பணியாற்றினார்.

இவரது தந்தையார் அமரர் கந்தையா ஐயாக் குட்டி சமூக சேவையாளராக வாழ்ந்தவர். நெடுந்தீவு கிராமசபை உறுப்பினராகவும் கிராம முன்னேற்றசங்க தலைவராகவும் பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளராகவும் இருந்தவர். தாயார் முத்துப்பிள்ளை.

தற்போது கவிஞர் 1993ல் இருந்து நெடுந்தீவுக்கு Delft என பெயர் சூட்டிய ஒல்லாந்து நாட்டில் (நெதர்லாந்து) குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார்.

கனடாவில் 27,07,2019ல் இவரின் கவி வரிகளில் வெளியான "நெடுந்தீவு அழகான தீவல்லவோ" பாடல் எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டது.

அதைத்தொடர்ந்து எழு எல்லாம் இயலும் என்னும் பாடல் இறுவெட்டும் இவரின் வரிகளிலும் தயாரிப்பிலும் வெளியானது. இவரின் கவி வரியில் பல பாடல்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.. தமிழ்நாட்டில் 2019/2020 க்கான கவிஞர் வாலி விருது 25.12.2020 கவிஞர் வாலி கலை இலக்கிய அறக்கட்டளையினால் சிறந்த கவிதைக்காக வழங்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் புதிய அலை கலை வட்டத்தால் நடத்தப்பட்ட்ட சர்வதேச கவிதைப் போட்டியில் முதலாமிடத்தை பெற்று 2022க்கான விருதும் சான்றிதழும் பெற்றுக்கொண்டார். ஐரோப்பிய மண்ணில் நீண்டகாலத்துக்கு பின் காலாண்டு சஞ்சிகையான "ஆதியுலகம்" சஞ்சிகையின் ஆசிரியராகவும் பணிபுரிகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. வெண்பனித் தூறல் கவிதை நூல் , முகநூல் கவிதை தொகுப்பு ஆகிய இரண்டும் நெதர்லாந்தில் வெளியிடப்பட்டது. தற்போது தினகரன் வாரமலர் "செந்தூரத்திலும்"இவரின் கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



# பாடு நிலா பாலாவின் பாமாலை











அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியமும் கலைஸ்ரீ கலை மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்த பாடு நிலா பாலாவின் பாமாலை நிகழ்வு கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெற்ற போது....

---




# விசேட மீலாத் கவியரங்காக களைகட்டிய காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக 10வது பௌர்ணமி கவியரங்கு








காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் பத்தாவது பௌர்ணமி கவியரங்கு விசேட மீலாத் கவியரங்காக கடந்த வியாழக்கிழமை காத்தான்குடி கலாநிதி அலவி ஷரீஃப்தீன் முன்னோடிகள் பாடசாலை மண்டபத்தில் இலக்கியக் கழகத்தின் தலைவர் கவி மாமணி ரீ.எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்றது. கவி அரங்கிற்கு கவிஞர் நூன் அப்துல் ரஹீம் தலைமை வகித்தார்.
கவிஞர்களான வில்லூர் பாரதி முரளிதரன், சாகிர் ஹுஃசைன், உசனார் ஜாபிர்,எச் எம் இக்பால் கான், கலைமதி ரபாய்தீன், முகைதீன் சாலி, திருமதி ஜெஸ்மின் ரமீஸ், இல்மி அஹமட் லெப்பை, ஏ எல் எம் சப்ரி, இக்பால் பலாஹி ஆகியோர் "இறைத்தூதர் இன்றேல் "என்னும் தலைப்பில் கவி மழை பொழிந்தனர். முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் யூ எல் எம் என் முபீன் மற்றும் காத்தான்குடி இஸ்லாமிய வழிகாட்டல் நிலைய செயலாளர் எஸ் எம் ஜாபிர் உட்பட பலர் முன்னிலை அதிதிகளாக கலந்து கொண்டனர். கவியரங்கிற்கு தலைமை வகித்த கவிஞர் நூன் அப்துல் ரஹீம் காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழக கழகத்தினால்.

(படங்களும் தகவலும் ரீ.எல் ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர்)

Senthooram செந்தூரம்



# தனது திருமணம் குறித்து மதுபாலா



தமிழில் ரோஜா, ஜென்டில் மேன் போன்ற ஏராளமான படங்களில் நடித்தவர் மதுபாலா. தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்திப் படங்களிலும் 1990களில் பிரபலமாக இருந்தார்.

சமீபத்தில் தனது பேட்டி ஒன்றில் தனது திருமணம் குறித்துப் பேசியிருக்கிறார். இது தொடர்பாக அவர் அளித்துள்ள பேட்டியில், "1999ம் ஆண்டு ஆனந்த் ஷாவை காதலித்துத் திருமணம் செய்து கொண்டேன். நான் தில்ஜாலே என்ற படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்ட போது முதல் முறையாக ஆனந்த் ஷா என்னைச் சந்தித்தார். அப்போது எங்களுக்குள் அறிமுகம் கிடையாது. அப்படத்தின் இயக்குநருக்கு ஆனந்த் ஷா நெருங்கிய நண்பர். எனவே அண்டி பால்ராஜிடம் பேசி என்னைச் சந்திக்க உதவும்படி ஆனந்த் ஷா கேட்டுக்கொண்டார். நான் ஹப்தா வசூலி என்ற படத்தில் நடித்துக் கொண்டிருந்த போது ஆனந்த் ஷாவை என்னிடம் அண்டி பால்ராஜ் அறிமுகம் செய்தார். நாங்கள் இருவரும் 5 நிமிடம் பேசினோம். அவருடனான உரையாடல் எனக்குப் பிடித்திருந்தது. அவரைப்போன்ற ஒருவரை வாழ்க்கையில் சந்தித்தது கிடையாது. அவர் பிசினஸ் குடும்பத்தை சேர்ந்தவர். அதோடு ஸ்விட்சர்லாந்தில் படித்தவர். ஆனால் நான் வேறு பின்னணியில் இருந்து வந்தவள். ஒரு முறை நாங்கள் பாலி கடற்கரையில் நடந்து சென்று கொண்டிருந்தோம். அந்நேரம் அவர் என்னை ஈர்க்கும் விதமான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.அவர் என்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி கேட்டார். நான் அந்த நிமிடமே சம்மதம் தெரிவித்தேன் . எங்கள் உறவில் உள்ள எல்லா நினைவுகளும் பசுமையானது. ஒரு முறை தொழில் விஷயமாக சிங்கப்பூர் சென்று வந்த போது ஒரு சூட்கேஸ் முழுக்க எனக்கு உடைகள் வாங்கி வந்திருந்தார். இருவரும் சில காலம் காதலித்த பிறகு திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். எங்களின் பெற்றோரிடம் அனுமதியைப் பெறுவது சவாலாக இருந்தது,

என் தந்தை ஏற்கெனவே எனக்கு வரன் தேடிக்கொண்டிருந்தார். நான் ஆனந்த் குறித்து கூறியவுடன் அவர் ஏற்றுக்கொண்டார். எனக்குத்தான் ஆனந்த் அம்மா என்ன சொல்லப்போகிறாரோ என்ற தயக்கம் இருந்தது. நான் நடிகை என்பதால் அவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நினைத்தேன். ஆனால் அவர் எங்களை ஏற்றுக்கொண்டார். " என மகிழ்ச்சி பொங்கத் தெரிவித்திருக்கிறார் மதுபாலா.

# 32 ஆண்டுகளுக்குப் பிறகு இணையும் கூட்டணி!

ரஜினியின் 170வது படத்தில் நடிகர் அமிதாப் பச்சன் நடிக்க உள்ளதாக லைகா நிறுவனம் அறிவித்துள்ளது. ரஜினியின் 170வது படத்தை 'ஜெய்பீம்' ஞானவேல் இயக்க உள்ளார். இந்தப் படத்தை லைகா தயாரிக்கிறது. இதில் ரஜினியுடன் பல்வேறு முன்னணி பிரபலங்கள் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் நேற்று முதல் படத்தில் பணியாற்றும் நடிகர்கள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் குறித்த விவரத்தை லைகா நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இப்படத்தில் துஷாரா விஜயன், மஞ்சு வாரியர், ரித்திகா சிங் உள்ளிட்டோர் நடிப்பதாக படக்குழு அறிவித்தது.

அதேபோல், நடிகர்கள் ஃபஹத் ஃபாசில் மற்றும் ராணா டகுபதி இருவரும் இணைய உள்ளதாக லைகா நிறுவனம் தனது எக்ஸ் பக்கத்தில் இன்று அறிவித்துள்ளது. தற்போது இந்தக் கூட்டணியில் பாலிவுட் பிக் பி எனப்படும் அமிதாப் பச்சன் நடிக்கிறார் என்று லைகா நிறுவனம் அறிவித்துள்ளது. கடந்த 1991ம் ஆண்டில் வெளியான 'ஹம்' படத்தில் கடைசியாக ரஜினியும் அமிதாப்பும் இணைந்து நடித்திருந்தனர். தற்போது 32 ஆண்டுகளுக்கு பின் ரஜினியும் அமிதாப் பச்சனும் இணைந்து நடிக்க வுள்ளனர்.

இதனிடையே, இப்படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக விமானம் மூலம் நடிகர் ரஜினிகாந்த் இன்று திருவனந்தபுரம் புறப்பட்டுச் சென்றுள்ளார். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இப்படம் நல்ல கருத்துள்ள பிரம்மாண்ட பொழுதுபோக்கு திரைப்படமாக இருக்கும்" என்றார். 32 ஆண்டுகளுக்குப் பிறகு இணையும் கூட்டணி!





# ரெஜினா ஆவேசம்

குடித்துவிட்டு கூத்தடித்தால் நடிகைகள் படுக்கையை பகிர்ந்துகொள்வார்களா என ரெஜினா பேசியிருக்கிறார்.

ரெஜினா தமிழில் வெளியான கண்ட நாள் முதல் படத்தின் மூலம் சைடு ஆர்ட்டிஸ்ட்டாக திரையுலகில் அறிமுகமாகினர். அதனைத் தொடர்ந்து அழகிய அசுரா, கன்னடத்தில் வெளியான சூரியகாந்தி, தெலுங்கில் வெளியான சிவா மனசுலோ ஸ்ருதி உள்ளிட்ட படங்களில் நடித்தவருக்கு தமிழில் சிவகார்த்திகேயன், விமல் நடிப்பில் வெளியான கேடி பில்லா கில்லாடி ரங்கா படம் நல்ல அடையாளத்தை பெற்றுக்கொடுத்தது.

ரெஜினாவின் ஆவேசமான பேச்சு அடுத்தடுத்த படங்கள்: அந்தப் படத்தின் மூலம் அடையாளம் கிடைத்ததை அடுத்து அவருக்கு பட வாய்ப்புகள் சொல்லிக்கொள்ளும்படிதான் அமைந்தது. அதன்படி அவர் ராஜதந்திரம், மாநகரம், ஜெமினி கணேசனும் சுருளி ராஜனும், மிஸ்டர் சந்திரமௌலி, செல்வராகவன் இயக்கத்தில் நெஞ்சம் மறப்பதில்லை, தலைவியில் கெஸ்ட் ரோல் என படங்களில் நடித்தார்.ஆனால் அவற்றில் ராஜதந்திரம், மாநகரம் தவிர்த்து மற்ற படங்களுக்கு போதிய வரவேற்பு இல்லை. அவர் கடைசியாக தமிழில் கருங்காப்பியம் படத்தில் நடித்தார். மேலும் அவரது நடிப்பில் பார்டர், ஃப்ளாஷ்பேக், சூர்ப்பனகை ஆகிய படங்கள் தமிழில் வெளியாகவிருக்கின்றன.

ரெஜினா பேட்டி: நடிகை ரெஜினா அண்மையில் அளித்த பேட்டியில் தனக்கு அட்ஜெஸ்ட்மெண்ட் அப்ரோச் வந்திருப்பதாக கூறியிருந்தார். இந்த சூழலில் நடிகைகள் குடித்துவிட்டால் படுக்கையை பகிர்ந்துகொள்வார்களா என்று ஓபனாக பேசியிருக்கிறார். அதுகுறித்து அவர் பேசுகையில், "நடிகைகள் குடிக்கிறார்கள், போதையில் இருக்கிறார்கள், பார்ட்டி செய்து கூத்தடிக்கிறார்கள் என்று கூறுவார்கள். ஆம் அது உண்மைதான்.

அதனால் அப்படி இல்லை: நடிகைகள் அப்படி இருப்பதால் அவர்கள் அனைத்துக்குமே சம்மதம் தெரிவிப்பார்கள் என்று நீங்கள் நினைப்பது ரொம்பவே தவறு. அவருடைய வாழ்க்கையை அவர் கொண்டாடுகிறார். அந்த கொண்டாட்டத்தை அடிப்படையாக வைத்து அவரின் நடத்தையை நீங்கள் எப்படி கேள்விக்குறி ஆக்கலாம். அது தப்பு இல்லையா? படுக்கையை பகிர்வாரா?: நடிகை ஒருவர் குடிக்கிறார் என்ற காரணத்திற்காகவே அவர் உங்களுடன் படுக்கையை பகிர்ந்துகொள்வார் என்று நினைப்பதெல்லாம் அபத்தத்தின் உச்சம். அவர் தன் ஆண் நண்பருடன் படுக்கையை பகிர்கிறார் உங்களுடன் பகிரவில்லை என்றால் உங்களை அவருக்கு பிடிக்கவில்லை என்று அர்த்தம். உங்களை பிடிப்பதும் பிடிக்காமல் போவதும் ஒருவரின் தனிப்பட்ட உரிமை. மற்றவர்களுடன் அவர் அப்படி இருக்கிறார். என்னிடமும் அவர் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று கண்டிஷன் போடுவதற்கு நீங்கள் யார்?.. உங்களை பிடிக்கவில்லை என்றால் பிடிக்கவில்லை அவ்வளவுதான். அந்த நடிகையின் கேரக்டரை அடிப்படையாக வைத்து நீங்கள் அத்துமீறலாம் என்று நினைப்பது தவறான விஷயம்தான்" என்றார்.

## சித்தார்த்தை ஏமாற்றிய தெலுங்கு சினிமா



நடிகர் சித்தார்த் நடித்து தயாரித்திருக்கும் படம்தான் சித்தா. இந்த படத்தில் மலையாள நடிகையான நிமிஷா நடித்திருக்கிறார். இந்த படம் தமிழ்நாட்டில் பயங்கரமான வரவேற்பை பெற்று வருகிறது. மேலும், கர்நாடகாவில் காவிரி பிரச்சனை இருந்தபோதும், ஓரளவு நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அனால், தெலுங்கு சினிமாவை சேர்ந்தவர்கள் சித்தார்த்தை ஏமாற்றி விட்டார்களாம்.

சித்தா திரைப்படம் வெளியானதும், கர்நாடகாவில் பத்திரிகையாளர் சந்திப்பில் கலந்துகொண்டார் சித்திதார்த். அனால், காவிரி பிரச்சினையால் அவர் அந்தக் நிகழ்ச்சியில் பேச முடியாமல் வெளியேறினார். இந்த சம்பவத்திற்காக கர்நாடகாவை சேர்ந்த பிரகாஷ் ராஜ், சிவராஜ்குமார் போன்றோர் மன்னிப்பு கேட்டனர்.அந்த வகையில், தெலுங்கு மக்களை சந்திப்பதற்காக அங்கு சென்றிருந்தார் நடிகர் சித்தார்த். அங்கு பேசிய அவர் அவரின் படங்களுக்கு தெலுங்கு தயாரிப்பாளர்கள் கவனம் தருவதில்லை என பேசினார். மேலும், தமிழ் நாட்டில் உதயநிதி சித்த படத்தை பார்த்து அவர் படத்தை வாங்கியதாகவும், மலையாளத்தில் கோகுலம் கோபாலன் சித்தா படத்தை பார்த்து அவர் வாங்கியதாகவும் கூறினார். மேலும், கோகுலம் கோபாலன் கடந்த 55 வருடங்களில் இந்த மாதிரியான படத்தை பார்க்கவில்லை என கூறியதாகவும் சித்தார்த் கூறினார்.

# நரிக்குறவர்களிடம் அன்பு பரிமாறிய இசையமைப்பாளர் டி.இமான்



நெய்வேலி கிராமத்தில் நரிக்குறவர்களிடம் அன்பு பரிமாறிய இசையமைப்பாளர் டி.இமான்நெய்வேலி அருகே உள்ளது பெரியாக்குறிச்சி கிராமம்.

இப்பகுதியில் ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் 20க்கும் மேற்பட்ட நரிக்குறவர் குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். சில தினங்களுக்கு முன்பு இப்பகுதிக்கு வருகை தந்ததிரைப்பட இசையமைப்பாளர் டி.இமான், பழுதடைந்திருந்த நரிக்குறவர்களின் 5 குடிசை வீடுகளை சரி செய்ய ரூ.2 லட்சம் வழங்கினார். மேலும், மழை பெய்தால் ஒழுகும் நிலையில் இருந்த 3 குடிசைகளுக்கு, தார்பாய் கொண்டு வீட்டின் மேல் பகுதியை மூடவும் உதவி செய்தார்.

கடந்த ஒரு ஆண்டாக இப்பகுதியில் மரத்தடி ஒன்றில் நரிக்குறவர்களுக்காக இந்திரா என்ற ஆசிரியை இரவு பாடசாலை ஒன்றை மாலை 6 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடத்தி வருகிறார்.

இவர் கடலூரில் தனியார் பள்ளி ஒன்றில் பணியாற்றி வருகிறார். இமானை இங்கு அழைத்து வந்தவர்கள் இதுபற்றி ஏற்கெனவே கூற, அவரை சந்தித்து வாழ்த்து தெரிவித்த இமான், அதே பகுதியில் இடத்தை சுத்தம் செய்து, செட் ஒன்றை அமைத்து, இரவு பாடசாலையை அமைத்து கொடுத்தார்.

"நீங்கள் யார் என்ற அடையாளத்தை மாற்றி, சமூகத்தில் உங்களுக்கு மரியாதையை ஏற்படுத்தி தருவது கல்வி ஒன்றால் மட்டுமே முடியும்" என்று அப்போது அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து அங்கிருந்த பள்ளி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகம் வழங்கிய டி.இமான், நரிக்குறவ இன மக்கள் தங்களின் அன்பை வெளிப்படுத்தும் வகையில் அவர்கள் அணிவித்த மணி மாலைகளை பெற்றுக் கொண்டார். அவர்களுடன் பேசிக் கொண்டிருந்த டி.இமான், அப்பகுதி மக்களுக்காக தான் இசையமைத்த 'கண்ணான கண்ணே' என்ற பாடலை பாடினார். நரிக்குறவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அதை கேட்டு மகிழ்ந்தனர். அவருடன் தங்கள் செல் போனில் செல்ஃபி எடுத்துக் கொண்டனர்.

அந்த மக்களிடையே பேசிய டி.இமான்," நான் இப்பகுதிக்கு ஒரு சமூக ஆர்வலராக தான் வந்துள்ளேன். இப்படி வருவது எனக்கு மிகவும் சந்தோஷமாக உள்ளது. 'டி இமான்' என்கின்ற கல்வி அறக்கட்டளையை கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். அதன்மூலம் ஏதேனும் செய்யலாம் என்று கருதி நண்பர்கள் சிலரின் துணையோடு இங்கு வந்தேன். நான் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவன்.

மதத்தை பரப்புவதற்காக இங்கு வரவில்லை. சம்பாதிப்பதில் பத்தில் ஒரு பங்கை எடுத்து இவ்வாறு செலவு செய்ய முடிவெடுத்து, இதைப்போன்ற பணிகளைச் செய்து வருகிறேன்.

இந்தப் பணிகள் அனைத்தையும் இறைப்பணியாகவே பார்க்கிறேன்" என்றார். டி.இமானுடன் சமூக ஆர்வலர் செல்வம் உமா உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



# 'கொலைச்சேவல்'

ஆர்.பி.பிலிம்ஸ் சார்பில் ஆர். பி. பாலா தயாரிக்கும் படம், 'கொலைச்சேவல்'. அறிமுக இயக்குநர் வி. ஆர். துதிவாணன் இயக்கும் இந்தப் படத்தில் கலையரசன், தீபா பாலு முதன்மை வேடங்களில் நடித்துள்ளனர். பால சரவணன், அகரன் வெங்கட், ஆதவன், கஜராஜ் உட்பட பலர் நடித்துள்ளனர். பி. ஜி. முத்தையா ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு சாந்தன் இசையமைத்துள்ளார்.

படம் பற்றி தயாரிப்பாளர் ஆர்.பி.பாலா கூறும்போது, "இதற்கு முன் மலையாளப் படங்களான புலிமுருகன், லூசிஃபர் உட்பட ஏராளமான டப்பிங் திரைப்படங்களுக்கு வசனம் எழுதியிருக்கிறேன். பரத் நடித்த 'லவ்' என்ற படம் மூலம் தயாரிப்பாளர் ஆனேன். அது வசூல் ரீதியாக வெற்றி பெற்றது. அடுத்து 'கொலைச்சேவல்' படத்தைத் தயாரித்துள்ளேன்.

எழுத்தாளர் இமையம் எழுதிய 'கொலைச்சேவல்' கதைக்கும் இந்தப் படத்துக்கும் தொடர்பு இல்லை. இந்தக் கதைக்கு அந்தத் தலைப்பு பொருத்தமாக இருந்ததால், அவரிடம் அனுமதி வாங்கி பயன்படுத்தி இருக்கிறோம். இது காதல் கதை. சமுதாயத்துக்குத் தேவையான முக்கியமான விஷயத்தையும் இந்தப் படம் பேசும். ஜவ்வாதுமலை பின்னணியில் கதை நடக்கிறது. கடைசி 20 நிமிடம் மனதை உலுக்குவதாக படம் உருவாக்கப்பட்டுள்ளது. படப்பிடிப்பு முடிந்துவிட்டது" என்றார்.

# விஜய் சேதுபதியின் 'மெரி கிறிஸ்துமஸ்'

விஜய் சேதுபதி கத்ரீனா கைஃப் நடித்துள்ள 'மெரி கிறிஸ்துமஸ்' திரைப்படம் டிசம்பர் 8ஆம் தேதி வெளியாகவுள்ளதாக கூறப்படுகிறது.

ஸ்ரீராம் ராகவன் இயக்கத்தில் ஆயுஷ்மான் குர்ரானா நடிப்பில் கடந்த 2018ம் ஆண்டு வெளியான இந்திப் படம் 'அந்தாதூன்'. பாலிவுட்டில் வெற்றிப் பெற்ற இப்படம் தமிழில் 'அந்தகன்' என்ற பெயரில் ரீமேக்காகிறது. இப்படத்தை இயக்கிய ஸ்ரீராம் ராகவன் அடுத்ததாக இயக்கும் படம் 'மெரி கிறிஸ்துமஸ்'. விஜய் சேதுபதி, கத்ரீனா கைஃப் நடித்துள்ள இப்படம் கடந்த ஆண்டு கிறிஸ்துமஸுக்கு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு காரணங்களால் தள்ளிவைக்கப்பட்டது.



இதனையடுத்து நீண்ட இழுபறிக்குப் பிறகு இப்படம் வரும் டிசம்பர் 15ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழு சமீபத்தில் அறிவித்தது. இப்படத்துக்கான ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரையும் படக்குழு வெளியிட்டது. இந்த நிலையில், இப்படத்தின் வெளியீட்டுத் தேதியை படக்குழு மீண்டும் மாற்றி அமைத்துள்ளது. இப்படம் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட ரிலீஸ் தேதியிலிருந்து ஒரு வாரம் முன்கூட்டியே வெளியாகிறது. அதன்படி இப்படம் டிசம்பர் 8ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்துக்கு ப்ரீதம் இசையமைக்கிறார். தமிழில் பாடல் வரிகளை யுகபாரதி எழுதுகிறார். மது நீலண்டன் ஒளிப்பதிவு செய்ய, பூஜா லதா சூர்தி எடிட்டிங் பணிகளை மேற்கொள்கிறார். இப்படம் தமிழ் மற்றும் இந்தியில் ஒரே நேரத்தில் உருவாகியுள்ளது.



# நொடிகளில் அழகிய உதடுகள் பெற சுலபமான வழி



நீங்கள் எந்த ஒரு அழகு சிகிச்சையும் செய்துகொள்ளத் தேவையில்லை. நீங்கள் விரும்பும் அழகிய உதடுகள் சில நொடிகளில் இந்த மேக்அப் ட்ரிக் மூலம் பெற்றுவிடலாம்.மேக்அப் நிபுணர் சஹிர் அஹ்மத் ஒரு சிம்பில் ட்ரிக்கை செய்து காட்டுகிறார். சுத்தமான மாய்ஸ்சுரைஸ் செய்யப்பட்ட முகம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் ஃபவுண்டேஷனை பூசவும்.சுத்தமான பிரஷ் மூலம் பிளெண்ட் செய்துவிடவும்.முகத்தில் இருக்கும் மாசுமருக்களை மற்றும் கருவளையத்தை மறைக்க முகத்தில் கன்சீலரை பூசவும். ஐஷாடோவை கண்ணிமைகளில் பூசவும்.உங்கள் உதட்டின் இயற்கையான நிறத்தை விட ஒரு ஷேட் அடர்த்தியான நிறத்தில் லிப்பென்சிலை பயன்படுத்தி உதட்டில் கோடை வரையவும். உங்கள் உதட்டின் வெளிப்புற லைனில் லிப் லைனரை பயன்படுத்தவும்.அடர்த்தியான சிவப்பு நிற ஷேடை உதட்டில் பயன்படுத்தவும்.சிறிது ஹை லைட்டரை உங்கள் உதட்டின் நடுவே பயன்படுத்தவும்.

# உடல் வலுப்பெற, உடல் எடைக் குறைய யோகா



**சூரிய நமஸ்காரம்:**

சூரிய நமஸ்காரம் மொத்தம் 12 ஆசனங்களைக் கொண்டது. வேலை காரணமாக காலையில் யோகா செய்ய நேரம் இல்லாதவர்கள் இந்த ஒரு ஆசனத்தையாவது தினமும் செய்யுங்கள்.

இந்த சூர்ய நமஸ்காரத்தைச் செய்வதால் நுரையீரலின் செயல்பாடுகள் மேம்படுகிறது. டயபெட்டீஸ் வருவதற்கான காரணிகளைக் கட்டுப்படுத்துகிறது.

தசைகளை வலுபெறச் செய்கிறது. ஹைபர் டென்ஷன் ஆகாமல் இருக்க உதவுகிறது. பெப்டிக் அல்சர் வருவதைத் தடுக்கிறது. சியாடிகா எனும் கீழ் முதுகு வலி, மூட்டு வலி ஆகியவற்றை தடுக்கிறது. மாதவிடாய் இருப்பவர்கள் மற்றும் கர்ப்பிணிகள் இதனைச் செய்ய வேண்டாம்.

**மூச்சுப் பயிற்சி:**

இந்த மூச்சுப் பயிற்சியை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கலாம். தினமும் 10 நிமிடங்களாவது இதில் குறிப்பிட்டதுபோல மூச்சுப் பயிற்சி செய்வதன் மூலம் மனது ஒருநிலை அடையும். தேவை இல்லாத தவறான எண்ணங்கள் தோன்றுவதைக் குறைக்கும்.

மூளை சுறுசுறுப்படைவதோடு, நீங்கள் செய்யும் வேலையில் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துகிறது.

மேலும் கோவம், பயம், பதட்டம் அனைத்தையும் குறைத்து மனதை அமைதிப்படுத்த நிச்சயம் இந்த மூச்சுப்பயிற்சி உதவும். மாடிப்படிகட்டுகளில் ஏறினால் மூச்சு வாங்குகிறதா, கண்டிப்பாக இதனை முயற்சி செய்து பாருங்கள். மூச்சுவாங்குவது கண்டிப்பாகக் குறையும்.

**உடல் எடைக் குறைய:** சலபாசனம்

பெண்கள் அவசியம் செய்ய: புஜங்காசனம் (கர்ப்பிணிப் பெண்கள் தவிர்க்கவும்)

தலைவலி போக்க: சஷங்காசனம்

முதுகு, கால்களுக்கு வலு சேர்க்க: வஜ்ராசனம் இடுப்புச் சதையைக் குறைக்க வக்ராசனம்.

# பெண்களின் சீரழிவு நிலையில் மாற்றம் காண

**கடந்த வாரத் தொடர்ச்சி....**

பெண்ணுக்கான சில உரிமைகளை நாம் அவர்களிடத்தில் கொடுத்து அவர்கள் சொல்லும் முடிவுகளை சரியெது பிழையெதுவென ஆராய்ந்து அவற்றை தெளிவுப் படுத்தும் போது பெண்களின் வாழ்க்கை சிறப்பாக அமையும்.

முதலில் அவள் பெண் தானே என்கிற இளக்காரமானப் பார்வையை தவிர்த்து அவளுக்கும் மனமுண்டு என்று முன்னுரிமை கொடுக்கும் போது பெண்களின் சீரழிவு நிலையில் மாற்றம் காணலாம்.

பெண்மை பற்றிய தவறான கண்ணோட்டம் என நாம் அவதானிக்கும் போது ஒரு பெண் மௌனமானவளாக இருந்தாலும் குறை சொல்லும் துடிப்புடன் செயற்பட்டாலும் அதற்கும் பல கதைகளை கூறும் இந்த சமூகம்.

ஒரு பெண்ணின் நடை, உடை, பாவனை, ஒழுக்கம்,எல்லாவற்றையும் சுற்றியுள்ள சமூகம் என்கிற கட்டுப்பாட்டில் இருக்கின்ற மனிதர்கள் அவரவர் தங்கள் எண்ணம் போலவே தங்களுக்கு தெரிந்தப் பெண்ணானவள் அவர்களின் எதிர்பார்க்கும் எதிர்பார்ப்புக்கு தகுந்த மாதிரியில்லா விட்டால் அவளை விமர்சிப்பது, அவளிடம் குறைகளை தேடுவது, செய்யும் செயல்களில் குற்றம் சுமத்துவது அபகீர்த்தியை எற்படுத்துவது என்று ஏதோ ஓர் கெடுதலான நிகழ்வை செய்துக் கொண்டேயிருக்கிறது.

இதனால் சம்பந்தப்பட்ட பெண் மனதளவில் மட்டுமல்ல உடலளவிலும் மிகவும் சோர்ந்து விடுகிறார்கள். இந்த தவறானக் கண்ணோட்டம் அவளையும், அவளைச் சுற்றியுள்ள உறவுகளையும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

எனவே ஒரு விடயத்தை ஆராய்ந்து உண்மை தெரியாமல் பெண்களை பழி சொல்லும் கேவலமான செயலுக்கு முன் செல்லாதீர்கள்.

பெண்மையை மதியுங்கள்.

சிலர் தங்கள் வீட்டு பெண் மட்டுமே ஒழுக்கமானவள் என்பது போலவும் வேறு பெண்களைப் பற்றி கதை சொல்வார்கள்.

சிலர் அவரவர் வீட்டுப் பெண்ணை பொத்திப் பொத்தி பாதுகாத்து அடுத்த வீட்டு பெண்ணிடம் அத்துமீறுவார்கள்.

இன்னும் கொஞ்ச ரகத்தினர் தங்கள் வீட்டுப் பெண்களை மதிப்பதேயில்லை. ஊரில் உள்ள பெண்கள் எல்லோரும் திறமை சாலிகள் என்கிற நினைப்பு.

இன்னுமொரு வகையினர் பெண்கள் என்றாலே எதற்கும் உதவாதவர்கள்.

இவர் எல்லோரும் ஒரு சார்பாக சிந்திக்கும் மனிதர்கள். பகுத்தறிவு என்கிற அறிவை உபயோகிக்காத மூடர்கள்.

எல்லாவற்றுக்கும் எதிர் பதம் உண்டு. அதுபோல ஒரு பெண் அவளுக்கு வேண்டியவர்கள் எதிர்பார்க்கும் திறமையுடன் இல்லாவிட்டாலும் அவளுக்கென ஏதோவொரு தனித் திறமையுடன் இருப்பாள். அதனை அடையாளம் கண்டு அவளை உற்சாகப் படுத்திட அவளும் சாதிப்பாள்.

எனவே சுற்றியுள்ள உறவுகள் வீணானக் கதைகளை தவிர்த்து தங்கள் பெண் உறவுகளை ஆதரவுடன் உற்சாகமூட்ட அவள் வாழ்வை வெல்வாள் என்பதில் சிறிதும் மாற்றமில்லை எனலாம்.



எங்கோ யாரோ ஒரு பெண்ணின் வெற்றியில் பூரிக்கும் மனிதன் தன் வீட்டுப் பெண் வெளிவர தடையாக இருப்பார்.

அவர்கள் அப்படி சொல்வார்கள் இவர்கள் இப்படி சொல்வார்கள் என்று யாருக்கோ பயந்து தங்கள் வீட்டு உறவுகளை அடக்கும் நபர்கள் இன்னும் இருக்கிறார்கள்.

உங்கள் வாழ்க்கை உங்கள் கைகளில். ஏன் உங்கள் குடும்ப. பெண்களின் முடிவுகளை யாரோ ஒருவருக்காய் முடக்க எண்ணுகிறீர்கள்.

வேண்டாம் இன்று உங்களுக்கு கதைநாளை இன்னொரு சம்பவம் கிடைக்காதா என்று திரியும் நபர்களுக்காய் உங்கள் பெண் உறவுகளை உதாசீனம் செய்ய வேண்டாம்.

சில விடயங்கள் செய்வதற்கு காலம் நேரம் எப்போதும் கைக்கூடி வராது என்பதே உண்மை. பூவுடன் சேர்ந்த நாரும் மணக்கும் என்பதாய் ஒரு வீட்டின் பெண் வெற்றிப் பெரும் போது அக்குடும்பம், அவளின் தோழமையே, அவளின் அயலில் உள்ள எல்லோரும் மதிக்கப் படுவார்கள்.

இவையெல்லாம் நடக்க முதலில் பெண்மையை மதிக்க கற்றுக்கொள்ளுங்கள்.

ஆவதும் பெண்ணாளே மனிதன் அழிவதும் பெண்ணாலே. அவளை ஆக்கும் சக்தியாக மாற்றுவதும் அழிக்கும் சக்தியை வழங்குவதும் சுற்றியுள்ள சமூகத்தின் பொறுப்பாகும்.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...✍

# இசைத்துறையில் சாதிக்கத் துடிக்கும் இளம் பெண் பொறியியலாளர்

இசைத்துறையில் சாதிக்கத் துடிக்கும் இளம் பெண் பொறியியலாளர் திருமதி தனுஜா சிவரூபன் செந்தூரம் இதழுக்கு அளித்த செவ்வி,

ஹட்டனை வசிப்பிடமாகக் கொண்ட தனுஜா சிவரூபன் ஆகிய நான் ஒரு கட்டிட பொறியியலாளர் ஆவேன். ஆனால் இசைத்துறையில் சாதிக்கத் துடிக்கிறேன். சிறு



காலம் வேலை செய்தேன். பின் Upper Kotmale Hydro power Dam project இல் கிட்டத்தட்ட 08 வருடங்கள் office Engineer ஆக வேலை செய்தேன். பின் கத்தார் சென்று அங்கு கிட்டத்தட்ட 5 வருடங்கள் வேலை செய்தேன். சில சூழ்நிலைகளால் மீண்டும் இலங்கை வந்து ஹட்டனில் வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

ஹட்டனில் இருந்து கொண்டு எனது சூழலுக்கு ஏற்றவாறு என்துறை சார்ந்த சரியான தொழில் அமையவில்லை.



வயது முதல் இசையில் ஆர்வம் இருந்தது. ஆனால் அதற்கான சூழல் அமையவில்லை. கல்வியின் பின்தொழில் நோக்கிய பயணமாக வாழ்கை இயந்திரத்தன்மையுடன் ஓடியது. எனது இரண்டாவது மகள் பிறந்தபின் குடும்ப சூழல் காரணமாக ஹட்டனில் வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தில் இருந்து 1991ஆம் ஆண்டு கொட்டகலைக்கு இடம்பெயர்ந்தோம். Grade 8 தொடக்கம், O/L வரை கொட்டகலை தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றேன். பின் ஹட்டன் ஹைலண்ட்ஸ் கல்லூரியில் பௌதிக விஞ்ஞான பிரிவில் (K 97 Batch) கல்வி கற்றேன். பின் NDT (Civil Engineering) , University of Moratuwa இற்கு தெரிவு செய்யப்பட்டேன். (2000/2001 Batch). ஒவ்வொரு காலகட்டத்திலும் நிறைய நட்புகள் அமைந்தன. இன்றும் அவை தொடர்ந்து கொண்டுதான் உள்ளன. அந்த நினைவுகளை மீட்கும் வகையில் கல்லூரி காலங்கள் என்ற பாடலையும் படைத்துள்ளேன். என்னுடைய you tube தளத்தில் இப் பாடலை பார்க்கலாம். காட்சியமைப்பில் நான் படித்த பாடசாலையை காண்பித்தாலும் , பாடல் வரிகள் அனைத்து கல்வி நிறுவனங்கள் , பாடசாலைகள் , கல்லூரிகளுக்கும் பொருந்தும் வகையில் எழுதியுள்ளேன். ஒன்றுகூடல் நிகழ்வுகளின்போது இப்பாடலை பயன்படுத்தலாம்.

எனக்கு ஒரு தம்பியும் தங்கையும் உள்ளனர். வீட்டில் நான் தான் மூத்தவள். அம்மா, அப்பா என்னுடன் உள்ளனர். எனக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

எனது வாழ்க்கையில் முக்கியமானதாக நான் கருதுவது நான் கற்ற கல்வியை தான். இன்று நான்



அடைந்து கொண்டு இருக்கும், முன்னேற்றத்திற்கான தொடக்கப் புள்ளியை ஆராய்ந்தால் அது கல்வியாகவே இருக்கும். இன்று நான் ஒரு பாடலாசிரியராக உங்கள் முன்னால் நிற்பதற்கு அடிப்படை காரணமே கல்விதான். நான் பயின்ற காலத்தில் அந்த கல்வியை வழங்கிய அனைத்து ஆசிரியர்கள் , அதிபர்கள் , விரிவுரையாளர்கள், பேராசிரியர்களுக்கு இந்த தருணத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

Moratuwa University கல்வியின் பின் நான், Suva Property Developers, Road Development Department Trincomale இல் சிறிது



தற்போது SAI SATHYA Rest House (சாய்சத்யா) என்ற ஒன்றை நடத்த எண்ணியுள்ளேன். ஹட்டனிற்கு குடும்பமாக வருபவர்கள், இங்கு தங்கலாம், ஒருநாள் வாடகை அடிப்படையில் கட்டணம் அறவிடப்படும். உண்மையான தேவை உள்ளவர்கள் தொடர்புகொள்ள வேண்டிய கையடக்க தொலைபேசி எண் 074 0081651, 0770357548.

மகளுக்கு 4 வயது ஆகிய பின், இசையின் மீது கொண்ட ஈர்ப்பினால் என்ற T&D Tunes Channel ஐ 2022 July இல் தொடக்கி , பல தடைகள், சிரமங்கள் மற்றும் வளப்பற்றாக்குறைகளுடன் நடத்தி செல்கின்றேன். இதற்கு மிக உறுதுணையாக இருக்கும் சரசுதீன் ( இசையமைப்பாளர்) மற்றும் அவரது குடும்பத்தார், என்னுடைய T&D Tunes Channel ளுக்கு பாடிய பாடகர்களுக்கும் எனது விசேட நன்றிகள். மேலும் தம்பி சத்யராம் குடும்பத்திற்கும் , தங்கை சைலஜா குடும்பத்திற்கும் , மாமி பிரேமசாந்தினிக்கும், நண்பி விஜயகுமாரி குடும்பத்திற்கும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்

என் கலைப்பயணத்திற்கு ஆதரவு தரும் உறவுகள், நண்பர்கள் , K94 & K97 Batch நண்பர்கள் இரசிகர்கள், T&D Tunes You tube Channel பார்வையாளர்கள் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகள்.

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட கலாரத்ன விபூஷண் விருதுக்கு என்னை தெரிவுசெய்தமைக்கு தலைவர் விஜயராஜ் அண்ணாவுக்கும் ரமேஷ் அண்ணாவுக்கும் மற்றும் ஏற்பாட்டுக் குழுவுக்கும் நன்றிகள்

இதுவரை நான் எழுதி வெளியிட்ட பாடல்களின் தொகுப்பு பின்வருமாறு : நீயே என் கண்ணம்மா..... தொடு வானம் தூரம் இல்லை.... நிலவும் நானும்...... இது கனவோ நிஜமோ ........ கல்லூரி காலங்கள்.... இசை மாயவள் ..... மல்லிகை பூவே .... அண்மையில் மல்லிகைப்பூவே என்ற பாடலை வெளியிட்டு இருந்தேன். அதற்கான ஆதரவையும் தருவீர்கள் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஒரு சின்ன மனவருத்தம் உள்ளது. அதாவது , எனக்கு media networks supports நிறைய எதிர்பார்கின்றேன்.

என்னுடைய பாட்டை உள்ளூர், சர்வதேச மட்டத்தில் பார்வையாளர்களிடம் கொண்டு சேர்ப்பது பெரும் கடினமாக உள்ளது. வானொலிகளில், தொலைக்காட்சிகளில் நம் நாட்டு படைப்புகளுக்கு ஒரு நேரம் ஒதுக்கி ஆதரவு தரவேண்டும்.

இதைத் தவிர இந்தப் பாடலை பார்க்கும் அல்லது கேட்கும் நமது சமூகமட்ட பிரஜைகளும் வெறுமனே பார்த்து விட்டு கடந்து செல்லாது, You tube Link ஐ Like, Comment, Subscribe and Share செய்யவேண்டும் என்பது ஒரு தாழ்மையான வேண்டுகோள். ஒரு பெண்ணாக நிறைய சிக்கல்களுடன் இந்தத் துறையில் முன் அனுபவம் இல்லாமல் சாதிக்கத் துடிக்கும் நேரத்தில் சமூகமும், ஒத்துழைப்பு தரவேண்டும். வெறுமனே விமர்சனங்களை மட்டும் வழங்காமல், என்னுடைய You tube Link ஐ எல்லோரிடத்திலும் கொண்டுசேர்க்க உதவவேண்டும். இந்த எண்ணம் சிலரைத்தவிர பலருக்கு குறைவாகவே உள்ளது. எல்லோரும் ஏதோ ஒரு விதத்தில் வேலைப்பளுவுடன் கூடிய அவசர உலகில் இயங்கிக்கொண்டுதான் உள்ளோம். நானும்கூட நிறைய சிக்கல்களுடனேயே பாடல்களை படைக்கிறேன்.

ஒருமனிதனுக்கு கல்வி அல்லது, கல்வி சார்ந்த தொழில் மட்டும் போதுமானது இல்லை , அவனிடம் ஏதாவது விசேட திறமைகள் இருப்பின் அதை வளர்ப்பதற்கு குடும்பமும் சமூகமும் துணையாக இருந்தால் மட்டுமே மேலும் பல படைப்புகளை அவனால் உருவாக்க முடியும்.

இதைபோல் எத்தனையோ பெண்கள் திறமை இருந்தும் பயன்படுத்த முடியாமல் குடும்ப சமூக மட்ட சூழலில் சிக்கி உழல்கின்றார்கள்.



திறமைக்கான ஊக்குவிப்புகளை, அங்கீகாரங்களை குடும்பமும் சமூகமும் வானொலி ஊடகங்களும், தொலைக்காட்சி ஊடகங்களும் வழங்கவேண்டும் என்பதே எனது அவா.

உள்ளத்துணர்வுகளைத் எழுத்தில் வெளிப்படுத்தி, மதி மயக்கி உவகைப் பேரின்பம் நல்கும் பாடலில், பற்பல சுவை நல்கி பைய பைய நடைபயின்று, பாங்குடன் மிளிரும் T & D Tunes You tube Channel, பாரெங்கும் மணம் பரப்பி, தெவிட்டாத இன்பமாய்த் தேமதுரச் சுவையாய், எங்கும் பிரகாசிக்க வாழ்த்துடன் ஆதரவு தருவீர் நண்பர்களே!

கே. ஈஸ்வரலிங்கம்...
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்




## 5 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



## எண்ணமும் செயலும்

திட்டமிடுவானே மனிதன் – பல
திசைகள் வளைத்திட நினைப்பான்
எட்டும் வரையில் நுழைவான் – அதில்
இருக்கும் வசதிகள் பலவும் பிடிப்பான்
வட்டமிடுவான் எங்கும் – பல
வாய்ப்புகள் நாடி அலைவான் பங்கும்
கட்டாயம் இதுமட்டும் குறைவு – அவன்
கடின உழைப்பால் நிறைவேற்றல் உயர்வு

திட்டமிடலில் திறமைகள் இல்லை – அதைச்
செயலாக்க முயல்வதே மிகப்பெரும் தொல்லை
பட்டியல் திட்டங்கள் குறிப்பே – அவை
பயன்பட வேண்டும் முழுச்செயல் முடிப்பே
கட்டிடும் கோட்டைகள் கனவே – அதைக்
கண்முன் படைப்பதே செயல்திறன் நனவே.
எட்டிடும் புகழ் இதனால்தான் – நாம்
இதயம் ஒன்றுவோம் செயல் வடிவால்தான்.

எதிர்கொள்ள வேண்டும் துணிவு – அதில்
ஏற்றிடும் வெற்றி இதன்பின் பணிவு
நதி எதிர் நீச்சலும் காண்போம் – நம்
நல் இலக்கியங்கள் பிழைத்தன மாண்பாம்
எதிலும் இருவகை இருக்கும் – நாம்
இன்பம் மட்டுமே நினைத்தால் கசக்கும்
பதிலும் கேள்வியும் வேண்டும் – இதைப்
படிப்பினை யாக்கினால் இமயமும் வேண்டும்!





# விமர்சனத்தையும், எதிரொலியையும் சந்தித்து தளராது நிமிர்ந்து நிற்கும் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் நவநீதன்

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலைஞர்களின் பல்வேறு திறமைகளை வளர்ப்பதில் பெரும் பங்காற்றி வருகின்றன.

அதுவும் ச.நவநீதன் பணிப்பாளராக பொறுப்பேற்றதன் பின்னர் அதன் செயற்பாடுகள் விரிவடைந்துள்ளது.

திருகோணமலை,மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கி கிழக்கு மாகாணம் காணப்படுகிறது.

இம்மாவட்டங்களில் உள்ள எழுத்தாளர்கள், கலைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குள் மறைந்து நிற்கும் திறன்களை வெளிப்படுத்துவதில் என்றும் முன்நிற்கிறது.

எழுத்தாளர்களின் எழுத்துக்களை அது கவிதையாகவோ,நாவலாகவோ, சிறுகதையாகவோ, சிறுவர் பாடலாகவோ, பாரம்பரிய ஆய்வு சார் படைப்புகளாகவோ இருக்கின்ற பிரதிகளை தேர்வு செய்து நூலாக்கம் செய்து கொடுக்கின்றது. இதனூடாக எழுத்தாளர்கள் தங்களது சொந்த பணத்தை முதலீடு செய்யவேண்டிய சுமையை குறைக்கின்றது.வாழ்வில் புத்தகம் ஒன்றை வெளியீடு செய்தே ஆகனும் என்ற ஒரு எழுத்தாளரின் கனவு நனவாகிறது.



மேலும் பலரது நூல்களை கொள்வனவு செய்து அவர்களின் இலக்கிய மேம்பாட்டுக்கு துணை நிற்கின்றது.

கிழக்கு மாகாணத்தின் படைப்பாளிகளின் நூல்களில் இருந்து சிறந்த நூலை தேர்வு செய்து ஆண்டின் சிறந்த நூல் விருது வழங்கி படைப்பாளிகளை கௌரவப் படுத்துகிறது.

50 வயதிற்கு மேற்பட்ட பல்வேறு துறைசார்ந்த கலைஞர்களை சிறந்த நடுவர்கள் மூலம் அத்துறைகளில் பாண்டியத்துவம் பெற்றவர்களை தேர்ந்தெடுத்து "இலக்கிய வித்தகர் விருது "வழங்கி பணப்பரிசு பொன்னாடை மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவமளிக்கிறது. அதுபோல இளங்கலைஞர்களை தெரிவு செய்து அவர்கள் இலக்கியத் துறையில் சேவையாற்றியதை பாராட்டி தொடர்ந்தும் சமூகம் சார் பணிகளில் ஈடுபடுவதை ஊக்குவிக்கும் முகமாக,கிழக்கு மாகாண கல்வி, தகவல் தொழில் நுட்ப கல்வி,முன்பள்ளிக்கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் இளங்கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப் படுகிறது.

குறுந்திரைப்படத்தை ஊக்குவிப்புச் செய்யும் முகமாக குறுந்திரைப்பட எழுத்தாளர்களின் சிறந்த பிரதிகளுக்கு பணப் பரிசு சான்றிதழ்கள் வழங்கி கௌரவமளிக்கிறது. இவ்வாறு கலை இலக்கிய வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கி வருவது கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமாகும்.

எழுத்தாக்க பணி புரியும் அரச ஊழியர்களுக்கு தனியாக போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தி அவர்களின் திறமைகளை வெளிப்படுத்த வழிசமைத்து கொடுக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் கலை மன்றங்களை பதிவு செய்து அந்த மன்றங்களில் செயற்படும் உறுப்பினர்களுக்கு வாண்மை விருத்தி செயலமர்வுகளைச் செய்து மன்றங்கள் சிறப்பாக இயங்குவதற்கு தலைமைத்துவம் சார்பான அறிவார்ந்த நிகழ்வுகளை ஒவ்வொரு வருடமும் நடத்தி வருகிறது.



கலைஞர் ஒன்று கூடல் நிகழ்வுகள் பிரதேச வாரியாக, மாவட்ட ரீதியாக நடைபெற்று வந்தன. ஆனால் மாகாண ரீதியிலான கலைஞர்கள் ஒன்று கூடல் நிகழ்வு இது வரையில் நடைபெறவில்லை. அந்த ஒன்று கூடலை ஏற்படுத்திய பெருமை பணிப்பாளர் சரவண முத்து நவநீதன் அவர்களையே சேரும்.

இதனூடாக கலைஞர்கள் மற்ற கலைஞரை அறிமுகம் செய்து கொள்ளவும் தமது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளவும் தங்கள் தங்களது நூல்களை விரிவாக்கம் செய்வதற்குமான வழியை அமைத்துக் கொடுத்திருக்கின்றன.

அண்மையில் மட்டக்களப்பில் ஓவிய கண்காட்சியை ஒழுங்கு படுத்தி கிழக்கு மாகாணத்தில் உள்ள ஓவிய கலைஞர்களின் ஓவியங்களை காட்சிப் படுத்தியது. மற்றது திருகோணமலை உப்பு வெளி முகாமைத்துவ பயிற்சி நெறியில் "எழுகை" அறிவுப் பகிர்வு நிகழ்ச்சி என ஒரே நேரத்தில் இரு நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றி கண்டுள்ளது.

இது பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அவர்களின் சிறந்த ஆளுமைக்கு அடையாளமாகும்.

கிழக்கு மாகாணத்தில் சிறுகதைகள் எழுதும் எழுத்தாளர்களின் சிறுகதைகளை தொகுத்து "நூறு சிறுகதைகள்" என்ற நூலை வெளியீடு செய்ததும் "யுக்தி" சஞ்சிகை ஒன்றினை வெளியிட்டு வருவதும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இலக்கிய விருத்தியை பறைசாற்றுகிறது எனலாம்.

பிறரது விமர்சனங்கள்,எதிரொலிகள் எம்மை செதுக்கி நிற்கும் அவற்றை சந்தித்து நிமிர்ந்து நிற்க வேண்டும்.

எனவேதான் மாற்றுச் சிந்தனைக்குரிய திறவு கோலாக கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் செயற்படுகின்றது.

இவ்வாறான புதிய பாதைக்கு எங்களை வடிவமைத்து சிறப்பாக வெளிக் கொண்டு வருவதில் கால நேரம் பாராது உழைத்து வருபவர் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் ச.நவநீதன் அவர்களாகும்.

இலக்கிய உள்ளங்களைப் பார்த்து அவர் இவ்வாறு கூறுகிறார்.

"காற்றுக்காக கதவு திறந்தே கிடக்கின்றது,

காபனீர்ரொட்சைட்டைத்தான் நாம் வேண்டாம் என்கிறோம். காற்றை யல்ல....."

அவரின் அயராத முயற்சியை பாராட்டுவோம். சேவைகள் தொடர வாழ்த்துவோம்.

கவிச்சுடர் **ஏ.எம். கஸ்புள்ளா**

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181







# ஒளவன் கவிதை

குழந்தைகள் சொற்களாலானவர்கள்
அவர்கள்தம் வெள்ளைச்சொற்களை
முகங்களில் எழுதுகின்றனர்
அவர்களது சொற்கள் புரிந்து
கொள்ளுமிடத்தில்
ஒளி படர்கிறது
மகிழ்ச்சியின் வதனத்தை
கொண்டாடுகிறார்கள்
குழந்தைகளின் சொற்களில்
தூசு படியும் போது
உடைந்த கண்ணாடியாகிறது முகம்
ஒட்ட வைக்கும்
ஒரு வார்த்தையும் அருகிப்போக
ஆயிரம் துண்டு முகமாய் கிடக்கிறது
குழந்தை உலகு
எவராலும் கண்டுகொள்ளாதோ
எவராலும் ஒட்ட முடியாதோ
மனசுள் ஊறும் ஆயிரம் சொற்களால்
குழந்தைகள் உருவாக்குமொரு
வெள்ளி மாளிகைக்குள்
நுழைய முடியாது
வெளியே கிடக்கின்றன
ஆயிரமாயிரம் கருஞ்சொற்கள்

# புதுநானூறு 07

ஈழத்து இலக்கியப்புலத்தில் நவீன கவிதை. முன்னோடிகள் மகாகவி,முருகையன்,நீலாவணன் மூவருக்குப் பின்னர் நவீன கவிதையாகி நிற்பவர் ,விமர்சன இரட்டையர் பேராசிரியர்கள் க.கைலாசபதி,கா.சிவத்தம்பி இருவருக்குப் பிறகு இலக்கியத் திறனாய்வு ஆளுமையாகி நிற்பவர் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான்.

நுஃமான் என்ற கவிதைக்கு முக்கால் நூற்றாண்டு நோக்கிய வரலாறு இருக்கிறது.

'மழை நாட்கள் வரும்'எனத் தொடங்கிய கவிதைப் பெயல் அவர்.

'உலகப் பரப்பில் ஒவ்வொரு கணமும்' கவிதையாகி நிற்பதை '

இந்நேரத்தில் எதை எதைப் பற்றியோ இங்கிருந்து நான் எண்ணுதல் போல எங்கெங்கோ எத்தனை பேரோ எண்ணுதல் கூடும்

இதோ நான் கிழக்கில் என் முகம் திருப்பிக் கிழக்கில் இருண்டு கிடப்பதைக் காண்கிறேன்' என இந்த உலகு தான் எத்தனை சிறியது எனக் கேட்கும் நுஃமானின் கவிதை உலகு மிகுந்த அவதானிப்புக்குரியது.

மழை வரும் நாட்கள்,அழியா நிழல்கள்,தாத்தாமாரும் பேரர்களும், எனக் கவிதையில் நீண்ட எம்.ஏ.நுஃமானின் துப்பாக்கிக்கு மூளை இல்லை பிரதி அண்மையில் வெளிவந்து கவிதையினிடத்தை நிரப்பியது.

பலஸ்தீனக்கவிதைகள்,மஃமூத் தர்வீஷ் கவிதைகள்,காற்றில் மிதக்கும் சொற்கள்(மலாய்),இரவின் குரல் எனக் கவிதையின் குரலை உயர்த்தியவர் .

இலக்கியப்புலத்திலும்,கல்விப்புலத்திலும் தன் ஆளுமைப்பலத்தை விதைத்து நின்ற பேராசான், தமிழறிஞராக,விரிவுரையாளராக,பேராசிரியராக,கவிஞராக,எழுத்தாளராக,பதிப்பாளராக,இதழாளராக, தொகுப்பாளராக,மொழிபெயர்ப்பாளராக,விமர்சகராக, ஆய்வறிவாளராக, மொழியியலாளராக வேரூன்றி விருட்ஷித்தவர். மொழியறிஞராக அவர் எழுதிய பயன்படு 'அடிப்படைத்தமிழ் இலக்கணம்' பாட ஆற்றுப்படையாகி நிற்பது அவரது மொழிப்புலமையினதும்,புதுமையினதும் அடையாளம் எனலாம்.

ஈழத்துக் கவிதைப்பரப்பில் பெரும் அதிர்வை ஏற்படுத்திய 'புத்தரின் படுகொலை 'கவி நுஃமானின் படைப்பாகும்.யாழ் நூலக எரிப்பின் எதிர்ப்பை பதிவு செய்த கவிதை இது....



நேற்று என் கனவில்/
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்/சிவில் உடை அணிந்த /அரச காவலர் அவரைக் கொன்றனர்/ யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே/அவரது சடலம் குருதியில் கிடந்தது/இரவின் இருளில்/அமைச்சர்கள் வந்தனர்/'எங்கள் பட்டியலில் இவர் பெயரில்லை/ பின் ஏன் கொன்றீர்'/
என்று சினந்தனர்/
'இல்லை ஐயா/
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை/
இவரைச் சுடாமல் /ஓர் ஈயைக்கூடச்/
சுட முடியாது போயிற்று/
ஆகையினால்.../
என்றனர். அவர்கள்/
'சரி சரி/
உடனே புதையுங்கள் பிணத்தை/
என்றுகூறி அமைச்சர்கள் மறைந்தனர்/
சிவில் உடையாளர்/
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்/
தொண்ணூறாயிரம் புத்தகங்களால்/
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்/
சிகாலோவாத சூத்திரத்தினைக்/
கொளுத்தி எரித்தனர்/
புத்தரின் சடலம் அஸ்தியானது/
தம்ம பதமும் சாம்பலானது.

கவிஞர் நுஃமானின் புத்தரின் படுகொலை இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு வெட்டுமுகம்; பேரினவாதத்தின் அடக்குமுறை அநியாயத்தின் அடையாளம்.ஆசியாவின் மிகப்பெரும் நூலாலயமொன்று எரித்தழிக்கப்பட்ட அறிவுப்புலத்தாக்குதலை இக்கவிதை எடுத்தியம்பும் முறையிலும்,எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதத்திலும்,உணர்வைப்பதிவு செய்யும் வகையிலும் தனித்துவமானது.

புத்தரின் புனித தேசத்தில் இத்தகைய அழிவேற்பாடுகள் புத்தரின் தர்மத்துக்கு எதிரான அதர்மங்கள்; இத்தகைய காரியமாற்றுபவர்கள் முதலில் புத்தரின் புனிதத்தையும் தர்மத்தையும் அறத்தையும் கொன்று விடுகின்றனர்.

முற்றுருவப்பாங்காய் அமையும் இக்கவிதை விரிக்கும் அவல நாடகம் ஏற்படுத்தும் அதிர்வு முக்கியமானது.

இவரைச்சுடாமல் ஓர் ஈயினைக்கூடச் சுடமுடியாது போயிற்று' என்று தொடரும் உரையாடலில்,புத்த பெருமானின் பரிவும் உயிர்களிடத்திலான அன்பும் சுரந்து நிற்கிறது.

மறுபுறம் 'உடனே மறையுங்கள் பிணத்தை'என்கிற கூற்றின் அதிகாரத்தொனி தர்மத்தைப்புதைத்து அதர்மத்தை முன்னிறுத்துகிறது.

சிகாலோவாதம்,தம்பபதம் ஆகிய பௌத்த அற நூல்கள் அழிக்கப்பட்டன;புத்தர் சடலமாகி அஸ்தியானது என கவிஞர் உரைப்பதனூடாக யாழ் நூலக எரிப்பு பேரினத்தின் வன் செயல்.அது புத்தசமய அறங்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியா இழிசெயல் என்பதனை நிறுவுகிறார்.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமானின் புத்தரின் படுகொலை கவிதை தமிழ்க்கவிதையின் இன்னொரு மீட்சியெனலாம்.



# 'லண்டன் வெம்மை' மொழிபெயர்ப்பின் குளிர்த்தி

ரொட்னி விதானபத்திரவின் சிங்கள நாவல் கவிஞர் சு.முரளிதரனின் மொழிபெயர்ப்பில் லண்டன் வெம்மையாக வெளிவந்திருக்கிறது.

'கூடைக்குள் தேசம்'தந்த கவிஞனின் மொழி வல்லபத்தில் தமிழில் நாவல் நடை வளர்கிறது.

கடந்த ஞாயிறன்று மக்கள் கூட்டம் நிறைந்து வழிந்த கொழும்பு சர்வதேச புத்தகக் கண்காட்சி கூடத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலையில் லண்டன் வெம்மை ஒரு குளிர் பொழுதில் வெளியிடப்பட்டது.இத்தகைய பிரமாண்டமான புத்தகத் திருவிழா அரங்கில் தமிழிலும் நூல் வெளியீடு நிகழ்வது ஆரோக்கியமானது. இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகம் /லண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம் இணைந்து வெளியிட்டுள்ள 'லண்டன் வெம்மை' 'லண்டன் உனுசும'சிங்கள நாவலெழுத்தின் தமிழ்ப் பிரதி. மூல மொழியாளர் ரொட்னி'சாமானியர்களின் உணர்வுகளுடன் இணைத்து வாழ்க்கை மற்றும் சமூகத்தின் யதார்த்தத்தை சித்திரிக்க விரும்பினேன்' என்கிறார்.

மொழிபெயர்ப்பாளர் கவிஞர் சு.முரளிதரன் மிக எளிய நடையில் லைட்ரீடிங் ஒன்றினை இந்நாவல் வழி தருகிறார்.' வெளிநாட்டு வதிவிட விசாவை பெற முனையும் சிங்கள இளைஞர்களின் நடவடிக்கை பற்றி அதற்காகக் குறிவைக்கப்படும் தமிழ் தாய்க்கு பிறந்த பெண்ணின் துயர வாழ்வு படம் பிடிக்கப்பட்டிருக்கின்றமையைக் காணலாம்' என்கிறார்



மொழிபெயர்ப்பாளர். சு.முரளிதரனின் முதல் மொழி பெயர்ப்பு படைப்பு இது. அழகியதான தொய்வற்ற வாசிப்புக்கு வழி கோலி நிற்கிறது; இந்த நூலுக்கு மேலும் அழகு சேர்க்கிறது மேமன்கவியின் அட்டை வடிவமைப்பு. வாழ்த்துக்கள் லண்டன் வெம்மைக்கு

## சிறுவர்களைக்கொண்டாடுதல்

சிறுவர்களைக் கொண்டாடுவது பெற்றோர்கள் மற்றும் பாடசாலையினரின் மகிழ்வூட்டும் பணியுமாகும்.சிறுவர்கள் அரிய பொக்கிஷங்கள்.அவர்களுட் பொதிந்து கிடக்கும் மன ஆற்றல்களுக்கு மதிப்பளிப்பதுவும்,அவற்றை வெளிக் கொணர்வதுவும் கூட அவசியமானது எனலாம். எனவே தான் குழந்தை நேய பாடசாலைகளென அழைக்கப்படுகிறது;வீடுகளும் மின்மினிகள் நிறைந்த அலங்காரக் கூடங்களாகக் குழந்தைகளால் கோலமிடப்படுகிறது.

குழந்தைகளின் மகிழ்வு வெளிப்படுமிடமாக சிறுவர் நாடகங்களும் அமைந்து விடுகின்றன.

சிறுவர்களை நாடக விளையாட்டை நோக்கி ஆற்றுப்படுத்துவதனூடாக அவர்களது ஆளுமையை மட்டுமன்றி நல்லொழுக்கப் பண்புகளை மேம்படுத்தவும் முடியும்.நாடகம் என்பது வெறும் பொழுது போக்கம்சம் அல்ல;அது சமூக விழிப்புனர்வுக்கான களம்.இன்னொரு வகையில் கற்றலின் இன்னொரு வடிவம்.

எனவே மாணவர்களை நாடக இணைப்பாட விதானத்தினூடாக ஆற்றுப்படுத்துவதன் மூலம் நற்திறனை வளர்க்கவும் முடியும்.பாடசாலைகள் இச் செயலாக்கத்தின் மீது ஒழுங்கு படுத்தப்பட்ட தொடர்ந்தேர்ச்சியான கவனம் செலுத்தவும் வேண்டும்.கொழும்பு றோயல் கல்லூரியின் தமிழ் நாடக மன்றம் வருடாந்த நாடகப் போட்டிகளை சிறுவர் தினத்தை முன்னிறுத்தி நடாத்தி வருகிறது. இதன் மூலம் நாடக ஊக்கலை மாணவரிடமும் பெற்றோரிடமும் வளர்த்துவிட முயல்கிறது.

றோயல் பெற்றோர் நாடக ஆற்றுகைக் குழுக்களாக மாறி தம் பிள்ளைகளை மேடையேற்றி நாடகச் செய்தியைப் பரப்பும் முயற்சியை மேற்கொள்கிறார்கள்.

குறிப்பாக ஆரம்ப பிரிவு பிள்ளைகளின் விளையாட்டுணர்வு, நாடிச் செயலாக்கத்தை நோக்கி வழிப்படுத்தப்படுவதனால் அவர்கள் முன்னெழும் திறன், பங்கு பற்றும் திறன், குழுவாதல் திறன், தலைமையேற்கும் திறன்,பேச்சுத்திறன்,நடிப்புத்திறனென ஒன்று கூட்டப்பட்ட ஆற்றல்களை வந்தடைகிறார்கள்.

நாடகம் எனும் கலை கற்றல் கருவியாகத் தொழிற்படும் இவ்இடம் கல்விப்புலத்தில் மிகவும் அவசியமானதாகும்.

சிறுவர் தினத்தை கலைகளால் கொண்டாடுதலும் மகிழ்வுதான்.

"எல்லாவற்றையும் விட பிள்ளைகள் பெறுமதியானவர்கள்"

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—27

எம்.ஜி.ஆருக்கு பிடித்த விளையாட்டுகள் பற்றி சிறிது அலசுவோம். எம்.ஜி.ஆர். கும்பகோணம் பள்ளிக்கூடத்தில் சகமாணவர்களுடன் சேர்ந்து விளையாடிய விளையாட்டுக்கள் நீரில் நீந்தி விளையாடுவது, சடுகுடு விளையாடுவது, கிட்டி அடிப்பது போன்ற விளையாட்டுகள் ஆகும். எம்.ஜி.ஆர் 1962இல் தான் நீந்திக் குளிக்க ராமாபுரம் தோட்டத்தில் தனக்கென்று ஒரு தனிவீடு கட்டும்போது ஒரு நீச்சல் குளம் கட்டினார். எம்.ஜி.ஆர். தனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அந்த நீச்சல் குளத்தில் குளிப்பார். வாரத்தில் ஒரு முறை தண்ணீர் மாற்றப்படும். எம்.ஜி.ஆருக்கு கிரிக்கெட் விளையாட்டை நேரில் பார்க்க மிகவும் ஆசை. அதற்காக டெல்லி, பாம்பே போகமாட்டார் சென்னையில் பெரிய அளவில் பல நாடுகள் கலந்து கொண்டு விளையாடுகின்ற கிரிக்கெட்டை நேரில் பார்க்க தவறமாட்டார். 1974இல் சென்னையில் கிரிக்கெட் விளையாட்டு நடைபெறும் போது எம்.ஜி.ஆர் முன்னதாகவே டிக்கட் வாங்கிக் கொண்டார். அது ஐந்தாவது நாள் ஆட்டம். எம்.ஜி.ஆர் கிரிக்கெட்டை நேரில் பார்ப்பதற்காக விளையாட்டு மைதானத்திற்கு செல்லும் போது, நம்பர் படி இவரது இருக்கையில் வேறு ஒருவர் அமர்ந்திருந்தார். அருகிலும் சிலர் அமர்ந்திருந்தார்கள் அந்த சமயம் ஆட்டம் நடந்துகொண்டிருந்தது. எம்.ஜி.ஆர் தனது இருக்கையில் இருந்தவரை எழுந்து செல்லச் சொல்லாமல் அவருக்கு பின்புறம் காலியாக இருந்த இருக்கையில் பெருந்தன்மையோடு அமர்ந்தார். எம்.ஜி.ஆர் உள்ளே நுழைந்ததும் எம்.ஜி.ஆர், எம்.ஜி.ஆர் என்று இரசிகர்களிடத்தில் ஒரே சலசலப்பு ஏற்பட்டது. எம்.ஜி.ஆர் அரை மணி நேரத்தில் எழுந்து மாம்பலம் அலுவலகத்திற்கு வந்து விட்டார். எம்.ஜி.ஆர் உடனடியாக கிரிக்கெட் மைதானத்திலிருந்து மாம்பலம் அலுவலகத்திற்கு வந்த காரணம் தனக்கென்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் வேறு ஒருவர் அமர்ந்திருந்தது, மற்றொன்று இரசிகர்களுடைய சலசலப்பு ஆகும். எம்.ஜி.ஆர் மாம்பலம் அலுவலகத்திற்கு வந்தவுடனே



தன்னுடன் கிரிக்கெட் பார்க்க வந்த ஒரு முக்கிய நண்பரிடம், உடனே ஒரு.டி.வி வாங்க வேண்டும் என்றார். அவரும் சற்றும் தயங்காமல் மவுண்ட் ரோட், தேனாம்பேட்டையிலுள்ள ஈ.சி.டி.வி கம்பெனியில் கறுப்பு –வெள்ளை பெரிய சைஸ் டி.வியை வாங்கி வந்துவிட்டார். கூடவே அந்த கம்பனி ஆட்கள் வந்து இணைப்புக்களை கொடுத்து டி.வி.யை இயக்கி வைத்தார்கள். இதெல்லாம் ஒரு மணி நேரத்திற்குள் நடந்து விட்டது. எம்.ஜி.ஆருக்கு மிகவும் சந்தோசம் எந்த தொந்தரவும் இல்லாமல் நண்பர்களுடன் டி.வியில் கிரிக்கெட்டைப் பார்த்து மகிழ்ந்தார். இதேபோல் தோட்டத்திலும் டி.வி ஏற்பாடு செய்யப்பட்டது. 1974இல்தான் முதன் முதலாக சென்னை நகருக்கு டி.வி வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எம்.ஜி.ஆர் கிரிக்கெட் நடந்து கொண்டிருக்கையில், படம்பிடிப்பிலோ அல்லது வேறு எங்கேயாவது போக நேர்ந்தால் கையில் ஒரு சிறிய ரேடியோவை வைத்துக் கொண்டு கிரிக்கெட் வர்ணனையை கேட்பார். எம்.ஜி.ஆரிடம் கையில் ரேடியோ இல்லாத நேரத்தில் மாம்பலம் அலுவலகத்தில் உள்ள டி.வியை போட்டு கிரிக்கெட்டை பார்த்து எம்.ஜி.ஆர் எங்கே இருக்கிறாரோ அங்கு ஆட்டத்தின் விபரத்தை தொலைபேசி மூலம் உடனுக்குடன் சொல்ல வேண்டும்.1983இல் கிரிக்கெட் உலக சாம்பியனுக்கான விளையாட்டு போட்டி நடந்தது. அந்த போட்டியில் இந்தியா உலக கோப்பையை வென்றது. இந்த போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர் கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த் அவர்கள் கலந்து கொண்டு விளையாடியதற்காக ஸ்ரீகாந்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னையில் ஒரு வசதியான வீடு கொடுக்கப்பட்டது. அந்த சமயத்தில் ஸ்ரீகாந்த் முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்கு தான் விளையாடிய கிரிக்கெட் மட்டையை பரிசாகக் கொடுத்தார். எம்.ஜி.ஆர் ஒரு நல்ல கிரிக்கெட் இரசிகர் என்பது ஸ்ரீகாந்திற்கு நன்கு தெரிந்தமையால் தனது கிரிக்கட் மட்டையை பரிசாகக் கொடுத்தார். எம்.ஜி.ஆர் மிகவும் பத்திரமாக தனது வீட்டில் வைத்திருந்தார். எம்.ஜி.ஆரின் மறைவுக்கு பிறகு அந்த கிரிக்கெட் மட்டையை தற்போது எம்.ஜி.ஆர் நினைவு இல்லத்தில் ஒரு அலுமாரியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆருக்கு பிடித்த கிராமிய கலைகள் பற்றி சிறிது அலசுவோம். எம்.ஜி.ஆருக்கு கிராமிய கலைகளில் கரகாட்டம், சிலம்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், பொய்க்கால்குதிரை ஆட்டம், போன்றவை மிகவும் பிடிக்கும். இதில் குறிப்பாக சிலம்பாட்டத்தை எம்.ஜி.ஆர் பிரமாதமாக ஆடுவார். இதேபோல எம்.ஜி.ஆருக்கு கர்நாடக சங்கீதத்தில் இசைக் கச்சேரி வகையில் நாதஸ்வரம், வயலின், வாத்தியம் போன்றவைகளை பிடிக்கும் பத்து வயது நிரம்பிய சிறுவனாகிய மாஸ்டர் சீனிவாசன் ரொம்பவும் பிரமாதமாக மாண்டலின் இசைக்கருவி வாசிக்கிறார் இச்சிறுவனின் சபா மேடைகளிலும் டி.வி யிலும் 1983இல் சென்னையில் கலைவாணர் அரங்கில் மாலை 6.00 மணிக்கு மாஸ்டர் சீனிவாசனின் கச்சேரி நடந்த சமயம் சுமார் ஒரு மணிநேரம் பார்த்து ரசித்து கச்சேரி முடிந்ததும் மேடைக்கு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் வந்து கச்சேரி செய்த இச் சிறுவனை தட்டிக் கொடுத்து பாராட்டி வாழ்த்தி பேசிவிட்டு தனது ஜிப்பா பொக்கெட்டில் வைத்திருந்த 4 பவுண் எடையுள்ள தங்க சங்கிலியை அச்சிறுவனுடைய கழுத்தில் போட்டு சென்றார். இதேபோல் 1976இல் ஒரு முக்கிய குடும்பத் திருமணத்திற்கு மாலை வரவேற்பு விழாவிற்காக 7 மணிக்கு இராஜேஸ்வரி திருமண மண்டபத்திற்கு எம்.ஜி.ஆர் சென்றார். இங்கு ஏ.வி. இரமணன் மெல்லிசைப் பாட்டுக்கச்சேரி நடந்து கொண்டிருந்தது. அந்த கச்சேரியில் ஏ.வி.ரமணன் பாடிக் கொண்டிருந்தார். திருமண வரவேற்பு விழாவிற்கு வருகைதந்துள்ள எம்.ஜி.ஆர் மணமக்களை பார்த்து ஆசீர்வாதம் செய்து அவர்களுக்கு பரிசுப் பொருட்களை கொடுத்துவிட்டு கச்சேரி நடக்கும் மேடைக்கு அருகில் போய் அமர்ந்து விட்டார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 27.07.1876 பிறந்தவர். குமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் வாழ்ந்த ஒரு புகழ் பெற்ற கவிஞர். பக்திப் பாடல்கள், இலக்கியம் பற்றிய பாடல்கள், வரலாற்று நோக்குடைய கவிதைகள், குழந்தைப் பாடல்கள், இயற்கைப் பாட்டுகள், வாழ்வியல் போராட்ட கவிதைகள், சமூகப் பாட்டுகள், தேசியப் பாட்டுகள், வாழ்த்துப் பாக்கள், கையறு நிலைக் கவிதைகள், பல்சுவைப் பாக்கள் என விரிந்த தளத்தில் பல படைப்புகளை படைத்தவர்.



பெற்றோர்: சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி மனைவி பெயர் உமையம்மை. சிவதாணுப்பிள்ளை ஆதிலட்சுமி தம்பதியர்க்கு இரண்டு பெண் குழந்தைகளை அடுத்து மூன்றாவதாக தேசிக விநாயகம் பிறந்தார். இரண்டு பெண்களுக்கு பின் பிறந்த ஆண் மகவுக்கு தான் வணங்கும் தேசிக விநாயகரின் பெயரை வைத்தார் சிவதாணுப்பிள்ளை. ஒன்பதாவது வயதில் தன் தந்தையை இழந்தார். எம்.ஏ. படித்த கவிமணி பின் ஆசிரியர் பயிற்சி படித்து தான் படித்த பள்ளியிலேயே ஆசிரியர் ஆனார். உமையம்மை எனும் பெண்ணை 1901 இல் மணம் முடித்தார். நாஞ்சில் நாட்டார் தன் மனைவியை குட்டி, பிள்ளாய் என்று அழைத்து கொண்டிருந்த நாட்களில் கவிமணி தன் மனைவியை தாயி என்று மரியாதையுடன் அழைப்பார். குழந்தைப் பேறு இல்லாத கவிமணி தனது அக்காள் மகன் சிவதாணுவை தனது மகன் போல வளர்த்தார்.

நாகர்கோவிலிலுள்ள கோட்டார் ஆரம்பப்பள்ளி, நாகர்கோவில் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மற்றும் திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி போன்றவற்றில் ஆசிரியராக 36 ஆண்டுகள் பணிபுரிந்தார்.

தமிழில் குழந்தைகளுக்காக முதன்முதலில் தொடர்ச்சியாகப் பாடல்களை எழுதினார். 1938 ஆண்டு வெளியான அவருடைய மலரும் மாலையும் தொகுதியில் 25 க்கும் மேற்பட்ட குழந்தைப் பாடல்கள், 7 கதைப் பாட்டுகள் இடம்பெற்றிருந்தது.

தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு என்ற பாடல் இன்றளவும் பிரபலமாக உள்ள அவரது குழந்தைப் பாடல்களில் ஒன்று.எட்வின் ஆர்னால்டு Light of Asia வைத் தழுவித் தமிழில் ஆசிய ஜோதியை எழுதினார். பாரசீகக் கவிஞர் உமர் கய்யாம் பாடல்களைத் தழுவி தமிழில் எழுதினார்.ஆராய்ச்சித் துறையிலும் தேசிக விநாயகம் பிள்ளை பல அரிய பணிகளை ஆற்றியிருக்கிறார். 1922இல் 'மனோன்மணியம் மறுபிறப்பு' என்ற திறனாய்வுக் கட்டுரையை எழுதினார். சென்னை பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேரகராதி உருவாக்கத்தில் மதிப்பியல் உதவியாளராக இருந்தார். கம்பராமாயணம், திவாகரம், நவநீதப் பாட்டியல் முதலிய பல நூல்களின் ஏட்டுப் பிரதிகளைத் தொகுத்திருக்கிறார். 'காந்தளூர்ச்சாலை' பற்றிய ஆய்வு நூலை எழுதினார்.24 டிசம்பர் 1940 இல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்வேள் உமாமகேசுவரம் பிள்ளை கவிமணி என்ற பட்டம் வழங்கினார். 1943 இல் அண்ணாமலை அரசர் ஆத்தங்குடியில் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். பெரும் பொருள் வழங்க முன் வந்தபோது அதை வாங்க மறுத்து விட்டார். தமிழுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் 26.09.1954 இல் மண்ணகம் விட்டு விண்ணகம் அடைந்தார். 1954 இல் கவிமணிக்குத் தேரூரில் நினைவு நிலையம் அமைக்கப்பட்டது. அக்டோபர் 2005 இல் அன்னாருக்கு இந்திய அரசு அஞ்சல் தலை வெளியிட்டுச் சிறப்பாற்றியது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# கொடிய கொரோனா

கொரோனா வால் மாண்டவர் எத்தனை?
உலகமே கதிகலங்கி நின்றதே
கொரோனா கொடியதென கண்டோமே
முகக்கவசம் அணிந்து வாழ்ந்தோமே

இன்னுமா தடுப்பூசி ஏற்றவில்லை?
ஓழிந்தே மறைந்தே நடக்கின்றோம்
மன்னாதி மன்ன ரெல்லாமே
உயிரே துறந்து போனார்கள்.

நாட்டை முற்றாய் முடக்கியும்
சமூக இடைவெளியைப் பேணியும்
சுய தனிமைப் படுத்தல் முகாமிலும்
உயிர் தப்பி வந்தவர் எத்தனை?

அம்பிலன்ஸ் வண்டி இரைச்சலை
தினம் கேட்டுப் பயந்தோமோ
ஒருவர் ஒருவரை நெருங் கிடாமல்
தினமும் கண்ணீர் வடித்தோமே

ஊ ரடங்குச் தடைச் சட்த்தாலும்
மாகாண தடைச் சட்த் தாலும்
வீட்டுக்குள் தினம் அடை பட்டே
தொழிலின்றி கலங்கித் துடித்தோமே

தனிமைப் படுத்தப்பட்ட வீட்டிலே
ஊரை விட்டுப் எங்கும் போகாமலே
உடன் பிறந்த இரத்தங்களை
பலி கொடுத்துத் தவித்தோமே

சுகாதார மாண்புகளைத் தேடியே
சுகமான சுகந்தம் பெறுவோமே
எந்நாளும் உடலா ரோக்கியத்தோடேயே
நலம்பெற நீடூழி வாழுவோம்.

இக்பால் அலி...

# செந்தூர மழலைகள்




தரம் 1 மாணவர்கள், சாரதா வித்தியாலயம், தம்பலகாமம், திருகோணமலை



தீ.லக்ஸ்மிதன், தீ.அனன்யா
தம்பலகாமம் திருகோணமலை



பரமேஸ்வரி



பரமேஸ்வரி மோகனவேல்



சத்தியப்பிரியா



பாடசாலை நண்பர்கள், அக்கரப்பத்தனை



சசீன், கலேவல



செந்தூர வாசகர் யாழ்.அஸீம்



பாபு ஆனந்த ராஜா பதுளை

# சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு







சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் மாதாந்த நடத்தும் ஆளுமையை கௌரவிக்கும் நிகழ்வு தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் தலைமையில் சங்கவி பிலிம்ஸ் பணிப்பாளர் துரைராசா முன்னிலையில் எதிர்வரும் 2023.10.15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு வத்தளை, ஹேகித்த, நகர சபை மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இவ்விழாவில் கலைத் தென்றல் நாட்டிய கலா நிலையத்தின் பரத நாட்டிய ஆசிரியர் சாமஸ்ரீ கலைத்திலகம் இளங்கோவன் செல்வராணியும் கலைஞர் கலாபூஷணம் ஜீ. ஜே. போல் ராஜும் கௌரவிக்கப்படவுள்ளார்கள். முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரபா கணேசன் அதிதியாக கலந்து கொள்ளும் இவ்விழாவில், வத்தளை நகர சபையின் முன்னாள் மேயர் பிரகாஷ், வத்தளை நகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான ஆர். விஜயகுமார், சசிகுமார், தர்மா, முத்துமாரியம்மன் அறநெறி பாடசாலை பொறுப்பாசிரியர் திருமதி தேவி விஜயகுமார் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள், ஊடகவியலாளர் கே. ஈஸ்வரலிங்கம் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவார். இங்கு அண்மையில் மிருதங்க அரங்கேற்றம் செய்த ஜொகான் பிரவிந்த் சுப்பிரமணியமும் கௌரவிக்கப்படவுள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.